தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, ஏப்ரல் 25, செவ்வாய்க்கிழமை.

சித்திரை *12,* சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு *2020.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்''.

ஒப்புரவு அறிந்து போற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்கின்றவன் உயிர் வாழ்கின்றவன் ஆவான்; மற்றவன் செத்தவர் வரிசையில் சேர்த்து வைத்து எண்ணப்படுவான்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கொட்டாரம் சார்நிலைப்பதிவாளர் அலுவலகம்.

121—*வினா எண் *449*)— திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், கொட்டாரம் என்ற ஊரில் சார்நிலைப் பதிவாளர் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இது குறித்து அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

53-96—1

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொட்டாரம் என்ற ஊரில் நீண்ட நாட்களாக சார் நிலை பதிவாளர் அலுவலகம் கட்ட வேண்டுமென்ற குறிப்பு இருந்தது. அதைத் தொடர்ந்து அதற்கு இடம் வாங்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 569 பதிவகங்கள் உள்ளன. அவைகளில் 294 பதிவகங்கள் அரசு கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. ஏனையவை தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அரசு கட்டிடங்களில் செயல்பட்டு வரும் சார் பதிவாளர் கட்டிடங்கள் பல மிகவும் பாழடைந்து இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளதால், அவ்வப்போது ஏற்படும் உடனடித் தேவையின் அடிப்படையில், அரசின் நிதி நிலையையும் கருத்தில் கொண்டு புதிய கட்டிடங்கள் கட்டும்பணி மேற்கொள்ளப்படும். இதன் அடிப்படையில் கொட்டாரத்திலும் புதிய சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவது குறித்து பதிவுத்துறை அலுவலரிடம் இருந்து கருத்து பெற்று முடிவு எடுக்கப்படும்.

கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்தல்

122— *வினா எண் 885)— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 8 வட்டங்களில் 6 வட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக வறட்சி நிவாரண ஆணையர் தெரிவித்துள்ளார். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை அறிவிப்பு செய்யாமலேயே அங்கு அனைத்து நிவாரணப்பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தலைவரவர்களே, அந்த 6 வட்டங்கள் எது எது என அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..... மேலும் விவசாயிகள் அந்தப் பகுதியிலே மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள், இரண்டுதடவை எழுந்துவிட்டார்கள்; அவர்களை மேலும் சிரமப்படுத்துகிறீர்கள்.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொட்டாரம் என்ற ஊரில் நீண்ட நாட்களாக சார் நிலை பதிவாளர் அலுவலகம் கட்ட வேண்டுமென்ற குறிப்பு இருந்தது. அதைத் தொடர்ந்து அதற்கு இடம் வாங்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 569 பதிவகங்கள் உள்ளன. அவைகளில் 294 பதிவகங்கள் அரசு கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. ஏனையவை தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அரசு கட்டிடங்களில் செயல்பட்டு வரும சார் பதிவாளர் கட்டிடங்கள் பல மிகவும் பாழடைந்து இடிந்து விழக் கூடிய நிலையில் உள்ளதால், அவ்வப்போது ஏற்படும் உடனடித் தேவையின் அடிப்படையில், அரசின் நிதி நிலையையும் கருத்தில் கொண்டு புதிய கட்டிடங்கள் கட்டும்பணி மேற்கொள்ளப்படும். இதன் அடிப்படையில் கொட்டாரத்திலும் புதிய சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவது குறித்து பதிவுத்துறை அலுவலரிடம் இருந்து கருத்து பெற்று முடிவு எடுக்கப்படும்.

கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்தல்

122—*வினா எண் 885)—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 8 வட்டங்களில் 6 வட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக வறட்சி நிவாரண ஆணையர் தெரிவித்துள்ளார். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை அறிவிப்பு செய்யாமலேயே அங்கு அனைத்து நிவாரணப்பணிகளும மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தலைவரவர்களே, அந்த 6 வட்டங்கள் எது எது என அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..... மேலும் விவசாயிகள் அந்தப் பகுதியிலே மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள், இரண்டுதடவை எழுந்துவிட்டார்கள்; அவர்களை மேலும் சிரமப் படுத்துகிறீர்கள்.

1989 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: கேள்வி கேட்டு ஆகிவிட்டது; எத்தனை இடங்கள் என்று கேள்வி கேட்டு ஆகி விட்டது. நீங்கள் கேட்கவில்லை என்றால் நான் என்ன பண்ணுவது? அந்த 6 வட்டங்கள் எது எது என்று கேட்டு இருக்கிறார்கள்.... இன்னும் இருக்கிறதா?

திரு. ஆ. நடராசன்: தலைவரவர்களே, அந்த 6 வட்டங்களைத் தெரிவிப்பதோடு, விவசாயிகளுக்கு குடிநீருக்காக எடுக்கப்பட்டு இருக்கின்ற நடவடிக்கைகளை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: ஆறு வட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று வறட்சி நிவாரண ஆணையாளர் தெரிவித்துள்ளார். அந்த ஆறு வட்டங்களின் பெயர், மேட்டுப்பாளையம், அவினாசி, பல்லடம், கோயம்—புத்தூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அல்லது வட்டங்கள் பற்றிய அறிவிப்பு செய்யாமலேயே, பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளிலும் அனைத்து நிவாரணப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. விளக்கமாகத் தெரிவிக்கிறேன். ஏற்கெனவே, நிதிநிலை உரையில் தெரிவித்தவாறு, நீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன், 1250 இலட்சம் செலவில் முதற்கண் 5,000 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அரசு அனுமதி அளித்தது. இந்த 5,000 ஆழ் துளைக் கிணறுகளில், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 425 கிணறுகள் ஒதுக்கப்பட்டு உள்ளன. மேலும் மாவட்டங்களில் பல்வேறு இதர குடிநீர்த் திட்டங்களுக்காக 586.27 இலட்சமும், சென்னை பெருநகரக் குடிநீர் பணிகளுக்காக 476 இலட்சமும், மதுரை மாநகரக் குடிநீர்ப் பணிகளுக்காக 70 இலட்சமும் ஆக மொத்தம் 1132.27 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒதுக்கிய நிதியை இங்கே விவரமாகச் சொன்னார்கள். ஆனால், நடைமுறையில் ஒரு ஒன்றியத்திற்கு மூன்று அல்லது நான்கு கைப் பம்புகள், இப்பொழுது அரசு அனுமதி இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது, யானைப் பசிக்குச் சோளப் பொரி போன்று கிராம மக்களுக்கு இந்த நேரத்திலே காட்சி அளிக்கின்ற ஒரு நிலைமை இருந்து வருகின்றது. அதைப் போக்குகின்ற வகையில் இன்னும் தீவிரமாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவரவர்களே, நிதி ஆதாரம் சரியாக வரும்பொழுது பொரி அதிகமாகப் போடப்படும்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம் முழுவதும் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் அது முழுமையாகச் சொல்லப்படவில்லை, மேலும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக 425 ஆழ் குழாய்க் கிணறுகள் போடுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அது போட்டு முடிக்கப்பட்டு இருக்கிறதா ? கால் நடைகளுக்கெல்லாம் தீவனம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஹேண்ட் பம்பில் தண்ணீர் எடுக்க முடியாது என்று பலயிடங்களில், தண்ணீர் வருவது இல்லை. மோட்டார் பொருத்தி தண்ணீர் எடுத்துக் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல ஒரு மாவட்டத்தை அல்லது பகுதியை வறட்சிப் பகுதி என்று அறிவிக்க உத்தேசம் அரசுக்கு இல்லை. மாறாக, வறட்சிப் பகுதியில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அவைகள் போர்க்கால நடவடிக்கையின் அடிப்படையில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிறகு, இரண்டாவதாகக் கேட்ட கேள்வி, குழாய்களைப் பொருத்துவதைப் பற்றிக் கேட்டார்கள். அவைகளில் பாதி முடிந்திருப்பதாக எனக்குத் தகவல்; மீதி பாதி வேலைகள் நடந்துகொண்டிருப்பதாகவும் தகவல்.

திரு. கே. ரம்ணி : தலைவரவர்களே, கோவை மாவட்டம் முழுவதுமே வறட்சிப் பிரதேசம் என்று அறிவிக்க வேண்டுமென்று அங்கே டி. டி. சி. மீட்டிங் ஏக மனதாகத் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பி ஒரு மாதத்திற்கு மேல் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அமைச்சரவர்கள் குறிப்பிடும் பொழுது ஒரு மாவட்டத்தையோ அல்லது ஏரியாவையோ குறிப்பிட்டுத் தமிழ்நாடு முழுவதும் வறட்சிப் பிரதேசம் என்று அறிவிக்கும்படியான தன்மைகள் இல்லை, எங்கெங்கு வறட்சி தோன்றுகிறதோ அங்கெல்லாம் பணிகள் நடக்கும் என்ற முறையில் சொல்கிறார்கள். வறட்சி குறிப்பிட்ட கிராமங்களிலேயோ அல்லது பஞ்சாயத்துக்களிலேயோ ஏற்படத்தானே செய்யும். அப்பொழுது, அதற்கு ஒரு எல்லைக்குள்ளேயே தான் ஏற்பட வேண்டும். இப்பொழுது பிரச்சினை என்னவென்று கேட்டால், அதை அறிவிக்கிறார்களோ அல்லது அறிவிக்கவில்லையோ, வறட்சிப் பணிகள் நடக்கின்றன. உண்மையில் ஒதுக்கியிருக்கின்ற பணம் திட்டவட்டமாகக் காணாது என்பது அந்த டி.டி.சி.யிலே அந்தக் கருத்து வந்தது. ஆழ் குழாய் கிணறு என்று இன்றைக்குக் கிணறு போட்டு தண்ணீர் எடுக்கிறோம் என்று சொன்னால், இரண்டு நாட்கள் கழித்து, அந்தத் தண்ணீரின் லெவல் கீழே போய் விடுகிறது.

அதனால் 400 அடி, 500 அடி என்று அதற்குமேலே ஆழ் குழாய்க் கிணறுகள் போட வேண்டிய நிலைமைகள் ஏற்படு கின்றன. ஆகவே, இந்தக் குழாய்க் கிணறு வேலைகள் இன்னும் அதிகப்படியாகக் கோவை மாவட்டத்தில் நடத்துவதற்கும், எந்தக் கிராமத்தில் தண்ணீர் இல்லாமல் சுத்தமாகப் போய் இருக்கிறதோ அங்கே மற்ற இடங்களிலேயிருந்து தண்ணீரை டிரான்ஸ்போர்ட் பண்ணிக் கொண்டு வருவதற்கான விஷயங்களும் கூட அன்றைக்குப் பேசப்பட்டிருக்கிறது. அந்த டி.டி.சி. யிலேயிருந்து இங்கே அந்த விவரங்கள் வந்திருக்கும் என்று கருதுகிறேன். அப்படி, வெளியிலேயிருந்து தண்ணீரை இரயில் மூலமாகவோ அல்லது லாரிகள் மூலமாகவோ கொண்டு வருவதற்கும், வேண்டிய அவசர நடவடிக்கை—அதுதான் போர்க்கால நடவடிக்கை என்று சொல்வது—அதை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10).

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களின் சிறந்த பேச்சுக்கு எனது நன்றி. ஆழப்படுத்தப்பட வேண்டுமென்ற கேள்விக்கு நான் தருகின்ற பதில், உங்கள் உணர்வோடு ஒன்றுகின்றேன். விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உறுதியையும் அளிக்கின்றேன். ஆக உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். (சிரிப்பு).

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வறட்சிப் பணியை எந்த அளவிற்கு வேகமாக அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி இங்கே தகவல் தந்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னதைப் போல் மாவட்டம் முழுவதும் ஆடுமாடுகளுக்குக் கூட குடிக்க தண்ணீர் இல்லாத நிலையில் கேரளாவிற்கு 2,000, 3,000 ரூபாய் பெறுமானமுள்ள மாடுகள் கூட 500 ரூபாய், 700 ரூபாய் என்ற விலைக்கு அடிமாடுகள் என்று விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு கடுமையான வறட்சி இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சுமார் 450 'போர் வெல்கள்' போடுவதற்கு அனுமதி வழங்கியிருப்பதாக குறிப்பிட்டார்கள். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கலந்து பேசியபோது கிட்டத்தட்ட 800 ஆழ் துளை கிணறுகள் போடவேண்டும், அது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு நீங்களும் கருத்து தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, மேலும் அதைக் கூடுதலாக நீட்டித்து கொடுக்க வேண்டும். போடப்பட்டிருக்கிற ஆழ்துளைக் கிணறுகள் கூட 300 அடிகள் போட்டும் இன்றைக்கு தண்ணீர் இல்லையென்பதால் 'பெயிலியர்' ஆகப் போயிருக்கிறது. 'வாட்டர்

டிவைனர்ஸ்' சொன்ன ஆலோசனைப்படிதான் கிணறுகள் போடப்பட்டன. என்றாலும் தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக கூடுதலாக நிதியை ஒதுக்கி, கோவை மாவட்டத்தினுடைய வறட்சியைத் தணிப்பதற்கும், விவசாயிகள் உள்ளிட்ட கிராம மக்களுக்கு குடிதண்ணீர் கிடைப்பதற்கும், பஞ்ச நிலையை அகற்றுவதற்கும், நடவடிக்கை எடுப்பார்களா, அதற்கு ஒரு புதிய உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவலை தோய்ந்த உணர்வோடு எனது உணர்வுகளையும் ஒன்ற வைத்துக் கொள்கிறேன். நிதி ஒதுக்குவதைப் பற்றி கேட்கிற கேள்வி முதலமைச்சரைப் பார்த்து கேட்கிற கேள்வியே தவிர, பரிதாபத்திற்குரிய வருவாய்த் துறை அமைச்சரை இதில் இழுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சிக் காலத்தில் குடிதண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிற போது அரசு 5,000 ஆழ்துளை கிணறுகளை அமைப்பதற்காக திட்டம் போட்டிருக்கிறது. ஆனால் நாம் 200, 300 அடி என்று கிணறுகளைத் தோண்டினாலும் நிலத்தடி நீர் இல்லாத காரணத்தால் தண்ணீர் இல்லாமல் போய் விடுகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலேயாவது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து மறு பரிசீலனை செய்து எங்கெங்கெல்லாம் தண்ணீர் ஓடுகிறதோ, ஆறுகள் ஓடுகின்றனவோ அவற்றின் பக்கத்தில் ராட்சத கிணறுகளைப் போட்டு 15 ஊர்கள், 20 ஊர்கள் என்று இணைத்து ஒரு 'காம்பரஹென்சிவ் ஸ்கீம்' என்ற திட்டத்தின் அடிப்படையில் நிரந்தரமாக குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையெடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயம் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய உறுப்பினர் பொன்னம்மாள் அவர்களின் அக்காள் பொன்னம்மாள் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த உறவுகளை எல்லாம் அவையில் சொல்லக்கூடாது என்று ஒரு மரபை வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : எங்களுக்குள்ள உறவு முறையை யாரும் தடுக்க முடியாது. நீண்டகாலமாக நாங்கள் அந்த உறவு முறையோடு இருக்கிறோம். உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். ஆவன செய்யப்படும். (சிரிப்பு).

1989 ஏப்ரல், 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கோரிக்கை என்றால் பேரவைத் தலைவருடைய கோரிக்கையா? (சிரிப்பு).

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற வறட்சி எனக்குத் தெரிந்தவரையில் இதற்கு முன்னால் இவ்வளவு கடுமையான வறட்சி ஏற்பட்டதில்லை என்று நான் உணர்கிறேன். ஒரு சில இடங்கள் தவிர பெரும்பகுதி இடங்கள் தமிழ் நாட்டில் குடிக்கக் கூட தண்ணீருக்கு தட்டுப்பாடு இருக்கிறது என்று ஆளுங்கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் சேர்ந்து சொல்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வறட்சிப் பகுதியாக அறிவிக்க மாட்டேன் என்று அவ்வளவு பிடிவாதமாக இருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன். வறட்சிப் பகுதி என்று அறிவித்தால் தான் மத்திய அரசிலிருந்து நாம் பெற வேண்டிய அந்த வறட்சிக்கான நிதியையும் பெற முடியும். வறட்சி என்று அறிவித்தவுடனே செய்ய வேண்டிய அதிகாரிகள் என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் துரிதமாகச் செய்வார்கள். ஆகவே, என்னுடைய பகுதியில் சிதம்பரனார் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் பெரும் பகுதி வறட்சி என்று கலெக்டரே அறிவித்திருக்கிறார். ஆகவே, இந்த பிடிவாத எண்ணத்தை கொஞ்சம் கைவிட்டு வறட்சிப் பகுதி என்று அறிவித்து, மத்திய அரசிடமிருந்து அதிகமான நிதியைப் பெற்று, உடனடியாக இந்தக் காரியங்களைச் செய்வதற்கான ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன், வறட்சிப் பகுதி என்று அறிவித்ததற்குப் பிறகுதான் காரியங்கள் நடைபெற வேண்டுமென்ற அவசியம் இல்லை. வறட்சிப் பகுதி என்று தெரிந்தவுடனே அந்த வறட்சியைப் போக்குவதற்கும், அந்தப் பகுதிகளை வளமான பகுதிகளாக மாற்றுவதற்குமான முயற்சியில் இந்த அரசு ஈடுபடுகிறது. வறட்சிப் பகுதி என்று அறிவித்தால் தான் மத்திய அரசிலிருந்து பணம் வரும் என்று மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் தெரிவிக்கிறார்கள். இல்லாவிட்டாலும் வரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஏன் என்றால் இந்த வறட்சியில் மாட்டிக்கொண்டு இருப்பவர்கள் அத்தனை கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் என்பதும், மக்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஆக, அனைவருக்கும் இதில் பொறுப்பு இருக்கிறது என்ற காரணத்தால், காரியங்கள் நடக்கவேண்டுமே தவிர—நான் ஒன்றும் அடம் பிடிக்கவில்லை, வறட்சிப் பகுதி என்று அறிவிக்கமாட்டேன், அறிவிக்கமாட்டேன் என்று அடம் பிடிக்கவில்லை—நீங்கள் எதை விரும்புகிறீர்களோ வறட்சியைப் போக்குவதற்காக அந்த நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது. இதற்கு மேலே தேவையில்லையே.

[1989 ஏப்ரல் 25

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வறட்சிப்பகுதியிலே நூற்றுக்கணக்கான போர்-வெல்கள் சாங்சன் ஆகியிருக்கிறது, இறக்கப்போகிறோம், பணம் ரொம்ப வறட்சியாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். வறட்சியிலே இந்தப் பண வறட்சி ரொம்ப ஜாஸ்தியாகப் போய்விட்டது. எங்கள் ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டியிலே ஏற்கனவே அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஆர். டி. எல். ஏ. மினிஸ்டராக இருந்தபோது, காவிரியிலே பெரிய ஃபில்டர் பாயிண்ட் 80 அடிக்குக் கீழே அழகான ஃபில்டர் பாயிண்ட் போட்டு, அது ஓர்க் பண்ணிக்கொண்டு இருந்தது. சமீபகாலமாக அந்த ஃபில்டர் பாயிண்ட் ஓர்க் பண்ணாமல், மோட்டார் ஓர்க் பண்ணாமல், ஸ்டேசனரியாக இருந்து கொண்டு இருக்கிறது. புதிதாக தற்போது போடுவதற்குப் பதிலாக ஏற்கெனவே இருப்பதை ரிப்பேர் செய்து, அந்த நகராட்சிக்கு வாட்டர் சப்ளை செய்ய ஆவன செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தீட்சிதரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் விக்ரவாண்டி பகுதி கடுமையான வறட்சியால் பாதிக்கப்படுவதுடன், அங்கேயிருக்கக் கூடிய மக்கள் எல்லாம ஆந்திரப் பகுதிகளுக்கும் மற்ற அண்டை மாநிலங்களுக்கும் கரும்பு வெட்டுவதற்கும் மற்ற இதரத் தொழில்களுக்கும் கூட்டம் கூட்டமாக வெளியேறிக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருணையோடு பரிசீலித்து, மற்றப் பகுதிகளைப் போல கவனிக்காமல், இந்த ஒன்றியத்தையும், கண்டமங்கலம் தொகுதியையும் கருணையோடு கண்காணிப்பார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இதிலே கருணைக்கு இடம் இல்லை. கடமைக்கு மட்டும்தான் இடம் உண்டு என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவிப்பதோடு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, இது வருவாய்த்துறை என்று குறிப்பிட்டு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்கவேண்டிய கேள்வி என்று சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில், அத்தனை இலாக்காவிற்கும் வருவாயை கொடுக்க வேண்டியவரே நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், வருவாய்த்துறை கொடுத்தால்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும். அடுத்து

1989 ஏப்ரல் 25] [திரு. ஆர். சிங்காரம்]

இந்த வறட்சி என்று அறிவிப்பதிலே என்ன ஆழமான கஷ்டம் இருக்கிறது என்பதை தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரின் சார்பாக வாதாடிய மாண்புமிகு உறுப்பினருக்கு எனது நன்றி. நான் ஏற்கெனவே திருப்பித் திருப்பிச் சொன்னேன். வறட்சிப் பகுதி என்று அறிவிப்பதன் மூலம்தான் காரியங்கள் நடக்கும் என்று நீங்கள் ஏன் எதிர்பார்க்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை நடக்க வேண்டிய காரியங்கள் முறைப்படி நடக்கும் வறட்சிப் பகுதி என்று அறிவிக்காமலேயே.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் பற்றாக்குறை பற்றிப் பேசுகின்றபோது, ராதாபுரம் தொகுதியில் 500 அடிக்குக் கீழே நீர் மட்டம் சென்று விட்ட காரணத்தாலே லாரிகளில் சப்ளையோ அல்லது ஆழ் குழாய்க் கிணறுகளோ பயன்படாது என்ற நிலையிருக்கின்ற காரணத்தால், சேரன்மாதேவியிலிருந்து பைப் மூலமாக தண்ணீரைக் கொண்டு வந்து என் தொகுதி முழுவதற்கும் விநியோகம் பண்ணுவதற்குக் கேட்டுக்கொள்கிறேன். இது பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தனிக்கேள்வி போடவும்.

திரு. ஆர். எட்டியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதி வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு என்ன நார்ம்ஸ் வைத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இதற்கும் நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன், குடிநீர் இல்லாதது, மின்சாரம் இல்லாதது, பற்றாக்குறை, வேலைவாய்ப்பின்மை இவைகள் எல்லாம் வறட்சி என்ற விசாலமான அமைப்புக்குள் வரும் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்படாமலேயே அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்கின்ற இதே உணர்வோடு, கீழேயிருக்கிற அதிகாரிகள் அதை நடைமுறையிலே அமுலாக்குவதிலே பல குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தால், வறட்சிப் பகுதி என்று அறிவித்தால், அதற்குரிய பணிகளும், அதேபோல் அதற்குரிய சலுகைகளும் கிடைப்ப

தற்கான வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தால் அப்படி அறிவிக்க முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கோவை மாவட்டம் திருப்பூரிலே மிகக் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் சென்ற ஆண்டு இதே வறட்சி காலத்திலே லாரிகள் மூலமாக தண்ணீர் வினியோகிப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, சுமார் 9 லாரி களிலே குடிநீர் வினியோகம் செய்யப்பட்டது. இந்த ஆண்டும் கடுமையான வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. குடிநீர் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், இதுவரையில் எந்தப் பணியும் மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. ஆகவே அதற் கான நிதியை ஒதுக்கி அங்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதி என்று அறி வித்தால்தான் கீழே பணியாற்றுகின்ற அதிகாரிகள் ஒழுங்காக வேலை செய்வார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப் பிட்டார்கள். வறட்சிப் பகுதி என்று அறிவிக்க வேண்டிய தில்லை. கீழே இருப்பவர்கள் ஒழுங்காக வேலை செய்ய வில்லை. தங்கள் கடமையிலிருந்து தவறுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டுவார்களேயானால் அவர் கள்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது. நீங்கள் திருப்பூர் பற்றி சொன்னீர்கள். யோசிக்கப்படும்.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23—3—1989 ஆம் தேதி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் ஏகமனதாக நீலகிரி மாவட்டத்தை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க ஏற்பாடு செய்து, மக்களுக்கு நிவாரணங் களை அளிக்குமாறு கேட்டிருந்தோம். நேற்றைய தினம் பேசும் போது நீலகிரி மாவட்டமும், கன்னியாகுமரி மாவட்டமும், வறட்சியில் இல்லை என்று சொன்னீர்கள். அது மிகவும் தவறான கருத்து. பல கிராமங்களில் தண்ணீர் இல்லாமல் 5 மைல் தூரம் சென்று சிறிது சிறிதாக தண்ணீர் எடுத்துக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலையில் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அங்கே நான்கு வட்டாரங்கள் தான் இருக்கின்றன. எனவே மூன்று வட்டா ரங்களையாவது வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நீலகிரி தொகுதியில் மழை பெய்து கொண்டி ருப்பதாகத் தகவல். கடந்த 3, 4 நாட்களாக நல்ல மழை பெய்து கொண்டிருக்கிறது. இது மகிழ்ச்சியாக இருக்கிறது.

1989 ஏப்ரல் 25] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வருவாய்த்துறை அமைச்சரைத் தனியாக அவருடைய அறையில் சந்தித்து ஒரு மணி நேரம் உங்கள் தொகுதி நிலவரங்களைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : எனது மாவட்டத்தைச் சார்ந்த அன்புசால் நண்பர் ஆல்போன்ஸ், அது எங்கள் பகுதியிலுள்ள மாவட்டம் தான். இரண்டும் ஒன்றுதான். பாளைமேட்டின் ஒரு பகுதி நெல்லை மாவட்டத்தைச் சேர்கிறது. கன்னியாகுமரி பகுதி. (குறுக்கீடு). ஆல்போன்ஸ் அவர்கள் எனது அறைக்கு வந்து ஒரு வாய்ப்பாக தரக் கூடாதா? நாம் நேரிலே பேசுவோம். (சிரிப்பு.)

அரசு சந்தனத் தொழிற்சாலை.

123—(*வினா எண் 149)— **திரு. ப. சுந்தரம்; திரு. எஸ். டி. உகம்சந்த்; திரு. பெ. சு. திருவேங்கடம்; மற்றும் திரு. ஆர். மகேந்திரன் :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டம் தெற்குப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள அரசு சந்தன தொழிற் சாலை மூடிக்கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) வட ஆற்காடு மாவட்டம். வாணியம்பாடி, தெற்குப் பட்டு கிராமத்தில் அமைந்துள்ள அரசாங்க சந்தன தைல தொழிற்சாலை மூடிக்கிடப்பது அரசு அறியும்.

(ஆ) இதனை நிரந்தரமாக மூடிவிடலாமா என்பது முந்தைய அரசின் பரிசீலனையில் இருந்தது. இந்தத் தொழிற் சாலையை மீண்டும் திறந்து லாபகரமாக நடத்த முடியுமா என் பதை இந்த அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த சந்தன ஆலை $1\frac{1}{2}$ ஆண்டுக் காலமாக மூடப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக

1989 ஏப்ரல் 25] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வருவாய்த்துறை அமைச்சரைத் தனியாக அவருடைய அறையில் சந்தித்து ஒரு மணி நேரம் உங்கள் தொகுதி நிலவரங்களைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : எனது மாவட்டத்தைச் சார்ந்த அன்புசால் நண்பர் ஆல்போன்ஸ், அது எங்கள் பகுதியிலுள்ள மாவட்டம் தான். இரண்டும் ஒன்றுதான். பாளைமேட்டின் ஒரு பகுதி நெல்லை மாவட்டத்தைச் சேர்கிறது. கன்னியாகுமரி பகுதி. (குறுக்கீடு). ஆல்போன்ஸ் அவர்கள் எனது அறைக்கு வந்து ஒரு வாய்ப்பாக தரக் கூடாதா? நாம் நேரிலே பேசுவோம். (சிரிப்பு.)

அரசு சந்தனத் தொழிற்சாலை.

123—(*வினா எண் 149)— **திரு. ப. சுந்தரம்; திரு. எஸ். டி. உகம்சந்த்; திரு. பெ. சு. திருவேங்கடம்; மற்றும் திரு. ஆர். மகேந்திரன் :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டம் தெற்குப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள அரசு சந்தன தொழிற்சாலை மூடிக்கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்சளே, (அ) வட ஆற்காடு மாவட்டம். வாணியம்பாடி, தெற்குப் பட்டு கிராமத்தில் அமைந்துள்ள அரசாங்க சந்தன தைல தொழிற்சாலை மூடிக்கிடப்பது அரசு அறியும்.

(ஆ) இதனை நிரந்தரமாக மூடிவிடலாமா என்பது முந்தைய அரசின் பரிசீலனையில் இருந்தது. இந்தத் தொழிற் சாலையை மீண்டும் திறந்து லாபகரமாக நடத்த முடியுமா என்பதை இந்த அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த சந்தன ஆலை $1\frac{1}{2}$ ஆண்டுக் காலமாக மூடப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக

[திரு. ப. சுந்தரம்] [1989 ஏப்ரல் 25

திறப்பதற்காக வேண்டி மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்று, அந்த சந்தன ஆலையைத் திறப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்பதற்காக அந்த ஆலையைப் பார்வையிட்டார்கள். அதைத் திறப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அது எப்போது திறக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே. நான் ஏற்கெனவே சொன்னதுபோல், முந்தைய அரசு இந்த ஆலையை மூடிவிடலாம். மூடிவிட்டு அங்கேயுள்ளே இயந்திரங்களை விற்றுவிடலாம். இயந்திரங்களை வாங்குவதற்கு யாரும் வராவிட்டால் இயந்திரங்களை உடைத்து இரும்புகளாகக் கூட விற்று விடலாம என்கின்ற அளவிற்கு ஒரு குழு இப்படிப்பட்ட பரிசீலனையை செய்திருக்கிறது. திட்ட முதலீட்டுக் குழு 'பப்ளிக் இன்வெஸ்ட்மெண்ட் கமிட்டி' இப்படிப்பட்ட ஒரு சிபாரிசை செய்திருக்கின்றது. என்னிடத்திலே இந்தக் கோப்பு வந்தபோது இப்படிப்பட்ட ஒரு நல்ல ஆலையை மூடக்கூடாது என்ற எண்ணத்தோடு நான் அங்கே சென்று பார்த்தேன். அது நல்ல ஆலை, அந்த ஆலையை மூடினால் இன்னும் அந்தப் பகுதியிலே சந்தன மரங்கள் திருட்டுப் போவது அதிகமாகும் என்ற ஒரு கருத்து இருக்கின்றது. ஆகவே, எப்படியும்—நவம்பர் 1987-லிருந்து இந்த ஆலை மூடிக் கிடக்கின்றது.—ஆலையை திறந்துவிட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு விரைவில் அந்த ஆலை திறக்கப்படும் என்று அறிவித்தேன். இருந்தாலும்கூட, அதிலே சில ஆய்வு நடத்த வேண்டி இருக்கிறது. அதற்காக ஒரு 'எக்ஸ்பர்ட் கமிட்டி' ஒன்றை அமைத்து, அந்த 'எக்ஸ்பர்ட் கமிட்டி''யினுடைய அறிக்கையை வாங்கிக் கொண்டு நிச்சயமாக இந்த ஆலை மீண்டும் 6 மாத காலத்திற்குள்ளே திறக்கப்படும் என்ற செய்தியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற காலத்தில் இந்த ஆலையை அரசு இயக்கிய போது அந்தப் பகுதியிலேயிருந்த சந்தனக் கட்டைகளையெல்லாம் கொள் முதல் செய்யாமலே இலவசமாகவே அரசு சந்தனக்கட்டைகளையும் உபயோகப்படுத்தி சந்தன எண்ணெய் தயாரித்தும் இந்த ஆலை அதிகமான நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்லப்பட்டது. ஆக சந்தன கட்டையில் நமக்கு வர வேண்டிய அரசு வருவாயும் இழந்து ஏற்கெனவே ஆலை மூலமாக இன்னொரு வகையான இழப்பும் ஏற்பட்டு, இரண்டு வகையான இழப்பு அரசுக்கு ஏற்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. அதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதைப் போக்க அமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, மூலப் பொருளை பொறுத்த மட்டிலே சந்தனக் கட்டையை அந்த ஆலைக்கு வனத்துறை இலவசமாகக் கொடுக்கவே இல்லை. அந்தந்த வருடத்திலே பொதுச் சந்தையிலே ஏலம் விடுகிறபோது என்ன விலையை அரசு பெற்றதோ வனத்துறை பெற்றதோ, அந்த விலைக்குத்தான் இந்த ஆலைக்குச் சந்தனக் கட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய நிலையில் ஏறத்தாழ ஒரு டன் சந்தனக் கட்டையினுடைய விலை சராசரி 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஆகிறது. இப்படி அந்தந்த ஆண்டு எந்த விலை இருக்கிறதோ அந்த விலைக்கு இந்த இலாக்கா கொடுத்து வந்திருக்கிறார்கள். ஏனைய தொழிற்சாலைகளுக்கு குறிப்பாக சொல்லப்போனால் சேஷசாயி பேப்பர் ஆலை, மற்றும் விஸ்கோஸ் இண்டியா போன்ற ஆலைகளுக்கு வனத்துறையிலிருந்து மரங்களைக் கொடுக்கிற போது, பொதுச் சந்தையிலே என்ன விலை இருக்கிறதோ அதை விட குறைவாக அட்மினிஸ்ட்ரேட்டிவ் பிரைஸ் என்ற ஒன்றை முடிவு செய்து, பொதுச் சந்தையிலே இருப்பதைவிட குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே இங்கே அரசுத் துறையிலிருந்து நடக்கின்ற இந்த சந்தன ஆலைக்குக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையும் இருக்கிறது. ஆனால் ஏலத்திலே விடுகிற தொகைக்கே கொடுத்தாலும் கூட இந்த ஆலையை லாபகரமாக நடத்த முடியும் என்ற ஒரு கருத்து உருவாகியிருக்கிறது. ஏனென்றால் முன்பு நடந்த போது விற்பனை சரியாக கவனிக்கப்படவில்லை. வெளிநாடுகளுக்கு இந்த எண்ணெய், சந்தன தைலம் ஏற்றுமதி செய்யப்பட்டது. அது வெளிநாட்டில் என்ன விலைக்கு வாங்கப்படுகிறது என்பதே அறியாதபடி, அங்கே இருக்கிற விலையை விட பாதி விலைக்கு இங்கே எப்படியோ கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக இங்கே நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே மீண்டும் நல்ல முறையிலே நடத்தி சற்று விலையை மூலப் பொருளுக்கு குறைவாக பெற்றுக்கொண்டு விற்பனையை சரியான முறையிலே நடத்தினால் இந்த ஆலையை லாபகரமாக, ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் லாபம் வருகிற அளவிற்கு நடத்த முடியும் என்ற ஒரு கருத்து இந்தத் துறையிலே இருக்கிறது.

திரு. டி. சி. விஜயேந்திரையா: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தெங்கனி கோட்டை தாலுக்காவிலிருந்து ஆயிரக்கணக்கான டன் சந்தனக் கட்டைகள் வெளியே போய்க் கொண்டிருக்கிறது. இப்போது காடுகளில் சரியான கவனிப்பு இல்லாமல் மிகவும் திருட்டுத்தனமாக போய்க் கொண்டிருக்கிறது. நமது அண்டை மாநிலமான கர்நாடகாவிலே பிரைவேட் ஆட்களுக்கு யாருக்குமே பெர்மிட் கொடுப்பதில்லை. பூராவும் அரசாங்கத்திலேயே பயன்படுத்துகிறார்கள். அதனால் இங்கேயிருந்து அனேகமாக அங்கே டிரான்ஸ்போர்ட் செய்ய வசதி இருக்கிறது. ஆகவே தெங்கனிக்கோட்டையில்

ஒரு சந்தனக்கட்டை இண்டஸ்ட்ரீ அதாவது பொம்மைகள், விக்கிரகங்கள் செய்வதற்குஅந்த இடத்தில் ஒரு இன்டஸ்ட்ரீஸ் ஏற்படுத்தினால் அதனால் இந்த வெளியில் கள்ளத்த னமாக போகின்றதை நிறுத்தலாம். அதனால் அமைச்சர் அவர்கள் இதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய காடுகளிலிருந்து திருடிச் செல்லுகின்ற மரங்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்லுகின்றன என்பது உண்மை. குறிப்பாக நமக்கும் கேரளாவிற்கும் இடையிலே இருக்கக்கூடிய அந்த எல்லையிலே அவர்களுடைய நிலத்திலே இரண்டு ஆலைகள் இருக்கின்றன. அங்கே கேரள காடுகளிலே நல்ல மரங்கள் அதிகமாக கிடையாது. அதுபோல தமிழ்நாட்டிற்கும் ஆந்திர ராவிற்கும் இடையிலே இருக்கின்ற அந்த எல்லையோரத்திலே அவர்களுடைய பகுதியிலே ஒரு ஆலை இருக்கிறது. இப்படிப் பட்ட இடங்களுக்கு இங்கே ஏலத்திலே வாங்கியும் செல்கி றார்கள். ஒரு பகுதியை அவர்களாகவும் வெட்டிக்கொண்டு சென்று விடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு தகுந்த நட வடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதைத் தடுக்க வேண்டும் இங்கே நம்முடைய ஆலையும் இயங்கியாக வேண்டும். அங்கே பொம்மைகள் செய்வதைப் பற்றிச் சொன்னார்கள். சந்தன மரத்திலிருந்து, ஏற்கெனவே தனியார்கள் இந்த மரங் களை ஏலம் எடுத்து பொம்மைகளாக செய்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். அது அனுமதிக்கப்படு கின்றது. அரசுத் துறையிலும் இப்படிப்பட்ட தொழிற்சாலையை உருவாக்க முடியுமா என்பதை பரிசீலனை செய்து பார்ப்போம்.

திரு. இரா. மோகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் கூறுகின்றபோது கேரள மாநிலத்திற்கு ஏராளமான சந்தனக் கட்டைகள் கடத்தப் படுவது உண்மை என்ற தகவலை இங்கே அறிவித்திருக்கிறார். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு என்னென்ன முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது. அதே போல சந்தனக் கட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு நமக்கு அனுமதி வழங்கி இருக்கிறதா? காரணம் பாராளு மன்றத்திலே பலமுறை இது எழுப்பப்பட்டு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை மாநில அரசே சந்தனக் கட்டைகளை ஏற்றுமதி செய்வதற்கு. ஆகவே மீண்டும் சந்தனக் கட்டைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசோடு கேட்டு அந்த அனுமதியை அரசு பெற்றுள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, சந்தனக் கட்டைகள் ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 100 டன் அளவிற்கு இங்கேயிருந்து கடத்தி வெளி மாநிலங்களுக்கு எடுத்

1989 ஏப்ரல் 25] [திரு. கே. பி. கந்தசாமி]

துச்செல்லப்படுகின்றது என்ற ஒரு தகவல் இருக்கிறது. இவைகளை குறைப்பதற்கு, இந்தத் திருட்டுக்களை குறைப்பதற்கு நடவடிக்கைகள் உண்டு. அவைகளையெல்லாம் நாங்கள் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஏற்கெனவே பாரஸ்ட் செல் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. ஒரு போலீஸ் அமைப்பு அங்கே இருக்கிறது. அவர்களைக் கொண்டு மேலும் இதில் தீவிரமாக நடவடிக்கை எடுக்க ஆணையிடப்பட்டிருக்கிறது. அது போல இந்தத் துறைக்கு ஒரு விமானம் இருந்தால் மிக நன்றாக இருக்கும் என்ற முறையிலே ஒரு திட்டத்தின் கீழே, மேலே பறந்து சென்று ஆங்காங்கே காடுகளுக்கு மத்தியிலே வெட்டி கொண்டிருப்பவர்களை கண்டுபிடிப்பதற்காக இப்படிப்பட்ட ஒரு திட்டத்தையும் நாங்கள் வைத்திருக்கிறோம். ஆகவே, இதற்கு முன்பு இருந்ததைவிட இந்தத் திருட்டு குறைந்திருக்கிறது. கடந்த 2, 3 மாதங்களிலே ஏறத்தாழ 43 டன் எடையுள்ள சந்தனக் கட்டைகளை பிடித்திருக்கிறோம். அங்கே வெட்டிக்கொண்டிருப்பவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டு வருகிறது. ஏற்றுமதியைப் பொறுத்தவரையிலே இப்பொழுது இருக்கின்ற சட்டத்தின்படி ஏற்கெனவே—இங்கேயிருக்கும் உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இது, பாரஸ்ட் என்று சொல்லக்கூடியது கன்கரண்ட் லிஸ்டிலே இருக்கின்ற காரணத்தினாலே மத்திய அரசை கேட்டுதான் சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. இதிலே, ஏற்றுமதியை பொறுத்தமட்டிலே இதுவரை மரங்களை இப்போதுள்ள சட்டத்தின்படி நாம் ஏற்றுமதி செய்ய முடியாது. ஆனால் அவர்கள் சொன்னார்களே, கார்வில் பொம்மைகளாகவும்,—பொம்மைகள் செய்கின்றபோது மரத்தூள்கள் விழுகின்றது— மரத் தூள்களாகவும் ஏற்றுமதி செய்யலாம் என்ற அளவிற்கு விதிகள் இருக்கின்றன. ஆனால் நடப்பது என்னவென்றால் மரத்தை வாங்கிக் கொண்டு அதற்கு ஒரு தலையும் வைத்து, ஒரு காலையும் வைத்து அதை பொம்மை என்று சொல்லிவிடுகிறார்கள். அது உள்ளபடியே கார்விங் என்ற விதிக்குட்பட்ட கார்விங்காக, பொம்மையாக இருக்காது.

அந்த அடிப்படையிலே அந்த மரங்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மரத் தூள்கள் என்று சொல்கிறார்களே, கார்விங் முழுமையாகச் செய்தால்தானே அந்தத் தூள்கள் கிடைக்கும். எப்படியோ மரங்களை வெட்டி சிப்ஸ் என்ற அளவிற்கு அதை மரத் தூள்களாக்கி எற்றுமதி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசோடு நாங்கள் தொடர்பு கொண்டிருக்கிறோம். கடிதம் எழுதியிருக்கிறோம். மத்திய அமைச்சரை நான் பார்த்தபோது. நேரிலே டெல்லி"யிலே சந்தித்த போது எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதைத் தளர்த்தி ஒரு இருபத்தைந்து சதவிகிதமாவது மரங்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்தால் நல்ல வருவாயை வனத்துறை பெற முடியும் என்று மத்திய அரசிற்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றோம்.

[1989 ஏப்ரல் 25

விவசாயிகள் வீடு கட்டிக் கொள்ளக் கடன்.

124.—(*வினா எண் 800)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) விவசாயிகள் சொந்தமாக வீடுகள் கட்டுவதற்கு குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, விடை (அ) மற்றும் (ஆ): வீடுகள் கட்டுவதற்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவும் திட்டம் கிராமப்புறங்களில் உள்ள நலிவுற்ற பிரிவினருக்குச் செயல் படுத்தப்படுகிறது. பொருளாதாரத்தில் நலிவுற்ற விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே வசிக்கக்கூடிய விவசாயிகள் நிரம்ப வெறும் கூரை வீடுகளிலே வசித்துக் கொண்டு இருக்கிறார்கள். நாம் கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக ஒரு ஊருக்கு 10 வீடு, 15 வீடு என்று கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறோமே தவிர, அவர்களுக்கு அந்த வீடுகளை முழுமையாகக் கட்டுவதற்கான உதவி செய்யவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? எனவே நீங்கள் எங்கே எல்லாம் கூரை வீடுகள் இருக்கின்றனவோ, விவசாயிகளுக்கு, அங்கே ஹவுசிங் யூனிட்டிலிருந்தே அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயாவது குறைந்த வட்டியில் கொடுத்து, வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள மூலமாகத்தான் கடன் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதிலே பல்வேறு பிரிவினரும் விவசாயிகள், தொழிலாளர்கள் அனைவரும் இந்தக் கடன் உதவி பெற்று வீடு கட்டிக் கொள்ளலாம். மாண்புமிகு திருமதி பொன்னம்மாள் அவர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக ஆங்காங்கே இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுக்கமுடியுமா என்று கேட்கிறார்கள். வீட்டுவசதி வாரியம் இதுவரை நகர்புறங்களிலேயும் இது தவிர தமிழ்நாடு முழுவதிலும் 35 மாடல் டவுன் என்ற அளவிலே தான் இன்றைக்கு வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள. எங்காவது இந்த வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக

1989 ஏப்ரல் 25] [திரு. கே. பி. கந்தசாமி]

மேலும் வீடுகளைக் கட்ட வேண்டும் என்று எண்ணினால், அதற்கான நிலத்தை நீங்கள் தருவதற்கு ஏற்பாடு செய்தால் நிச்சயமாக ஆங்காங்கே வீடுகளைக் கட்டித்தர நாங்கள் முன் வருவோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக அங்கங்கே உள்ள டவுன்களுக்குத் தான் வீடு என்று சொல்லும் போது சற்று வேதனையாக இருக்கின்றது. காரணம் நீங்கள் எந்தத் துறையிலே வாங்குவீர்களோ தெரியாது, கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் கட்டப்படக்கூடிய வீடுகளுக்குக் குறைந்த அளவிலே ஒரு ஊருக்கு 10 வீடு, 13 வீடு, அதற்கு மேல் பணம் இல்லைஎன்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, நீங்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து உலக வங்கி மூலமாகவோ ஹட்கோ திட்டத்தின் மூலமாகவோ, தயவு செய்து—பட்டா தான் மூலதனமாக வைத்திருக்கிறார்களே, அப்பேர்பட்ட ஏழை மக்களுக்கு— ஆர். எல்.இ. ஜி.பி., என். ஆர்.இ. பி., திட்டத்தின் மூலமாக அரிஜன மக்களுக்கு மட்டும்தான் கட்டி வருகிறோம். பாக்கிப் பேரை நாம் தொடுவதுகூட இல்லை. அந்த அளவிற்கு எல்லா ஏழை மக்களுக்கும் கட்டக்கூடிய அளவில் உலக வங்கி மூலமாகவாவது கடன் வாங்கிக் கொடுத்து, வீடு கட்டும் திட்டத்தை மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கேள்வி நியாயமான கேள்வி. ஏனென்றால் இன்றைக்கு ஆதிதிராவிட நலத் துறை மூலமாகவும் மீன் வளர்ச்சித் துறை மூலமாகவும் இன்னும் என். ஆர். இ. பி., போன்ற அந்தக் திட்டங்களின் மூலமாகவும் கட்டப்படுகிற வீடுகள் எல்லாம் அங்கே உள்ள ஆதிதிராவிட மக்களுக்கும் மீனவர்களுக்கும் தான் பயன் தருகிறது, ஆகவே, மற்றவர்களுக்குச் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் கடன் கொடுக்கப்படுகிறது. அங்கே வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இல்லை. ஆகவே இவைகளையெல்லாம் சேர்த்து கிராம வீடு கட்டும் வாரியம் என்ற அளவிற்கு ஒரு வாரியத்தை உருவாக்கி, இப்போது ஹவுசிங் போர்டு— வீட்டு வசதி வாரியம் இருக்கிறதே, அதுபோல் கிராமங்களிலேயும் வீடுகளைக் கட்டித் தருகின்ற அளவிற்கு கிராம வீட்டு வசதி வாரியம் என்ற ஒரு வாரியத்தை ஏற்படுத்தலாமா என்பது அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது.

(முற்பகல் 9-40.)

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும் போது கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலமாக இந்த வீட்டு வசதியை பெறுவதற்கு

கடன் பெறலாம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த கூட்டுறவு சங்கங்களில் விசாரித்தபோது குறிப்பிட்ட பகுதி, குறிப்பிட்ட கிராமம் என்று 'ஏரியா ஆப்பரேஷன்' என்ற முறையில் விதி வைத்து இருக்கிறார்கள். இதை அனைத்து கிராமங்களுக்கும் அனைத்து தகுதியுள்ள தொழிலாளர்கள், விவசாய பெருங்குடி மக்களுக்கும் வீடு கட்டுவதற்கு அந்த சங்கங்களின் மூலம் அரசு ஏற்பாடு செய்து கொடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக எனக்குத் தரப்பட்டிருக்கின்ற தகவல் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு சங்கம் என்ற அளவுக்கு 165 கிராம கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும் அதேபோல் நகர்புறங்களில் மொத்தம் 480 கூட்டுறவு சங்கங்கள் நகர்புற கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும் அறிகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏறத்தாழ இந்த ஆண்டுக்கே 72 கோடி ரூபாய் கடன் ஆக ஆங்காங்கே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கும் மேலாக கடன் வேண்டும் என்று மனுக்கள் இருக்கத்தான் செய்கின்றன. இங்கே ஒரு கஷ்டம் என்னவென்றால், கிராமப்புறங்களில் ஏற்கெனவே ஆதிதிராவிடர்களுக்கு, மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிகொடுக்கின்ற காரணத்தால் இந்தப் பட்டியலில் வரக்கூடிய பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரை சேர்ந்த ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 8 ஆயிரம் ரூபாய் கடன் பெற்றுவிட்டு அந்தக் கடனை திருப்பிக் கொடுப்பதில் சங்கடம் இருக்கிறது. ஆகவே இதை நாங்கள் மனதிலே கொண்டு அதையும் ஓரளவுக்கு மானியமாக கொடுக்கமுடியுமா (கைத்தட்டல்) என்பதை நாங்கள் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். கூடிய விரைவில் அமைச்சரவை அதற்கான முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராயபுரம் இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்துதல்.

97— (*வினா எண் 170)— **தி. இரா. மதிவாணன், திரு. கோ. பூவராகன்** மற்றும் **திரு. மா. சுந்தரதாஸ்** ; மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம், மன்னார்சாமி கோயில் தெரு முனையில் உள்ள இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ; இல்லை.

கடன் பெறலாம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த கூட்டுறவு சங்கங்களில் விசாரித்தபோது குறிப்பிட்ட பகுதி, குறிப்பிட்ட கிராமம் என்று 'ஏரியா ஆப்பரேஷன்' என்ற முறையில் விதி வைத்து இருக்கிறார்கள். இதை அனைத்து கிராமங்களுக்கும் அனைத்து தகுதியுள்ள தொழிலாளர்கள், விவசாய பெருங்குடி மக்களுக்கும் வீடு கட்டுவதற்கு அந்த சங்கங்களின் மூலம் அரசு ஏற்பாடு செய்து கொடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக எனக்குத் தரப்பட்டிருக்கின்ற தகவல் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு சங்கம் என்ற அளவுக்கு 165 கிராம கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும் அதேபோல் நகர்புறங்களில் மொத்தம் 480 கூட்டுறவு சங்கங்கள் நகர்புற கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும் அறிகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏறத்தாழ இந்த ஆண்டுக்கே 72 கோடி ரூபாய் கடன் ஆக ஆங்காங்கே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கும் மேலாக கடன் வேண்டும் என்று மனுக்கள் இருக்கத்தான் செய்கின்றன. இங்கே ஒரு கஷ்டம் என்னவென்றால், கிராமப்புறங்களில் ஏற்கெனவே ஆதிதிராவிடர்களுக்கு, மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிகொடுக்கின்ற காரணத்தால் இந்தப் பட்டியலில் வரக்கூடிய பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரை சேர்ந்த ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 8 ஆயிரம் ரூபாய் கடன் பெற்றுவிட்டு அந்தக் கடனை திருப்பிக் கொடுப்பதில் சங்கடம் இருக்கிறது. ஆகவே இதை நாங்கள் மனதிலே கொண்டு அதையும் ஓரளவுக்கு மானியமாக கொடுக்கமுடியுமா (கைத்தட்டல்) என்பதை நாங்கள் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். கூடிய விரைவில் அமைச்சரவை அதற்கான முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராயபுரம் இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்துதல்.

97— (*வினா எண் 170)— **தி. இரா. மதிவாணன், திரு. கோ. பூவராகன் மற்றும் திரு. மா. சுந்தரதாஸ் ;** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம், மன்னார்சாமி கோயில் தெரு முனையில் உள்ள இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ; இல்லை.

1989 ஏப்ரல் 25]

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை ராயபுரம் ஸ்டான்லி மருத்துவமனைக்கு அருகில் ரயில்வே லெவல் கிராசிங் இருக்கிறது. அந்த வழியில் கேட்டுக்கு வட பக்கத்தில் ஆர். எஸ். ஆர். எம். தாய் சேய் நல மருத்துவமனை உள்ளது. தெற்குப் பக்கத்தில் ஸ்டான்லி மருத்துவமனை உள்ளது. இதனால் அவசர சிகிச்சை பெற வரக்கூடிய நோயாளிகள் உயிருக்குப் போராடுகின்ற சூழ் நிலையில் இருக்கிறார்கள். எனவே அங்கே மேம்பாலமாவது அல்லது சுரங்க பாதையாவது அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப் பாலங்களுக்கு என மாநில அளவில் போக்கு வரத்துச் செயலாளர் தலைமையின் கீழ் இயங்குகின்ற குழு ஒரு செயற்குறிப்பை பரிசீலித்தது. மன்னார்சாமி கோயில் தெருவில் அமைந்துள்ள இந்த ரயில்வே மேல்பாலத்தை கீழ்க்கண்டவாறு விரிவுபடுத்தலாம் என ஆய்வு ஒன்று செய்யப்பட்டது.

(1) 4 வண்டி தட அளவுக்கு அகலப்படுத்துவது ;

(2) இடித்து விட்டு 4 வண்டி தட அளவுக்கு புதிதாக கட்டுவது,

(3) இருக்கின்றவாறே இயங்க விட்டுவிட்டு அதற்குப் பதிலாக வடக்கு கடற்கரைச் சாலையில் உள்ள 2 லெவல் கிராஸ்களை மாற்றி மேம்பாலமாக கட்டுவது பற்றி ஆய்வில் இருக்கிறது.

இதில் மூன்றாவதாக கூறியபடி விரிவுப்படுத்துவது என்று முடிவு செய்து இந்தத் திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைத் துறை, துறைமுகக் கழகம், மாநகராட்சி ஆகியவற்றை ஈடுபடுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. துறைமுகக் கழகத்திற்கு இந்தப் பாலத்தால் அவர்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை என்று சொல்லி ஈடுபட இசையவில்லை. இறுதியாக சென்னை மாநகராட்சி பொறுப்பில் உள்ள வடக்கு கடற்கரைச் சாலையில் இந்த பாலம் கட்டப்பட இருப்பதால் முழு பொறுப் பையும் சென்னை மாநகராட்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் அதை தமிழ்நாடு நகர அபிவிருத்தி திட்ட போக்குவரத்து அங்கத்தின் கீழ் கொண்டு வந்து நிறைவேற்றப்பட வேண்டு மென்றும் ஆய்வில் இருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு வழிப் பாலம் ஏற்பாடு செய்வதற்கு ரயில்வே இலாக்காவிலேயிருந்து ஏதாவது பணம் கொடுப்பதாக இருக்கிறார்களா? கொடுப்பதாக குறிப்பு ஒன் றைக்கூட நான் பத்திரிகையிலே பார்த்தேன். எவ்வளவு

கொடுப்பதாக இருக்கிறார்கள்? இல்லையென்றால் அந்த நான்கு வழி பாலம் அமைப்பதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவு செய்வதற்கான குறிப்புகள் ஏதாவது அரசிடம் இருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரயில்வே துறையை இதிலே ஈடுபடுத்துகின்ற யோசனை இல்லை. நெடுஞ்சாலைத் துறை, துறைமுகக் கழகம், மாநகராட்சி இந்த மூன்று துறைகளின் மூலமாகத்தான் இதைக் கட்ட வேண்டுமென்று ஆய்வு செய் யப்பட்டது. அது எங்களுக்குப் பயன்தரவில்லை என்று அதை துறைமுகக் கழகம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் மாநக ராட்சியே அதைக் கட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கான மதிப்பீடுகளை யெல்லாம் ஆராய்ந்து முடிவு செய்யக்கூடிய நிலையிலே இருக் கிறது. மதிப்பீடுகள் பற்றிய விவரம் எதுவும் இப்போது என்னிடத்திலே இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது என்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். அந்தப் பகுதியைப் பொறுத் தவரையில் அது ஒரு முக்கியமான மேம்பாலம். தினமும் பல விபத்துக்கள் அந்தப் பகுதியிலே நடந்து கொண்டிருக்கின்றன. அதிகமான மக்கள் செல்லமுடியாத நிலையிலே இருக்கிறது. ஆகையால், அதிகாரிகள் மூலம் செயல்படுவதை விட்டுவிட்டு, உடனடியாக அதை அமைச்சர் அவர்களே, நேரடியாக அந்த வேலைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று பேர்களுடைய உணர்வுகளை மதித்து தக்க நட வடிக்கை எடுக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை ஆவடி மேம்பாலம் 2 ஆண்டுக்காலமாக மிகவும் பாழ்பட்டுள்ள நிலையிலே இருக் கிறது. அது குறித்துக்கூட நான் சார்ந்து இருக்கிற ஜனநாயக மாதர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் பல....(மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து இராய ரத்துக்கு வர முடியுமா?

1989 ஏப்ரல் 25]

பழனி வ.உ.சி. பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்.

98. —(*வினா எண் 305)— திரு. என் பழனிவேல்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியிலுள்ள வ.உ.சி. பேருந்து நிலையத்தை பைபாஸ் ரோடுவரை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இதற்கு தேவைப்படும் அரசு புறம்போக்கு நிலத்தை குத்தகைக்குப் பெற நகராட்சியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி நகரிலுள்ள அந்த பேருந்து நிலையம் மிகவும் குறுகிய அளவிலே இருக்கின்ற காரணத்தால் அங்கே தினமும் வரக்கூடிய நூற்றுக்கணக்கான பேருந்துகள் உள்ளே வந்து மறுபடியும் வெளியே வருவதற்கு பெரும் சிரமமாக இருக்கிறது. பக்கத்திலே இருக்கக்கூடிய நிலத்தை அரசு குத்தகைக்கு எடுக்க முயற்சிக்கும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அது பொதுப்பணித் துறைக்கு பாத்தியப்பட்ட வையாபுரி குளத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கிறது. அதை ஏற்கெனவே கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பேருந்து நிலையத்திற்காக கொடுப்பதற்கு அவர்கள் ஒப்புக் கொண்டு இருந்தார்கள். அது தற்போது எடுக்கப்பட்டு விட்டதா? இல்லை அது இன்னமும் ஆய்வில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களும் சுற்றுலா பயணிகளும் அதிக அளவில் வரக்கூடிய முக்கியமான நகரம் பழனி. தைப்பூசம், பங்குனி உத்திரம் திருவிழாக் காலங்களில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வருகின்றார்கள். ஏற்கெனவே அங்கே இருக்கக்கூடிய பஸ் நிலையத்திற்கு தினமும்

350 பேருந்துகள் வந்து செல்கின்ற குறிப்புகள் தரப் பட்டிருக்கின்றன. 35 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பஸ் நிலையம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. அந்த இடம் போதாது, இன்னும் விரிவு படுத்த வேண்டுமென்றுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான அந்தக் குளத்தை, புறம்போக்கு இடத்தை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. அவர்களும் கொடுப்பதற்கு ஒப்புக் கொண்டார்கள். இப்போது நில நிர்வாக ஆய்வாளரின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-50)

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த இடம் சம்பந்தமாக நில நிர்வாக அதிகாரிகளின் பரிசீலனையில் இருப்பதாக இங்கே அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது, இன்றைக்கு 350 பஸ்கள் தினமும் வருவது மட்டுமல்ல மேற்கொண்டு டவுன் பஸ்கள் வேறு அதே பஸ் நிலையத்திற்குள் தினமும் நூற்றுக்கணக்கிலே வந்து செல்கின்றன. ஆகவே அவசர உணர்வோடு அந்த பஸ் நிலையத்தை உடனடியாக மேற்கே இருக்கக்கூடிய அந்த பை-பாஸ் ரோட்டை நீட்டித்து கொடுப்பதோடு, இன்றைக்கு அந்தப் பேருந்து நிலையம் வருடத்திற்கு 3 தடவை வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறது. தற்காலிகமாக குத்தகை விட்டு, அதற்குப் பல இலட்சம் ரூபாய் செலவு ஏற்படுகிறது. அதையும் நாம் தவிர்க்கக் கூடிய முறையில் உடனடியாக இந்த வேலையை எடுத்து முடிப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல தைப் பூசம், பங்குனி உத்திரம் திருவிழாக் காலங்களிலே 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வரக்கூடிய காலகட்டத்தில் நெருக்கடியைத் தவிர்க்க அங்கே இருக்கக்கூடிய நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்குக் கூட இந்த இடம் மாற்றப்படுகிறது. மாற்றப்பட்டு, பொதுமக்களுக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இருந்தாலும் நிரந்தரமாக அங்கே ஒரு முடிவு காணவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரிவாக நில நிர்வாக ஆணையாளருடன் கலந்துபேசி, தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 25]

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன சமையல்கூடம்.

125. —(*வினா எண் 156)— **திரு. க. ரமணி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன சமையல் கூடம் கட்டும் பணி தாமதமாவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை விரைந்து கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நவீன சமையற்கூடத்தை விரைவாகக் கட்டி முடிக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டதன் நோக்கமே இந்த புதிய சமையல கூடத்தைக் கட்டி முடிப்பதற்கு 10 இலட்சம் ரூபாய் மதிப்பீடு போட்டு அரசு 'சாங்ஷன்' பண்ணி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் காலதாமதமாகியும் அந்தக் கட்டட வேலையை செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இது ஒரு ஆஸ்பத்திரிக்குள் நடக்கிறது. இந்த நிலையை அனுமதிக்க முடியாது என்ற உணர்வோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதன்மீது துரித நடவடிக்கை எடுக்க ஏதாவது யோசனை கொண்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன சமையல் கூடம் கட்டும் பணி தொடர்ந்து நடந்துக்கொண்டிருக்கிறது. இன்றுள்ள செய்திப்படி கூரை வரை கட்டி முடிக்கப்பட்டு, கூரை போடுவதற்கு தளம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கே சமையல் கூடம் கட்டி, தேவையான பாத்திரங்கள் வாங்குவதற்கு 2.85 இலட்சம் ரூபாயும் மரச் சாமான்கள் வாங்குவதற்கு 0.10 இலட்சம் ரூபாயும் சிறு கட்டுமானப் பணிகளுக்காக 1.5 இலட்சம் ரூபாயும் வழங்க செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. சமையல் கூடத்திற்கு கட்டடப் பணியை ஜூன் மாதத்திற்குள் முடிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கேட்ட கேள்விக்கு இன்னும் சரியான விடை வரவில்லை. ஒரு ஆஸ்பத்திரிக்குள் கட்டப்பட வேண்டிய கட்டிடம் கட்டுவதிலே இவ்வளவு காலதாமதம் ஏற்படுவது தேவைதானா ? அங்கே 1500-க்கு மேற்பட்ட ' இன் பேஷன்ட்ஸ் ' படுத்துக்கொண்டிருக்கிற ஆஸ்பத்திரியில் துரிதமாகக் கட்ட வேண்டிய கட்டடத்தைக் கட்டாமல் வருஷக்கணக்கில் நீட்டிக்கொண்டு போவது, பொதுப்பணித் துறை கட்டுமானப் பணியில் கவனம் செலுத்தாமல் இருப்பதும ஏனோ தானோ என்று நடவடிக்கையும் தானே காரணம். அந்தக் கட்டுமானப் பணியைத் துரிதப்படுத்தி, ஆஸ்பத்திரி என்ற முறையில் எமர்ஜென்சி கண்ணோட்டத்தோடு பார்த்து செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான பதிலை நேற்று கூட வினா நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இதுபோன்ற பல்வேறு புகார்கள் கடந்த காலத்தில் வந்திருக்கின்றன. இந்தக் கட்டடப்பணி தொடங்கப்பட்டு விரைவாக வேலை நடக்கவில்லை என்று புகார் வந்திருக்கிறது. நானும் பொதுப்பணித் துறை அமைச்சருடன் கலந்து பேசி, இந்தப் பணியை விரைவில் முடிக்க வேண்டுமென்று முடிவு செய்து, இதைப்போன்று ஒவ்வொரு மருத்துவமனைக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை விரைவாக முடிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விரைவாக முடிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால் இப்படிப்பட்ட பணிகளை விரைவாக முடிக்க வேண்டுமென்று நோக்கத்தோடு, ஆங்காங்கே சென்று, நேரில் பேசி, நேரடியாகக் குறிப்புகளைப் பெற்று, இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய மின் திட்டங்கள்.

126—(*வினா எண் 38)— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் புதிய திட்டங்கள் எவையேனும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விரம் என்ன ?

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கேட்ட கேள்விக்கு இன்னும் சரியான விடை வரவில்லை. ஒரு ஆஸ்பத்திரிக்குள் கட்டப்பட வேண்டிய கட்டிடம் கட்டுவதிலே இவ்வளவு காலதாமதம் ஏற்படுவது தேவைதானா ? அங்கே 1500-க்கு மேற்பட்ட ‘ இன் பேஷன்ட்ஸ் ’ படுத்துக்கொண்டிருக்கிற ஆஸ்பத்திரியில் துரிதமாகக் கட்ட வேண்டிய கட்டடத்தைக் கட்டாமல் வருஷக்கணக்கில் நீட்டிக்கொண்டு போவது, பொதுப்பணித் துறை கட்டுமானப் பணியில் கவனம் செலுத்தாமல் இருப்பதும ஏனோ தானோ என்று நடவடிக்கையும் தானே காரணம். அந்தக் கட்டுமானப் பணியைத் துரிதப்படுத்தி, ஆஸ்பத்திரி என்ற முறையில் எமர்ஜென்சி கண்ணோட்டத்தோடு பார்த்து செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான பதிலை நேற்று கூட வினா நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இதுபோன்ற பல்வேறு புகார்கள் கடந்த காலத்தில் வந்திருக்கின்றன. இந்தக் கட்டடப்பணி தொடங்கப்பட்டு விரைவாக வேலை நடக்கவில்லை என்று புகார் வந்திருக்கிறது. நானும் பொதுப்பணித் துறை அமைச்சருடன் கலந்து பேசி, இந்தப் பணியை விரைவில் முடிக்க வேண்டுமென்று முடிவு செய்து, இதைப்போன்று ஒவ்வொரு மருத்துவமனைக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை விரைவாக முடிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விரைவாக முடிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால் இப்படிப்பட்ட பணிகளை விரைவாக முடிக்க வேண்டுமென்று நோக்கத்தோடு, ஆங்காங்கே சென்று, நேரில் பேசி, நேரடியாகக் குறிப்புகளைப் பெற்று, இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய மின் திட்டங்கள்.

126—(*வினா எண் 38)— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் புதிய திட்டங்கள் எவையேனும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விரம் என்ன ?

1989 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்கண்ட ஐந்து முக்கிய திட்டங்கள் மைய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டு அதன் பரிசீலனையில் உள்ளன.

1. சண்முகாநதி புனல் மின்திட்டம் ..30 மெகாவாட்

2. பவானிகட்டளை முதற்கட்ட புனல் மின்திட்டம். ..90 மெகாவாட்

3. பரலையாறு புனல்மின் திட்டம் ..25 மெகாவாட்

4. கடலூர் அனல் மின் திட்டம் ..630 மெகாவாட்

5. வடசென்னை 2-வது (கட்ட) அனல் மின்திட்டம். ..420 மெகாவாட்

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 5 திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இன்றையதினம் தமிழ் நாட்டில மின்சாரத் தட்டுப்பாடு எந்த அளவுக்குப் பயங்கரமாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அதைப் போக்குவதற்குத தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தத திட்டங்கள் ஒப்புதலுக்காக எப்போது அனுப்பப்பட்டன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் பொறுப்பில் உள்ள அனைத்து மின் திட்டங்களிலிருந்தும் நமக்குக் கிடைக்கக் கூடிய மின்சாரம் சரியான முறையில் கிடைக்காத காரணத்தால் இப்போது தமிழ்நாட்டில மின்வெட்டு தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இது குறித்து ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். இன்றைக்கு மத்திய அரசு அனுமதித்து நாம் வெகு விரைவில் ஆரம்பிக்க இருக்கிற வடசென்னை அனல் மின் திட்டம். மேட்டூர் அனல மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டத்தை விரிவாக்கும் திட்டம் ஆகிய இந்த மூன்று திட்டங்களும சேர்ந்து 1440 மெகாவாட் என்ற அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யும். உடனடியாக இந்த ஆண்டு இறுதிக்குள் மேட்டூரும், தூத்துக்குடியும் உற்பத்தியைத் துவங்கிவிடும். வடசென்னை அனல் மின் திட்டத்தையும் கூடிய விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம். அதுபோல் மத்திய அரசு அனுமதி அளித்து கால் கிடைக்காத காரணத்தால் 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுக்க முடியாமல்

9-வது திட்டத்தில் எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டு அந்த வகையில இரண்டு மின் திட்டங்கள் இருக் கின்றன. கடலூர் அனல் மின் திட்டம் 3X210 அதாவது மொத் தம் 630 மெகாவாட் திட்டம், வடசென்னை இரணடாவது திட்டம் 2X210 அதாவது மொத்தம் 420 மெகாவாட் திட்டம் ஆகியவையே அவையாகும்.

அதேபோல் வேலை முடிந்து இந்த ஆண்டு இறுதியிலிருந்து அதாவது புனல் மின் நிலையங்களிலிருந்து உற்பத்தியை ஆங் காங்கு சிறு, சிறு அளவில் பெற இருக்கிறோம். பைக்காரா மைக்ரோ திட்டத்திலிருந்து 2 மெகாவாட்டும், வைகை மைக்ரோ திட்டத்திலிருந்து 6 மெகாவாட்டும், கீழ்பவானி மைக்ரோ திட்டத்திலிருந்து 8 மெகாவாட்டும் என்ற வகையில் விரைவில் நமக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் மின்சாரம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் பற்றிச் சொன்னார்கள். நன்றி. ஆனால் இந்தத் திட்டங்கள் எல்லாம் நீர் மின் திட்டங்கள் அல்லது அனல் மின் திட்டங் களாகத் தான் இருக்கின்றன. கடல் நீரிலிருந்து மின் சாரம் தயாரிப்பதாகச் சொல்லப்பட்டது. அதுகுறித்து நம் முடைய அரசு ஆய்வு செய்திருக்கிறதா, ஆய்வு செய்யுமா, அதன் நிலை என்ன என்பதையும் நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரிலிருந்து மின்சாரம் எடுக்கக்கூடிய திட்டம் இன்னும் ஆய்வில்தான் உள்ளது. ஆனால் நீர்மின் திட்டங் களைப் பொறுத்தவரையில் பருவமழை பொய்த்த காரணத் தால் அவை சரியானபடி செயல்பட முடிவதில்லை. அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில் சரியானபடி கோல் கிடைக்கவில்லை. அதனால் பேசின்பிரிட்ஜ் எரிவாயு சுழல் மின் திட்டத்தை ஆரம்பிக்க இருக்கிறோம். அதேபோன்று சிறிய மின்திட்டமான வாயுமின் திட்டம் கோவல்களப்பாலின் என்ற இடத்தில் 5 மெகாவாட் மின்திட்டமாக ஆரம்பிக்க இருக்கிறோம். அதுபோல் காற்றாலை மின் திட்டம் ஆங் காங்கு நிறுவப்பட்டு, அதாவது முல்லைக்காடு என்ற இடத் திலும், கயத்தாறு என்ற இடத்திலும், புளியங்குளம் என்ற இடத்திலும், சுல்தான்பேட்டை என்ற இடத்திலும் நிறுவப்பட்டு சிறிய அளவில் மின் உற்பத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே காற்றாலையை பெரிய திட்டமாக கயத்தாறு என்ற இடத்தில் 6 மெகாவாட் திட்டமும், முப் பந்தல் என்ற இடத்தில் 4 மெகாவாட் திட்டமும் உற்பத்தி செய்து மின்சாரத்தைத் தர இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 25]

குறிஞ்சான் குளத்தில் துணை மின் நிலையம்.

127. —(*வினா எண். 195)—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட குறிஞ்சான் குளத்தில் உள்ள துணை மின் நிலையம் செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதனை மீண்டும் இயங்கச்செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சுரண்டை, வன்னிக்கோனேந்தல், ஆலங்குளம் 66/11 கே. வி. உபமின் நிலையங்களிலிருந்து மின் அழுத்தமும், மின் பளுவும் சரியாக உள்ளதாலும், மின்சாரம் சீராக அப்பகுதிகளுக்கு குறித்த நேரங்களில் வழங்கப்படுவதாலும், குறிஞ்சான்குளத்தில் தற்காலிகமாக நிறுவப்பட்ட ஒரு எம். வி. ஏ. லைன்டேப் உபமின்நிலையம் உபயோகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. மறுபடியும் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் ஏதுமில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சான்குளத்தில் ஏற்படுத்தப்பட்ட லைன்டேப் உபமின்நிலையம் சுமார் 32 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, பம்ப் செட்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருந்தது. அந்த மின்சார சப்ளை இப்போது நிறுத்தப்பட்டு இருப்பதன் காரணத்தால் அங்கேயுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு பம்ப்செட்டுகளே பாதிக்கப்பட்டுப் போய் விடக் கூடிய அளவில் அவர்கள் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்கி, நிவர்த்தி செய்து, ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பகுதிகளுக்கு சீரான முறைப்படி மின்சாரம் வழங்கப்படவேண்டும் என்பதற்காக தற்காலிகமாகத் தான் இது அமைக்கப்பட்டது. அதன் பிறகு அதன் அருகிலே இரண்டு துணை, சப் ஸ்டேஷன்கள் இயங்கத் தொடங்கியதால், இது தேவை இல்லை என்று கருதி இப்

போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதிலிருந்தே விவசாயிகளுக்கு சீராக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. மேலும் இந்தத் திட்டத்திலிருந்து மின்சாரம் விநியோகித்தால் நம்அரசாங்கக் கட்டுப்பாடு வைத்திருக்கிறோமே, விவசாயிகளுக்கு காலையிலே 4 மணி நேரம் மாலையிலே 4 மணி நேரம் என்பது இயங்காமல் போய்விடும் என்பதற்காகத்தான் அது நிறுத்தப் பட்டிருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அதாவது அங்குள்ள அதிகாரிகளுக்கு, அந்த மின்சாரத்தை அங்கே இயக்கிக் கொண்டிருக்கிற அந்த அதிகாரிகளுக்கு வீட்டு வசதி போன்ற சில வசதிகள் இல்லாததால் அது தடை செய்யப்பட்டிருக்கிறது என்று பரவலாகப் பொதுமக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மின்சார சப்ளையானது எங்கள் தொகுதியிலே சரியாக இல்லை. அதற்கும் சீராக விவசாய மக்களுக்கு மின்சாரத்தை கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை பற்றி நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாயிகளுக்கு சீராக மின்சாரம் கண்டிப்பாக வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஆய்வு செய்து, அதுபோல அதிகாரிகளுக்காக அது நிறுத்தி வைக்கப்பட்ட திட்டம் என்பது எங்களுக்குத் தெரிந்த வரை அதுபோல இல்லை. அதுமாதிரி அதிகாரிகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டால் அது ஆய்வு செய்யப்பட்டு திரும்பவும் இயக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ALONE TRIUMPHS

சென்னை, இராயபுரம் பகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகள்.

128. — (*வினா எண். 1314)

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, இராயபுரம் பகுதியிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதிலிருந்தே விவசாயிகளுக்கு சீராக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. மேலும் இந்தத் திட்டத்திலிருந்து மின்சாரம் விநியோகித்தால் நம்அரசாங்கக் கட்டுப்பாடு வைத்திருக்கிறோமே, விவசாயிகளுக்கு காலையிலே 4 மணி நேரம் மாலையிலே 4 மணி நேரம் என்பது இயங்காமல் போய்விடும் என்பதற்காகத்தான் அது நிறுத்தப் பட்டிருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அதாவது அங்குள்ள அதிகாரிகளுக்கு, அந்த மின்சாரத்தை அங்கே இயக்கிக் கொண்டிருக்கிற அந்த அதிகாரிகளுக்கு வீட்டு வசதி போன்ற சில வசதிகள் இல்லாததால் அது தடை செய்யப்பட்டிருக்கிறது என்று பரவலாகப் பொதுமக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மின்சார சப்ளையானது எங்கள் தொகுதியிலே சரியாக இல்லை. அதற்கும் சீராக விவசாய மக்களுக்கு மின்சாரத்தை கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை பற்றி நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாயிகளுக்கு சீராக மின்சாரம் கண்டிப்பாக வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஆய்வு செய்து, அதுபோல அதிகாரிகளுக்காக அது நிறுத்தி வைக்கப்பட்ட திட்டம் என்பது எங்களுக்குத் தெரிந்த வரை அதுபோல இல்லை. அதுமாதிரி அதிகாரிகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டால் அது ஆய்வு செய்யப்பட்டு திரும்பவும் இயக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

சென்னை, இராயபுரம் பகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகள்.

128. — (*வினா எண். 1314)

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, இராயபுரம் பகுதியிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

1989 ஏப்ரல், 15]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் குடிசை மாற்றுத் திட்டப் பணிகளில் 2,458 குடியிருப்புகள் உள்ளன. இந்த குடியிருப்புகளில் 5 குடிசை மாற்று திட்டப் பகுதிகளுக்கு 2,615 லட்சம் செலவில் சிறப்பு பழுதுபார்க்கும் திட்டம், ஸ்பெஷல் ரிப்பேர்ஸ், பணிகள் அமைக்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுவர்பூச்சு வேலைகள் சுவர்களுக்கு சுண்ணாம்பு மற்றும் கதவு ஜன்னல்களுக்கு பெயிண்ட் அடித்தல், உடைந்து போன கழிப்பறைகளுக்கு 'வாட்டர் குளோசஸ்ட்' மாற்றுதல், கசிவுகளை அடைத்தல், மேல் கூரைகளில் ஓடு அமைத்தல் போன்ற சீர்திருத்த பணிகள் நடைபெற உள்ளது. இந்த பணிகளுக்கான செலவுத் தொகை ஹட்கோ நிறுவனத்தின் மூலமாக கடன் கேட்கப்பட்டுள்ளது. அந்த கடன் தொகை வந்தவுடன் இந்த பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, இராயபுரம் பகுதியில் ஏழை மீனவர்கள் வாழ்கின்ற பகுதியான சிங்காரவேலர் நகர் குடிசைப் பகுதியிலேயும் தாழ்த்தப்பட்ட மக்கள் பின்தங்கிய மக்கள் ஏழைகள் வாழ்கின்ற பகுதியான செட்டித் தோட்டம் குடிசைப் பகுதிகளிலும் மாடி வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன அரிய கருத்தை நிதி நிலைமையைப் பார்த்து, அங்குள்ள நிலைமைகளை எல்லாம் நேரில் சென்று பார்த்து அதற்கான திட்டத்தை தீட்ட இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

(அ) பேரவைத் தலைவரின் தீர்ப்பை விமர்சிக்கும் வகையில் மதுராந்தகம் நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி உள்ளதாகக் கூறப்பெறுவது குறித்து.

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகர மன்றங்கள் ஏதாவது தீர்மானத்தை போட வேண்டுமென்று சொன்னால் அதற்கு ஒரு எல்லை உண்டு. அந்த வரையறைக்குட்பட்டு தான் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட வேண்டும். இதற்கு மாறாக மன்றத்திலே நடந்த நிகழ்ச்சி யைப் பற்றி, குறிப்பாக நீங்கள் அளித்த தீர்ப்பை விமர்சிக்கின்ற வகையிலே அந்த படங்களையெல்லாம் வெளியிட வேண் டும் என்று மதுராந்தகம் நகராட்சியிலே ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. அது ஒரு உரிமை மீறல் செயல் ஆகும். இதை உரிமை மீறல் குழுவிற்கு விட்டு விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினால், நான் அவர் களுக்கு முறைப்படி எழுதிக் கேட்டுப் பிறகு என் கருத்தைச் சொல்வேன்.

(ஆ) சென்னை அபிராமபுரம் பகுதியில் பாதாள சாக்கடை சுத்தம் செய்யும் போது இறந்த ஊழியர் குடும்பத்திற்கு நிதியுதவி.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் வெளி வந்திருக்கக் கூடிய ஒரு வேதனைத் தரத்தக்க நிகழ்ச்சியை இங்கே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சென்னை அபிராமபுரம் பகுதி யிலே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் கழிவுநீர் அகற்றும் வாரி யத்தை சேர்ந்திருக்கக் கூடிய அலுவலக ஊழியர் ஒருவர், திரு. ஏழுமலை என்பது அவருடைய பெயர், அங்கே பாதாள சாக்கடையிலே அடைப்பு ஏற்பட்டு, அதை நீக்குவதற்காக உள்ளே சென்றவர் அங்கே விஷவாயுப் புகையால் தாக்கப்பட்டு உள்ளேயே மயங்கி விழுந்து மரணம் அடைந்திருக்கிறார்.

அவரது உடலை வெளியே எடுக்கக்கூட மிக அரும்பாடுபட்டு வெளியே எடுத்திருக்கிறார்கள். இதுபோல பாதாள சாக்கடை யிலே இறங்குகிற துப்புரவு ஊழியர் இறக்கிற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகிறது. இதைத் தடுக்க, பாதாள சாக்கடையிலே இறங்கி சுத்தம் செய்யும் பணியை இயந்திர மயமாக்குகின்ற கோரிக்கையை விடுப்பதோடு, அப்படி செய்தால் தான் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கலாம் என்பதால் இதற்கு ஓர் உத்தரவாதம் தர வேண்டு மென்பதோடு இறந்திருக்கின்ற ஊழியருடைய குடும்பத்தினருக்கு போதுமான நிவாரண தொகையை அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

2. தகவல் கோரல்.

(அ) பேரவைத் தலைவரின் தீர்ப்பை விமர்சிக்கும் வகையில் மதுராந்தகம் நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி உள்ளதாகக் கூறப்பெறுவது குறித்து.

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகர மன்றங்கள் ஏதாவது தீர்மானத்தை போட வேண்டுமென்று சொன்னால் அதற்கு ஒரு எல்லை உண்டு. அந்த வரையறைக்குட்பட்டு தான் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட வேண்டும். இதற்கு மாறாக மன்றத்திலே நடந்த நிகழ்ச்சி யைப் பற்றி, குறிப்பாக நீங்கள் அளித்த தீர்ப்பை விமர்சிக்கின்ற வகையிலே அந்த படங்களையெல்லாம் வெளியிட வேண் டும் என்று மதுராந்தகம் நகராட்சியிலே ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. அது ஒரு உரிமை மீறல் செயல் ஆகும். இதை உரிமை மீறல் குழுவிற்கு விட்டு விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினால், நான் அவர் களுக்கு முறைப்படி எழுதிக் கேட்டுப் பிறகு என் கருத்தைச் சொல்வேன்.

(ஆ) சென்னை அபிராமபுரம் பகுதியில் பாதாள சாக்கடை சுத்தம் செய்யும் போது இறந்த ஊழியர் குடும்பத்திற்கு நிதியுதவி.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் வெளி வந்திருக்கக் கூடிய ஒரு வேதனைத் தரத்தக்க நிகழ்ச்சியை இங்கே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சென்னை அபிராமபுரம் பகுதி யிலே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் கழிவுநீர் அகற்றும் வாரி யத்தை சேர்ந்திருக்கக் கூடிய அலுவலக ஊழியர் ஒருவர், திரு. ஏழுமலை என்பது அவருடைய பெயர், அங்கே பாதாள சாக்கடையிலே அடைப்பு ஏற்பட்டு, அதை நீக்குவதற்காக உள்ளே சென்றவர் அங்கே விஷவாயுப் புகையால் தாக்கப்பட்டு உள்ளேயே மயங்கி விழுந்து மரணம் அடைந்திருக்கிறார்.

அவரது உடலை வெளியே எடுக்கக்கூட மிக அரும்பாடுபட்டு வெளியே எடுத்திருக்கிறார்கள். இதுபோல பாதாள சாக்கடை யிலே இறங்குகிற துப்புரவு ஊழியர் இறக்கிற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகிறது. இதைத் தடுக்க, பாதாள சாக்கடையிலே இறங்கி சுத்தம் செய்யும் பணியை இயந்திர மயமாக்குகின்ற கோரிக்கையை விடுப்பதோடு, அப்படி செய்தால் தான் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கலாம் என்பதால் இதற்கு ஓர் உத்தரவாதம் தர வேண்டு மென்பதோடு இறந்திருக்கின்ற ஊழியருடைய குடும்பத்தினருக்கு போதுமான நிவாரண தொகையை அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

1989 ஏப்ரல், 25]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை உணர்ந்து இதைப் போன்ற சாக்கடைகளை சீர் செய்ய இயந்திர மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து நான் முன்பே வினாவிற்குப் பதிலளிக்கும்போது சொல்லியிருக்கிறேன். இங்கிலாந்திலிருந்து நவீனக் கருவிகள் வரவழைக்கப்பட்டு இப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. இறந்துபோன துப்புரவு ஊழியர் ஏழுமலையின் குடும்பம் குறித்து இந்த அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கிறது. ஆனால் அவர் அங்கே தற்காலிகமாகப் பணியாற்றியவர். அந்த அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட இந்த சோக நிகழ்ச்சியைக் கருதி வாரியம் அவருடைய குடும்பத்திற்கு உடனடியாக ரூபாய் ஆயிரம் கொடுத்திருக்கிறது. ஆனால் இருக்கிற சங்கடம் அவர் நிரந்தர ஊழியர் அல்ல, தற்காலிக ஊழியர். நிரந்தர ஊழியருக்கு வழங்குவது போல இவருக்கும் 20 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அவருடைய குடும்பத்தினர் சார்பில் கேட்டிருக்கிறார்கள். ஆனால் வாரியம் தான் இது குறித்து முடிவு செய்யும். வாரியம் முடிவு செய்ததற்குப் பிறகு அரசுக்கு அனுப்பினால் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து அது குறித்து அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) திருப்பத்தூர்த் தொகுதியில் சில பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கம் குறித்து.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23—4—1989 ஞாயிற்றுக்கிழமை அன்று என்னுடைய தொகுதியான திருப்பத்தூரில் நில நடுக்கம் ஏற்பட்டது. திருப்பத்தூர் நகரில் மட்டுமல்லாமல் ஜவ்வாது மலை, ஏலகிரி அடிவாரம் மற்றும் அங்கிருக்கிற கிராமங்களில் எல்லாம் நில நடுக்கம் ஏற்பட்டதால் அந்தப் பகுதிகளிலுள்ள கட்டிடங்கள் எல்லாம் இடிபாடுகளுக்கு ஆளாகியிருக்கின்றன. ஏற்கெனவே 2 ஆண்டுகளுக்கு முன்பு கூட இதுபோன்ற நில நடுக்கம் ஏற்பட்டது. இதை முன்கூட்டியே இனிமேல் மக்களுக்கு தெரியப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில நடுக்கங்கள் பல இடங்களில் ஏற்படுகின்றன. ஆனால் இதுவரையில் முன்கூட்டியே அறிவிக்கின்ற எந்த ஒரு நிலையிலும் எந்த ஓர் அரசும் அப்படி இதுவரையில் செய்ததாகத் தெரியவில்லை. எனவே அப்படி வேறு யாராவது முன்கூட்டியே அறிவிக்கின்ற சாதனங்களைப் பெற்று அறிவிக்கின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் அதைத் தமிழக அரசும் பெற்று அறிவிக்கின்ற சூழ்நிலை நிச்சயமாக உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989 ஏப்ரல், 25]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை உணர்ந்து இதைப் போன்ற சாக்கடைகளை சீர் செய்ய இயந்திர மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து நான் முன்பே வினாவிற்குப் பதிலளிக்கும்போது சொல்லியிருக்கிறேன். இங்கிலாந்திலிருந்து நவீனக் கருவிகள் வரவழைக்கப்பட்டு இப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. இறந்துபோன துப்புரவு ஊழியர் ஏழுமலையின் குடும்பம் குறித்து இந்த அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கிறது. ஆனால் அவர் அங்கே தற்காலிகமாகப் பணியாற்றியவர். அந்த அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட இந்த சோக நிகழ்ச்சியைக் கருதி வாரியம் அவருடைய குடும்பத்திற்கு உடனடியாக ரூபாய் ஆயிரம் கொடுத்திருக்கிறது. ஆனால் இருக்கிற சங்கடம் அவர் நிரந்தர ஊழியர் அல்ல, தற்காலிக ஊழியர். நிரந்தர ஊழியருக்கு வழங்குவது போல இவருக்கும் 20 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அவருடைய குடும்பத்தினர் சார்பில் கேட்டிருக்கிறார்கள். ஆனால் வாரியம் தான் இது குறித்து முடிவு செய்யும். வாரியம் முடிவு செய்ததற்குப் பிறகு அரசுக்கு அனுப்பினால் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து அது குறித்து அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) திருப்பத்தூர்த் தொகுதியில் சில பகுதிகளில் ஏற்பட்ட நில நடுக்கம் குறித்து.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23—4—1989 ஞாயிற்றுக்கிழமை அன்று என்னுடைய தொகுதியான திருப்பத்தூரில் நில நடுக்கம் ஏற்பட்டது. திருப்பத்தூர் நகரில் மட்டுமல்லாமல் ஐவ்வாது மலை, ஏலகிரி அடிவாரம் மற்றும் அங்கிருக்கிற கிராமங்களில் எல்லாம் நில நடுக்கம் ஏற்பட்டதால் அந்தப் பகுதிகளிலுள்ள கட்டிடங்கள் எல்லாம் இடிபாடுகளுக்கு ஆளாகியிருக்கின்றன. ஏற்கெனவே 2 ஆண்டுகளுக்கு முன்பு கூட இதுபோன்ற நில நடுக்கம் ஏற்பட்டது. இதை முன்கூட்டியே இனிமேல் மக்களுக்கு தெரியப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில நடுக்கங்கள் பல இடங்களில் ஏற்படுகின்றன. ஆனால் இதுவரையில் முன்கூட்டியே அறிவிக்கின்ற எந்த ஒரு நிலையிலும் எந்த ஓர் அரசும் அப்படி இதுவரையில் செய்ததாகத் தெரியவில்லை. எனவே அப்படி வேறு யாராவது முன்கூட்டியே அறிவிக்கின்ற சாதனங்களைப் பெற்று அறிவிக்கின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் அதைத் தமிழக அரசும் பெற்று அறிவிக்கின்ற சூழ்நிலை நிச்சயமாக உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் தாக்கப் பெற்றுள்ள தாகக் கூறப் பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. கே. எஸ். எஸ. ஆர். இராமச்சந்திரன், எஸ். ஆர். இராதா மற்றும் துரை ராமசாமி ஆகியோர் ''மாண்புமிகு மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம் சந்த் அவர்களை இரவில் காவல் துறையினர் அத்துமீறித் தாக்கி கைது செய்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும் படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.

*திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தபோது இருந்ததை விட இன்றைக்கு பதட்டம் அதிகமாக இருக்கிறது. காரணம் இன்றைக்கு கடலூர் சிறைச் சாலையில் இருக்கின்ற எங்கள் கட்சியைச் சார்ந்த மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம் சந்த் அவர்கள் வருங்காலத்தில் இதுபோன்று எந்த ஒரு சட்ட மன்ற உறுப்பினரையும் போலீசார் அவமானப்படுத்தக் கூடாது, அடிக்கக் கூடாது என்கிற நல்ல எண்ணத்தோடு, அதை உணர்த்துவதற்காக ''சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கி கிறேன்'' என்று சொல்லி உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார். அந்த வகையில் இன்றைக்கு இங்கே இருக்கிற அத்தனை சட்ட மன்ற உறுப்பினர்களுக்காகவும் அவர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு போராடிக் கொண்டிருக் கிறார். மாண்புமிகு சபாநாயகர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு சரியாக ஒத்துழைப்பு கொடுப்பது இல்லை, எதற்கு எடுத்தாலும் 25ஆம் தேதி சம்பவத்தை சொல்லி நேரத்தை போக்குகிறார்கள் என்று பொது மக்கள் மத்தியிலே சொல்லலாம். ஆனால் உங்களுக்கு சபை நடவடிக்கையில் உறுதுணையாக நாங்கள் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் தான் எங்கள் நிலையை உணர்த்த பொது மக்களிடம் இந்தப் பிரச்சினையை சொல்ல ஆரம்பித்திருக் கிறோம்.

(முற்பகல் 10-10)

ஆனால் இன்றைக்கு ஆளும் பொறுப்பிலுள்ள அரசாங்கம் அதைக் கூட எங்களைச் செய்ய விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னையில் தாய்மார்கள் கமிஷனர்

அலுவலகத்திற்குப் போய் போராடும் நேரத்திலே கூட, தாய் மார்கள் என்று கூடப் பார்க்காமல், அவர்களை அடித்து உள்ளே தள்ளியதோடு மட்டுமல்லாமல், பெண்கள் என்று கூடப் பார்க் காமல் அவர்களை அடித்து மிகப் பெரிய காயங்களை உண்டாக்கி இருக்கிறார்கள். அதைப் போல இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம் சந்த் அவர்கள் அமைச்சர் வருகின்ற நேரத்தில் கருப்புக் கொடி காட்ட வேண்டுமென்று சொல்லி, போலீசாரிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதை அவர்கள் கொடுக்கவில்லை. கொடுக்காத காரணத்தினால் 5 மணியி லிருந்து 10 மணி வரையிலே அங்கே இருந்துவிட்டு வீட்டுக்குச் சென்று விட்டார் திரு. உகம் சந்த் அவர்கள். போலீசார் அவரைக் கைது செய்ய வேண்டுமென்று நினைத்திருந்தால் அன்றைக்கு, அப்போதே கைது செய்திருக்கலாம். ஆனால் மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் வந்த பிறகு, அவருடைய தூண்டுதல் காரணமாக வீட்டிலே இருந்த மரியாதைக்குரிய திரு. உகம் சந்த் அவர்களை, அத்துமீறி வீட்டிற்குள்ளே புகுந்து போலீசார் அவரைத் தாக்கி, வீட்டிலே இருக்கிற பெண்டு பிள்ளைகள் எல்லாம் அலறி அடித்துக் கொண்டு ஓடும் அவலமான சூழ்நிலை இந்த நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உறுப்பினர் தன் னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கும்போது, இடையில் இது போன்ற ஒலி எழுப்புவது முற்றிலும் தவறு என்பதை உணர்த்த விரும்புகிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவ ரவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம், இன்றைக்கு கருப்புக் கொடி போராட்டம் என்றால், அது ஜனநாயக முறையிலே உங்கள் கட்சியிலேயும் சரி, எங்கள் கட்சியிலேயும் சரி, அனுமதிக்கப் பட்ட ஒன்று. அதை அனுமதிக்கிறீர்கள் என்றால் மாண்புமிகு அமைச்சர் வருகின்றபோது தவறு செய்த அமைச்சர் என்று நாங்கள் சொல்கிறோம். நீங்கள் மேடையிலே, நாங்கள் தவறு செய்யவில்லை, அண்ணா! தி.மு.க.காரர்கள் பொய் சொல்லுகிறார்கள் என்று சொன்னால், வாதத்திற்கு வாதம் சரியாகப் போய்விடும். அதைத் தவிர்த்துவிட்டு அன்றைக்கு போலீசாரை வைத்துக் கொண்டு அடிக்கும் வேலையும், இந்த இயக்கத்தை அழித்து ஒழித்து விடுகிறோம் என்று மிகப் பெரிய முயற்சியை இங்கே பொறுப்பிலே உள்ள அரசு செய்து கொண்டிருக்கிறது. இன் றைக்கு எதிர் அணியில் இருக்கும் உறுப்பினர்களை, அவர்கள் வீட்டிற்குள் புகுந்து அடிக்கும் மிக மோசமான சூழ்நிலை இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிறது. போலீசார், சட்டம

ஒழுங்கை அவர்களே கையிலே வைத்துக் கொண்டு, வீட்டிலே இருந்தாலும் விட மாட்டோம். உங்களை ஒழிப்போம் என்ற அளவுக்கு போலீசார் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் செக்ஷன் 148, 147, 323 கீழ் வழக்கு பதிவு செய்து, அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் சொல்லுகிற நேரத்தில் செக்ஷன் 148-ன்படி பயங்கர மான ஆயுதங்களோடு திரு. உகம் சந்த் அவர்கள் இருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்றைய தினம் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்தியிலும் அந்தப் படங்களைக் கொடுத்திருக்கிறோம். திரு. உகம் சந்த் அவர்கள் வெறும் கையோடுதான் நின்று கொண்டிருக்கிறார்கள். பயங்கர ஆயுதங்களைக் கையிலே வைத்துக் கொண்டு, போலீசாரைத் தாக்குகின்ற அளவுக்கு இன்றைக்கு நாட்டிலே யாராவது இருப்பார்களா என்று சொன் னால் யாரும் இருக்க மாட்டார்கள். போலீசார், தாங்கள் செய்கிற தவறுகளை மறைப்பதற்காக சென்னையானாலும் சரி, மதுராந்தகம் ஆனாலும் சரி, போலீசார் தவறுகளைச் செய்து விட்டு, இருப்பவர்களை அடித்துவிட்டு, அவர்கள் தப்பித்துக் கொள்ள சின்ன காயங்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அந்த சப்-இன்ஸ்பெக்டர், இந்தப் பத்திரிக்கையிலே, தினகரன் பத்திரிகையிலே— ஆளுகின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான பத்திரிகை— மிகப் பெரிய காயத்துடன் இல்லை, ஏதோ பிளாஸ்திரி ஒட்டிக் கொண்டு, மிகப் பெரிய காயம்போல வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை நீங்கள் அனுமதிக்கப்போகிறீர் களா என்பதுதான். போலீசாருடைய தவறுகளை நீங்கள் மீண் டும் அனுமதித்துக் கொண்டிருந்தால், இந்த அரசாங்கம் நல்ல பெயரை எடுக்க வேண்டுமென்று பல முயற்சிகளை எடுத்துக் கொண்டாலும், எப்படி நல்ல பெயர் வரும்? இப்படிப் பட்ட காரியங்கள் செய்வதன் மூலம் இந்த அரசாங்கத்திற்குக் கெட்டபெயர் தான் வருகிறது. சென்னையிலே 25ஆம் தேதி பிரச்சினையும் போலீஸ் மூலமாகத்தான் ஆரம்பித்தது. இன்றைக்கு திரு. உகம் சந்த் பிரச்சினையும் போலீஸ் மூலமாகத் தான் வந்து கொண்டிருக்கிறது. நாங்கள் அடிக்கடி உங்கள் மத்தியில் படங்களைக் காட்ட வேண்டுமென்று சொல்லி, அந்தப் படங்களைக் காட்ட வேண்டுமென்று சொல்லுவதை உரிமை மீறல் பிரச்சினையாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் கொண்டுவர, படப் பிரச்சினையும், போலீஸ் பிரச் சினையும் இந்த அரசாங்கத்திற்கு அவசியமா என்பதை மட்டும் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் தவறாகச் சொல்லவில்லை, பேச விடுங்கள்.

திரு. கோ. பூவராகன்: தலைவர் அவர்களே, எந்த ஒரு ஊராட்சி மன்றம் அல்லது நகராட்சி, அவர்களுடைய

எல்லைக்கு அப்பாற்பட்டு எந்தத் தீர்மானமும் போடக்கூடாது. அப்படிப் போட்டால் அந்த நகராட்சியைக் கலைப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இடையிலே மறித்துப் பேச வேண்டும். நீங்கள் சொல்லி விட்டீர்கள். அவர் பெயரைத் தான் சுட்டிக் காட்டினார் (குறுக்கீடு) உட்காருங்கள், இதில் வாதம் என்ன?

திரு. கே. கே.. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் இதைத் தவிர்க்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன். இது தினசரி நடக்க வேண்டுமென்று சொல்லவில்லை. எங்களுக்கு வேண்டிய நியாயத்தைக் கொடுக்க வேண்டும். ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, நியாயம் கிடைக்க வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் கூட கூட்டுறவு மானியக் கோரிக்கையில் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர் பேச முடியாமல், உள்ளே போய் சாப்பிட முடியாமல் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இது வேண்டுமா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம் சந்த் அவர்களுடைய சகோதரர் திரு. எஸ். டி. அசோக் போன்றவர்கள் காயத்தோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு காயமிருந்தால், போலீசார் முறைப்படி அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்க வேண்டும். ஆனால் அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்க்கவில்லை. வெளியே தெரியக் கூடாது என்பதால் சிறைச் சாலையிலேயே காயத்தோடு, மண்டையிலே ரத்தம் பீரிட்டுக் கொண்டிருக்கக் கூடிய அளவுக்கு திரு. உக்கம்சந்த் அவர்களுடைய சகோதரர் திரு. அசோக் அவர்களும், அவரைச் சார்ந்தவர்களும் இன்றைக்கு சிறைச்சாலையில் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான வைத்தியம் கூட நீங்கள் கொடுக்கவில்லை. கொடுத்தால் வெளியே வந்ததும் நாங்கள் பார்ப்போம். போலீஸ் அராஜகம் வெளியே தெரிந்துவிடும் என்ற அச்சத்தோடு இதைச் செய்கிறார்கள். இதெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாமலா நடக்கிறது? எனவே இப்படிப்பட்ட சூழ்நிலை இனியாவது இல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நாங்கள் வெளியே கருப்புக் கொடி காட்டுகிறோம் என்றாலும் சட்டமன்றத்திலே சட்டமன்ற நடவடிக்கையில் உங்களுக்கு உறுதுணையாக இருக்கிறோம். நாங்கள் இங்கே அசெம்பிளி நடவடிக்கைகளில் பங்கு கொள்கிறோம். நல்ல ஆலோசனையை

நாங்கள் சொல்லுகிறோம். நீங்களும் எங்களுக்குச் சொல்லுகிறீர்கள், இங்கே ஒரு சுமுகமான சூழ்நிலையில் அவை நடக்கிற போது தமிழ்நாட்டில் ஏன் இந்தப் பிரச்சினைகளை எழுப்புகிறீர்கள், நாங்கள் கருப்புக் கொடி காட்டுகிறபோது பொது மக்களிடத்தில் இந்தப் பிரச்சினைகளைச் சொல்லுகிறோம். உங்களுக்கும் மேடையிருக்கிறது நீங்களும் பதில் சொல்லலாம். ஆனால் உங்களுடைய அமைச்சர்கள் அங்கே போய் உங்களுக்கு உறுதுணையாக இல்லை. அங்கே போய் 'இழுத்தோம்' என்று சொல்கிறார்கள். இழுக்கவில்லை என்று வாதிடவில்லை. அங்கே போய் முதலமைச்சரைத் தாக்கியதாகச் சொல்லுகிறார்கள். அப்படி நடக்கவில்லை என்று அவர்கள் வாதிடத் தயாராக இல்லை. 'நாங்கள் அப்படித்தான் செய்வோம்' என்று அங்கே போய் சொல்கிறார்கள். இதெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் ஒரு அரசாங்கத்திற்கும் நல்லதுதானா என்று கேட்க விரும்புகிறேன்.

ஆக, போலீசாருடைய அராஜகம் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சியை அழிப்பதில் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்திரவோ இல்லையோ அவருடைய நேரடித் தலையீடோ இல்லையோ ஆனால் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்கப் போகிறார்களா என்பதை இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களே தாக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகும் என்று சொன்னால் மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நீங்கள் எங்களைக் காப்பாற்றப் போகிறீர்களா இல்லையா? தினசரி ஒரு ஆளை இப்படி தீர்க்கப் போகிறார்களா? இன்னும் 15 நாட்களுக்கு சபை இருக்கிறது. தினசரி ஒரு ஆள் என்று போனால் சரியாகப் போய்விடும். இதை மாண்புமிகு சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்தில் இனி வராமல் இருப்பதற்கு தமிழ்நாட்டில் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி, அவையின் இதர அலுவல்களை இன்றைக்கு ஒத்தி வைத்து, இதன்மீது விவாதிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டு அமருகிறேன். வணக்கம். நன்றி.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் எனக்குக் கிடைத்துள்ள தகவலை, அ.தி.மு.க.வின் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் எழுப்பிய ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அளித்து விடுவது நல்லது என்று கருதுகிறேன்.

1989 ஏப்ரல் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

23—4—1989 அன்று மாலை மதுராந்தகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ‘ நிதிநிலை விளக்கப் பொதுக் கூட்டத்தில் ’ மாண்புமிகு அமைச்சர்கள் திரு. துரைமுருகன் ,டாக்டர் இராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர்கள் மதுராந்தகம் வரும்போது அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டு வதற்கு மதுராந்தகம் அ.தி.மு.க.வினர் தீர்மானித்திருந்தார்கள். அவர்கள் கருப்புக்கொடி காட்டுவதற்காகத் தனியிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த ஒதுக்கீடு செய்யப்பட்டி ருந்த இடத்திற்கு அந்தக் கட்சியினர் யாரும் வரவில்லை. தி.மு.க. கூட்ட மேடைக்கு அமைச்சர்கள் திரு. துரைமுருகனும், டாக்டர் இராமகிருஷ்ணனும் வந்து, எந்தவிதமான அசம்பா விதமும் இல்லாமல் உரையாற்றியிருக்கிறார்கள்.

மதுராந்தகம் நகரில் கருப்புக்கொடி காட்டுவதாக, அ.தி.மு மு.க.வினர் அறிவித்ததையொட்டி, நகரம் முழுவதும் தகுந்த காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததோடு, குறிப்பாக, மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம்சந்த் வீட்டிற்கு அருகேயும், பாதுகாப்புக்காக, காவலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். இரவு சுமார் 10.15 மணி அளவில் திரு. உகம்சந்த் தன் ஆதரவாளர்களோடு ஆயுதங்களோடு வெளியே வந்து, தாங்கள் கருப்புக்கொடி காட்டுவதைத் தடை செய்கிறார்கள் என்று சொல்லி, காவல்துறையினரைப் பார்த்து, கோஷம் போட்டிருக்கிறார்கள். மேலும், அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவல்துறைக்குச் சொந்தமான ஜீப் டி.எம்.எச். 5443 என்ற எண்ணுள்ள வண்டியைத் தாக்கி அதன் கண்ணாடிகளை உடைத்து, முகப்பு விளக்குகளையும் சேதப்படுத் தியிருக்கிறார்கள். காவல் துறையினர் இதைத் தடுக்க முயன்ற போது அந்தக் கூட்டத்திலிருந்தவர்கள், காவல் துறையினரைத் தாக்கி இருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் வீட்டில் மாடியிலிருந்து நாற்காலிகள், ஸ்டூல்கள், பூந்தொட்டிகள், இரும்புக் கம்பிகள் ஆகியவைகளை, அவர்களுடைய வீட்டாரின் பாதுகாப்புக்காக அவர் வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த காவல்துறையினர் மீதும், வேன்கள் மீதும் வீசப்பட்டிருக்கின்றன. இந்தத் தாக்குதலில் சட்ராஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. இராஜேந்திரன், சட்ராஸ் காவல் நிலையக் காவலர் திரு. சந்திரசேகரன், மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சார்ந்த பரஞ்சோதி, பன்னீர்செல்வம் கமலேசன் ஆகியோர் காயமடைந்திருக்கிறார்கள். இதையடுத்து கூடுதலாகக் காவலர்கள் அந்த இடத்திற்குச் சென்று சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் 33 பேரைக் கைது செய்திருக்கிறார்கள். இந்தச் சம்பவம் தொடர் பாக காயமடைந்த உதவி ஆய்வாளர் திரு. இராஜேந்திரன் கொடுத்த புகாரின்பேரில், மதுராந்தகம் காவல் நிலைய குற்ற எண். 201/89—பிரிவு 147, 148, 332, 427 இ.பி.கோ மற்றும் 2, 3, டி.என்.பி.பி.டி.பி.எல், சட்டப் பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 25

(முற்பகல் 10-20)

கைது செய்யப்பட்டவர்கள் ரிமாண்டுக்கு அனுப்பப்பட்டார்கள். காவல் துறையினர் சட்டமன்ற உறுப்பினர் திரு.உகம்சந்த் அவர்களுடைய வீட்டிற்குள்ளே நுழைந்து தாக்கினார்கள் என்பது உண்மையான தகவல் அல்ல என்றும் எனக்கு போலீசாரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது அங்கே எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை.

தலைவரவர்களே, கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் கருப்புக் கொடி காட்டுவது ஜனநாயகத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்று, அதற்கு இத்தனை வழக்குகளா என்றெல்லாம் கேட்டார்கள். நான் ஏற்கெனவே நடந்தவைகளை எடுத்துக் கூறுகிற காரணத்தால் அதைக் காட்டி இதை நியாயப்படுத்த விரும்புகிறேன் என்று யாரும் வாதிடக் கூடாது. மதுரையிலே இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு கருப்புக் கொடி காட்டியதற்காக கடந்த காலத்திலே அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது சென்னையிலிருந்த என்மீதும் பேராசிரியர் மீதும் 302, 307 செக்ஷன்களிலே வழக்குப் போட்ட காலம் எல்லாம் உண்டு. கருப்புக் கொடி காட்டுவது என்பது தொடர்ந்து நாள்தோறும் நடைபெறும் நிகழ்ச்சியாக ஆகிவிடுமேயானால் அது சில சம்பவங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்படுத்தக்கூடிய நிலையைத் தோற்றுவித்துவிடுகிறது. பல இடங்களிலே கருப்புக் கொடி அ.தி.மு.க. நண்பர்களால் அமைச்சர்களுக்குக் காட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரம் ஏன் இத்தகைய நிலைமைகள் ஏற்பட்டன என்பதை கே.கே. எஸ்.எஸ்.ஆர். அவர்களுடைய உள்ளம் மிக நன்றாக அறியும். ஸ்ரீவில்லிபுத்தூரிலே இதுபோன்ற சம்பவம், அதைப் போலவே மதுராந்தகத்திலே இதைப்போன்ற சம்பவம் நடைபெற்றிருக்கிறது. வேறு சில ஊர்களிலே கருப்புக் கொடி காட்டியபோது அமைதியான முறையிலே நடைபெற்றது; அசம்பாவிதங்கள் எதுவும் இல்லை. ஆனால் குறிப்பிடத்தக்க இந்த இரண்டு இடங்களில் மாத்திரம் இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் நடைபெற்றதற்கான காரணத்தை கே.கே.எஸ்.எஸ்.ஆர். அறிவாரோ, இல்லையோ, அந்தப் பகுதி மக்களும் வட்டார மக்களும் மிக நன்றாக அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். திரு. துரைமுருகன் அவர்கள் அல்லது திரு. இராமகிருஷ்ணன் ஆகிய அமைச்சர்கள் மதுராந்தகத்திற்குள்ளே நுழையும் போதே கருப்புக் கொடி காட்டுவதற்கு வசதியாக மதுராந்தகத்தின் நுழை வாயிலிலேயே இடம் ஒதுக்கி இருந்தும் கூட அங்கே வராமல் வீட்டிற்குள்ளே இருந்திருக்கிறார்கள் மதுராந்தகத்தை போய் பார்த்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். எம்.எல்.ஏ. அவர்களுடைய வீட்டைக் கடந்து தான் கூட்டத்திற்கு செல்ல வேண்டும். அப்படி வீட்டைக் கடந்து செல்கிற நேரத்தில் கூட்டம் முடிந்து வருகின்ற தோழர்களாலும் அல்லது கூட்டத்திதிற்கு செல்கின்ற தோழர்களாலும் அந்த எம்.எல்.ஏ. வீட்டிற்கு எதுவும், எந்தவிதமான அசம்பாவித நிகழ்ச்சிகளும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் எப்போதும் போலீசார் அக்கறையாக இருப்பார்கள். இப்போது மட்டுமல்ல, நான், அ.தி.மு.க. ஆட்சி

1989 ஏப்ரல் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

இருந்த காலத்திலே கூட சொல்கிறேன். சில நிகழ்ச்சிகள் எங்கள் இல்லங்களுக்கு அருகாமையில் நடைபெறும் என்றால் அப்போது போலீசார் தானாகவே வந்து எங்கள் வீட்டைக்காவல்புரிவார்கள். அதைப் போலத்தான் திராவிட முன்னேற்ற கழகக் கூட்டம் கலைந்தோ அல்லது கூட்டத்திற்கு வரும்போதோ, செல்கிற நேரத்திலோ எம்.எல்.ஏ. வீட்டில் எந்த அசம்பாவிதமும் நிகழாமல் இருக்க போலீசார் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் அந்தப்போலீசார் மீதும், போலீசார் வேன் மீதும் திரு. உகம்சந்த் அவர்களுடைய இல்லத்து மாடியிலிருந்து நாற்காலிகள், ஸ்டூல்கள், ஆகியவைகள் எல்லாம் வீசி எறியப்பட்டு, குறுக்கே போய்க் கொண்டிருந்த மின் கம்பிகள் எல்லாம் கூட அறுந்து, அந்த மின் கம்பி அறுந்த வேகத்திலே அங்குள்ள போலீசார் அதன் காரணமாக கன்னத்திலே காயமுற்று இருக்கிறார்கள். நல்லவேளையாக உடனடியாக மின் இணைப்பைத் துண்டித்துவிட்ட காரணத்தால் ஊரிலே பெருத்த சேதம் எதுவும் ஏற்படவில்லை.

கருப்புக் கொடி காட்டுவது ஜனநாயகத்திலே அனுமதிக்கப்பட்ட முறை தான். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கே அண்ணா காலத்தில் அவர்களுடைய தலைமையிலே ஒரு காலத்திலே கருப்புக் கொடி காட்டி இருக்கிறோம். ஆனால் அந்தக் கருப்புக் கொடி காட்டுகிற நிகழ்ச்சிகளில் நாங்கள் ஈடுபடும் போது அதனால் விளையக்கூடிய சம்பவங்களை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது. நேரு வந்தபோது கருப்புக் கொடி காட்டிய நேரத்தில் மொஹைதீன் பிச்சை என்ற ஒரு இளைஞனை போலீசாருடைய குதிரைகள் மிதித்து அந்த குதிரையினுடைய காலடியிலே அவன் இறந்துவிட்டான் என்பது எல்லாம் பழைய காலத்து நிகழ்ச்சிகள். நான் இவைகளை எல்லாம் சொல்வது யாரையும் பயமுறுத்துவதற்காக அல்ல; இப்போதும் அப்படித் தான் நடைபெறும் என்பதற்காக நான் சொல்லவில்லை. கருப்புக் கொடி காட்டுவது ஏதாவது ஒரு நேரத்திலே நடைபெற்றால் அந்தக் கருப்புக் கொடிக்கு மதிப்பு இருக்கும். இதை ஆலோசனையாகச் சொல்கிறேன், எதிர்க் கட்சிக்கு; அடிக்கடி அதே வேலையாக இருந்தால் கருப்புக் கொடிக்கு மதிப்பு இல்லாமல் போய்விடும். எனவே ஒரு குறிப்பிட்ட நேரத்திலே கருப்புக் கொடி என்று வைத்துக் கொண்டால் ஜனநாயக ரீதியில் அனுமதிக்கலாம். ஆனால் கருப்புக் கொடி என்பதன் பேரில் அமைச்சர்களைத் தாக்குவது, அமைச்சர்களுடைய காரைத் தாக்குவது என்கின்ற முறையிலே ஈடுபட்டால் அப்படி ஈடுபடுவதை இந்த அரசு அனுமதித்துக் கொண்டு இருக்க முடியாது. நான் இன்னும் சொல்லிக்கொள்கிறேன், இந்த அரசினுடைய பெருந்தன்மையை யாரும் தயவுசெய்து கோழைத்தனம் என்று கருதிவிடக் கூடாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன் (மேசைகளைத் தட்டும் ஒலி). இப்படிச் சொல்வதை ஏதோ பயங்கரமான நடவடிக்கைகளிலே ஈடுபடப் போகிறோம், மிரட்டுகிறோம் என்று எல்லாம் தயவுசெய்து எதிர்க் கட்சி நண்பர்கள் கருதிக் கொள்ளக் கூடாது.

ஆனால் சட்டம் ஒழுங்கு அமைதியைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. எப்படி நீங்கள் ஆட்சியில் இருந்தபோது உங்களுககு அது இருந்ததோ, அதைப் போன்ற பொறுப்பு இன்றைய ஆட்சியிலுள்ள திராவிட முன்னேற்ற கழக ஆட்சிக்கு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, நான் இந்த விளக்கங்களை அளித்துவிட்ட காரணத்தால் ஒத்திவைத்து அவை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை, தலைவரவர்களே, தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குப் போலீசார் தவறான தகவலைச் சொலலியிருக்கின்றார்கள். கூட்டம் நடந்த இடத்திற்கு, திரு. உகம்சந்த் வீட்டிற்கும் ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் இருக்கிறது. ஏனென்று சொன்னால், அவர்கள் செய்துவிட்ட தவறைக்கூட இன்றைக்கு அரசாங்கத்தின் மீது சுமத்தலாம். ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எது நடந்த உண்மை என்று அவரும் தெரிந்து கொள்ளவும் அல்லது சம்பந்தப்பட்டவர்களை அழைத்து அவர் விசாரிக்க வேண்டுமென்பதற்காகவும்தான்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதுராந்தகம் எனக்குப் புதிய ஊர் இல்லை. பலமுறை சென்றிருக்கின்றேன். எப்பொழுது அங்கு கூட்டத்திற்குச் செல்வதாக இருந்தாலும் திரு. உகம் சந்த் அவர்களுடைய வீட்டைக் கடந்துதான் செல்ல வேண்டும். அந்த வீடு தெருவிலே ஒரு முனையிலே இருக்கிறது என்பது திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றைக் கவனிக்க வேண்டும். பொதுவாகவே, இப்பொழுது நீங்கள் முதலமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு, என்னுடைய தீர்ப்புக்கு முன்னால் பேசக்கூடாது. இருந்தாலும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கு மட்டும் நான் அனுமதி அளித்திருக்கிறேன். திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் உட்கார வேண்டும்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நன்றி. அங்கே போகிற பாதையையே வேறே விதமாகப் பிரித்து விட்டிருக்கிறார்கள். நாங்கள் விசாரித்தோம். மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தெரியாத ஊரே தமிழகத்திலே இருக்க முடியாது. அதுவும் நடு ரோட்டிலே முக்கிலே அவருடைய வீடு இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த பிரச்சினைதான். ஆகவே, வேறு பாதையாகப் பிரித்து விட்டு போகக்கூடிய சூழ்நிலையைத்தான் உண்டாக்கி இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லிய நேரத்திலே, இந்திராகாந்தி அம்மையாரைப் பற்றிச் சொன்னார்கள். அந்த நேரம் நடந்தது கொலை முயற்சி என்று அந்த நேரம் கேஸ்கள் போட்டிருக்கலாம். ஆனால் இது ஒரு சட்டமன்ற உறுப்பினர், பொறுப்பான சட்டமன்ற உறுப்பினர், இத்தனைக்கும் மாண்புமிகு திரு உகம்சந்த் அவர்களைப் பொறுத்த

1989 ஏப்ரல் 25] (திரு. கே.கே.எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்)

அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கே தெரியும். அவர் சுபாவியானவர்; சண்டை சச்சரவுக்குப் போகாதவர் என்பது தெரியும். வேறு யாரையாவது சொன்னால்கூட, சண்டை சச்சர வுக்குப் போகக் கூடியவர் என்று நினைக்கலாம். ஒரு அமைதி யான சட்டமன்ற உறுப்பினர், அவருக்கு இப்படிப்பட்ட அவப் பெயரையும் போலீசார் செய்திருக்கிறார்கள் என்றஎண்ணத்தோடு சொல்கிறோம். நான் இன்னும் சொல்கிறேன், மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு, அங்கே எங்களுடைய திரு. உகம்சந்த அவர்கள் இன்றைக்குச் சாகும்வரை உண்ணாவிரதம் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைச் சொல்லிவிட வேண்டும் உங்களுக்கு. உகம்சந்த அவர்கள் சாகும்வரை உண்ணா விரதம் இருப்பதாக நம்முடைய நண்பர் திரு. கே.கே.எஸ்.எஸ் ஆர். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் எனக்கு இப்பொழுது வந்துள்ள தகவல், நேற்றைக்கு அவர் உண்ணாவிரதம் ஆரம்பித்தது உண்மை; அதை நிறுத்தி விட்டார்என்றும் தகவல் வந்திருக்கிறது. அது சரியோ, தவறோ எனக்குத் தெரியாது. நான், எனக்கு வந்துள்ள தகவலைச் சொல்கிறேன். பிறகு நாளைக்கு, தவறான தகவல் என்று ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்து விடாதீர்கள். வந்துள்ள தகவல் உண்ணா விரதத்தை நிறுத்தி விட்டார் என்பதாகும்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்பு மிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தத் தகவல் வந்தவுடன் எங்களுடைய பொதுச் செயலாளர் காலையிலே ஆறு மணிக்கே கடலூர் போய் விட்டார்கள். அவர்கள் போய் நான் சொல்லி எப்படியாவது நிறுத்துகிறேன் என்று சொல்லி காலையிலே போய் நிறுத்தியிருக்கலாம். ஏனென்று சொன்னால், இந்தக் கட்சியிலே சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னால், மாண்புமிகு முதலமை சரவர்களுக்கு இங்கே இருப்பவர்கள் அத்தனைபேரும் ஒரு காலத்திலே வேண்டியவர்களாகத்தான் இருந்திருக்கிறோம். ஆகவே, உண்ணாவிரதம் இருக்கிறேன் என்று சொல்லிய நேரத் திலே, மாண்புமிகு முதலமைச்சரவர்களே இதற்கு ஏற்பாடு செய் திருக்கலாம். இன்றைக்கும் எங்களுக்கு ஜெயிலுக்குள்ளேயிருந்து தகவல் தெரிந்த பிறகு, இன்றைக்கு எங்களுடைய பொதுச் செய லாளர் போய் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார் கள். நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், தொடர்ந்து தமிழகத்திலே, போலீசினுடைய தொந்திரவு, எதிர்க்கட்சியாகிய எங்களுக்கு இருந்து கொண்டிருக் கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கண்டிக்க வேண் டும். இனிமேல் இதுபோன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுபோன்ற ஒரு சூழ்நிலை தமிழகத்திலே வரக்கூடாது என்ற எண்ணத்தை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும் விதமாக நாங்கள் இன்றைக்கு வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

[1989 ஏப்ரல், 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) வாசுதேவநல்லூர் நாராயணபுரத்தில் உள்ள தரணி கரும்பு ஆலை செயல்படாததால் விவசாயிகள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கோ. வீரையன், மற்றும் சம்சுதீன் என்கிற கதிரவன் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. வீரையன் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். தொகுதி, திரு. சம்சுதீன் அவர்களுடையது என்பதால் அவர்களுக்கு விட்டுக் கொடுக்கலாமா? ஏனென்றால், நாங்கள் உங்களுக்குத் தொகுதிகளையெல்லாம் நிறைய விட்டுக் கொடுத்திருக்கிறோம் என்று அவர் சொல்கிறார் அதனால் சொல்கிறேன். (சிரிப்பு).

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தங்களுடைய கவனத்திற்குச் சொல்லிக்கொள்வது, என்னுடைய அன்புச் சகோதரர் திரு. கதிரவன் அவர்களுடைய தொகுதியாக அது இருந்தாலும், தமிழ்நாடு பூராவும் இருக்கக்கூடிய ஐந்து இலட்சம் விவசாயிகளின் சங்கத்தினுடைய செயலாளர் என்ற முறையில் அந்த விவசாயிகளினுடைய உரிமைகளை நான் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர் எனக்கு விட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் வாசுதேவநல்லூர், நாராயணபுரத்தில் உள்ள தரணி கரும்பு ஆலை செயல்படாததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை யென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

(அ) வாசுதேவநல்லூர் நாராயணபுரத்தில் உள்ள தரணி கரும்பு ஆலை செயல்படாததால் விவசாயிகள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கோ. வீரையன், மற்றும் சம்சுதீன் என்கிற கதிரவன் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. வீரையன் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். தொகுதி, திரு. சம்சுதீன் அவர்களுடையது என்பதால் அவர்களுக்கு விட்டுக் கொடுக்கலாமா ? ஏனென்றால், நாங்கள் உங்களுக்குத் தொகுதிகளையெல்லாம் நிறைய விட்டுக் கொடுத்திருக்கிறோம் என்று அவர் சொல்கிறார் அதனால் சொல்கிறேன். (சிரிப்பு).

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தங்களுடைய கவனத்திற்குச் சொல்லிக்கொள்வது, என்னுடைய அன்புச் சகோதரர் திரு. கதிரவன் அவர்களுடைய தொகுதியாக அது இருந்தாலும், தமிழ்நாடு பூராவும் இருக்கக் கூடிய ஐந்து இலட்சம் விவசாயிகளின் சங்கத்தினுடைய செயலாளர் என்ற முறையில் அந்த விவசாயிகளினுடைய உரிமைகளை நான் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர் எனக்கு விட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் வாசுதேவநல்லூர், நாராயணபுரத்தில் உள்ள தரணி கரும்பு ஆலை செயல்படாததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1989 ஏப்ரல், 25] [திரு கோ. சி. மணி]

*மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தரணி சர்க்கரை ஆலை நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் சிவகிரி தாலுக்காவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. இது 2,500 டன்கள் பிழி திறன் கொண்ட புதிய சர்க்கரை ஆலையாகும். இந்த ஆலை நடப்பு 1988-89 ஆண்டில், முதல் அரவை பருவத்தை தொடங்க திட்டமிடப்பட்ட ஆலையாகும். இந்த ஆலை அயல்நாட்டிலுள்ள இந்தியர்களில் சிலர் (Non-Resident Indians) சேர்ந்து நிறுவப்பட்ட ஆலையாகும். இந்த ஆலைக்கு நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் 4 வட்டங்கள் நிலையான பகுதியாகும், மற்றும் 5 தாலுக்காக்கள் தற்காலிக ரீதியிலும், வ.உ. சிதம்பரனார் மாவட்டத்தில் 7 தாலுக்காக்கள் மற்றும் காமராஜர் மாவட்டத்தில் 2 தாலுக்காக்கள் தற்காலிக ரீதியிலும் ஆலைக்கு கரும்பு எடுத்துக்கொள்ள உத்தரவு 1987-ல் வழங்கப்பட்டது.

மேற்சொன்ன வட்டங்கள் அடங்கிய எல்லைப்பகுதியில் மொத்தம் 14,460 ஏக்கரில் கரும்பு பதிவு செய்து டிசம்பர் 1988-ல் கரும்பு அரவை தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. மேற்சொன்ன கரும்பு பதிவு மொத்தத்தில் 4,786 விவசாயிகளிடம் 637 கிராமங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஜனவரி 1988 மற்றும் பிப்ரவரி 1988 ஆகிய 2 மாதங்களில் பதிவு செய்யப்பட்ட சுமார் 2,124 ஏக்கர் (சுமார் 64,000 டன்கள்) கரும்பினை, பிப்ரவரி 1989 ஆம் மாதத்திற்குள் எடுத்து அரைக்கப்பட்டிருக்க வேண்டும். தரணி சர்க்கரை ஆலையின் நிர்வாகத்தினர் அந்த பகுதியிலுள்ள கரும்பு விவசாயிகளிடம் கரும்பு சப்ளை செய்வதற்கான ஒப்பந்தம் செய்து கொண்ட அடிப்படையில் நிர்வாகத்தினர் கடந்த டிசம்பர் 1988-லேயே அரவையை தொடங்கியிருக்கவேண்டும்.

ஆனால் ஆலை நிர்மாண வேலைகள் திட்டமிட்டபடி நடைபெறவில்லை என்பதால், டிசம்பர் 1988-ல் அரவை தொடங்க திட்டமிடப்பட்ட நிலை தள்ளிப்போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் ஆலை நிர்வாகத்தினர் தங்கள் ஆலையின் கரும்பை அருகிலுள்ள ஆலைகளுக்கு எடுத்துக் கொள்ளுமாறு விண்ணப்பம் செய்திருந்தனர். அருகில் உள்ள தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை, மற்றும் மதுரா சர்க்கரை ஆலை தங்களுக்கு தேவையான கரும்பே 100 சதவிகிதத்திற்கு மேல் கரும்பு அரவைக்கு வைத்துள்ளதால் தரணி சர்க்கரை ஆலையினுடைய கரும்பை எடுக்க இயலாத நிலையை அவ்வாலைகளால் தெரிவிக்கப்பட்டுவிட்டன.

எனவே, தரணி சர்க்கரை ஆலையின் நிர்வாகியை, வேறு ஆலைகளுக்கு மாற்றம் செய்ய, சம்பந்தப்பட்ட ஆலையின் சம்மதம் பெற்றுவருமாறு தெரிவிக்கப்பட்டது. ஆயினும் இதுவரை போதுமான சம்மத கடிதம் வேறு எந்த ஆலை

யிடத்திலிருந்தும் பெறவில்லை எனத் தெரிகிறது. இதற்கிடையில் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் தங்கள் கரும்பு காய்ந்து விடுவதால் தரணி சர்க்கரை ஆலையை அரவைக்கு எடுத்துக்கொள்ள வற்புறுத்தி இருக்கிறார்கள். இது சம்பந்தமான புகார்கள் சர்க்கரைத்துறை ஆணையரிடமிருந்து பெறப்பட்டு அப்புகார் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் காரணமாக தரணி சர்க்கரை ஆலையின் நிர்வாகத்தினரை கரும்பு கட்டுப்பாடு ஆணை 1966-ன் கீழ் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் கீழும், விவசாயிகளிடம் ஒப்பந்தம் செய்து கொண்டதன்படி ஏன் கரும்பு எடுத்துக்கொள்ள தவறிவிட்டார்கள் என்பதற்கான தக்க காரணம் காட்டுமாறு நோட்டீஸ் அனுப்பப்பட்டது

சர்க்கரைத்துறை ஆணையாளரின் நோட்டீசுக்கு தரணி சுகர்ஸ் ஆலை நிர்வாகத்தினர் தனது பதிலில், ஆலை கடந்த 6—3—1989 தேதியன்று அரவை தொடங்கிவிட்டதாகவும் 20—3—1989 அன்று வரை மொத்தம் 7,402 டன்கள் கரும்பு அரவை செய்து இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் மேலும் 8 இதர சர்க்கரை ஆலைகளை தொடர்பு கொண்டு தங்கள் ஆலைப் பகுதியிலுள்ள கரும்பை எடுக்க கேட்டுக்கொண்டதில் எந்த ஆலையிடமிருந்தும் சம்மதம் பெற முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்கள். மேலும், அவர்கள் 14—2—1989 மற்றும் 20—2—1989 ஆகிய நாட்களில் நெல்லை கட்டபொம்மன் மாவட்ட ஆட்சியர் கூட்டிய விவசாயிகள் கூட்டத்தில் தரணி சர்க்கரை ஆலையினர் கரும்பு எடுக்காத நிலையை விளக்கியும், மேலும் விவசாயிகளுக்கு அளித்துள்ள சில நிவாரண சலுகைகளை, அதாவது 12½ மாதத்திற்கும் மேற்பட்ட கரும்புக்குண்டான உற்பத்திக் கடன் தொகைக்கு உள்ள தவணை கடந்த வட்டித் தொகையை கழிவு செய்துள்ளதாகவும், விருப்பப்பட்ட அங்கத்தினர்கள் பதிவு செய்த கரும்பினை தங்கள் சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என ஒப்பந்தத்தைத் தளர்த்திக் கொடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் தங்கள் ஆலை புதியதாக அமைக்கப்பட்டுள்ளதால் போதுமான கரும்பு வெட்டுவதற்கு வேலை ஆட்கள் மற்றும் வாகன போக்குவரத்து போதாத காரணத்தினாலும் ஆலை அரவை தொடங்குவதில் இடர்பாடு ஏற்பட்டதாக தெரிவித்து, இந்தத் தடங்கலைப் போக்கவும் போதுமான அளவில் கரும்பு வெட்டவும் இதர மாவட்டத்திலிருந்து கரும்பு வெட்டும் வேலையாட்கள் பெறவும் தக்க விளம்பரங்கள் கொடுத்து இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள். தரணி சர்க்கரை ஆலையின் நிர்வாகத்தினர் தங்களது ஆலை தொடங்குவதில் ஏற்பட்ட தடங்கல்கள் தற்காலிகமானது என்வும் இவைகளை நிவர்த்தி செய்து, முழுமையாகச் செயல்பட ஆவன செய்யப்படும் என தெரிவித்துள்ளனர். இது சம்பந்தமான முன்னேற்றத்தை சர்க்கரைத்துறை ஆணையாளரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, விவர அறிக்கை அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. என்று நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். விவர அறிக்கையும் அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ போனமாதம் 25-ம் தேதி கொடுக்கப்பட்டு இந்த மாதம் 25-ம் தேதி இந்த கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும், இவ்வளவு நாட்கள் அந்தத் துறை எடுத்துக் கொண்டிருந்தாலும் மகிழ்ச்சி அடையக்கூடிய முறையில் சில உண்மைகளை கொடுத்திருக்கிற அந்தத் துறை அதிகாரிகளுக்கும், நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

குறிப்பாக தரணி சர்க்கரை ஆலை என்பது நன்றாக தமிழகத்தில் சமீபத்தில் அறிமுகமாகியிருக்கக்கூடிய ஆலையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குத் தெரியாதது அல்ல. இன்றைக்குக் கூட்டுறவு, உணவு மானியக் கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. வினாவாக மட்டும் தொடுக்க வேண்டும். ஏற்கெனவே ஒரு முழு அறிக்கை உங்கள் கைக்கு வந்தாகிவிட்டது. எனக்கும் வந்தாகிவிட்டது.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, அறிக்கையில் இருக்கிற விவரங்களைப் பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. தரணி சர்க்கரை ஆலை என்பது சென்னை நகரத்தில் ஒரு நாற்பது கோடி பெறுமானமுள்ள சொத்தை $1\frac{3}{4}$ கோடி ரூபாய்க்கு வாங்கி புகழ்பெற்ற பழனி டாக்டர் பெரியசாமி அவர்களுடைய பெயரில் லைசென்ஸ் பெற்றுள்ள சர்க்கரை ஆலை. அதிலே ஏறத்தாழ 14,460 ஏக்கர் பதிவு செய்யப்பட்டு 1988-ம் ஆண்டு நவம்பர் மாதமே அந்த ஆலை தொடங்கியிருக்க வேண்டும். தினசரி 2,500 டன்கள் அறவை செய்யக்கூடிய ஆலையாக அதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த விவர அறிக்கையில் அளிக்கப்பட்டிருக்கிற விவரப்படி 6—3—1989-ல் தான் அதில் அரவை தொடங்கியிருக்கிறது. கிட்டத்தட்ட 3 மாதம் கழித்துதான் அது அறவை தொடங்கியிருக்கிறது. அப்படிப் பார்த்தாலும் 20—3—1989 வரையில் 15 நாட்களில் அது அறவை நடத்தியிருக்கிற அந்தக் கணக்கைப் பார்த்தாலும் 7,402 டன்கள்தான்; சராசரியாக ஒரு நாளைக்கு 500 டன்கள் அரவைக்கு அது பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் 2,500 டன்கள் அது பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான முறையில் கரும்பு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 15,000 ஏக்கரில் கரும்பு

பயிரிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு நாளைக்கு 500 டன்கள் தான் இப்போது பெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போதே அந்த கரும்பினுடைய வயது 14 மாதங்களிலிருந்து 16 மாதங்கள் ஆகியிருக்கிறது. ஆகவே பழனி பெரியசாமியை நம்பி அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த விவசாயிகளுடைய கரும்பு காய்ந்து நாசமாகி இருக்கிறது. எனவே, இது தற்காலிகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தற்காலிகம் என்றால் ஆலைக்குச் சொன்னாலும், அரசுக்குச் சொன்னாலும், அந்த விவசாயிகளுடைய வாழ்க்கையைப் பொறுத்த வரையில் அது மிகப் பெரிய பாதிப்பாக இருக்கிறது. எனவே, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகையை அந்த ஆலை நிர்வாகத்திலிருந்து பெற்றுத் தருவதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து கொஞ்சம் காலதாமதம் ஆனவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசரப்படுத்தியதையொட்டி உடனடியாக கிடைத்த தகவலை இந்த அறிக்கையில் வைத்திருக்கிறோம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி தொடர்ந்து அந்த ஆலையோடு அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தி அவர்கள் விரும்புகிற அளவிற்கு ஒரு முடிவை மேற் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த முடிவின்படி சர்க்கரை ஆலை 2,319 ஏக்கரிலிருந்து 46,241 டன்கள் கரும்பை முந்தா நாள் வரையில் அரவை செய்திருக்கிறது. 11,646 ஏக்கரில் கரும்பு அறுவடை செய்து அதிலிருந்து ஏறக்குறைய மூன்று லட்சத்து 45 ஆயிரம் டன்கள் கரும்பு அரவை செய்ய வேண்டியுள்ளது. இதில் 14 மாதக்கரும்பு 10,000 டன்களும், 13 மாதக்கரும்பு 25 ஆயிரம் டன்களும் ஆக மொத்தம் 35,000 டன்கள் கரும்பு முதிர்ச்சி அடைந்திருக்கிறது. 16 மாதம். கூடக்கவில்லை. 14 மாதம், 13 மாதம் தான் ஆகியிருக்கிறது. இந்த 35,000 டன்கள்தான் கெடு முடிந்து போய் இருக்கிறது. இதை நிர்வாகத்தினரிடத்தில் பலமுறை சர்க்கரை ஆணையர் எடுத்துக்கூறி, தற்பொழுது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனைக்கு ஏற்ப அரசு நேற்றையதினம் பேசி முடித்து 50,000 டன்கள் கரும்பை—இன்னும் 15,000 டன்கள் கூடவே சேர்த்து—பாண்டியராஜபுரத்தில் உள்ள மதுரை சர்க்கரை ஆலைக்கு 10,000 டன்களும், சிவகங்கையில் உள்ள சக்தி சர்க்கரை ஆலைக்கு 30,000 டன்களும், புகளூரில் உள்ள டெக்கான் சர்க்கரை ஆலைக்கு 10,000 டன்களும் கரும்பு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்குண்டான போக்கு வரத்து அதிக செலவை அந்த ஆலை நிர்வாகத்தினரே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையோடு இந்தக் காரியம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு, ஏறத்தாழ 2 மாதங்கள் கடந்துவிட்ட காரணத்தால், வட்டித் தொகை அளிக்க வேண்டும்

நிர்வாகத்தினர் என்ற முறையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பரிசீலிக்கப்பட்டு நஷ்டயீடுகள் தேவைப்படுமானால் பேசி முடிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தரணி ஷுகர்ஸ் மில்லில் அவர்கள் ‘ பிராமிஸ் ’ பண்ணியிருப்பது ‘இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பணப்பயிரான கரும்பு சாகுபடி மூலம் ஏக்கருக்கு நிகர இலாபமாக 10,000 ரூபாய்க்கு மேல் அடைந்திட தங்களை வேண்டிக் கொள்கிறோம் ’ என்று அவர்களே நோட்டீஸ் அடித்து இருக்கிறார்கள். பல்வேறு முறைகளை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் படிப்பதற்கு நேரம் இல்லை. கடைசியிலே சொல்லியிருப்பது 10 ஆயிரம் ரூபாய்க்கு மேலே விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும் என்று உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது நிலைமை என்ன என்று சொன்னால் அவர்கள் மூன்று முறை நெற்பயிரைப் போட்டிருந்தால் லாபம் கிடைத்து இருக்கும். அவர்களுக்கு நெல்லும் கிடைத்திருக்கும், வைக்கோலும் கிடைத்திருக்கும் மாடுகளுக்கு. இப்போது அதுவும் போய், போட்ட அந்தக் கரும்பு பாழாகிப் போய், சில இடத்திலே கரும்பு கருகிப் போன காரணத்தால், தீப்பிடித்து சாம்பலாகி விட்டது. அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் எப்படிக் கிடைக்கும் என்பதைப் பற்றி தயவு செய்து நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ அரசனை நம்பி, புருஷனைக் கைவிட்ட மாதிரி, இந்தக் கரும்பைப் போட்டால், ஏதோ நமக்கு கூடுதலாக லாபம் கிடைக்கும் என்று விவசாயிகளை நம்ப வைத்து, விவசாயிகளுக்கு உத்தரவாதம் அளித்து இன்றைய தினம் அந்த விவசாயிகள் மிகவும் பரிதாபத்திற்குரிய முறையிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மீளமுடியாத நிலைமையில் விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஷுகர் மில்களினுடைய நிர்வாகிகள்தான் அவர்களைக் காப்பாற்ற வேண்டும். ஏற்கெனவே இன்சூரன்ஸ் முறை இருக்கிறது. அந்த இன்சூரன்ஸ் முறையை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்களா என்பதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, அதிகமாக இதில் நுழைந்து சொல்லிவிட்டால், பேச்சு வார்த்தைக்கு குந்தகம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். இது ஒரு முடிந்த முடிவல்ல. அதிலே இன்னும் விசாரணை தொடங்க இருக்கிறது. கூடுமான வரையில் விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது. ஆலை நிர்வாகிகளுடைய மெத்தனப் போக்கைக் கண்டித்து மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 25

(ஆ) வானூர் வட்டத்திலுள்ள அரோஷிகா அகர்பத்தித் தொழிற்சாலை ஊழியர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சி. கோவிந்தராஜன் மற்றும் செ. நூர்முகமது ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு மாவட்டம் வானூர் வட்டத்திலுள்ள அரோஷிகா அகர்பத்தி தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி 18—1—1989 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்துவருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

அரோஷிகா அகர்பத்தி என்ற நிறுவனம் தென்னாற்காடு மாவட்டம், இடையான்சாவடி என்ற இடத்திற்கு அருகில் சுமார் 157 தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இங்கு ஊதுபத்தி தயார் செய்யும் தொழில் நடைபெற்று வருகிறது. இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள், சி.ஐ.டி.யு. மற்றும் ஏ.ஐ.டி.யு.சி. ஆகிய இரு அமைப்பைச் சார்ந்த தொழிற்சங்க உறுப்பினர்களாக உள்ளனர். சி.ஐ.டி.யு. அமைப்பைச் சார்ந்த தொழிற்சங்கம் தனது 21—12—1988 தேதிய வேலை நிறுத்த அறிவிப்பு மூலம் 33 கோரிக்கைகளை சமர்ப்பித்தது. கோரிக்கைகளில் ஊதியத் திருத்தம், பஞ்சப் படி திருத்தம், வீட்டு வாடகைப்படி, தற்செயல் விடுப்பு, சுகவீனத்திற்கான விடுப்பு, பிரசவ விடுப்பு, சேய் விடுதிகள் அமைத்தல், உணவகம் சீருடை அளித்தல் ஆகியவை அடங்கும், நிர்வாகம்,ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்க அமைப்பை சார்ந்த தொழிற்சங்கத்துடன் 6—6—1986 அன்று கடலூர் தொழிலாளர் அலுவலர் முன்பு தொழில் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஊதிய திருத்தம், வேலை பளு நிர்ணயம் உள்ளிட்ட கோரிக்கைகளில் ஒரு உடன்பாடு செய்து கொண்டு, அவ்வொப்பந்தம் 30—6—1990 வரை அமுலிலுள்ளது அந்த ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துப்படி பண சம்பந்தமான கோரிக்கைகள் ஒப்பந்த காலத்தில் தொழிற்சங்கமோ அல்லது தொழி

லாளர்களோ எழுப்பக்கூடாது என்பதாகும். எனவே, தொழிற் சங்கக் கோரிக்கையை ஏற்க இயலாது என்றும், நிர்வாகத்தின் அங்கீகாரம் பெறாத தொழிற் சங்கம் கோரிக்கை எழுப்புவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும் தெரிவித்துள்ளனர்.

தொழிற் சங்கம் 18—1—1989 முதல் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றது. கடலூர் தொழிலாளர் அலுவலர் 10—2—1989, 16—2—1989, 1—3—1989, 6—3—1989, 15—3—1989 மற்றும் 20—3—1989 ஆகிய நாட்களில் சமரச பேச்சு வார்த்தை மேற்கொண்டு இருதரப்பின ரும் சுமுகமான முடிவுக்கு வராமல் தத்தம் நிலைமையிலேயே இருந்ததால், தொழில் தகராறு சட்டப் பிரிவு 12(4)-ன் கீழ் சமரச முறிவறிக்கையின் முன் நகல் அரசுக்கு அனுப்பியுள்ளார். இத்தாவா தொடர்பான பரிந்துரைகள் தொழிலாளர் ஆணை யரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தற்சமயம் தொழில் தகராறில் சமரசம் ஏற்படுத்த சென்னை இணை ஆணையர் அவர்களால் சமரச பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர் முன்பு 31—3—1989, 10—4—1989 அன்று பேச்சு வார்த்தையில் தொழிற்சங்கம் மட்டுமே கலந்து கொண்டுள்ளது. நிர்வாகம் வரவில்லை. அடுத்த கட்ட பேச்சு வார்த்தை 24—4—1989-க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் ஏற்கெனவே 6—6—86-ல் ஒரு 12(3) ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு இருப்பதாகவும், அதனால் தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு, அதை முதலாளிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் இதில் கூறப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது அங்கேயுள்ள தொழிலாளர்கள் யாருக்குமே தெரியாது. 1 வருடம், 1½ வருடம் ஆனபிறகு, இன்கிரிமென்ட் கிடைக்கவில்லை என்ற நிலைமை வரும்போது தான், ஏன் கிடைக்கவில்லை என்று சொன்னால், இப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தம் இருக் கிறது என்று முதலாளிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பிறகுதான் அவர்கள் கோரிக்கை எழுப்பி, 8—1—1989-லே வேலை நிறுத்தம் செய்யப் போவதாகச் சொன்னார்களே தவிர, வேலை நிறுத்தம் செய்யவில்லை. ஆனால் அதற்கிடையில் 18—1—1989-லிருந்து அந்த முதலாளிகள் லாக்-அவுட் செய்து விட்டார்கள். அங்கேயிருக்கக்கூடிய சாமான்களை எடுத்துச் செல்வதற்கு முயற்சி செய்தபோது, அதைத் தொழிலாளர்கள் தடுத்தார்கள். லாக் அவுட் செய்துவிட்டார்கள். அந்த லாக்-அவுட்டைத் திறப்பதற்கு, அதற்குப் பிறகு, கடலூர் கன்சிலியேசன் ஆபிசர் 7 முறைக் கூப்பிட்டிருக்கிறார்கள் இங்கே அதைப்பற்றி விவரம் இருக்கிறது. ஒரு முறைகூட அந்த முதலாளிகள் அங்கே செல்லவில்லை. அதனால் சமரச முயற்சி முறிந்துவிட்டதால், அந்த ஃபெயில்யூர் ரிப்போர்ட்

இங்கே அரசாங்கத்திற்கு வந்துவிட்டது. மீண்டும் அதற்கு முயற்சி செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு 31—3—1989 மற்றும் 10—4—1989 ஆகிய இந்த இரண்டு தினங்களிலும் அங்கே ஜே.எல்.சி. அவர்கள் கூப்பிட்டும் கூட, அந்த முதலாளிகள் வரவில்லை. 24—4—1989 அன்று ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது என்று இதிலே கூறப் பட்டு இருக்கிறது. நேற்றையதினம் கூட அவர்கள் வரவில்லை. ஆகவே இந்த சமரச முறிவு அறிக்கையை ஏற்று, தொழில் கோர்ட்டுக்கு இந்தப் பிரச்சினையை அனுப்பிவிட்டு, லாக்-அவுட்டைத் திறப்பதற்கு முதலாளிகளுக்கு அரசு உத்தரவிடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—6—1986 ஆம் நாள், ஏ.ஐ.டி.யு.சி. சங்கத்தோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும், அந்த ஒப்பந்தம் 30—6—1990-ல் முடிவு அடைவதாகவும், அதற்கிடையில் நிதி தொடர்பான விவரங்கள் குறித்து தொழிற் சங்கங்கள் கோரிக்கையினை எழுப்பிடக்கூடாது என்பதும் நிர்வாகத் தரப்பில் சொல்லப்படுகிற வாதமாகும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் தெரிவித்துள்ளபடி, 6—6—1986-ல் செய்துகொள்ளப்பட்ட 12(3) ஒப்பந்தம் என்பது பெரும்பான்மையான தொழிலாளர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒப்பந்தம் அல்ல, மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அத்தோடு 18—1—1989 ஆம் நாள் லாக்-அவுட்டா, வேலை நிறுத்தமா, ஆலை மூடப்பட்டதா, தொழிலாளர்களால் வேலை நிறுத்தம் செய்யப்பட்டதா என்பதும் கேள்விக்குறியாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

கடலூர் தொழிலாளர் அலுவலர் மூலமாக ஆறு முறை விசாரிக்கப்பட்டு அந்த சமரச முறிவு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் இணை ஆணையாளர் அவர்கள் இரு முறை சமரச ஏற்பாடு செய்து, நேற்றுகூட அந்த சமரச ஏற்பாடு நடந்திருக்கிறது. நிர்வாகத் தரப்பில் யாரும் இதுவரையிலும் கலந்து கொண்டு இணக்கமான முடிவு ஏற்படுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவில்லை என்கிற ஆதங்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்தச் சூழ்நிலைகளை மனதிலே கொண்டு, இறுதி முடிவினை அரசு உரிய முறையில் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் கடந்த மூன்று மாத காலமாக பெண் தொழிலாளர்கள் 150 பேர்கள் உட்பட வேலை

TRUTH ALONE TRIUMPHS

நிறுத்தத்தில் இருக்கிறார்கள். அவர்கள் கணக்கு கொடுத்திருப்பது 157 பேர். மீதி அத்தனை பேர்களும் அத்தக் கூலிகள் மாதிரி இருக்கக்கூடியவர்கள். 300 பேர்கள் வேலை செய்யக் கூடிய அளவில் இருக்கிறார்கள். 3 மாத காலமாக அவர் களுக்கு வேலை கிடையாது. லாக்-அவுட் தான் இது வேலை நிறுத்தம் செய்வதாக சொன்னார்களே தவிர, வேலை நிறுத் தம் செய்யவில்லை. 18-ஆம் தேதியிலிருந்து லாக்-அவுட் செய்யப்பட்டிருக்கிறது. சமரச அதிகாரி கூப்பிட்டும், அழைத் தும் நேற்றுகூட அங்கேயும் வரவில்லை, இங்கேயும் வரவில்லை இந்த நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 15 லட்சம் ஆதாயம் கிடைக்கிறது. லாபம் கிடைக்கிறது. அந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதாக சொல்லப்படுவது, ஆயிரம் அகர்பத்தி செய்வதற்கு ரூ. 6.80 பைசா தான். ஒரு நாளைக்கு ஆயிரம் அகர்பத்திக்கு மேலே செய்ய முடியாது. ரொம்ப குறைந்த கூலி. அதனால் தான் தொழிலாளர்கள் பூராவும் வேலை நிறுத்தத்தில் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அவர்களே சமரச முறிவுஅறிக்கையை அனுப்பிவிட்ட காரணத்தால், மீண்டும் அதில் காலங்கடத்தாமல் அதைப் பயன்படுத்திக்கொண்டு, அங்கே பல்வேறு வழக்குகளை போட்டு போலீசார் அவர்களை அலைக் கழிக்கிறார்கள். சில வழக்குகள் வந்திருக்கின்றன. எனவே அந்த லாக்-அவுட்டை திறப்பதற்கும் அவர்களுடைய கோரிக்கை களை தொழில் கோர்ட்டிற்கு விடுவதற்கும் அவசியம் நட வடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரோஷிகா அகர்பத்தி நிறுவனம் மூடப்பட்டது குறித்து உரிய ஆவணங்களை உடன் பரிசீலனை செய்து, தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பக் கூடிய சூழ்நிலை இருக்குமேயானால், உடன் அனுப்பி வைக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1989-90— விவாதமும், வாக்கெடுப்பும்— தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 23. கூட்டுறவு.

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 78,24,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

நிறுத்தத்தில் இருக்கிறார்கள். அவர்கள் கணக்கு கொடுத்திருப்பது 157 பேர். மீதி அத்தனை பேர்களும் அத்தக் கூலிகள் மாதிரி இருக்கக்கூடியவர்கள். 300 பேர்கள் வேலை செய்யக் கூடிய அளவில் இருக்கிறார்கள். 3 மாத காலமாக அவர்களுக்கு வேலை கிடையாது. லாக்-அவுட் தான் இது வேலை நிறுத்தம் செய்வதாக சொன்னார்களே தவிர, வேலை நிறுத்தம் செய்யவில்லை. 18-ஆம் தேதியிலிருந்து லாக்-அவுட் செய்யப்பட்டிருக்கிறது. சமரச அதிகாரி கூப்பிட்டும், அழைத்தும் நேற்றுகூட அங்கேயும் வரவில்லை, இங்கேயும் வரவில்லை இந்த நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 15 லட்சம் ஆதாயம் கிடைக்கிறது. லாபம் கிடைக்கிறது. அந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதாக சொல்லப்படுவது, ஆயிரம் அகர்பத்தி செய்வதற்கு ரூ. 6.80 பைசா தான். ஒரு நாளைக்கு ஆயிரம் அகர்பத்திக்கு மேலே செய்ய முடியாது. ரொம்ப குறைந்த கூலி. அதனால் தான் தொழிலாளர்கள் பூராவும் வேலை நிறுத்தத்தில் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அவர்களே சமரச முறிவுஅறிக்கையை அனுப்பிவிட்ட காரணத்தால், மீண்டும் அதில் காலங்கடத்தாமல் அதைப் பயன்படுத்திக்கொண்டு, அங்கே பல்வேறு வழக்குகளை போட்டு போலீசார் அவர்களை அலைக்கழிக்கிறார்கள். சில வழக்குகள் வந்திருக்கின்றன. எனவே அந்த லாக்-அவுட்டை திறப்பதற்கும் அவர்களுடைய கோரிக்கைகளை தொழில் கோர்ட்டிற்கு விடுவதற்கும் அவசியம் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரோஷிகா அகர்பத்தி நிறுவனம் மூடப்பட்டது குறித்து உரிய ஆவணங்களை உடன் பரிசீலனை செய்து, தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பக் கூடிய சூழ்நிலை இருக்குமேயானால், உடன் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1989-90— விவாதமும், வாக்கெடுப்பும்— தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 23. கூட்டுறவு.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 78,24,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு கடனில் சிறு விவசாயிகள் கடனையும் மற்றவர்கள் கடனுக்கு வட்டி, அபராத வட்டியையும் தள்ளுபடி செய்து தவணை கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,24,01,000-ல் ரூ 100 குறைக்க வேண்டும்.''

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"The need to take effective steps to organise consumer Co-operatives as a check to price increase" என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,24,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

கோரிக்கை எண். 35. நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,17,86,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியிருக்கும் குடும்பக் கார்டுகளை உடனடியாக வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,17,86,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The need to replace the defective measuring instrument, at

fair price shops at Madras and other places in the state'' என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,17,86,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை சம்பந்தமான கொள்கை விளக்கங்கள்* இந்த அவை முன்னாலே வைக்கப்பெற்றுள்ளன. அவற்றை அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே அளிக்கின்ற மேலான கருத்துக்களின் அடிப்படையில் இறுதியாக என்னுடைய கருத்துக்களை வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது இன்று விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. சி. கிருஷ்ணன். அவருக்கு ஓர் அறிவிப்பு. உங்கள் பகுதியிலே இருந்து இன்னும் 2 பேர்கள் அதிகமாகப் பேச வேண்டுமென்று என்னிடத்திலே வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள். எனவே, நீங்கள் சுருக்கமாகப் பேசினால் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கலாம்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்தப் பேரவையிலே எனக்கு முதன் முதலாக கன்னிப்பேச்சு பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைக் கூறி, என்னுடைய தொகுதியைச் சார்ந்த ஓமலூர் வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைக் கூறி, இந்தச் சபையிலே எனக்கு பேசுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த எங்களுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றியைக் கூறி, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற இருக்கிறேன்.

*532—571ம் பக்கங்களில் இணைப்பு I ஆகவும்

572—591ம் பக்கங்களில் இணைப்பு II ஆகவும் அச்சிடப் பெற்றுள்ளன.

நான் இன்றைக்கு கன்னிப் பேச்சு பேச இருக்கின்றதனால் இந்தக் கன்னியை மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலேயிருந்து காப்பாற்ற வேண்டியது பேரவைத் தலைவருடைய தலையாய கடமையாகும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு முழுவதும்.......(சிரிப்பு).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சு என்று சொல்லலாம், இந்தக் கன்னியைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லுகிறார். அவர் ஒரு ஆண் தானே?

திரு. சி. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சு கன்னி. கன்னி என்றாலே அதைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுடைய, மாண்புமிகு பேரவைத் தலைவருடைய, மாண்புமிகு அமைச்சர்களுடைய கடமை என்பதை இங்கே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காக கன்னி அல்லாதவர்களையெல்லாம் பாதுகாக்கக்கூடாது என்கிறீர்களா? (சிரிப்பு)

திரு. சி. கிருஷ்ணன் : தமிழ்நாடு முழுவதும் மிகக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் தண்ணீருக்காக மிகவும் போராடி வருகிறார்கள். கிணற்றிலே ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லை. மின்சாரம் இல்லை. அதனால் மின்சாரத்தின் மூலம் பம்புகளை இயக்கி தண்ணீர் பாய்ச்சுவதற்கும் வழி இல்லை. இந்த நிலையில் விவசாயிகளின் மீது கூட்டுறவு சங்கங்கள் கடன் வசூலை துரிதமாக எடுத்து வருகிறார்கள். இந்த அவலமான நிலையிலே விவசாயிகள் எப்படி அவர்களுடைய கடனை திருப்பிச் செலுத்த முடியும் என்பதை நாம் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்க வேண்டும்.

விவசாயிகளுடைய மாடுகள் விற்கப்பட்டு அவர்கள் இன்றைக்கு சாப்பாட்டிற்கே வழி இல்லாத நிலையில் இருக்கிறபோது இந்துச் சந்தர்ப்பத்தில் கூட்டுறவுக் கடன்களை திருப்பி செலுத்த வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதிலே அதிகாரிகள் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனவே கூட்டுறவு சங்கங்கள் பெரு விவசாயிகளுக்கு வட்டியை ரத்து செய்துவிட்டு, அவர்களுடைய கடன்களை நீண்டகாலக் கடன்களாக அமைத்துக் கொடுக்க வேண்டும். சிறு விவசாயிகளுக்கு கடன் முழுவதையும் ரத்து செய்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல சிறு விவசாயிகள் கிணறுகளில் சுமார் 1,500 அடிக்கு கீழாக தண்ணீருடைய மட்டம் குறைந்து விட்டது.

1989 ஏப்ரல் 25] [திரு. சி. கிருஷ்ணன்]

அவர்கள் தனிப்பட்ட முறையில் குழாய்க் கிணறுகள் அமைத்து தண்ணீர் பாய்ச்சுவது என்பது முடியாத காரியமாக இருக்கிறது. சுமார் 20 ஆயிரம் ரூபாய் செலவு செய்து குழாய்க் கிணறுகள் அமைத்தோ, அல்லது கிணறு தோண்டியோ விவசாயம் செய்வது என்பது இயலாத நிலைமையாக இருக்கிறது. அதற்காக கூட்டுறவு சங்கத்திலேயிருந்து 4 அல்லது 5 விவசாயிகளை ஒன்றாக சேர்த்து, குழாய் கிணறுகளை அமைத்துக் கொள்ள கூட்டுறவுத் துறையிலேயிருந்து அவர்களுக்கு மானியமாக பணம் உதவி செய்து, தண்ணீர் பாசன வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதே போல நிலவள வங்கியிலே எடுத்துக்கொண்டால் அவர்கள் விவசாயிகளுடைய நிலைமையைப் புரிந்து கொள்ளாமல், விவசாயிகள் சாப்பாட்டிற்கே வழி இல்லாமல் இருக்கக்கூடிய இந்த நிலையிலே நிலவள வங்கி அலுவலர்கள் காரை எடுத்துக் கொண்டு சென்று விவசாயிகளிடத்திலே கடன்களை வசூல் செய்கிறார்கள். அவர்களுடைய கார் செலவும் அதிகாரிகளுடைய மற்ற செலவுகளும் விவசாயிகளுடைய தலையிலேயே விழுகின்றது. விவசாயிகளே வறுமையில் இருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் வறட்சியாக இருப்பதனால் இந்த அவல நிலையில் இது போன்ற கடன் வசூல் செய்கின்ற செலவுகளும் மற்ற செலவுகளும் விவசாயிகளின் தலையிலேயே விழுகின்றது. இந்தப் பளுவை குறைப்பதற்காக கடனை ஒத்தி வைத்து, இந்த ஆண்டு செலுத்த முடியாத நிலையில் இருக்கிற விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுத்து அடுத்த ஆண்டு வட்டியை ரத்து செய்து, அடுத்த ஆண்டு செலுத்துவதற்கு ஏதுவாக விவசாயிகள் கடன்களை புதுப்பித்துக் கொடுக்க வேண்டும். நீண்டகாலக் கடன்களாக அவைகளைப் புதுப்பித்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதே போல வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள விவசாயிகளுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்கப்பட்டு இருக்கிறது. இதுவும் இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே வசூல் செய்யப்படுகின்ற நிலையிலே இருக்கிறது. அவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பதால் அவர்களால் எப்படி செலுத்த முடியும்? அவர்களுடைய கடனை, அவர்கள் திருப்பி செலுத்த இயலுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். செலுத்த முடியாத நிலையிலே இருக்கிறார்கள். எனவே, வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள விவசாயிகளுடைய, மற்ற குடும்பங்களுடைய கடன்களை ரத்து செய்து, கூட்டுறவுத்

துறையிலிருந்து அவர்களுக்கு கடன்களை ரத்து செய்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயக் கடன் வழங்கும்போது அவர்களுக்கு மூன்றில் ஒரு பங்கு உரம் சேர்த்து வழங்கப்படுகிறது. 2 பங்கு பணமாகவும் ஒரு பங்கு உரமாகவும் கொடுக்கிறார்கள். விவசாயிகள் அந்த உரத்தை வாங்கி வைத்து அவர்கள் சேமித்து வைப்பதற்கு கிடங்கு வசதி இல்லை. வீட்டிலேயும் வசதி இல்லை. உரத்தை சேமித்து வைத்தாலும் மழைக்காலங்களில் வீணாகி விடுகிறது. கடன் தொல்லையைத் தாங்க முடியாமல் அவர்கள் மேலும் கடன் வாங்குகிறார்கள். பணமாக கொடுப்பதற்கு பதிலாக உரத்தை சேர்த்து கொடுக்கிறார்கள். அந்த உரத்தை விவசாயிகள் வாங்கி 100-க்கு 20 ரூபாய் தள்ளி உரக் கடையிலேயே விற்று அவர்கள் அதை பணமாக்கி விடுகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, கடன் வழங்கும்போது அந்த உரத்தை வழங்காமல் அவர்களுக்கு பணமாக கொடுக்க வேண்டும். அதன் மூலம் அவர்களுடைய குடும்பம் பயன் அடையும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். எனவே விவசாயிகளுக்கு அந்த தொகை முழுவதையும் பணமாகவே கொடுக்க வேண்டும். உரமாக வழங்கினால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கியைப் பொறுத்தமட்டில் வெங்கட்ட செட்டியார், நாச்சியப்ப கவுண்டர், சுப்பிரமணிய கவுண்டர் போன்றவர்களுடைய தன்னலம் அற்ற உழைப்பால் கடந்த காலத்திலே கூட்டுறவுத் துறையினுடைய மெக்கா என்று அழைக்கப்பட்டு மிகச் சிறப்பான ஒரு நிலையிலே இருந்தது. ஆனால் கடந்த 1976 ஆம் ஆண்டு இன்றைய எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் அன்றைக்கு மத்திய கூட்டுறவு வங்கியினுடைய தலைவராக பொறுப்பு ஏற்றபோது, அவர் கூட்டுறவு பயிற்சி பெற முடியாத அலுவலர்களை நியமித்ததால் அன்றைக்கு அந்த வங்கியினுடைய செயல் நிர்வாகம் பாதிக்கப்பட்டு அன்றைக்கு மிக மோசமான நிலைமையை அடைந்தது. அதன் பிறகு அவர் பதவி விலகும் போது 1976 ஆம் ஆண்டு வங்கியில் இட்டு வைப்புத் தொகை சுமார் 6 கோடியாக இருந்தது. தற்போது தனி அலுவலர் அவர்களும் மற்ற ஊழியர்களும் சேர்ந்து நேர்மையாக உழைத்து, அவர்களுடைய உழைப்பினால் இன்றைக்கு இட்டு வைப்புத் தொகை 115 கோடியாக உயர்ந்து வங்கி ஒரு நல்ல நிலைமையிலே இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1989 ஏப்ரல் 25] [திரு. சி. கிருஷ்ணன்]

என்னுடைய பகுதியிலே ஓமலூர் தொகுதியைச் சேர்ந்த காடையாம்பட்டியிலே 4 கூட்டுறவு ஊழியர்களை, என்னுடைய மாவட்ட அமைச்சருடைய பெயரைச் சொல்லி, அவருடைய உதவியாளர் என்று சொல்லி, என்னுடைய பகுதியைச் சேர்ந்த 4 ஊழியர்களை இடமாற்றம் செய்து சுமார் 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாற்றிவிட்டார்கள். நான் தனி அலுவலரிடத்திலே சென்று இது போன்ற காரியங்களை நீங்கள் செய்ய வேண்டாம், நான் சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே சொல்வேன், மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு செல்வேன் என்று சொல்லியும் கூட மீண்டும் ஒரு அலுவலரையும் சேலத்திற்கு மாற்றி இதுபோன்று 5 ஊழியர்களை அரசியல் நோக்கத்துடன் இடமாற்றம் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேறு உறுப்பினரை நான் பேச அழைத்து விடுவேன், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. சி. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, அதே போல இப்போது அந்த 5 பேர்களை மாற்றம் செய்ததுடன் அல்லாமல் இன்றைக்கு அவருடைய உதவியாளர் என்று சொல்லி அந்த மத்திய கூட்டுறவு வங்கியினுடைய செயலாளரிடத்திலே சென்று தகாத முறையிலே அவரை மிரட்டி— நீ, நான் சொல்கின்ற காரியங்களை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று—அவரிடத்திலே மிரட்டியதனால் அந்த சிறப்பான நிர்வாகி, செயலாளர் அவர்கள் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டு, இன்றைக்கு அவர் பதவியிலிருந்து விலகிவிட்டார் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இதுபோன்ற அரசியல் தலையீட்டினால்.......

*மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது குறுக்கிடக்கூடாது என்று இருந்தேன். ஏதோ என்னுடைய உதவியாளர் என்று அங்கு ஒருவர் தனி அலுவலரிடத்திலே போய் மிரட்டி சில காரியங்களைச் செய்கிறார், அதனாலே பயந்து போய் செயலாளர் ஒருவர் ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார் என்று சொன்னார். நான் அந்த வங்கியினுடைய தலைவராக வருவதற்கு முன்பு அவருக்கு முறைப்படி கிடைக்கவேண்டிய சீனியாரிட்டி வழங்கப்படாமல், அவர் உதவிச் செயலாளராக இருந்தார். நான் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் முறைப்படி, சீனியாரிட்டி, தகுதி அடிப்படையில், அந்த நாச்சிமுத்து என்பவருக்குச் செயலாளராக நானே அவருக்கு அன்றைக்குப் பதவி உயர்வும்

தந்தேன். ஆனால் கடந்த 5, 6 ஆண்டுக் காலமாக அவர் அந்த வங்கியின் செயலாளர் பொறுப்பைக் கவனிக்காமல் தனியாக, ரிட் வாங்கிக் கொண்டு, அந்தத் தொண்டிலே ஈடு பட்டுக் கொண்டு, அவரே நீண்ட கால விடுப்பில் இருந்து இறுதியாக பிறகு சமீபத்திலே வந்து பணியிலே சேர்ந்து அவராகவே ராஜினாமா செய்தாரே தவிர, இன்னும் சொல்லப் போனால், அவர் தொடர்ந்து செயலாளராக இருந்தால், அவர் நடத்திய, அந்தத் தனி அதிகாரியின் பொறுப்பிற்குக் கீழே வந்த பிறகு அவர் செய்த ஊழலில் மாட்டிக் கொள்வோம் என்று பயந்துதான் ராஜினாமா செய்து விட்டுப்போய் இருக்கிறார்.

*திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களு டைய கருத்திற்கு நன்றி. இதுபோன்ற அரசியல் தலையீடுகள் நிர்வாகத்தில் வேண்டாம் என்பதைக் கூறி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக, மிகச் சாதாரணமான என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய எங்களுடைய குடும்பத் தலைவரும், தமிழக முதல்வரும் ஆன டாக்டர் கலைஞர் அவர்களுடைய பொற்பாதக் கமலங்களைத் தொட்டு வணங்கி, வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் ஆகிய தண்டராம்பட்டு வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கூறி என்னுடைய கன்னிப் பேச்சினை இந்த மாமன்றத்தில், கூட்டுறவு-உணவு-மானியக் கோரிக்கையின்மீது துவங்கி, என்னுடைய கருத்துக் களை நான் எடுத்து வைக்கின்றேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணாவின் அடிச்சுவட்டை அலங்கரிக்கின்ற ஆற்றல் மிக்க இதயத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஏழையின் சிரிப்பில் இறை வனைக் காணவேண்டும் என்று சொன்னால் ஒவ்வொரு ஏழை மக்களுக்கும் 5 கிலோ அரிசியை வழங்கவேண்டும். அப்படி ஏழையினுடைய வயிறு நிரம்புமேயானால், ஏழைகளுடைய இல்லங்களில் மகிழ்ச்சி தவழும் என்ற காரணத்தினால்தான் இந்த மானியக் கோரிக்கையில், ஏழை மக்களுக்கு ஒவ்வொரு வருக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களுக்கு 5 கிலோ அரிசி வழங்கியிருக்கின்ற இந்த அரசை இதயமார, மனமார நான் பாராட்டுகிறேன்.

அப்படி அரிசி வழங்குகிற நேரத்தில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டபோது, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு அந்தக் குறைகள் இன்றி, தமி ழகம் முழுமையும் அந்த உணவை விநியோகிக்கிற முறை யில் இந்த அரசின் சார்பில் ஏற்பாட்டினை உருவாக்கியதற்கு

1989 ஏப்ரல் 25] [திரு. டி. பொன்முடி]

நான் மனமாரப் பாராட்டுகிறேன். இத்தகைய அரிசி வழங்குகிற நேரத்தில் அங்கிருக்கின்ற பெரியவர்கள், ஏழைகள், எளிய மக்கள் ஆகியவர்களை நாங்கள் சந்திக்கின்றபோது, அந்தப் பெரியவர்கள், தாய்மார்கள் சொல்கிறார்கள், இப்படிப்பட்ட ஒரு பொற்காலம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறதே, கலைஞரே நீண்ட நாள் முதல்வராக இருந்தால் மாதத்திற்கு ஒரு முறை ஐந்து கிலோ அரிசி வழங்குவார் என்று அங்கிருக்கிற தாய்மார்கள் பேசுவது எல்லாம் உளமாரக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அடுத்து, ஆட்சிப் பொறுப்பையேற்று மூன்று தினங்களுக்குள் நடுவண் அரசு அரிசி விலையை உயர்த்திவிட்டார்கள். அப்படி அவர்கள் உயர்த்தியிருந்தாலும், தமிழக அரசு அரிசியினுடைய விலையை குறைத்து, அதே விலைக்கு விற்கின்ற ஒரு உரிமையை நிலைநாட்டச் செய்ததற்காக நான் இந்த அரசிற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்ப அட்டைகள் தமிழகத்தில், 1989-90-ஆம் ஆண்டுகளிலே 129 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கியிருக்கிறார்கள். குடும்ப அட்டைகள் வழங்கியிருக்கிற ஜனத்தொகைக்கும், மாநிலத்தில் உள்ள ஜனத்தொகைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது ஏக வித்தியாசங்கள் இருக்கின்றன. இதில் உடனடியாக மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர்களுக்கு ஆணையிட்டு இருக்கிறார்கள், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள். அப்படி ஆணையிட்டு இருக்கிற காரணத்தால் போலி கார்டுகள் எல்லாம் பிடித்தம் செய்யவேண்டிய நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

(முற்பகல் 11-00)

அதே நேரத்தில் இங்கே இருக்கிற அந்த குடும்ப அட்டைகளை எல்லாம் வறுமையின் காரணமாக, இல்லாத சூழ்நிலையின் காரணமாக, வறுமை வாட்டி வதைக்கின்ற காரணத்தால் தங்களுடைய குடும்ப அட்டைகளை 50 ரூ. 25 ரூ. என்று சமூக விரோதிகள் வாங்கி வைத்துக் கொண்டு அரசு இலவசமாக தருகிற அத்தனை சலுகைகளையும் அவர்களே பெறுகிற ஒரு நிலைமை இருக்கிறது. இப்படி அந்த தீவிர அட்டை பரிசீலனையின்போது ஏழைகளுக்கு இத்தகைய அட்டை இல்லாமல் என்னுடைய தொகுதியில் இந்த விடுமுறை நாட்களில் எங்களுடைய தொகுதிக்குச் செல்கின்றபோது ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் புதிதாக அட்டை வாங்கவேண்டும், எங்களுக்கு அட்டை வழங்கவேண்டும், ஒரு பொற்கால ஆட்சி அமைந்து இருக்கிறது, அரசு அளிக்கின்ற எல்லா சலுகைகளையும் நாங்கள் பெறவேண்டும், எங்களுக்கு

அதை சிபாரிசு செய்யுங்கள் என்று எல்லாம் எங்களிடம் வந்து கேட்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவு கூர்ந்து புதிதாக அந்த ஏழைகளுக்கு அட்டை பெறாமல் இருக்கின்ற அந்த ஏழைகளுக்கு அட்டை வழங்கு கின்ற ஒரு நிலையினை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், தமிழகத்திலே மொத்தம் 21,124 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. அதிலே கிராமங்களில் மட்டும் 17,382 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. அப்படி கிராமங்களில் நியாயவிலைக் கடைகள் இருக்கின்ற போது ருஒ வருவாய் கிராமத்திற்கு ஒரு நியாயவிலைக் கடை என்று இருக்கிறது. ஆனால் என்னுடைய தொகுதி மலை நிறைந்த தொகுதி, விலங்குகள் அதிகமாக வாழ்கின்ற பகுதி, அங்கே 7, 8 கிராமங்கள் ஒரு வருவாய் கிராம மாக இருக்கின்றது. அந்த கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் எல்லாம் கூலி வேலை செய்து வாழ்கிறார்கள். கூலி பெற்ற பின்பு மாலை 6 மணிக்கு மேல் தான் நியாயவிலைக் கடைக்கு செல்லக்கூடிய காரணத்தால் வருவாய்த் துறைக்கு ஒரு கடை என்பதை மாற்ற என்னுடைய தொகுதி மலை வாழ் மக்கள் இருக்கிற இடம் வேண்டும். குறிப்பாக நான் சொல்ல வேண்டும், என்று சொன்னால், அக்கரப்பட்டி, கீழ்மலச்சி, மேல் மலச்சி, பீமரபட்டி, ஆத்திப்பாடி, உள்செக்கிடி ஆகிய பல் வேறு மலைவாழ் மக்கள் இருக்கிற கிராமங்களுக்கு நியாய விலைக்கடைகளை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விழிப்பு கண்காணிப்புக் குழு ஒன்றை இந்த அரசு அறிவித்து இருக்கிறது. நியாயவிலைக் கடைகளில் எவ்வளவு அநியாயங்கள் நடைபெறுகின்றன தெரியுமா? அந்த நியாயவிலைக் கடைகளை கண்காணிப்பதற்கு இந்த அரசு ஒரு கமிட்டியை ஏற்பாடு செய்து இருக்கிறது. இப்படி கமிட்டி ஏற்பாடு செய்து இருக்கின்ற காரணத்தால் மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் போலி அட்டைகளைப் பிடிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கி இருப்பதை விட அந்த நியாயவிலைக் கடைகளில் இந்தக் கண்காணிப்புக் குழு வும் அந்தப் பகுதியில் சேர்ந்தவர்கள் அமைத்து இருக்கிற காரணத்தால் யார், யார் வீட்டில் போலி அட்டைகள் வைத்து இருக்கிறார்கள். யார் யார் ஒரு குடும்பத்திற்கு இரண்டு அட்டைகள் வைத்து இருக்கிறார்கள் என்பதை மிக நன்றாகத் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இத்தகைய கமிட்டி அமைத்த இந்த அரசை மனமார, உளமார, இதயமார, நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களில் உரம் விற்கின்ற முறை. வெளிமார்க்கெட்டில் உரம் விற்கின்ற போது ஒரு மூட்

டைக்கு யூரியா காம்ப்ளக்ஸ் போன்ற உரங்கள் 10 ரூபாய் லாபம் வைத்து விற்கிறார்கள். நான் தயவுசெய்து அரசைக் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் எத்தனையோ வகையில் சிறு விவசாயிகளுக்கு எல்லாம் நாம் மானியங்களை வழங்குகிறோம். ஏன் கூட்டுறவுச் சங்கங்களில் விற்கப்படும் உரங்களுக்கு லாபமே இல்லாமல் வாங்கிய விலைக்கே விற்றால் அது மற்ற விவசாயிகளுக்கும் அதிகமான அளவுக்கு லாபம் அடையக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு செலவு ஏற்படுமானால் செலவுகளை எல்லாம் அந்த மானியத் தொகையிலிருந்து கழித்து கொள்வார்களானால் அதிகமான லாபம் ஏற்படுவதற்கு வழி இருக்கிறது. ஏழைகளை வாழ வைக்கும் இந்த அரசு இதையும் ஏற்று இதை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பயிர்க் கடன்களை வழங்கும்போது குறுகிய கால கடன்களை வழங்குகிறோம். அப்படி குறுகிய கால கடன்களை வழங்குகிறோம் என்று சொன்னால் 9 மாதங்களுக்கு கடன் வழங்குகிறோம். ஆனால் 9 மாதங்களில் பருவ மழை தவறி விடுகின்ற காரணத்தால், வறுமை வாட்டி வதைக்கின்ற காரணத்தால், இல்லாமை அதிகமாகி விடுகின்ற காரணத்தால் அந்தப் பயிர் பொய்த்து விடுகின்ற காரணத்தால் அந்த ஒரு பயிர் பொய்த்துவிட்ட பின்பு உடனடியாக அந்தக் கடன்களை கட்ட இயலாமல் போய்விடுகிறது. எனவே இதை ஒரு ஆண்டாக நீங்கள் மாற்றினால் அந்த ஒரு பயிர் பொய்த்து போனாலும் கூட அடுத்த பயிர் மூலமாக அதைக் கட்டுகின்ற ஒரு வாய்ப்பு பெறும். அப்படி கட்டாமல் 9 மாதங்களுக்கு மேல் ஆனால் இந்த அபராத வட்டி கூட்டுறவுச் சங்கங்களில் குறிப்பிட்ட காலங்களில் கட்டினால் மட்டும் தான் அந்த வட்டி நியாயம் உள்ளதாக இருக்கிறதே ஒழிய தவணைத் தவறிக் கட்டினால் இது ஒரு தண்ட வட்டி நிலைக்கு மாறி விடுகிறது. எனவே அதை ஒரு வருடமாக நீட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இத்தகையக் கருத்துக்களைக் கூறுகின்ற நான் என்னுடைய தொகுதியின் கருத்துக்களையும், பிரச்சினைகளையும் கூறுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் மானியக் கோரிக்கையின் மீது பேசுவது மரபு இல்லை என்றாலும் கூட ஒரு சில கருத்துக்களை கூறி நான் விடைபெறலாம் என்று இருக்கிறேன். என்னுடைய தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதியாக இருப்பதால் தொழில் வளம் இல்லாத ஒரு இடமாக இருப்பதால் ஒரு காகிதத் தொழிற்சாலையை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காகிதத் தொழிற்சாலையை உருவாக்குவதற்குத் தேவையான கச்சாப் பொருட்கள் அங்கே இருக்கின்றன. மரங்கள் நிறைந்து

இருக்கின்றன. சர்க்கரை ஆலை பக்கத்திலே இருப்பதால் அதனுடைய மொலாசஸ் இருக்கிறது. பக்கத்திலுள்ள சாத்தனூர் அணையிலே 11 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதால் தேவையான மின்சாரமும் இருக்கிறது. எனவே அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வறட்சி அதிகமாக இருக்கின்ற காரணத்தால், எங்கு பார்த்தாலும் எங்கள் பகுதியில் பஞ்சம் தலை விரித்தாடுகிறது. மெய்யூர், வெரையூர், அப்புபட்டு தண்டரை, பெருமணம் இசக்கைகாட்டேரி, விருதி விலங்கைமான் போன்ற கிராமங்களில் எல்லாம் தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்குள்ள தண்ணீர் பஞ்சத்தை உடனடியாகத் தீர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியான தணடராம்பட்டில் அதிகமான அளவிற்கு வறட்சி இருக்கின்ற காரணத்தால் அருகிலே உள்ள சாத்தனூர் அணையிலேயிருந்து திருவண்ணாமலைக்குச் செல்கின்ற தண்ணீரை தண்டராம்பட்டுக்கு விதியோகம் செய்ய வேண்டுமென்று சொல்லியும் இன்னும் விநியோகம் செய்யப்படவில்லை. அதை உடனடியாக செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது தண்டராம்பட்டை ஒரு வட்டத்தின் தலைநகரமாக ஆக்கவேண்டுமென்றும், அரசாங்க மருத்துவமனை ஒன்றை தண்டராம்பட்டுக்கு அளிக்கவேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவே நாடடுயர்வு என்ற காரணத்தை மரியாதைக்குரிய இந்த அரசாவது உணர்ந்து கூட்டுறவை இரு கண்களாக பாவிக்கின்ற காரணத்தால், இந்த அரசை மனமார பாராட்டி விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த மானியக் கோரிக்கையை முன் வைத்துத் தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்ய இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களே, இந்த அவைக்கு நான் புதியவன், ஆகவே சற்று அதிகமான நேரம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மாதிரி ஐஸ் வைத்து என்னிடம் காரியம் சாதித்துக் கொள்ள முடியாது, (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது வெயில்

காலம், ஐஸ் வைத்தாலும்கூட அது உருகிப் போகும். (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சிறு விவசாயிகளுக்கு அனைத்துக் கடன்களையும் ரத்து செய்வோம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சிறு விவசாயிகளுடைய குறுகிய காலக் கடன்களை மட்டும்தான் தள்ளுபடி செய்து இருக்கிறார்களே தவிர சிறு விவசாயிகளுடைய நீண்ட காலக் கடன், மத்திய காலக் கடன்களை தள்ளுபடி செய்யவில்லை. அபராத வட்டி மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அரசை நான் கேட்டுக்கொள்வது, சிறு விவசாயிகளுடைய மத்திய காலக் கடன்கள், நீண்ட காலக் கடன்கள் அனைத்தையும் ரத்து செய்து கொடுக்கவேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், சிறு விவசாயி, பெரு விவசாயி என்று பிரிப்பதைக் காட்டிலும் ஒட்டு மொத்தமாக அனைத்து விவசாயிகளுக்குமே நல்ல பல காரியங்களை இந்த அரசு செய்ய வேண்டும். கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று நீண்ட பல வருடங்களாக திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்டு காங்கிரஸ் பேரியக்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போன்ற இயக்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து, நீண்ட பல வருடங்களாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கும்போது போராட்டம் நடத்தினோம். இங்கே இருக்கின்ற வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் அழகர்சாமி போன்ற கம்யூனிஸ்ட் தோழர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நண்பர்களெல்லாம் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தினோம். அந்த நேரத்திலே தி.மு.க. நண்பர்களெல்லாம் சிறு விவசாயி, பெரு விவசாயி என்று பாரபட்சம் காட்டக் கூடாது என்றும் அனைவருக்கும் கடன்களை ரத்து செய்யவேண்டுமென்றும் சொல்லி போராட்டம் நடத்தி ஓரளவிற்கு வெற்றியும் பெற்றோம். அந்தத் தொகை கூட இன்னும் அட்ஜஸ்ட் ஆகவில்லை என்றும் 20 கோடி ரூபாய் பாக்கி இருப்பதாகவும் சொன்னார்கள். அதை இந்த அரசு அட்ஜஸ்ட் செய்கிறது என்றும் சொன்னார்கள். மகிழ்ச்சி.

விவசாயிகளைப் பொறுத்தவரையிலே இந்த நாட்டில் எந்த ஒரு அரசும் கவனிப்பதாகவே தெரியவில்லை. சிறு விவசாயிகளுக்கு முழுமையாக கடனை ரத்து செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் செய்யவில்லை சொல்கிறார்களே தவிர சொல்வதையும் அழுத்தமாக, அழகாக, ஆணித்தரமாக சொல்கின்றார்கள். ஆனால் செயல்பாட்டிலே சிறு விவசாயிகளுக்கு

அந்த ஒரு பகுதி கடன்களை மட்டும் ரத்து செய்து விட்டு மத்திய காலக் கடன், நீண்டகாலக் கடன்களை ரத்து செய்ய வில்லை. ஆகவே, தயவுசெய்து அவற்றை ரத்து செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

பெரிய விவசாயிகளைப் பொறுத்தவரையில், நான், ஆயிரம் ஏக்கர், இரண்டாயிரம் ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயிகளைப் பற்றிச் சொல்லவில்லை. சுமார் 5 ஏக்கர் வரை வைத்திருப்பவர்கள் சிறு விவசாயிகள். $2\frac{1}{2}$ ஏக்கருக்குக் கீழே வைத்திருப்பவர்கள் குறு விவசாயிகள். ஆனால் 5 ஏக்கர் 1 செண்ட் இருந்தால் கூட அவர்கள் பெரிய விவசாயிகள். ஆகவே 10 ஏக்கர் வரையாவது ஒரு நிர்ணயம் வைத்து அந்த விவசாயிகளுக்கு அபராத வட்டிகளை தள்ளுபடி செய்து விட்டு நீண்ட பல வருடங்களாக, 80, 81, 82, 83. 84 ஆகிய ஆண்டுகளில், புயலாலும், வெள்ளத்தாலும் மழையாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அந்த ஆண்டுகளுக்கு மட்டுமாவது கடன்களை, அந்த அபராத வட்டிகளை தள்ளுபடி செய்துவிட்டு, அந்த அசல்களை 5 ஆண்டுகளுக்குள் கட்டவேண்டுமென்று கன்வர்ஷன் கொடுத்தால் வசதியாக இருக்கும். கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்துவதற்கும் சவுகரியமாக இருக்கும். அந்த விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களிலே கலந்து கொள்வதற்கும் சவுகரியமாக இருக்கும். ஆகவே கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு முடிவு ஏற்பட்டு ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டு மக்கள் அத்தனை பேரும் கலந்து கொண்டு சிறப்பான முறையில் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்துவதற்கு அது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

நிலவள வங்கியைப் பொறுத்தவரையில் டிராக்டர்கள் வாங்குவதற்கு லோன் கொடுக்கிறார்கள். அந்தக் கடன் வாங்கியவர்களும் இயற்கையின் இடர்பாடுகளால் கட்ட முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களால் கட்ட முடியவில்லை. ஆகவே, வட்டி, அபராத வட்டிகளை ரத்து செய்து, அசலை மூன்றாண்டுகளில் அல்லது 5 ஆண்டுகளில் கட்டுகின்ற வகையில் 'கன்வர்ஷன்' செய்து கொடுத்து, அவர்களுக்கு புதிய லோன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் வழங்கு சங்கங்கள் இன்றைக்கு தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. ஆனால் சில இடங்களில் அந்தச் சங்கங்கள் செயல்படவில்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக, கடன் வாங்கியவர்கள் சங்கத்திற்குப் பணம் கட்டியிருக்கிறார்கள். ஆனால்

1989 ஏப்ரல் 25] [திரு. ஆர். சிங்காரம்]

அங்கே பொறுப்பிலே இருக்கின்ற தலைவர், செயலாளர், மற்றவர்கள் அந்தப் பணத்தை வங்கியிலே கட்டாமல் தாங்களே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் 'ஓவர் டியூ' வந்து, மீண்டும் கடன் வழங்கப்படவில்லை. மீண்டும் கடன் கிடைக்காத காரணத்தால் அந்தச் சங்கம் செயல்படாமல் 'டிஃபங்ட்' ஆகிவிடுகிறது. அப்படிப்பட்ட சங்கங்களின் லிஸ்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாரித்து, இயங்க முடியாத சங்கங்களை நீக்கிவிட்டு, மற்ற சங்கங்களை நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும்; இயங்காத இடத்தில் புதிய சங்கத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 300 ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ள கார்டுதாரர்களுக்கு இலவச அரிசி வழங்குவதாகச் சொன்னார்கள். ஆனால் நடைமுறையிலே அது சரியாக நடைபெறவில்லை. பெரும்பாலான இடங்களில் இலவச அரிசி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் 25 சதவீதம் இன்னும் வழங்கப்படவில்லை. அதற்கு சில காரணங்களைச் சொல்கிறார்கள். 300 ரூபாய் வருமானம் என்று பார்க்கும்போது அங்கே 'ஏ' ரெஜிஸ்டர் என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். அதிலே 350 ரூபாய், 400 ரூபாய் என்று வருமானத்தைப் போட்டிருக்கிறார்கள். கார்டிலே 300 ரூபாய் என்று இருந்தாலும் அந்தக் 'ஏ' ரெஜிஸ்டரில் வருமானம் அதிகமாக இருப்பதால் அந்த கார்டுக்கு கிடையாது என்று சொல்லிவிடுகிறார்கள். கார்டைப் பார்த்தால் பிரண்ட் பேஜிலும் பாக் பேஜிலும் 300 ரூபாய் தான் இருக்கிறது. ஆனால் 'ஏ' ரெஜிஸ்டரில் அதிகமான வருமானம் காட்டப்பட்டிருப்பதால் அரிசி வழங்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளை நானே நேரில் கொண்டு சென்றேன். கொடுக்க மறுத்துவிட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு சம்பவம், ஒரு நரிக்குறத்திக்கு கார்டிலே 500 ரூபாய் வருமானம் என்று போடப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் 20 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற ஒரு மிராசுதாரருக்கு 250 ரூபாய் வருமானம் காட்டப்பட்டிருக்கிறது. 20 ஏக்கர் நிலத்தை அந்த மிராசுதார் பிரித்து, பிரித்து, எழுதி 250 ரூபாய் வருமானம் என்று காட்டியிருக்கிறார். ஆனால் நரிக்குறத்தி மாரியம்மாவுக்கு 500 ரூபாய் போட்டிருக்கிறார்கள். நரிக்குறத்திக்கு 500 ரூபாய் வருமானம் எப்படி வந்தது என்று தெரியவில்லை. அதனால் மிராசுதார் இலவச அரிசி வாங்குகிறார்; ஏழை நரிக்குறத்திக்கு இலவச அரிசி கிடைக்கவில்லை. இதை நீங்கள் செய்யவில்லை; முந்தைய ஆட்சியில் செய்திருக்கிறார்கள். நீங்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

நான் பொதுவாக, ஒட்டுமொத்தமாக, எல்லோரின் சார்பிலும்—கழக உடன் பிறப்பாக இருந்தாலும் சரி, இரத்தத்தின் இரத்தமாக இருந்தாலும் சரி, தேசியத் தோழர்களாக இருந்தாலும் சரி, இனிய நண்பர்களாக இருந்தாலும் சரி—சொல்லுகிறேன்.; எதிர்க்கட்சி என்ற முறையில் சொல்லவில்லை. கார்டுகளிலே இப்படி பல தவறுகள் இருப்பதால் தயவுசெய்து இதுபற்றி விசாரிக்க வேண்டும்; மறுபரிசீலனை செய்ய வேண்டும். சீனி வாங்க வேண்டும் என்பதற்காக வருமானத்தைக் கூட்டிப்போட்டவர்களும் உண்டு, அரிசி வாங்க வேண்டும் என்பதற்காக தங்கள் வருமானத்தைக் குறைத்து போட்டவர்களும் உண்டு. ஆகவே, இதை எல்லாம் விசாரித்து, உண்மையான வருமானத்தைப் போட தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

முந்தைய அரசு காலத்திலே பல இடங்களில் 'ரௌடித்தனம்' நடந்ததாகச் சொல்கிறார்கள். பல இடங்களில் அங்கத்தினர்களே நேரில் சென்று ஒட்டுமொத்தமாக அரிசி மற்ற பொருள்களை வாங்கி, விற்று வந்ததாக ரிப்போர்ட் வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ரிப்போர்ட் வந்திருக்கும் என்று கருதுகிறேன். தயவுசெய்து அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உண்மையான கார்டு வழங்குவதில் தீவிரம் காட்ட வேண்டும். ஏழை மக்கள் பாதிக்கப்படக்கூடாது; பணக்காரர்கள் பயன் பெறக்கூடாது; தகுதி வாய்ந்தவர்களுக்கு பயன் கிடைக்க வேண்டும் என்ற அந்த செயல்வடிவத்தை உண்மையிலே நீங்கள் செயல்படுத்திக் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பல அங்காடிகளில் சென்று பொருள்களை வாங்க வேண்டுமென்றால் அவற்றினுடைய 'டிஸ்டன்ஸ்' அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக மக்கள் அங்கே போய் வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். சட்டத்தை 'ரிலாக்ஸ்' செய்து, எல்லோரும் சுலபமாக சென்று அரிசி வாங்கக்கூடிய வகையில் தூரத்தைக் குறைத்து, அங்காடிகளை ஏற்படுத்தி, வசதிகளை செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் குறிப்பிடுவது எல்லாம் நன்றாகத் தெரியும். எல்லா 'போர்ட்போலியோ'களுக்கும் சரியான பதில் சொல்லக்கூடிய ஒரு அமைச்சர் தான் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள். நான் ஐஸ் வைக்கவில்லை. உண்மையைச் சொல்கிறேன். எதிர்க்கட்சியாக இருந்தாலும் இயற்கையான உணர்வைச் சொல்கிறேன். அப்படிப்பட்ட உணவு அமைச்சர் அவர்கள் இதிலே தீவிரமாக செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1989 ஏப்ரல் 25] [திரு. ஆர். சிங்காரம்]

அடுத்தபடியாக, ஒரு கார்டுக்கு மொத்தம் 12 கிலோ அரிசிக் கொடுக்கிறார்கள். அதிலே இந்த 5 கிலோ அரிசி கழித்துக் கொள்ளப்படுகிறதா அல்லது அந்த 12 கிலோ அரிசி தவிர இந்த 5 கிலோ அரிசியும் தனியாக வழங்கப்படுகிறதா என்று தெரிவில்லை 12 கிலோ தவிர தனியாக 5 கிலோ அரிசி போடவேண்டும். தமிழக மக்கள் எல்லாம் அப்படித்தான் கருதிக் கொண்டிருக்கிறார்கள். கழக உடன் பிறப்புகளும் அதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 5 கிலோ அரிசியை இலவசமாகப் போட்டுவிட்டு, 12 கிலோ அரிசியை தனியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்று பன்னெடுங்காலமாக கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது கொடுக்கப்படுகிற விலை போதாது. குவிண்டாலுக்கு 225 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்க விவசாயிகளில் கடன் வாங்குவோருக்கு 12 சதவீதம் வட்டி நிர்ணயிக்கப்படுகிறது. அதை மாற்றவேண்டும். புரட்சிகரமாகச் செயல்படுகிற இந்த அரசும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களும் அதனை 6 சதவீதம் வட்டி என்ற அளவுக்குக் குறைக்க வேண்டும். கூட்டுறவு வங்கி அதிகாரிகளுக்கும் அரசு அதிகாரி ஏகப்பட்ட 'டிபரன்ஸ்' இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. எனவே எவ்வளவுதான் ஐஸ் வைத்தாலும் கூடுதலாக நேரம் கிடைக்காது. (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உறுப்பினர் அவர்களின் நேரத்தை வாங்கித்தான் நான் பேசுகிறேன். நான் ஒன்றும் ஐஸ் வைத்துப் பேசவில்லை. நியாயமான உணர்வுகளைத் தான் சர்க்காரிடத்திலே உரிய நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். எங்கள் கட்சியின் உறுப்பினரின் நேரத்தை எடுத்துக் கொண்டு பேசுகிறேன். எனவே அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நெல்லுக்கு நியாயமான விலை கொடுக்கவேண்டும் என்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலிருந்து பல்வேறு வகையான விவசாயத் தொழிலாளர்கள் எங்களுடைய தஞ்சை மாவட்டத்திற்கு கூலி வேலைக்கு வருகிறார்கள். அவர்கள் அவ்வாறு வந்து வேலை

செய்து சம்பாதித்த நெல்லை ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க முடியவில்லை. அவர்கள் அதற்கான மனுவைத் தாசில்தாரிடத்திலே கொடுக்கவேண்டும். அல்லது ஆர்.டி.ஓ. அவர்களிடத்திலே கொடுக்கவேண்டும். இப்படிக் கொடுக்கப் படுகின்ற மனுவை ஆர்.டி.ஓ. தாசில்தாருக்கு அனுப்பி, டி.எஸ்.ஓ. விசாரணை செய்து மீண்டும் ஸ்பாட்டுக்குச் சென்று எந்த இடத்தில் வேலை செய்தார் என்று விசாரணை செய்து அதன்பிறகு ஆர்.டி.ஓவை அனுப்பி அவர்கள் பரிசீலனை செய்த பின்புதான் அந்த பெர்மிட் வழங்குவது என்று சொன்னால் அதற்குள் 6 மாதங்கள் ஆகிவிடும். இப்போது மூன்று, நான்கு மாதங்களாக அந்த பெர்மிட் கொடுக்கப்படாத நிலைமை இருந்து வருகிறது. எனவே சட்டத்தைத் தளர்த்தி டி.எஸ்.ஓ. அவர்களே நேரடியாகப் பார்த்து உடனடியாக பெர்மிட் கொடுக்கிற ஏற்பாட்டை அந்தத் தொழிலாளர் களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்கள், மீனவர்கள் போன்றவர்கள் இறந்தால் உதவித்தொகை கொடுக்கிறோம். மகிழ்ச்சி. அதை ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால் எங்களுடைய கோரிக்கை தான் அது. அதே நேரத்தில் விவசாயிகள் உங்களுக்கு என்ன பாவம் செய்தார்கள்? விவசாயிகள் வேலை செய்கிறபோது பாம்பு கடித்தோ அல்லது பாசான முள் குத்தியோ இறந்தால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை. அதையும் இந்த அரசு பரிசீலித்து அவர்களுக்கும் 15 ஆயிரம் ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து கூட்டுறவின் மூலமாக வீடு கட்டும் சொசைட்டி என்று இருக்கிறது. இந்த வீடு கட்டும் சொசைட்டிகள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன அதன் மூலம் 6,000 ரூபாய், கொடுக்கப்படுகிறது. ஆர்.எல்.இ.ஜி.பி., ஐ.ஆர்.டி.பி. என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களின் கீழ் 6,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசும், மாநில அரசும் ஆளுக்குப் பாதியாகக் கொடுக்கிறது. இந்தத் தொகை போதாது. இந்தத் தொகையை 3, 4 ஆயிரம் என்று சேர்த்துக் கொடுப்பதற்கான திட்டத்தை வகுத்திருப்பதாகக் கேள்வி நேரத்திலே சொல்லப்பட்டது. மகிழ்ச்சி, எனவே அந்த வகையிலே 4 அல்லது 5 ஆயிரம் ரூபாய் சேர்த்துக் கொடுத்தால் உருப்படியான முறையிலே அந்த வீட்டைக் கட்டலாம். களிமண்ணால் கட்டினால் எந்தவிதமான பயனும் இல்லை. ஆகவே 10 ஆயிரம் அல்லது 12 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பீடு செய்து அந்த வகையில் அதனை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அமுதம் அங்காடியைப் பொறுத்தவரையில் பல்வேறு குறைபாடுகளைப் பற்றி இங்கே சொல்கிறார்கள். அந்தக்

குறைகளைப் பற்றி பல்வேறு நேரங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறோம். அமுதம் அங்காடி அமைப்பதைப் பொறுத்தவரையில் சட்டத்தைத் தளர்த்தி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே வேலை செய்கிற பல்வேறு தொழிலாளர்கள் பல்வேறு குறைகளைச் சொல்கிறார்கள். அந்தக் குறைகளை எல்லாம் சொன்னால் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் என்னை உட்கார வைத்து விடுவார்கள். ஆகவே அந்த அங்காடியில் நடக்கின்ற குறைகளை எல்லாம் களைந்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பேங்க்ஸ். இது பற்றி முதலிலேயே நான் சொல்ல வந்தேன். பிறகு சொல்லாமல் விட்டுவிட்டேன். கோ-ஆப்பரேட்டிவ் டெபுட்டி ரெஜிஸ்ட்ரார் போன்றவர்கள் எல்லாம் டிப்பார்ட்மெண்ட் ஸ்டாஃப். அவர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் எல்லா சலுகைகளும் உண்டு. ஆனால் கோ-ஆப்பரேட்டிவ் பேங்க்ஸ் ஸ்டாஃப் என்பவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அந்தச் சலுகை கிடையாது. அவர்கள் தனி டிபார்ட்மெண்ட் என்று சொல்கிறார்கள். எனவே அவர்களையும் அரசாங்கத்திலே சேர்ந்து அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற அனைத்துச் சலுகைகளையும் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் முன்பே சொன்னேன், பேராவூரணியில்— நான் சொல்லும்போது தமாஸ் செய்தார்கள். குளித்துவிட்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். நான் இப்போது குளித்து விட்டு வந்துதான் பேசுகிறேன். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் அந்த நிலையைப்போக்க வேண்டும். எல்லா இடங்களிலும் தி.மு.க. கொடி கட்டி அது ஒரு அரசு விழாவாக நடக்கவில்லை. இதுபற்றி நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அரசு விழா என்றால் அதிலே 'டீசன்சி' இருக்கவேண்டும். அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் அதிகாரிகள் எல்லாம் வருகிறார்கள். அப்படி வருகின்ற இடத்தில் ஒரு கட்சியினுடைய விழாவாக இல்லாமல் அரசு விழாவாக இருக்கவேண்டும். நீங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டீர்கள். நீங்கள்தான் அதைக் கொடுக்கிறீர்கள். மத்தியிலே இருந்து நாங்கள் கொடுத்தாலும் நீங்கள்தான் அதைச் செயல்படுத்துகிறீர்கள். நாங்கள் நேரடியாகக் கொடுக்க முடியாது. நீங்கள் கொடுக்கவில்லை என்று சொன்னால் திரு. ராஜீவ் காந்தி அவர்களிடமிருந்து அரிசியை வாங்கி நாங்களே கொடுக்கவேண்டிய சூழ்நிலை வரும். அப்படி வராது. ஒரு தமாசுக்கு சொல்கிறேன். ஆகவே நாங்களும் கொடுக்கிறோம். நீங்களும் கொடுக்கிறீர்கள். எனவே எங்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள். எல்லா எதிர்க்கட்சியினரையும் சேர்த்துக்கொள்ளுங்கள். அப்போது

தான் நாகரீகமான ஒரு அரசியல் நடத்துகிற சூழ்நிலை நாட்டிலே ஏற்படும். அந்த வகையில் உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பா. அப்துல் சமத் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாங்கள்தான் கொடுக்கிறோம் என்று கூறுகிறார்கள். அவர்கள் மத்தியிலிருந்து ஃப்ரியாகக் கொடுக்கிறார்களா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் உணவுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இல்லை. எங்கள் ஊரில் ஒரு விநோதமான திருட்டு நடந்தது, மாலை 6 மணிக்கு, 20ஆம் தேதி ஒரு வீட்டிலே ஒரு கிழவி இருந்தாள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மாதிரி கதை என்று ஆரம்பித்துவிட்டால், கிழவி கதை, கிழவன் கதை என்று ஆரம்பித்துவிட்டால் மேலும் 5 நிமிடம் ஓடுமே. இது எல்லாம் தேவையில்லாதது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்துச்சொல்லிக் கொள்ளலாம். எழுத்து மூலமாகக் கொடுக்கலாம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஒன்றும் நான் குற்றச்சாட்டாக சொல்லவில்லை. 6 மணிக்கு எதிர் கடையில் இருந்தவன், ஒரு திருடன் நீண்ட நெடுங்காலமாக, வருடங்களாக இருந்துகொண்டு திருட்டுத்தனம் பண்ணியிருக்கிறான். வெளியிலே தெரியாது. 6 மணிக்கு அந்த கிழவியைப் பிடித்து அவள் குரல்வளையை பிடித்து 15 பவுன் நகையை அறுத்துக்கொண்டு போய்விட்டான். அந்த கிழவி விட்டத்திலே வைத்திருந்த பணம், வட்டிக்குவிட்டு சம்பாதித்தப் பணத்தை ரூ. 15 ஆயிரம் வைத்திருந்தாள். அதையும் கொண்டு போய்விட்டான். போலீஸ் ஸ்டேஷனிலேயிருந்து 6 கட்டடம் தாண்டியிருக்கிறது. பேராவூரணி டவுனிலே இருக்கிறது. அன்றைக்குத் திருவிழா, அதனாலே வீட்டிலே யாரும் இல்லை. இந்த கிழவி மாத்திரம் இருந்தாள். கொண்டு போய்விட்டான். போலீஸ் போட்டு ஆக்ஷன் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதற்கு ஸ்பெஷல் போலீஸ், சிறப்புக் காவல்துறையினரைப் போட்டு அந்த ஆய்ந்து கண்டுபிடிக்க வேண்டும். ஏனென்றால் இது போன்ற நிகழ்ச்சிகளை நாம் விட்டுவிடுவோமானால், தொடர்ந்து தமிழகத்

திலே நம்முடைய அரசு பார்த்துக்கொள்ளும் என்று கட்சிக்காரர்களும் மற்றவர்களும் சேர்ந்துகொண்டு இருந்தால் தவறு செய்தவர்கள் ஆகிவிடுவோம். ஆகவே இதையெல்லாம் பார்த்து கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கு இல்லாவிட்டாலும் அவர் மேஜையைப் பார்த்தாவது சொல்லிக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூட்டுறவுத் துறை மானியத்திலே பேசாமல் போலீஸ் துறை பற்றி பேசியிருக்கிறார்கள். கதையெல்லாம் சொல்கின்றார்கள். நீங்கள் அனுமதிக்கிறீர்கள். அப்படி எல்லோருக்குமே அனுமதிப்பீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்கள் திருடர்களைப் பற்றிப் பேசியிருக்கின்றார்கள். கூட்டுறவுத் துறை மானிய விவாதம் நடைபெறுகிறது. அவர்கள்

*திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம்மன்றத்தின் முன் மதிப்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட கூட்டுறவுத் துறை மானியத்தின் மீது என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்க இருக்கிறேன். இந்த மாமன்றத்தில் என்னை உறுப்பினராகத் தேர்வு செய்த நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இனமானக் காவலர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை உரித்தாக்கி, செங்கற்பட்டு தொகுதி வாக்காளப் பெருமக்கள் என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெறச் செய்து என்னை உறுப்பினராக ஆக்கிய அவர்களுக்கும் இந்த அவையின் மூலமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது அன்றைய மொழி. கூட்டுயர்வே நாட்டுயர்வு என்பது இன்றைய மொழி. மக்களுடைய பங்குத் தொகையினைப் பெற்று, மக்கள் பிரதிநிதிகளால் மக்களுக்காகத் தொண்டாற்றும் நிறுவனங்களே கூட்டுறவு நிறுவனங்களாகும். இடைத் தரகர்கள் அடிக்கும் கொள்ளையை தடுத்து நிறுத்தி, மக்களுக்கே அவ்வளவு லாபமும் போய்ச் சேர வேண்டுமென்ற நல்ல நோக்குடன் தொடங்கப்பட்ட இயக்கங்களே கூட்டுறவு இயக்கங்களாகும். இன்றைக்குப் பொருளாதாரத்திலே வளர்ச்சி பெற்ற நாடுகளாகட்டும், வளர்ந்து கொண்டிருக்கிற நாடுகளாகட்டும், கூட்டுறவுத் தத்துவத்தை மிகவும் பெரிதாக மதித்து, அதன் பலனைப் பெற்று, நாட்டின் பொருளாதாரத்தையும், மக்களின் வருவாயையும் பெருக்கிக் கொண்டு வருகிறார்கள். அதே தத்துவத்தை ஒட்டித்தான் இந்தியத் திருநாட்டிலும் பல்வேறு கூட்டுறவு இயக்கங்கள் தோன்றி, தழைக்கத் தொடங்கின. ஆனால் அவற்றின் மூலம் இன்றைய தினம் மக்களுக்குப் போய்ச்

சேரவேண்டிய பயன்கள் சரியாகப் போய்ச் சேருகின்றனவா என்பதில் பெருத்த ஐயப்பாடு தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. இன்றைய தினம் ஜனநாயகக் கோட்பாட்டில் பெருத்த நம்பிக்கை வைத்திருக்கிற கழக அரசு, கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டுள்ள பெருங்கேடுகளை அகற்றி, அங்கே மக்கள் பிரதிநிதிகள் இருந்து மக்களுக்குத் தேவையான பணிகளைச் செய்வதற்கு ஆவன செய்யும் என்ற நம்பிக்கை என்னைப் போன்ற மக்கள் பிரதிநிதிளிடையே மட்டுமல்லாமல், இன்றைய தினம் கூட்டுறவுத் துறையில், சங்கங்களில், இயக்கங்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய பல்லாயிரக் கணக்கான ஏழை எளிய மக்களிடையேயும் இருக்கிறது என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிலை என்ன என்பதை நாம் முதலில் பார்க்க வேண்டும். கடந்த பல ஆண்டுகளாக கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பெறாமல், அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல், அதிகாரிகள் இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் நல்ல முறையிலே செயல்பட்டால், அந்த இயக்கங்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பணியாற்றினால் எந்தவிதமான குறைபாடும் இருக்காது. இங்கே அவர்களைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களையும் குறைபாடுகளையும் சொல்லத் தேவையிருக்காது. எங்கோ ஒன்றிரண்டு அதிகாரிகளைத் தவிர, மீதமுள்ள இடங்களில் அதிகாரிகளின் ஆணவப்போக்கைத்தான் பார்க்க முடிகிறது. அவர்கள் தங்கள் போக்கில் இருக்கின்ற அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையெல்லாம் உடனடியாக மாற்றப்பட வேண்டும் என்பதில் இரண்டுபட்ட கருத்துக்கு இடமிருக்காது. மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பேசியுள்ள ஒரு தகவல் பத்திரிகையில் வந்திருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் விரைவிலே, ஜூன் மாதத்திலே நடத்தப்படுமென்று அவர்கள் தந்திருக்கிற தகவல் பல்லாயிரக்கணக்கானவர்கள் வயிற்றிலே பாலை வார்த்திருக்கிறது. உடனடியாக தேர்தல்கள் நடத்தப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இருந்தபோதிலும், தேர்தல்களை நடத்துவதற்கு முன்பு ஒரு பிரதிநிதிகள் குழுவை அமைத்து, அந்தச் சங்கங்களைச் சீரமைக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. அங்கேயுள்ள பிரதிநிதிகளிலே சேவை மனப்பான்மை உள்ளவர்களை, தொண்டுள்ளம் கொண்டவர்களை, மக்கள் பிரச்சினைகளை அறிந்தவர்களை, அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே ஆர்வம் உள்ளவர்களை, முக்கியமாக மக்கள் பணத்தை கொள்ளையடிப்பதில் ஆர்வம் காட்டாதவர்களைக் கொண்ட குழு ஒன்றை ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் நியமித்து, உடனடியாக அந்தச் சங்கங்களின் நடவடிக்கைகளில் வேகத்தை, விரைவை, மக்களுக்குப் பயனை நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறை மூலமாக விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம். குறிப்பாக தமிழகத்தை பொறுத்த வரையில் கடுமையான வறட்சி நிலவி வருகிறது என்பது நாடு அறிந்தது. இந்த நிலையில் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் தீவிரம் காட்டாமல், எந்த அளவுக்கு தள்ளி வைக்க முடியுமோ அந்த அளவுக்குத் தள்ளிவைக்க வேண்டும். ஏழை எளிய விவசாயி களுக்கு வட்டி போன்றவற்றை ரத்து செய்ய வேண்டும். ஏழை களின் நல்வாழ்விற்காக அமைந்திருக்கின்ற இந்த அரசு, எல்லா வற்றையும் கருத்தில் கொண்டு, ஆவன செய்யும் என்ற நம்பிக்கை மக்களிடையே இருக்கிறது. இதுகுறித்தும் மாண்புமிகு அமைச்ச ரவர்கள் நல்ல அறிவிப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, இன்றையதினம் கிராமப் பஞ்சாயத்துக்களில், நகரப் பஞ்சாயத்துகக்ளில் இருக்கின்றவர்கள் தங்கள் வீடுகளை அட மானம் வைத்து கூட்டுறவு அர்பன் வங்கிகளில் கடன் பெற முடிய வில்லை. இன்றைய தினம் நகராட்சி அந்தஸ்துள்ள நகரங்களில் இயங்கும் அர்பன் கூட்டுறவு வங்கிகளில்தான் வீடுகளின் பேரில் கடன் வழங்கும் நிலை இருக்கிறது. இதனால் பேரூராட்சிகளில் இருப்பவர்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். இதிலே எந்த விதமான கஷ்டமும் இல்லை. நிலையான சொத்தை அட மானம் வைத்து அவர்கள் கடன் கேட்கிறார்கள். எனவே இதை அரசு பரிசீலித்து, அதிலே ஏதாவது சங்கடங்கள், பிரச்சினைகள் இருந்தால், அவற்றை எல்லாம் நீக்கி, யார் வேண்டுமானாலும் அந்தக் கடனைப் பெறலாம் என்று வழிவகை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் அனைத்து ஊர்களில் உள்ள ஏழை, எளிய நடுத்தர மக்கள் பயன் பெறுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சாதாரண விவசாயிகளுக்கு பயிர்க் கடன் கொடுக் கப்படுகிறது. இப்போதிருக்கும் விலைவாசியில் அது மிகவும் குறைவு. இடுபொருள் விலை அதிகமாகி இருக்கிறது. பூச்சி மருந்து விலை அதிகமாகியிருக்கிறது. உற்பத்தி செலவு அதிக மாகியிருக்கிறது. விவசாயக் கூலிகளின் கூலி அதிகமாகி இருக் கிறது. இதையெல்லாம் கருத்தில்கொண்டு, பயிர்க்கடனை 10,000 ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று கூறிக்கொள் கிறேன். இப்போது ஜாமீன்பேரில்தான் கடன் கொடுக்கிறார்கள். எனவே, தகுதியுள்ளவர்களுக்கு, தேவையான ஜாமீன் பேரில், அதிகபட்சத் தொகையாக 10,000 ரூபாய் வரையில் கடன் வழங்க தக்க ஆணைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு வங்கிகள் இன்றையதினம் குறிப்பிட்ட பெரிய நகரங்களில்தான் உள்ளன. அங்கே நகைக் கடன்கள் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு குறிப்

பிட்ட அளவுக்கே அந்தக் கடனை வழங்குகிறார்கள். எனவே, இந்தக் கடனை, வங்கியில் பணியாற்றும் ஊழியர்களின் உறவினர்கள், வங்கி மேலாளருக்குத் தெரிந்தவர்கள், அந்த ஊரில் உள்ள பெரிய ஆட்கள்— இவர்கள்தான் பெற முடிகிறது. இதனால் ஏழை எளிய மக்கள், அவசரமாக மருத்துவ சிகிச்சைக்கோ திருமணத்திற்கோ, பணம் தேவை என்று அவர்கள் வரும்போது, வங்கிகளில் பணம்தர முடியாது என்று சொல்லும் நிலைதான் இருக்கிறது. ஒரு பக்கத்திலே வங்கிகள் மூலம், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் தொழில் தொடங்க என்று பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய்களை வழங்கி, அவற்றைத் திரும்பப்பெற முடியாமல் இருக்கிறது. ஆனால் இங்கே தங்க நகைகளை அடமானம் வைத்து, ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் கடன்கேட்க வரும் ஏழை எளிய மக்கள், தாங்கள் வாங்கிய கடனை ஒழுங்காகத் திருப்பித்தர வேண்டும். இல்லையென்றால் நகை போய்விடும் என்ற நிலையில், அத்தியாவசியத் தேவைகளுக்காக வங்கிகளை நாடுவோருக்கு அதிருப்திதான் காத்திருக்கிறது. வங்கிக்குப் பக்கத்திலேயே அதிகமான வட்டிக்குக் கடன் கொடுக்கும் கடைகள் இருக்கின்றன. வங்கியிலே வாங்குவதைப்போல இரண்டு மடங்கு, மூன்று மடங்கு வட்டிக்கு அவர்கள் பணம் தருகிறார்கள். அந்தக் கொள்ளையிலிருந்து இவர்கள் மீள வேண்டும் என்றால், அவர்கள் தரும் அந்த வட்டி நல்ல காரியங்களுக்குப் பயன்பட வேண்டுமென்றால், அவர்கள் நகைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால், கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் வருகின்ற அனைவருக்கும், தேவைப்படுகின்ற அனைவருக்கும் நகைக் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கே போனாலும் நிதிப் பற்றாக்குறை என்பது இல்லாமல் இல்லை. இருந்தாலும், இதனால் பாதிக்கப்படுவது ஏழை எளிய மக்கள் என்பதை கருத்தில்கொண்டு, இதற்குத் தேவையான நிதியை கொஞ்சம் கூடுதலாக்கி, இந்தக் கடன் பலருக்கும் போய்ச் சேரும் வண்ணம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு வங்கிகளில் நுகர்வோர் கடன் என்று தருகிறார்கள். மத்திய தர வகுப்பினருக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது. தங்களுக்கு வேண்டிய முக்கியமான பொருட்களை வாங்கிக்கொள்ள கடன் வாங்கிக்கொண்டு, அதனை தவணை முறையில் திருப்பித் தருகின்ற நல்ல முறை இது. ஆனால் இதிலே ஒரு குறைபாட்டைச் சொல்லுகிறார்கள். இந்தக் கடன் பெறுபவர்கள் கூட்டுறவு அங்காடிகளில்தான் பொருள்களை வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இது நல்ல ஏற்பாடு. எனவே அவர்களுக்குத் தேவையான பொருட்களை அங்கேயே கூட்டுறவு அங்காடிகளிலேயே தர வேண்டும்.. (மணியடிக்கப் பெற்று முடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 25 பேர்கள் பேச வேண்டும், உட்காருங்கள். அடுத்து, திரு. சீரங்கன் அவர்கள் 15 நிமிடத்தில் முடித்துவிட வேண்டும்.

1989 ஏப்ரல் 25]

(முற்பகல் 11-30)

திரு. எம். சிரங்கன் : பேரவை உதவித் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன். தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகள் மிகப் பாரம்பரியம் மிக்க ஒன்றாகும். 1905-லே கூட்டுறவு ஆரம்பிக்கப்பட்டு, அது 17 அமைப்புகளாக உருவாக்கப்பட்டு, இன்றைய நிலையில் 520 கிளைகளாகவும், 4,655 விவசாயக்கூட்டுறவு ஸ்தாபனங்களாகவும் மலர்ந்து வளர்ந்திருக்கிறது. இந்த வளர்ச்சியில், பல்வேறு மட்டங்களில் அதில் இருக்கும்படியான நிர்வாகிகளால், அந்தக் கூட்டுறவு அமைப்புகளைத் தகர்க்கும்படியான அளவுக்கு ஊழல்கள் நடந்து வந்திருக்கின்றன என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு பல்வேறு மட்டங்களிலிருந்து வந்திருக்கிறது. சேலம் மாவட்டத்தில் இருக்கும்படியான கூட்டுறவுப் பொறுப்பாளர் இன்றைய தினம் அந்த ஊழல் காரணமாக அங்கே ஏற்பட்டிருக்கும்படியான கிளர்ச்சி காரணமாக ராஜினாமா செய்தார்களென்று அண்ணா தி.மு.க. உறுப்பினர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அதற்குள் செல்லாமல், இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடனைக் கட்ட முடியாத நிலைமையில் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது இந்த அவையில் இருக்கும்படியான அனைவருக்கும் தெரியும். இந்தக் கூட்டுறவுக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்பதற்காக, விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும்படியான வட்டி அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டுமென்பதற்காக பல முறைகள் நாங்கள் உள்ளடக்கி ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் மிகப் பெரிய கிளர்ச்சியும், போராட்டமும் நடத்தி, மறியல் செய்தது உங்களுக்குத் தெரியும். 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து அப்படிப்பட்ட போராட்டங்கள் நடத்திய பிறகும், இன்றைக்கும் அந்த நிலைமைகளுக்கு மாற்றான பரிகாரம் காண முடியாத நிலை இன்றைக்கும் இருக்கிறது. அபாயகரமான, அவலமான நிலை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறதென்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கடந்த 10 ஆண்டுகளாக இருந்துவரும் கடன்களை, பெரிய விவசாயிகள் சிறிய விவசாயிகள் கடன்களை ரத்துசெய்ய வேண்டுமென்று நாம் நடத்திய இயக்கத்தின் காரணமாக சென்ற காலத்தில் அரசு ஓர் ஆணை பிறப்பித்தது. அதன் மூலம் 61 கோடியே 48 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. 26—9—1986-ல் அரசு ஆணை எண். 660-ல் அரசு ஓர் உத்தரவு வழங்கியது. 30—6—1986-க்குள் கடனில் பாதியை வழங்கினால் முழு வட்டி தள்ளுபடி செய்வதென்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஒரு பகுதியைக் கட்டினார்கள். மறு பகுதி கட்ட முடியாமல் இருக்கிறது. கடும் வறட்சி 10 ஆண்டுகளாக இருப்பதால், விவசாயிகள் கட்ட முடியாத நிலை இருக்கிறது. அந்தக் கடன்கள் மேலும் கூடி, இன்றையதினம் கட்ட முடியாத நிலையில், விவசாயிகள் இன்றைக்கு மிகவும் நிர்பந்தமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். 1—7—1966 முதல் 30—6—1987

வரை கட்டிய தொகை ரூ. 346.29 கோடி. அதிலே தள்ளுபடி முந்தைய அரசு செய்தது 61.89 கோடி ரூபாய். தற்சமயம் இன்றைக்கு பொறுப்பேற்றுள்ள அரசாங்கம் 39 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி என்று அறிவித்திருக்கிறது. இன்றைக்கு இருக்கும் கடன் 290.70 கோடி ரூபாய்.

இதை, வரும் ஜூன் மாதம் கட்டவில்லை என்று சொன்னால், பழைய நிலைகள்—அதாவது ஜப்தி, நிபந்தனைகள் போன்றவை எல்லாம் ஏற்படுகிற அபாயமான நிலை விவசாயிகளைத் தொடர இருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, அரசு சிறு விவசாயிகளின் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். மற்றும் பெருவிவசாயிகளாக இருக்கக்கூடிய வர்களுடைய கடனை—அதாவது அவர்கள் ஏற்கெனவே கட்டிய தவணைத் தொகை போக மீதி இருக்கிற தவணைத் தொகையை 1990ஆம் ஆண்டு வரை கட்டுவதற்கு காலத்தை நீடித்துத் தர வேண்டும். அப்படி நீடித்து வசூலிப்பதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், விவசாயிகள் இன்றைக்கிருக்கும் அரசாங்கத்தை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் கொண். டிருக்கிறார்கள். ''கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்'' என்கிற முறையில், தமிழகத்தில் இருக்கிற தி.மு.க. அரசாங்கம் நமக்கு ஒரு பாதுகாப்பு அளிக்காதா என்ற பரிவோடு-ஏக்கத்தோடு அனைத்து விவசாயிகளுமே எதிர்பார்க்கிற நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடனைத் தள்ளு படி செய்து, பெருவிவசாயிகள், கடனை 1990 ஆம் ஆண்டுவரை ஒத்தி வைத்தும் உத்தரவிட வேண்டுமென்று இந்த மன்றத்தின் சார்பாக நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, தமிழகத்தில் கூட்டுறவுத் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். காரணம் இன்றைக்கு கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் சின்னா பின்னப் படுத்தப்பட்டு அங்கே இருக்கிற அதிகாரிகள் தான் எடுத்தமூப்பாக அவர்கள் வைத்ததுதான் சட்டம் என்பதைப் போல், கூட்டுறவு அமைப்புகளையெல்லாம் தங்கள் இஷ்டம்போல்—சூதாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையைத் தடுத்து நிறுத்திட விரைவில் கூட்டுறவுத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமக் கூட்டுறவு ஸ்டோர்களைப் பற்றியும், கிராம கூட்டுறவு அங்காடிகளைக் குறித்தும் ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். இன்றைக்குத் தமிழகத்தில் மொத்தம் சுமார் 21,134 கூட்டுறவு ஸ்டோர்கள் இருக்கின்றன. இந்த 21,134 கூட்டுறவு கடைகளில் கிராமப் பகுதியில் இருப்பவைகளின் எண்ணிக்கை 17,382—நகரங்களில் இருப்பவை 3,752. ஒட்டுமொத்தமாக உள்ள கார்டுதாரர்களின் எண்ணிக்கை 1,29,00,000 என்று அரசு கணக்கு சொல்லுகிறது. கிராமங்களில் இருக்கிற பண்டக

சாலைகளில் விநியோகம் என்பது ஒரு தரமான நிலையில் இல்லாமல் இருப்பதாக அரசே ஒப்புக் கொண்டிருக்கிறது. பொருள்களில் கலப்படம் செய்தல், எடை குறைவு போன்ற தவறுகளைச் செய்ததற்காக பல கேஸ்களைப் போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அவைகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தும் வகையில் அரசே முழு கொள் முதலையும், முழு விநியோகத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் மற்றும் சாதாரண மக்கள் அன்றாடம் பயன் படுத்தும் நுகர் பொருள்கள் அனைத்தையும் நேரடியாக அரசே கொள்முதல் செய்து, சரியான விலையை நிர்ணயம் செய்து அவற்றை விநியோகம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள் கிறேன்.

மேலும் கிராமப் பகுதியில் மண்ணெண்ணெய் விநியோகம் சரியாக இல்லை. தற்போது மண்ணெண்ணெய் விநியோகம் தனியார் மூலமும் கூட்டுறவு மூலமும் செய்யப்படுகிறது. கிராமத்தில் இருக்கிற மக்களுக்கு 3 லிட்டரும், நகரத்தில் இருப்பவர்களுக்கு 10 லிட்டரும், பஞ்சாயத்துகளில் இருப்பவர்களுக்கு 5 லிட்டரும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. அதை மாற்றி, கிராமத்தில் இருப்பவர்களுக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெயும், பஞ்சாயத்தில் இருப்பவர்களுக்கு 10 லிட்டரும் நேரடியாக கூட்டுறவு அமைப்புகள் மூலமாகவே விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய நிலையில் மண்ணெண்ணெய் என்பது கிராமப் பகுதி மக்களுக்கு நேரடியாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள் கிறேன். மேலும், கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் தொழிலாளர்களும் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் பணியாற்றும் தொழிலாளர்களும் இன்றைக்கு பல இலட்சம் இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பாதுகாப்பற்ற நிலையில் பல்வேறு தரமான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். சென்ட்ரல் பேங்க் தொழிலாளர்கள் அவற்றின் ஊழியர்கள் நலன் ஒரு மாதிரியாகவும் கூட்டுறவு வங்கிகளின் பணியாற்றும் ஊழியர்கள் நலன் வேறு மாதிரியாகவும், கிராமக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகிற ஊழியர்கள் நலன் ஒரு மாதிரியாகவும், கூட்டுறவு பண்டக சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலன் ஒரு மாதிரியாகவும் இருக்கிறது. இப்படி பாகுபாடு படுத்தப் பட்ட நிலையில் அவர்கள் இருந்து வருகிறார்கள். கேட்டால் ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். அதாவது வருமானத்தின் அடிப்படையில்தான் அந்த ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக் கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதை மாற்றி எல்லோரையும் சமமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் கூட்டுறவுத் துறை அரசின் கண்ட்ரோலில் இருக்கிறது. எனவே அனைத்துத் தொழிலாளர்களையும் பாதுகாக்கிற நிலையில் குறைந்த பட்சம் கடைநிலை ஊழியர் சம்பளத்தையாவது ஒரே அளவில் நிர்ணயம் செய்ய வேண்டும். இன்றைக்கு

அவலமான நிலையில் 150 ரூபாய், 100 ரூபாய் என்று எல்லாம் வழங்கப்படுவதை மாற்ற வேண்டும். குறைந்த பட்சம் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதேமாதிரி அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு உரிய சலுகைகள் அனைத்தும் கொடுக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

(முற்பகல் 11-40)

அடுத்தபடியாக, இன்றைக்கு பல்வேறு அரசின் சலுகைகள் அவர்களுக்குக் கிடைப்பது இல்லை. அவர்களுக்கு அந்த சலுகைகள் கிடைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யவேண்டும். குறைந்த பட்சம் அவர்களுடைய இன்றியமையா தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்காவது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இன்றைக்கு அந்த ஊழியர்களுக்கு பல்வேறு பாதுகாப்புகள் இருக்கின்றன. ஆனால் அங்கு இருக்கிற அதிகாரிகள் குறிப்பாக தங்களுடைய நலனை ஊழியர்கள் காப்பதில்லை என்று சொன்னால், தான் சொல்வதை கேட்கவில்லை என்று சொன்னால், அவர்களை சஸ்பெண்ட் செய்து, அதன் மூலம் லஞ்சம் வாங்கும் அதிகாரிகள் பல பேர் இருக்கிறார்கள். அப்படி பலரை நான் சொல்லமுடியும். அதே நேரத்தில் இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயம் செய்தும், அவர்கள் இறந்தால் மற்றவர்களுக்கு கொடுப்பது போன்று 20 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கும் கிடைக்க அரசு உத்திரவாதம் கொடுக்க வேண்டும். கோவாபரேடிவ் துறையில் பணியாற்றும் அனைத்து தொழிலாளர்களுக்கும் பொருந்தும் என்ற நிலையில் அறிவிக்க வேண்டும்.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள், ஏற்கெனவே இருந்த கூட்டுறவு சங்கங்களில் அவர்கள் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களை உயர்த்தினார்கள்; பஞ்சப்படியும், சம்பளமும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று உயர்த்தினார்கள். அந்த சம்பளத்தை, சென்ற அரசாங்கம் கூட்டுறவுகளை கலைத்த பிறகு, 'அவர்களுடைய சம்பளத்தையும் கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார்கள். அது தவறு என்றும், ஒப்பந்தத்தை மீறக் கூடாது என்ற நிலையிலும் அதன் பேரில் லேபர் கோர்ட்டுக்கு சென்ற பிறகு, லேபர் கோர்ட் தனது தீர்ப்பை அளித்தும் இன்று வரை அந்த சம்பளத்தை கொடுக்க முடியாது என்று கூட்டுறவு நிர்வாகம் பிடிவாதம் செய்து கொண்டிருக்கிறது. ஒப்பந்தம் செய்யப்பட்டு கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருந்த அந்த சம்பளத்தை, கோர்ட் சொல்லியும் கொடுக்க மறுக்கிறார்கள்.

மற்றொன்று கூட்டுறவு நிர்வாகம் பற்றி. இங்கு இருக்கும் கோவாபரேடிவ் பாங்குகளில் ஒப்பந்தம் செய்யப்பட்டால் அந்த நிர்வாகமும், தொழிற் சங்கமும், சேர்ந்து ஒப்பந்தம் செய்யப்பட்டால், அந்த ஒப்பந்தத்தை அமல்படுத்துவது கிடையாது. அதை அமல்படுத்துவதற்கு கோவாபரேடிவ் செக்ரட்டரி

1989 ஏப்ரல் 25] [திரு. எம். சீரங்கன்]

அவர்கள் அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். நீண்ட நாட்களாக காலம் கடத்துகிறார்கள். அப்படிப்பட்ட ஒப்பந்தமும் அமல் படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இதையெல்லாம் வருங்காலத்தில் தவிர்க்க வேண்டுமென்று நான் இன்றைய அர சாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு பெரிய விவகாரம் என்னவென்று சொன் னால் நம்முடைய உணவு கார்ப்பரேஷன் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் இடங்களில் நாம் அனைவரும் அறிந்து இருப்பது தான், பல்வேறு புகார்கள் அதுபற்றி வந்து இருக்குமென்று நினைக்கி றேன், இரயில்வே டிரான்ஸ்போர்ட், கோடவுன்களில் இருக்கும் விவகாரங்கள். இங்கு திடீரென்று இடைத் தரகர்களாக இருந்து காண்ட்ராக்ட் எடுப்பவர்கள் எப்படி தமிழகத்தில் உணவுப் பண் டங்களைச் சுரண்டுகிறார்கள் ; சொத்துக்களை களவாடுகிறார்கள் என்பது பட்டவர்த்தனமாக அனைவருக்கும் தெரியும். இன் றைக்கு குறிப்பாக ஆயிரம் டன் இறக்குமதி செய்கிறார்கள் என்று சொன்னால், அதில் 50 டன், 100 டன் வேஸ்டேஜ் என்று கணக்கு எழுதி, வெறும் சாக்குப் பைகளைக் கணக்குப் போடும் பல்வேறு காண்ட்ராக்டர்களும் இருக்கிறார்கள். அதை காண்ட்ராக்டர்கள் மட்டும் செய்வது கிடையாது. அந்த காண்ட்ராக்ட்டுக்கு உடந்தையாக காவல் துறையினரும் சேர்ந்து செய்கிறார்கள். அப்படிப்பட்ட மோசடி என்பது தமிழகத்தில் அதிகமாக வளர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் அவையில் ஒரு உறுப்பினர் சொன் னார்கள், விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லை எலிகளும், முயல்களும், பெருக்கான்களும் அழித்துவிடுகிறது என்றும், பருத்தி களையும் பெருக்கான்கள் தின்பதாகவும் சொன்னார்கள். ஆனால் இங்கு இருக்கிற பெருக்கான்கள் நெல் மூட்டைகளை ஊசி போட்டு நெல்லை எடுத்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நபர்களைக் கண்டுகொண்டு, நேற்று முதல்வர் அவர்கள் சொன்னது போல, தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது எப்படி என்று சொன்னார்களோ, அதுபோல, அந்த தவறை செய்பவர்களை குற்றவாளிகளை பயங்கரமாக விசாரணை செய்து, அவர்களுக்கு கடுமையான தண்டனை அளித்தால்தான் அந்த நபர்களைத் தடுத்து நிறுத்த முடியும் ; அந்த ஊழலிலிருந்து பாதுகாத்தால் தான் ஒழுங்கான நிலையில் இருக்கும்.

இன்னொரு பணிவான வேண்டுகோள். இன்றைக்கு கோவா பரேடிவ் மூலம் நாம் விநியோகம் செய்யும் அரிசி களவாடப்பட்ட பிறகு அதில் பல ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. அரிசிகளை சுத்தப்படுத்தாமல் , ஒரு வேக்காடு போட்டு, ஊற வைத்து அதை ஒரே முறையில், எடை வேண்டும் என்பதற்காக, அதில் தவிட்டை மட்டும் நீக்கி அரிசி-நெல்லை நீக்காமல் அனுப்பி விடுகிறார்கள். அதன் விளைவாக தப்பாக இருப்பதும், நாற்ற மடிப்பதும், நல்ல தண்ணீர் போடாமல் தொடர்ந்து அந்தக் கழிவு நீரைப் போடுவதன் காரணமாக நாற்றம் அடிக்கிறது. அதைக் கவனித்து அரசு, அப்படிப்பட்ட நிலைமைகளை நீக்கி,

சுத்தப்படுத்தி, சுத்தமான அரிசியை நாற்றமில்லாமல் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுப் பணியாளர்களுக்காக வீடுகள் 83,18,000 ரூபாயில் கட்டிக் கொடுத்திருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எங்கே கட்டியிருக்கின்றார்கள், எத்தனை வீடுகள் என்பதை அமைச்சரவர்கள் அறிவித்தால் உதவியாக இருக்குமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மார்க்கெட்டிங் சொஸைட்டி என்று பல மாவட்டங்களில், சென்டர்களில் பொதுவாகப் பல்வேறு கொள்முதல் செய்யப்படுகிறது. இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் மூலம். ஆனால் வெளியே தரத்தை நிர்ணயம் செய்வது மார்க்கெட்டிங் சொஸைட்டியில் இருக்கும்படியான சர்க்கார் அதிகாரிகள் அல்ல ; நீங்களெல்லாம் இங்கே உள்ள பல்வேறு நண்பர்கள், உறுப்பினர்களெல்லாம் விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் என்று தெரியும். ஆனால் அங்கே நிர்ணயம் பண்ணும்படியானவர்கள் ஒரு சில வியாபாரிகள். பருத்தி என்று சொன்னால், பருத்தி சம்பந்தப்பட்ட புரோக்கர்கள் வருகிறார்கள். அவர்கள் நிர்ணயம் செய்வதுதான் அந்த விலையாக மாறுகிறது. அதேபோன்று கடலை விலை அங்கிருக்கும்படியான முதலாளிகள் நிர்ணயம் செய்வதுதான் விலையாக மாறுகிறது. இப்படி பல்வேறு பொருட்கள் தோலிலேயிருந்து, மஞ்சளிலேயிருந்து, வெங்காயத்திலேயிருந்து அந்த மார்க்கெட்டிங் சொஸைட்டிக்கு வரும்படியான அனைத்துப் பொருட்களையும் நாம் கூட்டுறவு மார்கெட்டிங் சொஸைட்டி என்று சொல்லுகிறோமே தவிர, அதைப் பயன்படுத்துவது என்பது, இன்றைக்கு விலை நிர்ணயம் செய்வது என்பது நம்முடைய கன்ட்ரோலில் கிடையாது; அரசு கூட்டுறவுத் துறையின் கன்ட்ரோலில் கிடையாது. தனியார் நிர்ணயம் செய்கிறார்கள். அது அறவே மாற்றப்பட வேண்டும். அப்படி மாற்றப்பட்டால்தான் விவசாயிகளுக்குக் குறித்த காலத்தில் சரியான விலை கிடைக்கும். அப்படிப்பட்ட விலை கிடைப்பதற்கு அரசு உத்தரவாதம் கொடுக்க வேண்டும். இத்தகைய நிலையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்றுமதி, இறக்குமதி தொழிலாளர்கள் இன்றைக்கு வஞ்சிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு டன்னுக்கு ஐந்து ரூபாய் என்று சொன்னால், ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய், இரண்டு ரூபாய் என்று கொடுத்து, இடைத் தரகர்கள் சம்பாதிக்கிறார்கள். இன்னொன்றுகூட இன்றைக்கு நாகரிகமாக, கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம் என்று பதிவு செய்து கொண்டு, அதன் மூலமாகக் கான்ட்ராக்டை அவர்கள் எடுத்துக் கொண்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு ஊதியம் கிடைக்காமல், அப்படிப்பட்ட இடைத் தரகர்கள் அந்த தொழிலாளிகளை வஞ்சித்துக் கொண்

1989 ஏப்ரல் 25] [திரு. எம். சீரங்கன்]

டிருக்கிறார்கள், திருச்சி, கோவை, சேலம், மதுரை போன்ற அந்த இடங்களில். அதை அரசு கவனித்து, அந்தத் தொழிலாளர்களுக்கு டன்னுக்கு இவ்வளவுதான் என்று கூலியை நிர்ணயம் செய்து அது முறையாக அந்தத் தொழிலாளர்களுக்குச் சேரும்படியான நிலையை உருவாக்குவதற்கும், அங்கேயிருக்கும படியான இடைத் தரகர்களை மாற்றுவதற்கும், கான்ட்ராக்ட் முறையை அறவே ரத்து செய்து நேரடியாக அரசாங்கத்தினுடைய கன்ட்ரோலின் கீழே இந்த ஏற்றுமதி இறக்குமதி கொள்கையை வைக்க வேண்டும். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதோடு மட்டுமல்லாமல், சம்பளத்திற்கும் உத்தரவாதம் செய்ய முடியும். அதே நேரத்திலே இப்படிப்பட்ட தரகர்களுக்குப் போகாமல் பாதுகாக்கவும் வேண்டும். இந்த அடிப்படையில் இந்த அரசாங்கம் இந்த கூட்டுறவுத் துறையில் அதிகக் கவனம் செலுத்துமேயானால் தமிழ்நாட்டில் பல நலன்களை அடைய முடியும். அந்த எண்ணத்தோடு இது செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் நடத்தும்பொழுது, அது குறித்து என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்று சொன்னால், விவசாயிகள் கடன் கட்டவில்லை என்று, தவால் என்று சொல்லி அவர்களுக்கு ஓட்டுரிமையை மறுக்கக் கூடாது. இன்றைக்கு இருக்கும்படியான அறுபது இலட்சம் விவசாயிகளில், அங்கத்தினர்களாக இருக்கும் படியானவர்களில் பல பேர் இன்றைக்குக் கடனாளிகளாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஓட்டுரிமை என்பதை அதற்காக மறுக்கக் கூடாது. அனைவருக்கும் ஓட்டுரிமை கொடுக்கப்பட்டு, கூட்டுறவுத் தேர்தலை விரைவில் நடத்தி, சரியானதொரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எம். தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, என்னை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக அறிவித்து, சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய என்னுடைய தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, என்னை கடுமையான போட்டிக்கிடையிலே வெற்றி பெறச் செய்து முசிறி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக்கிய வாக்காளர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையிலே கலந்து கொண்டு பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவரவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று தமிழகத்தில் கடுமையான அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே கடந்த ஒரு வாரத்திற்கு முன்னதாக அரசாங்கத்தால் கூட்டுறவுச் சிறப்பு விற்பனை

அங்காடியில் ஐந்து கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. ஆனால், அந்தந்தக் கூட்டுறவு நியாய விலைக் கடைகளிலே அரசாங்கத்தின் சார்பில் வழங்க, அரசாங்கத்தின் நிகழ்ச்சிகளாக இல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடிகளையும், தோரணங்களையும், கட்டிக் கொண்டு, அங்கிருக்கின்ற ஊராட்சி மன்றத் தலைவரோ, ஒன்றியப் பெருந் தலைவரோ வழங்கவில்லை.

(முற்பகல் 11-50)

சட்ட மன்ற உறுப்பினர்களும் வழங்காமல், சில இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றியச் செயலாளர்களும், மாவட்ட செயலாளர்களும் தான் வழங்கினார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் சமயபுரம் பேரூராட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளராக இருக்கிற செல்வராஜ் அவர்கள் தான் அரிசியை வழங்கினார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கே தி.மு.க. கொடிகளை கட்டி, நகரச் செயலாளர் தலைமை போட்டு, மாவட்டச் செயலாளர் அரிசி வழங்குகிறார்கள் என்றால் அது அரசாங்க விழாவா, அல்லது கட்சி விழாவா என்று கேட்க விரும்புகிறேன்.

நடந்து முடிந்த மருங்காபுரி இடைத் தேர்தலுக்கு முன்னதாக எனது தொகுதியில் நடந்த சம்பவம் பற்றி தெரிவிக்க விரும்புகிறேன். தமிழகத்தில் நெற்களஞ்சியமாக இருக்கிற தஞ்சையைப் போல அரிசி ஆலைகள் அதிகமாக உள்ள பகுதி மண்ணச்சநல்லூர் பேரூராட்சியாகும். இந்த ஊரில் முறையாக லெவி கொடுத்துவிட்டு அரிசி வைத்திருந்து அரிசி ஆலை அதிபர்களிடமிருந்து உணவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், பேலீஸ் துறை அதிகாரிகளும், ஒரு அரிசி ஆலை அதிபர் தவறு செய்தார் என்ற காரணத்தால், தவறு செய்யாமல் இருந்த, முறையாக அரிசி வைத்திருந்த, அதிபர்களிடமும் 'ஸ்குவாட்' போட்டு, அவர்களுக்கு தகவல் தராமல், திடீரென்று அவர்கள் ரைஸ் மில்களை சோதனை செய்து, இருக்கிற அரிசி, நெல் ஆகியவற்றை பறிமுதல் செய்து விட்டார்கள். முறை தவறி வைத்திருந்தவர்களிடம் பறிமுதல் செய்தால் நாங்கள் கேட்க மாட்டோம். ஆனால் முறையாக வைத்திருந்த அரிசியையும் பறிமுதல் செய்து விட்டார்கள். அதற்கு பின்னால் மருங்காபுரி இடைத் தேர்தலின் போது துவரங் குறிச்சியில் நடந்த ஒரு தி.மு.க. பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் பேசினார்கள். அப்போது அந்த அரிசி ஆலை அதிபர்கள் போராட்டமும், கண்டன ஊர்வலமும் நடத்தினார்கள். அதை அந்தத் தொகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்தான் தலைமையேற்று நடத்தினார் என்று தவறாக அந்தப் பொதுக் கூட்டத்தில் அறிவித்து இருந்தார்கள். நான் அன்று மாலையில் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து அந்தப் போராட்டங்களை அறிவித்திருந்த அரிசி ஆலை அதிபர்களை சமாதானம்

செய்து, போராட்டங்களைச் செய்ய வேண்டாம், மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து முறையாக பேசி நாம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று தான் கூறினேன். போராட்டம் வேண்டாம் என்று தான் கூறினேனே தவிர, அந்தப் போராட்டத்தை தலைமையேற்று நான் நடத்தவில்லை. ஆனால் தவறான தகவலை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் அன்றையதினம் பேசினார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர்— தலைமை)

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதியில் கோரைப் பாய் தயாரிக்கிற மில்கள் அதிகமாக தனியார்கள் வைத்து ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். முசிறிப் பகுதியில்கோரை மூலம் பாய் தயாரிக்கும் மில்களை அரசாங்கத்தின் மூலம், கூட்டுறவுத் துறை மூலம் நடத்தினால் அதிக அளவில் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டில் என்னுடைய தொகுதியின் அருகில் இருக்கும் தாத்தய்யங்கார்பேட்டையில் கைத்தறி வேஷ்டிகளை அதிகமாக தனியார்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் கூட்டுறவு முறையில் தயாரித்தால் அதிக தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். அந்த முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இப்போது முதன்முறையாகப் பேசுகிற காரணத்தால் என்னுடைய தொகுதியில் இருக்கிற சில குறைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) : கூட்டுறவுத் துறை மற்றும் உணவுத் துறை பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. எம். தங்கவேலு: என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. நொச்சியம் பகுதியிலிருந்து இருங்கோளூர் வரையில் குடி தண்ணீர் ராட்சத குழாய்கள் மூலம் கொண்டு செல்ல ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அது இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அந்த குடிதண்ணீர் திட்டத்தை நொச்சியம், வெங்கன்குடி, சமயபுரம் வழியாக இருகோளூர் செல்வதாக அமைத்து இருக்கிறார்கள். அந்த திட்டத்தை மாற்றி, நொச்சியத்திலிருந்து மண்ணச்சநல்லூர், வெங்கன்குடி, சமயபுரம், கள்ளிக்காட்டூர், அக்கரைப்பட்டி, தேவி மங்கலம், மேலாங்கவரம், கீழாங்கவரம், வழியாக இருங்கோளூர் சென்றால் மேலும் சில கிராமங்களுக்கு முசிறி தொகுதியில் தண்ணீர் பிரச்சினை தீரும்.

முசிறித் தொகுதியைப் பொறுத்த வரையில், எந்தத் தொழிற்சாலையும் அங்கே நிரந்தரமாக இல்லை. எனவே அங்கே பாய் பின்னும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுறவுத் துறை மூலமாக கண்டிப்பாகக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொளகிறேன்.

முசிறித் தொகுதியில் முசிறி பேரூராட்சிக்கு உட்பட்ட பஸ் நிலையம் ஒன்று இருக்கிறது. அந்த பஸ் நிலையத்திற்குள்ளே கடைகளை அதிமாகக் கட்டிவிட்ட காரணத்தினால், பஸ்கள், பஸ் நிலையத்திற்கு உள்ளே நுழைய முடியாமல் இருந்து கொண்டு இருக்கிறது. எனவே முசிறி நகரத்திற்கு உட்பட்ட அந்த பஸ் ஸ்டாண்டை முசிறியின் வட பகுதிக்கு மாற்றி, முசிறி பேரூராட்சி மிக அதிக அளவில் வளர்ச்சி அடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் முசிறியிலே பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. சி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, முதலில் இந்த அவையில் பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தமிழின தலைவர் கலைஞர் அவர்களுக்கும், திருப்பரங்குன்றம், தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழக அரசு பதவியேற்று மூன்று மாதங்களே ஆனாலும் முழு நிறைவு தரும் அளவுக்கு மக்களின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவு செய்து கொண்டிருக்கின்றது இந்த அரசு. இந்த அவையில் கவர்னர் உரை சமர்ப்பித்த போது, அதன் மீது நடந்த விவாதத்தில், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இந்த உரையில் வெறும் புள்ளிகளும் கோடுகளும் காணப்படுகிறது என்றார். அதற்கு முதல்வர் அவர்கள் பதில் கூறுகையில் புள்ளிகளை கோடுகளையுமே வைத்தே அழகான கோலங்களை உருவாக்கலாம் என்றார். இன்றைக்கு அழகான கோலங்கள் போடுவதற்கான கோலப் பொருட்களை நிதி ஆதாரங்கள் பற்றாக்குறையாக உள்ள இந்த நேரத்தில் அழகான கோலங்களை உருவாக்கி, ஆம், எழுச்சிக் கோலங்களை உருவாக்கி, மக்களை மகிழ்ச்சி செய்து விட்டார்.

இப்படிப்பட்ட அழகான எழுச்சிக் கோலங்களைஉருவாக்கிய இந்த அரசை திசை திருப்ப, பல அலங்கோலங்களை உருவாக்கியவர்களையும் கடந்து இந்த அரசு மக்கள் மத்தியில் இன்றைக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது. அப்படி

மக்கள் மத்தியில் அசைக்க முடியாதநம்பிக்கையைப் பெற்றிருப்பதற்குக் காரணம், இந்த அரசிற்கும் நாட்டின் கடைக் கோடியில் இருக்கும் பாமர மக்களுக்கும் நெருங்கிய கூட்டுறவு ஏற்படுத்தி வருவதால்தான் கூட்டுறவு என்பது சாதிமதப் பேதங்களை தகர்த்து எறியவும், சமதர்மப் பொருளாதார மறுமலர்ச்சியை உருவாக்கவும், மனிதனின் அடிப்படை மூலவளங்களை உற்பத்தி செய்யும் ஒரு அஸ்திவார அமைப்பாகவும் உருவாக்கப்பட்டதே கூட்டுறவு. ஆனால் சமுதாயத்தில் உள்ள சில விஷமக் கிருமிகளால், கூட்டுறவின் புனித நோக்கங்களே பாழ்பட்டு, அரசின் திட்டங்கள் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு சென்று அடையாமல் போய் விடுகின்றன. அப்படிப் பட்டவர்கள் மீது இந்த அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் பல சலுகைகள் அளிக்கப் பட்டு இருந்தாலும் அவைகள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஆதிக்கம் படைத்தவர்களுக்கே சென்று அடைந்து விடுகின்றன. உதாரணமாக கடன் வழங்கும் திட்டங்களில் ஏழை விவசாயிகள் பெரும்பாலும் கடன் பெற முடியவில்லை. ஆனால் அப் பகுதியில் உள்ள பெரும் விவசாயிகள் அரசு அளிக்கும் அனைத்துக் கடன் சலுகைகளையும், ஏதாவது ஒரு வழிமுறையைப் பின்பற்றி வாங்கி விடுகிறார்கள். இதனால் ஏழை விவசாயிகள் பண உதவி இல்லாமல் பயிர் சாகுபடி செய்ய முடியாமல், இருக்கும் நிலத்தை விற்று வறுமைக்குள் தள்ளப்படுகிறான். இந்தக் குறைபாடுகளை இந்தஅரசு களைந்து ஏழைவிவசாயிகளின் கைக்கு அரசின் கடன் உதவி செல்ல வழிவகை செய்ய வேண்டும்.

மேலும் அரசு விவசாயிகளுக்கு கொடுக்கும் உதவிகள் உரிய நேரத்தில் வழங்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். அது போல, படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு என்ற திட்டங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதில் உள்ள குறைபாடுகள் என்னவென்றால், இந்த சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கடன் பெறச் செல்லும்போது, அதிகாரிகள் படித்தவர்களிடத்தில் தங்களுக்கு முன் அனுபவம் எந்தத் தொழிலில் இருக்கின்றது என்று கேட்கிறார்கள். அவர் இல்லை என்கிறார். உடனே அதிகாரி உனக்குக் கடன் இல்லை என்கிறார். இரண்டாவது, ஒருவரிடத்தில் உனக்கு முன் அனுபவம் இருக்கிறதா, என்கிறார். ஆம் இருக்கிறது என்கிறார். பிறகு என்ன படித்திருக்கிறாய் என்கிறார். நான் 7-ஆம் வகுப்புதான் படித்து இருக்கிறேன் என்கிறார். அப்படியானால் உனக்குக் கடன் இல்லை என்கிறார். இதிலே படித்தவரும் கடன் வாங்க முடியவில்லை. படிக்காத காரணத்தால் அனுபவம் உள்ளவரும் கடன் வாங்க முடியவில்லை. எனவே இதுபோன்ற குறைகளை நீக்கி, குறைந்த பட்சம் படித்து விட்டு கடன் கேட்டு வருபவர்கள் இடத்தில், தான் செய்ய விரும்பும் தொழிலுக்கே அரசே ஒரு குறிப்பிட்ட காலம் பயிற்சி கொடுத்தால், அரசின் திட்டத்

திற்கு பயனும், அரசின் பணத்திற்குப் பாதுகாப்பும் கடன் பெறுபவர் எதிர்காலம் நல்ல முறையில் அமைவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

அடுத்து கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் நடைபெறும் பொது விநியோகத் திட்டம். இந்தத் துறையில் அரசு 24 மணி நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும். இதில் ஒரு நிமிடம் தூங்கினால் கூட, இந்த அரசின் மீது பாமர மக்கள் நம்பிக்கையை இழக்கச் செய்து விடுவார்கள். சில விஷமிகளினால் அந்த அளவிற்கு பொது விநியோக முறையில் பெரும் தவறுகள் நடைபெறுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பான்மையான கூட்டுறவு பண்டக சாலைகள் தங்கள் கடைகளுக்குச் சேர வேண்டிய அரசின் ஒதுக்கீடுகளை பெற்றுக் கொண்டு, அவற்றை மக்களுக்கு விநியோகம் செய்யாமல், அதே நேரத்தில் விநியோகம் செய்ததாக வரவு வைத்து விட்டு, தெருக்களில் சந்துகளில் லாரியை நிறுத்தி, பத்துப் பத்து மூட்டைகளாக கைவண்டியில் ஏற்றி, மொத்தக் கொள்முதல் கடைக்கு அனுப்பி விடுகிறார்கள். அப்படிப்பட்ட கொள்ளைக் கும்பல் இன்று கொழுத்த பணக்காரர்களாக ஆகிவிட்டார்கள். அவர்களுக்கு சில அதிகாரிகளும் பல வகையில் அடிமையாகிவிட்டார்கள்.

மேலும் ஒவ்வொரு ரேஷன் கடை அருகில் 20 பேருக்குக் குறையாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். கிட்டே சென்று விசாரித்தால் ஒவ்வொருவரும் பத்து கார்டுகள், 15 கார்டுகள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எப்படி கிடைத்தது என்றால் பாதி போலி கார்டுகள். பாதி அடகு வாங்கிய கார்டுகள். எனவே இப்படிப்பட்டவர்களை அரசு தயவு தாட்சண்யமின்றி ஒழிக்கவில்லையென்றால் பிறகு அரசின் பயன் மக்களுக்கு கிட்டாது.

உதாரணமாக தமிழ்ப் புத்தாண்டில் தமிழக அரசு இலவச அரிசி 5 கிலோ வழங்கியது. ஒரே ரேஷன் கடைக்கு 550 கார்டுகள் அரசின் சலுகை பெற உள்ளது என்றால் அரிசி வழங்கிய முதல் நாளன்று 350 பேர்கள் தான் வந்தார்கள். மீதம் ஆட்கள் வரவில்லை. வரவில்லையென்றால் ஆட்கள் இல்லையென்று அர்த்தமில்லை. மீதம் உள்ள கார்டுகள் அனைத்தும் அப்பகுதியில் உள்ள கள்ள மார்க்கெட் கும்பலிடம் உள்ளது. அவர்களிடம் உள்ள போலி கார்டுகள், அடமானக் கார்டுகள், அன்றைக்கு அரிசி வாங்க வராமல், இலவச அரிசி வாங்கும் நாளை மக்களுக்காக அரசு நீடித்துக் கொள்வதைப் பயன்படுத்தி, இந்த போலிக் கார்டுக்காரர்கள் அரிசியை வாங்கி விற்பனை செய்து விட்டார்கள். ஆக அரிசி வாங்க அனுமதித்த 550 கார்டு

1989 ஏப்ரல் 25] [திரு. சி. ராமச்சந்திரன்]

கள் உள்ள கடையில் 350 குடும்பங்கள் தான் அரசின் இலவச அரிசி திட்டத்தில் பயன் பெற்றன. மீதம் 200 குடும்பங்களுக்கான சலுகைகளை அப்பகுதியில் உள்ள கள்ள மார்கெட் வியாபாரத்தைச் சேர்ந்த 4 குடும்பங்கள்தான் பயன் பெற்றன.

இப்படி தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்தால், அரசின் சலுகைகள் பாதிகூட ஏழை மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. எனவே இப்படிப்பட்ட பொது விநியோக முறையில் ஒழுங்கான நடவடிக்கை எடுக்க 24 மணி நேரமும் விழிப்புடன் இந்த அரசு இருக்க வேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): இன்னும் 10 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரை அளிக்க வேண்டும். எனவே கட்சித் தலைவர்கள் சுருக்கமாகப் பேசி தங்கள் கருத்துக்களை விளங்க வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மற்றும் பொது விநியோகத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாக சொல்ல வேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். முயற்சி செய்கிறேன்.

பொதுவாக உற்பத்தித் துறை எவ்வளவு முக்கியமானதோ, அதைவிட முக்கியமானது விநியோகத் துறை என்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். எவ்வளவுதான் உற்பத்தி செய்தாலும், விநியோகம் முறையாக நடைபெறாவிட்டால், நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைக்க மாட்டா என்பது நன்றாகத் தெரியும். அதனால்தான் இந்தத் துறையைப் பொறுத்த வரையில், மிக மிக செம்மையாக செயல்படக் கூடியவரும், விநியோகத்தை குறித்த நுணுக்கங்களை அறிந்த நல்ல சுறுசுறுப்பானவரும், இந்தத் துறையை நிர்வகிக்க வேண்டுமென்பது மரபாக ஏற்றுக் கொண்டிருக்கிற ஒன்று. எனவே தான் இவைகள் எல்லாம் அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்தத் துறையை அவரிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். அவரும் இந்த நம்பிக்கையை வீண் போகச் செய்யாமல், பொறுப்பேற்ற உடனேயே—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்பியதில் தவறில்லை என்று எடுத்துக் காட்டும் வகையில்—பல்வேறு இடங்களுக்குச் சென்று எங்கெங்கு சந்து பொந்துகள் இருக்கின்றனவோ, அந்தச் சந்து பொந்துகளை எல்லாம் அடைத்து முறையாக மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கு என்னென்ன முறைகேடுகள் இருக்கின்றன, சீர்கேடுகள் இருக்கின்றன, அவை எங்கெங்கு,

இருக்கின்றன என்பதை எல்லாம் கண்டுபிடித்து, இன்றைக்கு இந்தத் துறையை செம்மைப்படுத்தியிருக்கிறார்கள். நான் பாராட்டுகிறேன்.

பொதுவாக இந்தத் துறையைப் பொறுத்த வரையில் இந்தக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற விவரங்களைப் பார்க்கும்போது பொது வினியோகத்திற்காக மற்றும் சத்துணவு திட்டத்திற்காக 1.40 லட்சம் மெட்ரிக் டன் தேவைப்படுவதாக இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே 1988 டிசம்பர் மாதம் 80 ஆயிரம் மெட்ரிக் டன் வழங்கியதோடு 1989 ஜனவரி மாதத்தில் 1.05 லட்சம் மெட்ரிக் டன் வழங்கியிருப்பதாக இதில் கூறப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் டிசம்பர் மாதத்தில் 80 ஆயிரம் மெட்ரிக் டன் வழங்கப்பட்டிருக்கிறது. ஜனவரி மாதத்தில் 1 லட்சத்து 5 ஆயிரம் மெட்ரிக் டன் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு 40 ஆயிரம் மெட்ரிக் டன்னாக அது குறைந்திருக்கிறது என்ற குறிப்பை இதிலே நாம் பார்க்கிறோம்.

மத்திய அரசாங்கம் இதற்கு எந்த அளவு கோலை பயன் படுத்தி இருக்கிறது என்பது நமக்குத் தெரியவில்லை. ஜனவரி மாதத்தில் 1 லட்சத்து 5 ஆயிரம் மெட்ரிக் டன்னை வழங்கியிருக்கிற மத்திய அரசு அதனை பிப்ரவரி மார்ச் மாதங்களிலே திடீரென்று அடுத்த மாதமே 40 ஆயிரம் டன்னாக குறைந்திருக்கிறதே என்ன காரணம்? ஒரு வேளை தமிழகத்தில் அபரிமிதமாக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறதா? நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். இல்லாவிட்டால் ஜனவரி மாதத்தில் 1 லட்சத்து 5 ஆயிரம் மெட்ரிக் டன் கொடுத்த மத்திய அரசு திடீர் என்று 40 ஆயிரமாக அதைக் குறைக்கிறது என்று சொன்னால், மத்திய அரசு நாட்டிலே இருக்கிற யதார்த்த நிலைகளைக் கருத்தில் கொண்டு மக்களுடைய தேவைகளையும் ஒரு மாநிலத்தினுடைய தேவைகளையும் கருதி புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஒதுக்கீடுகளை நிர்ணயம் செய்கிறார்களா, அரசியல் காரணங்களுக்காக நிர்ணயம் செய்கிறதா என்பதை நாம் புரிந்துக் கொள்ள உரிமை உடையவர்களாக இருக்கிறோம். இதிலிருந்து நன்றாகத் தெரிகிறது. ஜனவரி மாதத்திலே ஏதோ எதிர் பார்ப்பு இருந்தது, மத்திய அரசாங்கத்திற்கு. ஆனால் ஜனவரி மாதத்திற்கு பிறகு பெருத்த ஏமாற்றம் மத்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட காரணத்தால், நினைத்தது கிடைக்கவில்லை. எதிர் பார்த்ததை நாம் பெற முடியவில்லை என்ற ஆதங்கத்தின் காரணமாக அல்லது இப்போது நாம் அடைய வேண்டியதை அடைய வேண்டிய காலம் கடந்து விட்டது எனவே அதைக் குறைத்து விடலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்று சொன்னால் மத்திய அரசாங்கத்தினுடைய இந்தப் போக்கு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழக மக்கள் இதை

1989 ஏப்ரல், 25] [திரு. எம். அப்துல் லத்தீப்]

கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அவையின் வாயிலாக நாங்கள் விருப்பம் தெரிவித்தால், அது ஒரு அரசியல் காரணத்திற்காக சொல்லப்பட்டது அல்ல என்பதையும் மத்திய அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தலுக்காக 65 ஆயிரம் டன் மெட்ரிக் டன்னை ஜனவரி மாதத்திலே அதிகமாக வழங்குகிற மத்திய அரசாங்கம் உடனடியாக பிப்ரவரி மாதத்திலேயே அதை 40 ஆயிரமாகக் குறைக்கிறது என்று சொன்னால் அவர்கள் நினைத்தால் அவர்களுடைய லாபத்திற்காக, அரசாங்கத்தினுடைய சாதனங்களை அவர்கள் எப்படியும் பயன்படுத்திக் கொள்ளலாம், அது அரசியலிலே ஏற்புடையது என்று அவர்கள் வாதிடுவார்கள் என்று சொன்னால், குறிப்பாக மக்களுடைய அடிப்படை தேவையாக கருதப்படுகிற உணவுப் பொருள்களிலே அதுவும் தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய அரிசியிலே தான் தோன்றித்தனமாக அரசியலை அடிப்படையாக வைத்து செயல்படுகிற ஒரு போக்கு மத்திய அரசாங்கத்திடம் இருக்குமேயானால், நான் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, நீங்கள் ஒரு கட்சிக்கு சொந்தக்காரர்களா அல்லது இந்த நாட்டை ஆளக்கூடியவர்களா என்பதை விளக்கிச் சொல்லக் கூடிய கடமை உங்களுக்கு இருக்கிறது. கட்சியின் நலன் தான் கருத்தில் கொள்ள வேண்டுமென்று சொன்னால், ஆட்சியை விட்டு வெளியேறுங்கள். சமஷ்டி ஆட்சி முறை என்று சொல்வது பித்தலாட்டம் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். தமிழகத்திலே வாழ்கிற தமிழக மக்கள் உங்களுக்கு அரசியலிலே சாதகமாக இருந்தால், ஒரு விதமாக நடந்துக் கொள்வீர்கள் இல்லாவிட்டால் அவர்களை தண்டிப்பீர்கள் என்று சொன்னால் அந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்வதற்கு தமிழக மக்கள் தயாராக இல்லை. உங்களிடத்திலே பிச்சைக் கேட்பதற்கு தயாராக இல்லை. எவரெவர்கள் யார் யார் தங்களுடைய இறையாண்மையை நிலை நாட்டி தங்களுடைய மக்களுக்கு கொடுக்க வேண்டிய சாதனங்களை அவர்கள் தரக்கூடிய அளவுக்கு.......(குறுக்கீடு)

(பிற்பகல் 12.10)

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போது மத்திய சர்க்காரை மிகவும் வன்மையாக கண்டித்து பேசினார்கள். நமது தமிழகமானது அந்த சென்ரல் பூலுக்கு எந்தவிதமான அரிசியும் சப்ளை பண்ணாமல் இருந்தும் கூட நமக்கு 40,000 டன் அரிசியை நமது தமிழகத்துற்கு மத்திய சர்க்கார் அளித்திருக்கிறது. இன்னும் 40,000 டன் அரிசியைத் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆதலால் மத்திய சர்க்காரை நாம் குறை கூறுவதில் அர்த்தம் இல்லை என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப் : தலைவர் அவர்களே, வர வர மத்திய அரசாங்கம் மிகவும் பலஹீனமாக போய்க் கொண்டிருக்கிறது என்பதை இதிலிருந்து நான் தெரிந்துக்கொள்கிறேன் அவர்கள் சொல்லவே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதாக மேற்கொணடு 40,000 டன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இதற்கு மத்திய அரசாங்கம் பதில் கொடுக்கட்டும் அரசாங்கம் தொடர்பு இல்லாத—அதுதான் நான் சொல்கிறேன். கட்சியும் ஆட்சியும் இன்றைக்கு ஒன்று என்ற நிலை மத்திய அரசாங்கத்திலே நிலவுகிறது. எனவே தான், கட்சி ரீதியாக தான் இதற்கு பதில் சொல்லப்படுகிறதே தவிர அரசு ரீதியாக எங்கே பதில்? இதே பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தில் இருக்கக்கூடிய அமைச்சர்களிடத்திலேயிருந்து அவர்கள் பெற்றுத்தருவார்கள் என்று சொன்னால் தமிழக மக்கள் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் இங்கே இருக்கின்ற உறுப்பினர் தந்ததாக ஒரு தகவல்—தவறான தகவல்— மத்திய அரசாங்கம் தந்ததாக சொல்வது ஏற்புடையது அல்ல. எனவே நான் மிகவும் பொறுப்பு ஏற்றுக் கொண்டு சொல்கிறேன். மேலும் 40,000 டன் வழங்குவதாக மத்திய அரசாங்கம் சொல்லவில்லை. அப்படி சொல்லியிருந்தால் மத்திய அரசாங்கத்திலே இடம் பெற்றிருக்கிற....

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் மத்திய அரசாங்கம் அரிசி கொடுக்கவில்லை என்று வன்மையாக சொல்லிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் மத்திய அரசாங்கத்திலிருந்து அதிகப்படியான அரிசி வாங்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? அப்படி கொடுக்கவில்லை என்று சொன்னால் அதற்கு என்ன நடவடிக்கை இனிமேல் எடுக்கப்போகிறார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, பதில் கொடுப்பதற்கு அவர் கடமைப்பட்டவராக இருக்கிறார். தற்போது நான் பேசிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் மேற்கொண்டு 40,000 டன் கொடுப்பதாக மத்திய அரசு வாக்களித்திருக்கிறது என்று உறுதியாகவும், தெளிவாகவும் சொல்லியிருக்கிறார். ஆனால் நான் அதை மறுக்கிறேன். பொறுப்பு ஏற்றுக்கொண்டு மறுக்கிறேன். அவர் உறுப்பினர் என்ற முறையிலே மத்திய அரசாங்கத்தின் சார்பாக பேசினால் நான் உறுப்பினர் என்ற முறையிலே தமிழக மக்களுடைய சார்பாக சொல்கிறேன். மத்திய சர்க்கார் அப்படி வாக்குறுதி தரவில்லை. அதனால் தான் நான் இதை கண்டிக்கிறேன். இல்லாவிட்டால் கண்டிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே தான் நான் சொல்கிறேன். இப்போது

1989 ஏப்ரல், 25] [திரு. எம். அப்துல் லத்தீப்]

ஜனவரியிலே ஒரு லட்சத்து ஐந்தாயிரம் டன் கொடுத்த மத்திய அரசாங்கம் பிப்ரவரியிலே அதை 40,000 மாக குறைத்ததே —நீங்கள் விரும்பினால் அரசியல் லாபம் அடைவதற்காக எப்படியும் செய்யலாம் என்று சொன்னால் உங்களை தண்டிப்பதற்கு தமிழக மக்களுக்கு உரிமை உண்டு. உங்களோடு இருக்க மாட்டோம் என்று சொல்வதற்கு தமிழக மக்களுக்கு உரிமை உண்டு என்று வன்மையாக நான் மத்திய அரசாங்கத்தை கண்டிக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) :— I am a full-fledged. தலைவர்.

*திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஆளுநர் ஆட்சிக் காலத்தில் முழு காலத்திற்கும் 1 லட்சம் டன் தரப்படவில்லை. 40,000 டன், 45,000 டன் தான் தரப்பட்டது. கடைசி இரண்டு மாதங்கள் போதிய நெல் வரத்து இல்லாத காரணத்தினாலே 80,000 டன் தரப்பட்டது. அவைக்கு தவறான தகவல் தரக்கூடாது என்ற காரணத்தினாலே இதைச் சொல்கிறேன். இப்போதும் நம் மத்திய அரசாங்கத்திற்கு அந்த சென்ட்ரல் பூலுக்கு நாம் நெல் எதையும் கொடுப்பதில்லை. கொடுக்காமல் இருந்தும் கூட நமக்கு தொடர்ந்து அந்த பழைய 45,000 டன் அரிசி வந்துகொண்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய எஸ். ஆர். பி., அவர்கள் விளக்கங்களை சொல்லி இருக்கிறார்கள். ஆனால் விளக்கங்கள் எல்லாம் புள்ளிவிவரங்களை, புள்ளி விவரங்கள் உணர்த்துகின்ற உண்மைகளை மாற்றி விடமாட்டா. ஜனவரி மாதத்திலே ஒரு லட்சத்து ஐந்தாயிரம் டன் வழங்கப்பட்டது உண்மை. அதே நேரத்திலே அதற்கு முந்தி 80,000 டன் வழங்கப்பட்டது உண்மை. இந்த 80,000 டன் வழங்கப்பட்டதற்கும் ஜனவரி மாதத்தில் அது ஒரு லட்சத்து ஐந்தாயிரம் டன் உயர்த்தப்பட்டதற்கும் என்ன காரணம், எந்த அளவுகோல், என்ன அடிப்படை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதே நேரத்தில் திடீரென்று பாதி அளவிற்கு வீழ்ச்சி 40,000 டன்னாக அது குறைக்கப்படுகிறதே. ஒன்று தமிழகத்திலே அபரிமிதமான உற்பத்தி ஏற்பட்டிருக்க வேண்டும் அல்லது இங்கே இருக்கக்கூடிய மக்களிலே பாதி குறைந்துவிட்டு இருக்க வேண்டும். திடீரென்று ஏதாவது நடந்து குறைந்துவிட்டிருக்க வேண்டும். தேவைகள் இல்லாமல் போய் இருக்க வேண்டும். அரிசியை சாப்பிடுகின்ற மக்கள் குறைந்துவிட்டார்கள் என்ற புள்ளிவிவரங்கள் அடிப்படையிலே, கணக்கின் அடிப்படையிலே சொல்லியிருக்க வேண்டும். எதுவுமே நடக்காமல் ஜனவரியிலே ஒரு லட்சத்து ஐந்தாயிரம் டன், பிப்ரவரியிலே

40,000 டன் என்று சொன்னால் என்ன மாறுதல் ஏற்பட்டது என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அந்த முடிவு என்ன என்றால் எல்லோருக்கும்தெரிந்த ஒரு பகிரங்க ரகசியம் அரசியல் காரணம் இதில் விளையாடியிருக்கிறது. அரசியல் காரணங்களுக்காக மக்களுடைய வாழ்விலே விளையாடினால் அது இந்திய நாட்டினுடைய இறையாண்மைக்கும், இந்திய நாட்டினுடைய ஒற்றுமைக்கும், அதே நேரத்தில் மத்திய அரசாங்கம் ஒரு ஆட்சி நெறிமுறைப்படி நடைபெறுகிறது என்ற நல்ல பெயரை ஏற்படுத்த வில்லை. எனவே அதை வன்மை யாகக் கண்டிக்கிறேன் என்பதை நான் மீண்டும் தங்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, ரேஷன் கார்டுகளிலே பெருத்த தில்லுமுல்லு கள் நடந்து இருக்கின்றன என்பதை அவர்கள் சுட்டிக்காட்டி, ஏறக்குறைய 80,000 கார்டுகள், போலிக் கார்டுகளாக வழங்கப் பட்டிருந்த கார்டுகளை எல்லாம் மறுபடியும் ஜப்தி செய்திருக்கி றோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். போலிக் கார்டுகள் இருக்கின்றன. ஆனால், அதே நேரத்திலே போலிக் கார்டுகளை ஜப்தி செய்கிறோம் என்ற பெயரிலே உண்மையான போனஃபைடு கார்டு ஹோல்டர் களைக் கஷ்டத்திற்கு ஆளாக்குவது, அவர்களிடமிருந்து கார்டு களைப் பிடுங்கிக் கொள்வது ஏற்புடையதல்ல.

எனக்குத் தெரிந்த அளவிற்கு, சென்னை நகரத்தைப் குறித்து மட்டும் நான் சொல்கிறேன். வெளியிலே இருக்கிற விஷயங் களைப் பற்றி நான் தொடவில்லை. சென்னை நகரத்தில் உண்மையான கார்டுஹோல்டர்கள்— அவர்கள் ஒரு வேளை வீடு மாறியிருக்கக்கூடும் அல்லது அதிகாரிகள் வரும்போது உரியவர்கள் இல்லாமல் இருந்து இருக்கலாம். அந்த மாதிரியான காரணங்களை எல்லாம் சொல்லி, போகஸ் கார்டுகள் என்று பலரிடத்திலே இருக்கின்ற கார்டுகளைப் பறி முதல் செய்திருக்கிறார்கள், உண்மையான கார்டுஹோல்டர் களிடம். எனவே, இதைக் குறித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, யார், யாருக்கு—உண்மையான போனஃ பைடு கார்டுஹோல்டர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்குக் கார்டுகள் வழங்க அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவேண் டும் என்று நான் மிக அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, ஐந்து கிலோ அரிசி வழங்குவதைக் குறித்துக்கூட —சில பேர் என்ன செய்திருக்கிறார்கள் என்றால் உண்மைதான். தங்களுடைய வருமானத்தை அதிகமாக எழுதி வைத்துக் கொண்டார்கள். காரணம் என்னவென்றால், வருமானம் அதிகம் இருந்தால், சர்க்கரை அதிகமாகக் கிடைக்கும் என்று அதிகமாக எழுதி வைத்துக்கொண்டார்கள். சர்க்கரைக்காக அதிக

[திரு. எம். அப்துல் லத்தீப்]

வருமானத்தைக் காட்டி, எழுதி வைத்துக்கொண்டு இருக்கும் கார்டு ஹோல்டர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். இப்போது ஐந்து கிலோ அரிசி என்று வந்தபோது, என்னிடத்திலேயே பல பேர் வந்து முறையிட்டார்கள். எங்களுக்கு இவ்வளவுதான் வருமானம் என்றார், ஒருவர், ஒரு ரிக்‌ஷா ஓட்டி, தன்னுடைய கார்டிலே ரூ. 1,500 என்று எழுதி வைத்திருக்கிறார். மாத வருமானம். என்னய்யா இது என்று கேட்டேன். யாரோ சொன்னார்கள். சார், என்னவென்று தெரியாது, அவர்கள் என்ன எழுதினார்கள் என்றே எனக்குத் தெரியாது, எனக்குப் போய் இவ்வளவு வருமானம் என்று சொல்கிறார்களே என்று சொன்னார். நான் சொன்னேன். நான் எதுவும் செய்ய முடியாது, எழுதியதன் அடிப்படையில்தான் அதிகாரிகள் உணவு வழங்கமுடியுமே தவிர, வேறு வழியில்லை என்று சொல்லிவிட்டேன். அதைக்குறித்து மறுபடியும் ஏதாவது, அரசு உண்மையான ஒரு வகையிலே கணக்கெடுத்து, அதையெல்லாம் சீர்படுத்தி முறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இந்தத் துறையிலே இன்றைக்கு ஒரு வெளியீடு வந்திருக்கிறது. அது இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசின் சார்பாக, அதிலே கடைசிப் பாரா இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ''மாதம் ரூபாய் 300 வரை வருமானம் உள்ளவர்களுக்கு இப்போது ஒவ்வொரு மாதமும் நியாய விலைக் கடைகள் மூலம் வாங்கும் அரிசியில் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும்''.—ஒவ்வொரு மாதமும் என்று—ஏனென்றால், எவ்வளவு கவனக் குறைவு இருக்கிறது என்ற காரணத்தினாலே கார்டுகளிலே கூட இதே கவனக் குறைவு காட்டப்படுகிறது. அதற்காக இதைச் சொல்கிறேன். ஏதோ தெரிந்து செய்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. இங்கே காட்டப்படுகிற கவனக் குறைவு மக்களுக்கு வழங்கப்படுகிற கார்டுகளிலும் காட்டப்படுகிறதே என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தீபாவளிக்கு வழங்குகிறீர்கள். பொங்கலுக்கு வழங்குகிறீர்கள். ஆனால் நாங்கள் என்ன செய்தோம்? இவ்வளவு பெரிய பாகுபாடு அரசு எதற்கு காட்டுகிறது என்று எங்களுக்கு தெரியவில்லை. நீங்கள் தீபாவளியின்போதும், பொங்கலின் போதும் முஸ்லிம்களுக்கும் வழங்குகிறீர்கள். அப்போது வழங்குவதை முஸ்லிம்களுக்கும் சேர்த்து வழங்குகிறீர்கள். ஆனால் அப்போது வழங்குவதைவிட முஸ்லீம்கள் பண்டிகை எப்போது கொண்டாடுகிறார்களோ, அப்போது வழங்குங்கள். இப்போது வேண்டுமானால் முஸ்லீம்களுக்கு இல்லை என்று சொல்லி விடுங்

[திரு. எம். அப்துல் லத்தீப்]

கள். தமிழ்ப் புத்தாண்டு எல்லோருக்கும் பொதுவானது. எல்லோருக்கும் வழங்குங்கள். ஏற்றுக் கொள்கிறேன். அதேமாதிரி பொங்கல் எல்லோருக்கும் பொதுவானது, அதை ஏற்றுக் கொள்கிறேன். தீபாவளி, பெரும்பான்மை சமுதாயத்திற்கு வழங்குங்கள். கிறிஸ்துமஸிற்கு கிறிஸ்துவர்களுக்கு வழங்குங்கள். ரம்சானுக்கு முஸ்லீம்களுக்கு வழங்குங்கள்.

இதற்கு என்ன உங்களுக்குத் தவறு வந்துவிட்டது. எனவே தான் நான் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு பெருத்த குறையாக பேசுகிறார்கள் மக்கள். தீபாவளிக்கு வழங்கியிருக்கிறார்கள். ரம்சானுக்கு இல்லை என்று சொல்கிறீர்கள். கிறிஸ்துமஸிற்கு இல்லை என்று சொல்கிறீர்கள். இப்பேர்பட்ட குறிப்பை இந்தத் துறை ஏன் தயார் செய்தது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அது மட்டுமல்ல. ரம்சான் வந்தால், பள்ளிவாசல்களிலே கஞ்சி காய்ச்சப்படுகிறதே, அதற்கு கன்ட்ரோல் ரேட்டிலே குருணையும், அரிசியும் பல்லாண்டுகளாக கொடுக்கப்பட்டு வருகிறது. நான் கூட ரம்சானுக்கு முந்தியே முறையிட்டேன். ஆனால் தவறான தகவல் அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறார்கள் அந்தத் துறை அதிகாரிகள். இலவசமாகக் கேட்பதாக, இலவசமாகக் கொடுக்க வழியில்லை என்று. இலவசமாமாக நாங்கள் கேட்கவும் இல்லை. இலவசமாக எப்போதும் கொடுக்கவும் இல்லை.

(பிற்பகல் 12-20)

கண்ட்ரோல் ரேட்டில் குருணையையும், அரிசியையும் கொடுக்க வேண்டும் என்பதுதான், ரம்சான் மாதம் பாதி முடிந்துவிட்டது. பாதிக்கு மேல் ஆகிவிட்டது. இதுவரையில் நீங்கள் உத்தரவு போடவில்லை. இந்த அரசுக்கு கெட்டப்பெயர் வாங்கித்தர வேண்டும்; எங்களை போன்றவர்களை எல்லாம் சிக்கலில் மாட்டி வைக்கவேண்டும் என்று இந்தத் துறையில் யாரோ என்னமோ செய்கிறார்கள் என்ற சந்தேகம் எழுகிறது. எனவே, தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக்குறையை போக்க வேண்டும். அதே நேரத்தில் இப்போது வருகிற ரம்சான் மாதத்திலே அவர்களுக்கு கொடுக்கப்படுகிற சர்க்கரை, அதுவும் கொடுக்கப்படுவது வழக்கம். அது எந்த முறையில் இதுவரையில் நீங்கள் கொடுத்து வந்தீர்களோ அந்தமுறையில் சர்க்கரையை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டுறவுத்துறையைப் பற்றி ஒரே ஒரு வார்த்தையை நான் சொல்லிக்கொள்கிறேன். நேற்று பேசிய மாண்புமிகு நம்முடைய கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் கூட இந்த கூட்டுறவுத் துறையைப் பற்றி கூட்டுறவுத் துறையில், அவருடைய கைத்தறித் துறையில் நடக்கிற குற்றங்களை எல்லாம், முறைகேடுகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அது அங்கு மட்டும்

1989 ஏப்ரல், 25]

[திரு. எம். அப்துல் லத்திப்]

அல்ல, கைத்தறி துறை ஆனாலும் கோ-ஆப்பரேஷன் என்று சொன்னாலே என்னமோ கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டிஸ் ஆர் கோ-ஆப்பரேட்டிவ் ராபரி என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றைக்கு நான் அதை கடுமையாகச் சொல்கிறேன், கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டி ஆர் நத்திங் பட் கோ-ஆப்பரேட்டி ராபரிஸ்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றைக்கு இங்கே காரியங்கள் நடந்து கொண்டிருக்குமானால் தயவுசெய்து மாண்பு மிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அதிகாரி களை வைத்துக்கொண்டு இப்படி முறைகேடுகள் நடக்கின்றன. தேர்தல்கள் நடைபெறாத காலத்தில் எல்லா சொசைட்டிகளை யும் கலைத்தார்கள். கலைக்கும் போது (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): தயவு செய்து இன்டர்வென்ஷன் வேண்டாம். பேசுகிறவர்களுக்கே நேரம் இல்லை. அப்புறம் 4 மணிக்குத் தான் வீட்டிற்குப் போவோம்.

***திரு. எச். எம். ராஜு :** மாற்றுத் தலைவர் அவர்களே, ''ராபரி'' என்ற வார்த்தை அவைக் குறிப்பில் இடம்பெறலாமா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): 'ராபரி' என்ற வார்த்தை பார்லிமெண்டரிதான்.

திரு. எம். அப்துல் லத்திப் : அதிலே ஒன்றும் தவறு இல்லை என்பது என்னுடைய கருத்து. அது இங்கே மட்டும் அல்ல, எல்லா இடத்திலும் அந்த கோ-ஆப்பரேட்டிவ் சொசைட்டி பற்றி சொல்லும்போது எல்லோரும் பகிரங்கமாக எழுதுவார் கள். இருக்கிற நிலைமையை சீர்திருத்தவேண்டுமே தவிர வார்த்தைகளை வைத்துக்கொண்டு அலங்காரம் செய்து கொள்வ திலே பிரயோசனம் இல்லை (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): இங்கே :டைம் ராபரி'' ஆகிறது. (சிரிப்பு).

திரு. எம். அப்துல் லத்திப் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஈறும், பேனும் தலையில் நிறைந்து இருக்கும்போது அதிலே எண்ணெய் போட்டு, சிங்காரித்து பூ வைத்து, கொண்டைப் போட்டுக்கொள்வதில் என்ன பிரயோசனம். ஆகவே முதலில் ஒன்று அந்த ஈறையும், பேனையும் ஒழிக்க வேண்டும், இல்லாவிட் டால் கம்பிளிட்டாக மொட்டையைப் போட்டு மறுபடியும் வளர்க்கவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): அம்மையாரைப் புண்படுத்தி விட்டீர்கள். அம்மையார் அவர்கள் கேள்வி கேட்கிறார்கள்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இதுவரைக்கும் சரியாகத்தான் பேசினார்கள். இப்போது திடீர் என்று பெண்களுடைய கூந்தலைப் பற்றியும் அதில் இருக்கக்கூடிய ஈறும் பேனும் பற்றியும் பேச ஆரம்பித்து இருக்கிறார்கள். அதை தவிர்த்து இருக்கலாம் என்பது தான் என்னுடைய கருத்து. பெண்களைச் சொன்னால்தான், பெண்களைப் பற்றி பேசினால் தான் சிறப்பு அடையும் என்ற அந்த முறை சரியாக இருக்க முடியாது என்பது என்னுடைய கருத்து.

திரு. எம். அப்துல் லத்திப்: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, அதாவது பெண்களுக்கு மிக அதிகமாக மரியாதை செய்பவன் நான், என் தாய் பெண், தங்கை பெண், மனைவி பெண், எல்லோரும் பெண்கள் தான், பெண்கள் இல்லாவிட்டால் உலகமே இல்லை என்று நினைக்கக் கூடியவன் நான். ஆகவே பெண்களுடைய தலை சுத்தமாக வைத்து இருக்கவேண்டும், கணவன்மார்கள் அவர்களுக்கு எண்ணெய் வாங்கிக் கொடுக்க வேண்டும், சீப்பு வாங்கிக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப்; சியக்காய் வாங்கிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு எல்லாவற்றையும் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற ஆவலில் தான் இதை சொன்னேனே தவிர பெண்களை கேலி சொல்லவில்லை.

அடுத்து, கேதாரப்பட்டி கூட்டுறவு சர்க்கரை ஆலை என்று ஒன்று இருக்கிறது. அது ஆரம்பித்து ரொம்ப நாள் ஆகிறது. நான் கூட அதில் ஷேர்ஹோல்டர்தான். ஆனால் ஷேர்ஹோல்டர்க்கு கூட இதுவரையில் அது எப்படி நடக்கிறது என்றே தகவல் இல்லை. லாபத்தில் அது நடக்கிறதா? நஷ்டத்தில் நடக்கிறதா என்ற தகவல் ஷேர்ஹோல்டர்களுக்கு இல்லை. இப்படி இருந்தால் என்ன நடக்கிறது அங்கே, என்ன ஸ்பெஷல் ஆபீசர் இருக்கிறார் அங்கே, ஸ்பெசல் ஆபீசா என்றால் ஸ்பெசலாக ஏதாவது செய்கிறார் என்று அர்த்தமா? என்ன அர்த்தம், நான் கூட அதில் ஷேர்ஹோல்டர்தான். இதுவரையில் அங்கே என்ன நடக்கிறது என்று தெரியவில்லை.

அதோடு எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தில் கீழ்ப்பகுதியில் அங்கே கடலாடி, வில்வாரணி போன்ற ஊர்கள் இருக்கிற பகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை அமைப்பது நியாயத்தின்பால் பட்டது மட்டும்

1989 ஏப்ரல், 25]

[திரு. எம். அப்துல் லத்தீப்]

அல்ல, இன்றியமையாதது ஆகும். அந்த சர்க்கரை ஆலையை அமைப்பது அந்த பகுதிக்கு மட்டும் அல்லாமல் அந்த மாவட்டத்திற்கு மட்டும் அல்லாமல் அந்த பகுதிக்கு நியாயம் செய்யக்கூடிய வகையில் அமையும். விவசாயிகளுக்கு அது பெருத்த லாபத்தை ஏற்படுத்திக் கொடுக்கும். அவர்களுக்கு பயன் அளிக்கும். எனவே அந்தப் பகுதியில் திருவண்ணாமலை வட்டத்தில், செங்கத்திற்கும் திருவண்ணாமலைக்கும் இடையில் போளூரில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். நான் ஆற்காட்டைச் சேர்ந்தவன், ஆகவே கேட்கிறேன் என்று நினைத்துக் கொள்ளாமல் ஊரையும் நான் கவனிக்கவேண்டும். வீட்டையும் கவனிக்க வேண்டும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தைரியமாக அதற்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மேற்கொண்டு பேரவைத் தலைவர் அவர்களுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்த விரும்பவில்லை, நன்றி செலுத்தி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நுகர்பொருள் வழங்கு துறைக்கு 1988-89-ல் ஒதுக்கிய தொகை 98 கோடியே 6 இலட்சமாகும். 1989-90-ஆம் ஆண்டுக்கு 123 கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 25 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன். அதைப்போல் கூட்டுறவுத் துறைக்கு 1988-89-ல் திருத்திய மதிப்பீட்டில் 55 கோடியே 1 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இப்போது 78 கோடியே 17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலே 23 கோடி ரூபாய் அதிகமாக கடந்த ஆண்டை விட, நிதி ஆதாரம் குறைவாக இருந்தாலும் அதிகமாக ஒதுக்கியதற்காக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, சிறு விவசாயிகளுக்கு அறிவித்த சலுகைகளின் காரணமாக 9.36 இலட்சம் விவசாயிகள் பயனடைகிறார்கள். இந்தச் சலுகைகளோடு, சென்ற அரசாங்கம் அறிவித்த 61 கோடி ரூபாயையும் சேர்த்து எறத்தாழ 101 கோடியே 51 இலட்சம் ரூபாயை விவசாயிகளுக்காக ஒதுக்கியிருப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு நான் நன்றியினைத்தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு அக்கறையோடு இந்த விவசாயிகளுடைய கடன்களை ஒதுக்கினாலும், பல காலமாக ஊழலின் பிறப்பிடமாக விளங்குகின்ற இந்தஇரண்டு துறைகளையும்சேர்ந்த அதிகாரிகள் அவைகளையெல்லாம் விவசாயிகளுக்கு செல்லாமல் தடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த அதிகாரிகள் மீது முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. நடராசன்]

சிறு விவசாயிகளுக்குக் கடன்களைத் தள்ளியிருப்பதைப் போல 5 ஏக்கருக்கு மேல் வைத்துள்ள விவசாயிகளுக்கும் குறைந்த பட்சம் அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். சில கிராமக் கூட்டுறவு களில் ஒருவர் கடன் வாங்கினால் அவருக்கு ஒருவர் ஜாமீன் போடுகிறார். அந்தக் கடனை வாங்கியவர் கடனைச் செலுத் தாவிட்டால் ஜாமீன்தார் கடனைச் செலுத்திவிட்டாலும் அவ ருக்குக் கடன் தர முடியாத நிலைமை இந்தச் சட்டத்திலே இருக்கிறது. அவைகளை தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவர்களுக்கு கடன் வழங்க அரசு தக்க நடவடிக் கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலி ரேஷன் கார்டுகளைப் பற்றியெல்லாம் அமைச்சர் அவர்களே இங்கே தெரிவித்தார்கள். அவைகளை தவிர்க்க வேண்டும். புதிதாக பலபேர் ரேஷன் கார்டுகளுக்காக விண் ணப்பித்துக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அவைகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கிற 82 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கியதற்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய பேரூர் தொகுதியிலே இருக்கக்கூடிய குறிஞ்சி, புனியமுத்தூர், பேரூர், வேடப்பட்டி ஆகிய ஊர் களுக்கு கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னாலே மண்ணெண்ணெய் 10 லிட்டர் மாநகராட்சியிலே வழங்கியதைப் போல வழங் கப்பட்டு வந்தது. தற்சமயம் 5 லிட்டர்தான் வழங்கப்பட்டு வருகிறது. அங்கேயிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு உதவக் கூடிய வகையில், விவசாயிகளுக்கு உதவக்கூடிய வகையில் 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு மத்திய வங்கி கிளை ஒன்றை கந்தேகவுண்டன் சாவடியிலே துவங்கவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச் சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். 1972-ஆம் ஆண்டு இன்றைய தமிழக முதல்வர் அவர்களாலே துவங்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இன்றையதினம் பல்வேறு அரசியல் காரணங்களுக்காக திசை திருப்பப்பட்டிருக்கிற நிலைமைகளை நாம் பார்க்கிறோம். அந்த வாணிபக் கழகம் துவக்கியபோது, ஆயிரம் ரேஷன் கடைகளைத் துவக்கி சுமார் 11 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு பெற்றார்கள். 1978-ஆம் ஆண்டு அன்றையதினம் இருந்த ஆட்சி 4 ஆயிரம் கடைகளை திறந்து அந்த நிறுவனத் திடத்திலே ஒப்படைத்து அங்கே பணியாற்றக் கூடியவர் களுக்கு 150 ரூபாய் சம்பளமும் கடைக்கு ஒரு நபர் என் கின்ற வகையிலே அமைத்தார்கள். அந்த ரேஷன் கடைகளை யெல்லாம் அந்த அரசாங்கமே பாராட்டி, 'இந்து' போன்ற

1989 ஏப்ரல், 25]

[திரு. ஆ. நடராசன்]

பத்திரிகைகளிலே கூட விளம்பரங்களையெல்லாம் கொடுத்தார்கள். 1981, 83ஆம் ஆண்டுகளில் அந்த நிறுவனத்திலுள்ள தொழிலாளர் வைப்பு நிதிக் குழுவிற்கு நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பேரவையைச் சேர்ந்த தோழர்கள் 6 பேரும் வெற்றி பெற்றுவிட்டார்கள். இதனால் 1—7—1984 முதல் 5 ஆயிரம் ரேஷன் கடைகளையும் தொழிலாளர்களோடு கூட்டுறவுச் சங்கத்திற்கு மாற்ற உத்திரவிட்டார்கள். தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை அந்த உத்தரவை எதிர்த்து வழக்கு போட்டு அதன் மூலம் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை தரப்படுவதாகச் சொல்லி உச்ச நீதி மன்றத்திலே அந்த வழக்கு தமிழ்நாடு அரசாங்கத்தாலே பைசல் செய்யப்பட்டது. ஆனால் அதன் மூலம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 1—10—1987 முதல் ரேஷன் கடைகள் கூட்டுறவுக்கு மாற்றப்பட்டாலும் அதன் மூலம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் சுமார் 7 ஆயிரம் பேர். அந்த 7 ஆயிரம் பேர் இன்றையதினம் பல்வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் கோவையிலிருந்து தஞ்சைக்கும், சிதம்பரனார் மாவட்டத்திலிருந்து கோவை மாவட்டத்திற்கும் இப்படி பல மாவட்டங்களுக்கு நெடுந்தூர தொலைவுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளம் 150 ரூபாய்தான். இப்படி 150 ரூபாய் வாங்குகிற தொழிலாளர்களை வேண்டுமென்றே பழிவாங்கியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு இன்றையதினம் தாய் உள்ளம் படைத்த நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்து, அவர்களை எல்லாம் மீண்டும் அந்தந்த இடங்களுக்கு மாற்றி, மீண்டும் அந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரேஷன் கடைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு கூட்டுறவு அங்காடிகளில் பணியாற்றும் புதிய ஊழியர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அவர்களுக்கு மாற்று வேலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மூட்டைத் தூக்கும் தொழிலாளர்கள் 9,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் 'அண்ணா சுமை தூக்குவோர் கூட்டிறவு சங்கம்' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அந்த அமைப்பின் மூலம் கட்டுப்படுத்தி, அவர்களுக்கு காண்ட்ராக்ட் விட்டு, அதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்படாமல், அவர்களை

[திரு. ஆ. நடராசன்]

எல்லாம் நிரந்தரமாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஆண்டுதோறும் சம்பா, குறுவை ஆகிய இரு பருவங்களிலும் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அந்தப் பணிக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து, அந்த அலுவலகத்தின் மூலமாக 2,000 பேர்களை எடுக்கிறார்கள். அவர்களுடைய பணி தற்காலிகமானதுதான். ஆனால் அவர்கள் அடுத்த ஆண்டுக்கு எடுக்கப்படுகிறார்களா என்றால் இல்லை. புதிய நபர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். இது தொழில் தகராறுச் சட்டத்திற்கு முரணானது. சர்க்கரை ஆலைகளில் பருவ காலங்களில், தொழிலாளர்களை பணிக்கு அமர்த்திக் கொள்வதைப்போல இந்தத் தொழிலாளர்களையும் பருவகால தொழிலாளர்களாக அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிறுவனம் சிறப்பான முறையில் செயல்படுவதற்கு அதனுடைய சேர்மென் நல்லமுறையில் பணியாற்றினாலும் அங்கே இருக்கிற சில அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். அவர்களை முறைப்படுத்தி, தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தை மாற்றுவதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தச் சட்டங்களை உடனடியாகத் திருத்தியமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் தனி அதிகாரிகளாக கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த சீனியர் இன்ஸ்பெக்டர், சி.எஸ்.ஆர், போன்ற அதிகாரிகள், 10(ஏ)(1) விதியின்கீழ் ஜூனியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நியாயவிலைக் கடைகளில் முறைகேடுகள் நடைபெறுகின்றன என்றால் அதற்கு முழுமுதல் காரணம் இவர்கள்தான். அவர்களை முறைப்படுத்தி, நியாயவிலைக் கடைகளில் நல்லமுறையில் விநியோகம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்களில் அரசு ஊழியர்கள் இருப்பதால் கூட்டுறவுத் துறையில் இருக்கிற ஊழியர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை. அதிலும் குறிப்பாக கோவை சிந்தாமணி கூட்டுறவு நிறுவனத்தில் கடந்த 15 ஆண்டுகளாக இப்படிப்பட்ட பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, அங்கே இருக்கிற அதிகாரிகளை மாற்றி, அந்த ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1989 ஏப்ரல், 25] [திரு. ஆ. நடராசன்]

அடுத்து, மாவட்ட அளவில் செயல்படுகிற மொத்த விற்பனை கூட்டுறவுப் பண்டகசாலைகளை தமிழ்நாடு மாநில கூட்டுறவு இணையத்தில் இணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1966-ஆம் ஆண்டில் இந்தஇணையம் தொடங்கப்பட்டது. 1985 முதல் 1988 வரையில் துணி கொள்முதல், தானியக் கொள்முதல் ஆகியவைகளில் ஏராள மான ஊழல்கள் நடைபெற்றுள்ளன. அதனால் இந்த இணை யத்திற்கு 214 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமாக இருக்கிறவர்கள்மீது, உரியவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை சிந்தாமணியில் நிகர நஷ்டம் 2 கோடி ரூபாய் ஏற்பட்டிருக்கிறது. அதில் சூரியகாந்தி எண்ணெய் ஆலையில் ஏறத்தாழ 177 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு மற்றும் உள்ளாட்சித் துறை நிறுவனங்களுக்குத் தேவையான பொருள்களை எல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

இப்போது ரேஷன் கடைகள் ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒன்று என்ற அளவில் இருந்து வருகின்றன. பல கிராமங் களில் ரேஷன் கடை இல்லை. வருவாய்க் கிராமத்திற்கு ஒரு ரேஷன் கடை என்கிறபோது, பல கிராமங்களில் ரேஷன் கடை இல்லாமல் இருக்கிறது. இந்தக் குறையைப் போக்கி, ரேஷன் கடை இல்லாத கிராமங் களில் கடைகளைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கோவை மாநகராட்சியில் 49-வது வட்டத்தில் அண்ணா நகர் பகுதியிலும் மதுக்கரைப் பகுதியில் ரெட்டியார்பட்டி, காளியாபுரம், ஆகிய ஊர்களிலும் ரேஷன் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு, பஞ்சப்படி உள்ளிட்ட இதர அலவன்ஸ், பணி விதிமுறை மேம்பாடு ஆகியவைகளில் செலவு குறியீட்டைக் கருதாமல் தமிழக அரசு அனுமதித்த விகித முறையை அனுமதிக்க எற்பாடு களைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அடுத்து எல்லா ஊழியர்களுக்கும் ஊதியத்தை முறைப் படுத்தி நல்ல முறையில் அமைக்க, கூட்டுறவுத் தொழிலாளர் களுக்காக ஊதியக் குழுவினை அமைக்க வேண்டும் என்று

நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளை ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. ஜி. பொன்னுப்பிள்ளை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல் என்ற மானியக் கோரிக்கைகளின் கீழ் நடைபெறும் விவாதத்திலே நான் கிட்டத்தட்ட 30 ஆண்டுக்காலம் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராக இருந்தவன் என்ற அடிப்படையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு முதலிலே எனது நன்றியைத் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தேர்தலைத் தள்ளி வைப்பதற்குக் காரணம் தேர்தல் சட்டத்திலே உள்ள சில விதிமுறைகளை மாற்றவேண்டும் என்பதாலும் பழைய சட்டங்களில் இருக்கின்ற குறைபாடுகளையும் நடைமுறைச் சிக்கல்களையும் நீக்கவேண்டும் என்பதாலும் தான். இவற்றை எல்லாம் செய்து முடித்துவிட்டு அவர்கள் தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்கிற காரணத்தால், நானும் அதிலே கடந்த 30 ஆண்டுகள் ஈடுபட்டிருப்பவன் என்ற முறையில் என்னுடைய கருத்துக்களையும் அவருக்குச் சொல்லலாம் என்று கருதி என்னுடைய கன்னிப் பேச்சை நான் துவக்குகிறேன்.

கூட்டுறவு விவசாயச் சங்கம் நீண்ட நெடுங்காலமாக ஓரளவுக்கு நன்மை பயப்பதாக இருந்தாலும்கூட சமீப காலங்களை எடுத்துக் கொண்டால் விவசாயிகளுக்கு அவர்கள் பயிரிடும் பயிர்களுக்கு ஏற்ப சங்கத்திலே சில விதி முறைகளை ஏற்படுத்திக்கொண்டு இந்த அளவுக்குத்தான் கொடுக்க முடியும் என்று சொல்கின்ற நிலைமை இருக்கிறது. இதன் காரணத்தால் அவர்களுடைய நிலத்தில் அளவுக்கேற்ப கடன் பெற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். நெல்லுக்கு ஏக்கருக்கு சுமார் 1;500 ரூபாய்தான் கொடுக்க முடியும் என்றும் கடலைக்கு சுமார் ஆயிரம் ரூபாய்தான் ஏக்கருக்குக் கொடுக்க முடியும் என்றும் பருத்திக்கு 1,500 ரூபாய்தான் கொடுக்க முடியும் என்றும் இந்த வகையில் ஒரு குறிப்பிட்ட அளவை நிர்ணயித்துக் கொண்டு கொடுக்கிறார்கள். அந்தப் பணம் கூட முழுவதும் பணமாகத் தரப்படவில்லை. உதாரணமாக நெல்லுக்கு 1,500 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்றால் அதிலே கிட்டத்தட்ட 40-லிருந்து 50 சதவீதம் வரையில்தான் ரொக்கமாகக் கொடுக்கப்படுகிறது. மீதம் உள்ளதில் 10 சதவீதம் விதைகள் மற்றும் பூச்சி மருந்துகளாகத் தருகிறார்கள். பாக்கியை

1989 ஏப்ரல், 25] [திரு. ஜி. பொன்னுபிள்ளை]

உரமாக வாங்கிக்கொள்ளச் சொல்கிறார்கள். ஆனால் வெளியே கடைகளில் உள்ள அந்த உரத்தின் விலைக்கும் கூட்டுறவுச் சங்கத்தில் கொடுக்கப்படுகிற விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனித்தால் கூட்டுறவுச் சங்கத்திலே 50 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு 3 ரூபாய், 4 ரூபாய் வித்தியாசம் ஏற்படுகிறது. எனவே பெரும்பாலான விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்திலே உரங்களை விரும்பி வாங்கக்கூடிய சூழ்நிலை இல்லை. கூட்டுறவுச் சங்கங்களிலே கொடுக்கப்படுகின்ற உரம் நல்ல தரமுள்ளது என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்தாலும் கூட ஒரு மூட்டை, இரண்டு மூட்டை வாங்குபவர்கள்தான் 5 ரூபாய் செலவழித்து வெளியே சென்று வாங்குவதற்குப் பதிலாக இங்கேயே வாங்கிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் சாதாரண நடுத்தர விவசாயிகள் மொத்தமாக 10 மூட்டை, 20 மூட்டை என்று வாங்கும்போது இவ்வளவு கூடுதலாக ரூபாய் போகிறதே என்ற எண்ணம் ஏற்படுவதன் காரணத்தால் வெளியே சென்று வாங்குகிறார்கள். அந்த முறையில் நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் வெளியே இருக்கும் உரத்தின் விலைக்கும், கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற உரத்தின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களிலே விலையைக் குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும். கொடுக்கப்படுகிற பணத்தில் 10 அல்லது 15 சதவீதத்திற்கு மேல் விதைக்கு என்றும் பூச்சி மருந்துக்கு என்றும் ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்குகிற போது விவசாயிகள் கேட்கிற பூச்சி மருந்துகளை அந்தந்தச் சங்கங்களிலே கொடுக்க முடிகிறதா என்றால் நிச்சயமாக இல்லை.

(பிற்பகல் 12-40)

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், நான் அந்த கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்ததால் சொல்கிறேன். எங்களுடைய சங்கத்திலே மருந்துகள் வாங்கவேண்டுமென்றால், நாங்கள் தேனியிலே உள்ள கூட்டுறவு விற்பனை சங்கத்திடம் இருந்துதான் வாங்கவேண்டும். அங்கே தான் அணுகவேண்டும். அங்கே அணுகி இந்த இந்த மருந்துகள் விவசாயிகள் கேட்கின்றார்கள். கொடுங்கள் என்று கேட்டால், அந்த மருந்துகள் எல்லாம் எங்களிடம் இல்லை. இந்த மருந்துகள் தான் இருக்கின்றன. நீங்கள் கொண்டு போங்கள், அதைக் கொடுங்கள் என்று சொல்கின்றார்கள். அதை வாங்கிக் கொண்டு போய் வைத்தால் அங்கே வாங்குகின்றவர்கள் அந்த மருந்து எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்கின்ற காரணத்தினால் கிட்டத்தட்ட அப்படிப்பட்ட மருந்துகள் எல்லாம் எங்கள் சொசைட்டிகளிலேயே வாங்கி வைத்திருந்து அது நீண்ட நெடுங்காலமாக விற்காமல் பயன்படாமல் இருக்கின்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற மருந்து கூட்டுறவுச் சங்கங்களிலே கிடைக்கவில்லை என்று சொல்கின்றார்கள். அது உண்மை தான். ஆனால் எப்படிப்பட்ட மருந்துகளை பெரும்பாலான விவசாயிகள் கேட்கிறார்கள் என்பதை இந்த அவையிலேயே அவர்கள் தெரிவித்தால் அதை அங்கே வாங்கி வைத்து விற்க ஏதுவாக இருக்கும்.

திரு. ஜி. பொன்னுப்பிள்ளை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உதாரணமாகச் சொல்லப் போனால் இப்போது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன். 'சிம்ப்போஸ்' என்று ஒரு மருந்து இருக்கிறது. இந்தமாதிரி அதிக விலையுள்ள மருந்துகள் அங்கே நம் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கி வைக்கப்படுவதில்லை. அதிலே இன்னொரு சிக்கல் இருக்கிறது. அதைப்பற்றி நம் இலாகாவிடம் கேட்கப் போனால், அந்த மருந்துகளை இன்னும் நம் இலாகா அனுமதிக்காத காரணத்தினால்தான் அந்த மருந்துகள் எல்லாம் நாங்கள் வாங்கி வைப்பது இல்லை என்று சொல்கின்றார்கள்.

ஆனால் பொதுமக்களுக்கு, விவசாயிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மருந்து எது, அரசாங்கத்தால் அனுமதிக்கப்படாத மருந்து எது என்று அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. ஏதோ ஒரு விவசாயி வாங்கி ஒரு மருந்தே அடித்தால், அதனால் அந்த பயிரின் நோய் தீர்ந்துவிட்டால் மற்றவர்களும் உடனே அதைத்தான் வாங்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். அதனால் இந்தமாதிரி நடைமுறைச் சிக்கல்கள் எல்லாம் ஏற்படுகின்றன.

அடுத்தாற்போல், விதைகளை எடுத்துக் கொண்டால், உதாரணத்திற்கு என்னை எடுத்துக்கொண்டால், நான் I.R. 20 விதை வேண்டுமென்று நினைக்கிறேன். நாற்று நட வேண்டும் என்று நினைக்கிறேன் என்றால் அந்த விதையைத் தான் கேட்பேன். ஆனால் அந்த விதையை அங்கே சப்ளை செய்யமுடியாத காரணத்தினால்தான் நான் வேறு இடத்திற்கு செல்லவேண்டியிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், விவசாயிகளுடைய கருத்தைச் சொல்கிறேன். உரத்தினுடைய அளவுக்கு, சாதாரணமாக 40 பர்சென்ட், 50 பர்சென்ட், உரத்திற்காக கொடுக்கப்படுகிற பணத்தை விட தாராளமாக உரத்தினுடைய விலையை குறைத்து விவசாயிகளுக்கு கொடுத்தால் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். அதிலே எந்தவிதமான மாறுபாடும் அவர்கள் சொல்லப்போவதில்லை. ஏனென்றால் வெளியிலே வாங்குவதைவிட கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்குவதற்கு அவர்கள் சந்தோஷப்படுவார்கள். விலை வித்தியாசமாக இருப்பதால்தான் அவர்களால் வாங்கமுடியாமல்

1989 ஏப்ரல் 25] [திரு. ஜி. பொன்னுபிள்ளை]

போகிறது. அப்படி விலை வித்தியாசமாக இருக்குமானால், அதற்குப் பதில் அவர்களுக்கு முழு பணத்தையும் கொடுத்து விடலாம்.

இந்தமாதிரி பூச்சி மருந்துகள் பணத்தைப் பிடித்துக் கொள்வது, அந்த பணத்தை வீவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்வது இல்லை, என்ற நிலைமைகள் இருக்கின்றன. எனவே கடன் கணக்கில் வராமல் நின்றுவிடுகிறது. எனவே, அவர்கள் மருந்து சப்ளை செய்யமுடியாத நேரத்தில் அந்த பணத்தை விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் நிச்சயமாக நன்மையாக இருக்கும். ஏனென்று கேட்டால் இப்போது ஒரு ஏக்கர் நெல்லுக்கு ரூ. 1,500 தான் அந்த வங்கிகளிலே தருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் ஆகிறது. மெதுவாகப் போகிறது வண்டி.

திரு. ஜி. பொன்னுபிள்ளை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது என்னுடைய கன்னிப் பேச்சு. கொஞ்சம் நேரம் கொடுங்கள். ரூ. 1,500 தான் கொடுக்கிறார்கள் என்றால், சாதாரணமாக இன்று உரவிலைஏறிக் கொண்டிருக்கிற காலத்திலே, இன்றுஏக்கருக்கு ரூ.2,000த்திலிருந்து ரூ. 2,500 வரை செலவழிந்துக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே கொடுக்கக்கூடியபணம்போதுமானதாக இல்லாமல்இருக்கும்போது, இந்த உரத்திற்கு என்றும் பூச்சி மருந்துக்கு என்றும் விதைகளுக்கு என்றும் பிடித்துக் கொண்டால் எப்படி விவசாயிகள் வாங்கிய பணத்தில் முழு அளவுக்கு விவசாயம் பண்ண முடியும்? முடியாது. இந்த சூழ்நிலையை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும்.

அடுத்தாற்போல், அப்படி வாங்கிய கடனை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் எல்லா விவசாயிகளிடமும் பணம் இருக்காது நிச்சயமாக. ஏனென்றால் இட்ட வேளாண்மை முழுவதும் வரும் என்று சொல்லமுடியாது. அப்படி பாதிப்பு ஏற்பட்டாலும் கடனை கட்டவேண்டும் என்று விரும்புபவர்கள். தங்கள் வீட்டிலே வைத்திருக்கின்ற 15, 20 பவுன் நகைகளை கொடுத்து நீங்கள் இதை கணக்கில் வைத்துக் கொண்டு எங்கள் கடனைத் தீர்த்துக்கொண்டு புதுக்கடனை கொடுங்கள் என்றால், அதாவது நேஷனலைஸ்ட் பாங்குகளிலே எல்லாம் அவர்கள் ஒரு கிராமுக்கு இவ்வளவு என்று கணக்கிட்டு மாக்சிமம் எவ்வளவு ரூபாய் என்று வைத்திருக்கின்றார்களே, அந்த அளவுக்கு, ரூ. 30 ஆயிரம் வரைக்கும் கூட கொடுக்கின்றார்கள். ஆனால் நமது கூட்டுறவுச் சங்கத்திலே உதாரணத்திற்குச் சொல்கிறேன். ரூ. 15 ஆயிரம் கடன் இருக்கிறது என்று, அந்த அளவுக்கு ரூ. 15 ஆயிரம் மதிப்புள்ள நகையைக் கொடுத்தால், நம்முடைய சங்கத்திலே என்ன

விலை நிர்ணயித்திருக்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் கடன் கொடுப்பார்கள். நாங்கள் நகையைக் கொண்டுபோய் கொடுத்தால் அங்கே அவர்கள் அதைத்தான் சொல்கின்றார்கள் எங்களுடைய சட்டம் அப்படியில்லை. உங்களுக்கு அதிகக் கடனாக ரூ. 10 ஆயிரம் ஈடு செய்யமுடியும். பாக்கி ரூ. 5 ஆயிரம் எங்கேயாவது இருந்து கொண்டு வந்து கொடுங்கள் என்று சொல்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், போதுமான அளவு மதிப்புள்ள நகையை நாங்கள் கொடுக்கும்போது, ஏன் அதை நீங்கள் பெற்றுக் கொண்டு அந்தக கடனை ஈடு செய்யக்கூடாது. விவசாயிகள் அந்த நகையைத் திருப்பாமல் விட்டுவிடப் போவதில்லை. எப்போது இருந்தாலும் அவர்கள் திருப்பிக்கொள்ளத்தான் போகிறார்கள். நாங்கள் கடனுக்கு ஏற்ற அளவுக்கு நகையைக் கொடுக்கும்போது அந்த நகைக்குள்ள அளவுக்கு மதிப்பைத் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். அடுத்த வங்கியிலே நேஷனல் வங்கிகளிலே கொடுக்கும் போது இந்த கூட்டுறவுச் சங்கங்களிலே ஏன் கொடுக்கக்கூடாது? அப்படி கொடுக்காது விட்டால் விவசாயிகள் வெளியிலே நேஷனலைஸ்ட் பாங்குகளிலே வைத்துத்தான் கொடுக்கிறார்கள். அதனால் காலதாமதம் ஏற்படுவது மட்டுமல்ல அந்த விவசாயிகள் கொடுக்கக்கூடிய வட்டி நேஷனலைஸ்ட் பாங்குகளுக்குத் தான் போய் சேர்கிறது. கூட்டுறவு இயக்கத்திற்கு போய் சேர்வதில்லை. அப்படி செய்யும்போது அந்த வட்டியை கூட்டுறவுச் சங்கத்திற்கு லாபமாகக் கிடைக்கக்கூடிய ஒரு செயலாகத்தான் இருக்கும். இந்த இரண்டு விஷயங்களை நமது அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அதற்கு வேண்டியதை செய்யவேண்டும் என்று அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் ஏற்கெனவே இருந்த போர்டுகளை எல்லாம் கலைத்துவிட்டார்கள். அங்கு கூட்டுறவு பயிற்சி பெற்ற எத்தனையோ வேலை இல்லாத பட்டதாரிகள் எல்லாம் வேலையில்லாமல் இருக்கும்போது கடந்த ஆட்சிக் காலத்திலே, கூட்டுறவு பயிற்சியே பெறாத ஆட்களை எஸ்.ஓ.க்களாக போட்டு வைத்து அவர்கள் தங்கள் இஷ்டம் போல் போர்டுஇல்லாத காரணத்தினால் அவர்களுடைய இஷ்டத்திற்கு என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்ற அளவிலே பலமுறைகேடுகள் எல்லாம் சொசைட்டிகளிலே நடந்து கொண்டிருக்கின்றன. நடந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் அமைச்சரவர்கள் நேர்மையான அதிகாரிகளை வைத்து, நல்ல முறையிலே அவைகளைப் பரிசீலனை செய்து, அவற்றுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டால் ஊரில் இல்லாதவர்கள் பெயரில் கடன் இருக்கிறது. நிலம் இல்லாதவர்கள் பெயரில் கடன் இருக்கிறது. இந்த முறையிலே நிர்வாகக் கேடு பொதுப்படையாக நாட்டளவில் இருக்

கிறது, எல்லாப் பகுதியிலும் இருக்கிறது. அதை நான் மட்டுமல்ல, எல்லா உறுப்பினர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நேர்மையான அதிகாரிகளை வைத்து, ஒழுங்கான நடவடிக்கை எடுத்தால், மேற்கொண்டு அது நீடிக்காமல் இருக்குமென்று கருதுகிறேன்.

அடுத்து ரேஷன் கார்டுகளில் நடக்கும் தவறுகளைக் கண்டுபிடிக்க எப்படி ஒரு குழு நிர்மானிக்கப்பட்டிருக்கிறதோ அதைப் போல கடன் வழங்குவதையும் உறுப்பினர்கள் சொத்து மதிப்பையும் கண்காணிக்க ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் காலத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள், கணக்கனை பகைத்து விட்டால், காணியே போய்விடும்மென்று, அந்த ஊரிலுள்ள வில்லேஜ் ஆபீசர் நிலம் உள்ளவனை இல்லாதவன் என்றும், இல்லாதவனை இருக்கிறவன் என்றும் சொல்லலாம். அந்த நிலைமை பல கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்ந்து நீடிக்கிறது. (மணியடிக்கப்பெற்றது), ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். எப்படி ஒரு குழு சிவில் சப்ளைஸ் துறையில் கண்காணிக்க அமைக்கப்படுகிறதோ அதே மாதிரி அந்தந்த ஊரிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களுடைய சொத்துக்கள் எவ்வளவு, அவாகளுக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாம், உண்மையிலேயே அவர்கள் பட்டாதாரர்களா, இல்லையா என்பதை அந்தக் குழுவின் மூலம் பரிசிலித்து, அதை ஏற்று, அந்தச் சங்கங்கள் செய்யப்படும் அளவுக்கு இந்தச் சட்டத்தைத் திருத்தி அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கும் இன்னும் பேசுவதற்கு அதிக விஷயங்கள் இருந்தாலும்கூட, என்னுடைய கன்னிப்பேச்சு என்ற காரணத்தாலேயும் நமது பேரவைத் தலைவர் அவர்களுடைய கோபத்திற்கு ஆ ய வேண்டாமென்ற காரணத்தாலேயும் இத்துடன் என்னுடை உரையை முடித்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் 10 நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. பி. எச். பாண்டின் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவுத் துறை மானியக் கோரிக்கைகளில் என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். உற்பத்தியைச் செய்யும்பொழுது, உற்பத்தியாளர்களான விவசாயிகளுக்கு உற்பத்தி செய்யும் பொருள்களின் விலையை நிர்ணயிக்க நாம் வழிவகை செய்யவில்லை. ஒரு விஞ்ஞான சாதனத்தை, ஒரு மெக்கானிக்கல் சாதனத்தை ஒருவன் உருவாக்கும்பொழுது அதனுடைய விலையை அவனே நிர்ணயிக்கிறான். அந்தக் கம்பெனி நிர்ணயிக்கிறது. இடை

யிலே உள்ளவர்களுக்கு கமிஷன் என்ற வார்த்தையே கிடையாது. ஆகையால் அவர்கள் லாபத்தை வைத்து, போக்குவரத்துச் செலவைச் சேர்த்து, விற்பார்கள். ஆனால் விவசாயி நெல்லை உற்பத்தி செய்தாலும் லாபம் கிடையாது. அவன் எதை உற்பத்தி செய்தாலும், எந்தப் பொருளை உற்பத்தி செய்தாலும் இன்றைக்கு விலைவாசி ஏற்றத்தில், விவசாயிக்கு விலை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் இல்லை என்ற காரணத்தினாலே உரிமை இல்லை என்ற காரணத்தாலே அவனால் உயர முடியவில்லை. அந்த விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருள்களை உண்டு சாப்பிடுகிறவர்கள் வளரக்கூடிய காலம்தான் இந்தக் காலம். விவசாயி உற்பத்தி செய்துவிட்டு வளர முடியாமல், பொருளாதாரத்தில் அல்லல்படுவதை இன்றைக்குநம்முடைய சமுதாயம் நன்றாக உணரும் என்பதை நான் இங்கே விதரிவித்துக்கொள்கிறேன். 1988—89 ஆம் ஆண்டு அரிசி குய்ண்டால் விலை 160 ரூபாய். கோதுமையின் விலை 204 ரூப.

(பிற்பகல் 12.50.)

இன்றைக்கு அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் கூட பாராளுமன்ற லாபிகளில் கோதுமைக்கு தான் ஒரு பெரிய லாபியே உண்டு.

Wheat lobby is more powerful than rice lobby.

அரிசிக்காக பாராளுமன்றத்தில் லாபி இல்லை. அதற்காக ஒரு யரிந்துரை செய்யக்கூடியவர்கள் இன்றைக்கு அதிகமாகவும் கிடையாது. அவர்களுக்கு அதிக சக்தியும் கிடையாது.

wheat lobby is powerful that means, North Is powerful Rice procing states are not powerful.

கோதுமைக்கு கொடுக்கக்கூடிய அதே விகிதாசாரப்படி ஏன் அரிசிக்கு, நெல்லுக்கு கொடுக்க முன்வரவில்லை என்பதை நான் ஒரு கேள்வியாக இங்கே கேட்க ஆசைப்படுகிறேன். விவசாயத் தொழிலில், அந்தத் தொழிலை நம்பியிருக்கின்ற விவசாயப் பெருமக்களுக்கு இது லாபகரமாக அமையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக இதை சொல்ன்னேன். நெல்லை கொள்முதல் செய்து, விலைக்கு வாங்கி, லாரியில் கொண்டு போய் விற்கக் கூடியவர்களுக்குதான் அது லாபம். லாரி வைத்திருப்பவர்களுக்குதான் அது லாபம். விவசாயிகளுக்கு லாபம் கிடையாது. 10 மைல் அப்பால் கொண்டு போய விட்டால்—என்னுடைய மாவட்டத்தில் நான் கண்கூடாக உணர்ந்துகொண்டு, கேள்விப்பட்டு புரிந்திருக்கிற காரணத்தால் இதை சொல்கிறேன். —10 மைல் தாண்டி இந்தப் பக்கம் அல்லது அந்தப் பக்கம் லாரி வைத்திருப்பவர்கள் வாங்கிகொண்டு விதை மற்ற மாவட்டங்களுக்கு உழைக்காமலேயே நல்ல விலையில் விற்று விடுகிறார்கள். நெல்லை பயிரிடக்கூடியவர்களுக்கு நாற்றை நடுகிறவர்களுக்கு லாபம் கிடையாது. விவசாய

தொழில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு லாபம் கிடையாது. இடையிலே இடைத்தரகர்களாக இருந்து கொள்முதல் செய்யக் கூடியவர்கள் அந்த லாபத்தைப் பெறுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஆகவே, ஏன் விவசாயிகளுக்கு உற்பத்தி செய்யக்கூடிய அதே இடத்திலேயே அரசாங்கமே கோதுமைக்குக் கொடுக்கக்கூடிய அதே விகிதாசாரபடி, அதே விலைபடி, அங்கேயே கொள்முதல் செய்யக் கூடாது? ஏன் அந்த வகையில் ஊக்கப்படுத்தக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இன்றைக்கு வேலைக்கு ஆள் கிடையாது. கூலிக்கு ஆள் கிடையாது. காரணம் எல்லோருக்கும் இன்றைக்கு உயர வேண்டும், வளர வேண்டும், நகரத்திற்கு வர வேண்டுமென்ற ஆசை. அதன் காரணமாக களை பறிக்க ஆள் கிடையாது. உழுவதற்கு ஆள் கிடையாது, எல்லோருக்கும் நல்ல முறையில் வாழ வேண்டும், வேட்டிடு சட்டை, வாட்ச் எல்லாம் போட்டுக்கொண்டு உட்கார வேண்டுமென்ற ஆசை வந்துவிட்டதன் காரணத்தால்தான், விவசாயிகளுக் வர வேண்டிய லாபத்தை வேறு யார் பெயரிலோ பெறுவதன் காரணத்தால் தான் அவர்கள் இன்றைக்கு வளர முடியாமல் இருக்கிறார்கள். அவர்களைக்கைத் தூக்கிவிட வேண்டும், அதற்கு இந்த அரசு இடைத்தரகர்களை ஒழிக்க வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு காலையில் வந்தவுடன் நம்முடைய மாண்புமிகு அமைச்சரிடத்தில் ஒன்றைக் கேட்டேன். கூட்டுறவு கடன் தமிழ்நாட்டில் எவ்வளவு நிலுவையில் இருக்கிறது என்று கேட்டேன். $7\frac{1}{2}$ கோடி ரூபாய் என்று சொன்னார்கள். ஆனால் 700 கோடி ரூபாய்க்கு இங்கே வட்டியாகவே தள்ளி தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

நான் இங்கே கேட்டுக் கொள்வதெல்லாம், ஏதோ பெரியவர்கள் எவ்வளவோ அதிகமாக கடன்களை அரசாங்கத்தின் மூலம் பெறுகின்றவர்கள் எல்லாம் அவற்றை திருப்பி கட்டாமல் இருக்கின்ற காலக் கட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி, அவர்களின் கஷ்டங்களைப் பார்த்து அவற்றைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று இங்கே கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு டி. ஐ. ஐ. சி. மூலமாக பேக்டரி கட்டுவதற்காக கடன் வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பேக்டரியா வைத்திருக்கிறார்கள்?. பேக்டரி கட்டுவதற்காக கடன் வாங்கியவர்கள் அந்தப் பணத்தை அதற்காக பயன்படுத்தாமல்—பொதுப் பணத்தை, அரசாங்கப் பணத்தை எடுத்து சாப்பிடுகிற பெரியவர்கள் இருக்கிற இன்றைய காலக் கட்டத்தில் விவசாயிகளுக்கு ஏன் இந்தக் கடனை தள்ளுபடி செய்யக்கூடாது என்பதை நான் அவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 ஏப்ரல் 25

அடுத்து, விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்களை எல்லாம் வழங்குகிறீர்கள். இருந்தாலும் இயற்கையை எதிர் நோக்கித்தான் விளைச்சல் அமைந்திருக்கிறது. விவசாயி நினைத்தபடி விளைவிக்க முடியாது. வானத்தைப் பார்க்க வேண்டும். குளத்தைப் பார்க்க வேண்டும், மானாவாரி குளத்தைப் பார்க்க வேண்டும். மூன்றும் ஏமாற்றி விட்டால் விவசாயிகளுக்கு அந்த ஆண்டு பொருளாதார நஷ்டம் ஏற் படும் என்பதை உணர்ந்த காரணத்தால் அது லாபம் இல்லாத தொழில் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். நானே என்னுடைய 5 ஏக்கர் நிலதில் நேரடியாக நெல் செய்திருக்கிறேன். லாபம் இல்லை என்பதோடு மாத்திர மல்ல, வரவும் செலவும் சமம் என்ற அளவில் கூட இல்லை. செலவுதான் அதிகம் ஏற்பட்டது. ஒரு கௌரவத்திற்காக சொந்த நிலத்தில் பயிரிடாமல் விட்டு விடக் கூடாது என்பதற் காக விவசாயம் செய்திருக்கிறேன். லாபம் வராது என் பதை உணர்ந்திருக்கிறேன். ஆக, விவசாயத் தொழிலில் லாபமே கிடையாது.

விவசாயிக்கு லாபமே கிடையாது. கடத்தல்காரர்களுக்கு லாபம் இருக்கிறது என்பதை உணர்ந்த காரணத்தால் சொல் கிறேன். இன்றைக்கு கன்சியூமர் புரொடக்ஷன் ஆக்ட் 1986 என்று ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஏன் இந்த புரொடக்ஷன் உற்பத்தியாளர்களுக்கு இல்லை. உற்பத்தி செய்பவர்களுக்கு பாதுகாப்புக் கிடையாது.

இன்றைக்கு நம்முடைய இந்தியத் திருநாட்டில் நம் ஜனாதிபதி அவர்கள் ஒரு நிகழ்ச்சியிலே சொல்லியிருக்கிறார். இங்கே 13,000 சினிமா கொட்டகைகள் இருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தைச் சொல்லி, நாள்தோறும் 3 கோடி பேர் சினிமா பார்க்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். சினிமாக் கட்டணம் உயர்கிறது. யாராவது பார்க்காமல் இருக்கிறார் களா? ஏன் நெல் விலையை மட்டும் உயர்த்தக் கூடாது? உணவுப் பொருள்களின் விலையை ஏன் உயர்த்தக்கூடாது? ஏன் அதற்கு மட்டும் கட்டுப்பாடு? இந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதால்தான் விவசாயி வளர முடியவில்லை. விவ சாயத்தை மட்டும் வைத்து, அவனால் உயர முடியவில்லை. அவன் குழந்தைகள் படித்து வேலைக்குப் போக வேண்டும் என்ற ஆசை வந்துவிடுகிறது. ஆகவே, உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டும். உற்பத்தியாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டத்தைக்கொண்டு வாருங்கள்.

இன்றைக்கு விவசாயிகள் நினைத்தால் ஒரு குவிண்டால் நெல் ரூ. 500 என்று சொன்னால் அதைத் தடுக்க அரசாங்கத்திற்கு உரிமை கிடையாது. தியேட்டர்காரர்கள் கவுண்டரின் டிக்கட் விலையை 3 மடங்கு அதிகமாக உயர்த்துகிற இந்த காலக்

கட்டடத்தில் இன்னமும் கூட்டம் குறையவில்லை. சாப்பாட்டை யாரும் விட்டுவிடப் போவதில்லை. கண்டிப்பாகச் சாப்பிட்டுத் தான் ஆக வேண்டும். ஆகவே, ஏழை எளிய விவசாயிகள் முன்னேற வேண்டுமானால் அவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். மற்ற விலையேற்றத்தை ஒத்துப் பார்த்து, வரவு-செலவை ஒத்துப் பார்த்து, மற்ற உற்பத்தியாளர்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் இனிமேல் உணவை உற்பத்தி செய்வதற்கு தமிழ்நாட்டில் ஆளே இருக்க மாட்டான். விவசாயிகள் நிலத்தையெல்லாம் விற்று விட்டு, நகரத்திற்கு வந்து விடுவார்கள். உற்பத்தி நின்றுவிடும். சாப்பிடுவதற்கு அரிசி இல்லாமல் உணவுப் பொருள் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிற காலம் வந்துவிடும் என்பதை எச்சரிக்க விரும்புகிறேன்.

இலாபம் இல்லாத தொழிலை யாரும் செய்யமாட்டார்கள் ஒரு பேக்டரியை நடத்துகிறான். அதிலே லாபம் இல்லையென்றால் அதை மூடிவிடுகிறான். விவசாயி மட்டும் விவசாயத் தொழிலை விட்டுவிடக் கூடாது? எனவே அரசாங்கம் பல்வேறு சட்டங்களைப் போட்டு, விவசாயிகளை அல்லலுக்கு ஆட்படுத்தாமல் அவர்களுக்கு விவசாயத்தை ஒரு லாபகரமான தொழிலாக ஆக்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் நம் நாட்டில் இன்றைக்கு உணவு உற்பத்தி குறைந்துவிடும். இன்றைக்கே உற்பத்தி குறைந்துவிட்டது. யாரும் உற்பத்தி செய்ய விரும்பவில்லை. காரணம் லாபம் இல்லை. பல இடங்களில் கரும்பு பயிரிடுகிறார்கள். பல மாவட்டங்களிலே நெல் பயிரிடுகிறார்கள். நெல் பயிரிட்டால் அரசாங்கம் கொள்முதல் செய்து விடுகிறது. இடையிலே ஒருவர் வாங்கி இன்னொரு மாவட்டத்திலே விற்று விடுகிறார். இந்த நிலைமைகளையெல்லாம் அரசு உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் மற்ற துறைகளில் எப்படி உற்பத்தியாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறதோ, எப்படி அவர்களுக்கு உரிமை இருக்கிறதோ அதைப் போல் விவசாயிகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு வழக்கறிஞர் சொல்கிறார் ரூ. 5,000 ஃபீஸ் கொடுத்தால் வா, இல்லாவிட்டால் போ என்கிறார். அதைப் போல ஒரு டாக்டர் இந்த அளவுக்கு ஃபீஸ் கொடுத்தால் வா, இல்லைஎன்றால் போ என்கிறார். ஒரு கார் வாங்க வேண்டுமென்றால் ரூ. 2 லட்சம் என்கிறார்கள். இரண்டு லட்ச ரூபாயை கொடுத்து வாங்குகிறோமா இல்லையோ? 2 லட்சம் ரூபாய் கொடுத்து கார் வாங்குபவன் ஏன் அரிசிக்கு அதிக விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடக் கூடாது? ஏன் விவசாயிகளைத் துன்புறுத்த

வேண்டும். அவனுக்குப் பாதுகாப்பு கிடையாது. கன்ஸ்யூமர் புரொடக்ஷன் இருக்கிறது. ஆனால் பாதுகாப்பு புரொடியூசருக்குக் கிடையாது. அப்படியானால் யார் விவசாயத்திற்கு வருவார்கள். யார் விவசாயத்தை நம்பி மேற்கொள்வார்கள். எனவே அந்தத் தொழிலில் பாதுகாப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

உணவுத் துறையில் விகிதாசாரப்படி விலையேற்றம் இருக்க வேண்டும். உணவு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு விலை யேற்றம் அளிக்கவில்லையென்றால் அவனுக்கு லாபம் இருக்காது. எல்லா மட்டங்களிலும் இன்றைக்கு விலை உயர்ந்து கொண்டிருக் கிறது. அதைக் கொடுத்துத்தான் மக்கள் வாங்குகிறார்கள். இதற்கு மட்டும் ஏன் எசன்ஷியல் கமோடிடீஸ் ஆக்ட்? அது மற்றதற்கு ஏன் இல்லை? 3 கோடி பேர் சினிமாவை நாள்தோறும் பார்க்கிறார்கள். அது எசன்ஷியல் காமோடிடீஸ் இல்லையா? எனவே உற்பத்தியைப் பார்த்து விகிதாச்சார விலை உயர்வைப் பார்த்து, விவசாயப் பெருமக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க வேண்டும். தொழில் அதிபர்களைப் பாதுகாக்கின்றோம். அவர்கள் தங்களுடைய உற்பத்தி விலையை உயர்த்தும்போது பாதுகாக்கின்றோம். அவர் கள் போட்டதுதான் விலையாக இருக்கின்றது. அம்பாசிடர் கார் என்ன விலை? சைக்கிள் என்ன விலை சொல்கிறார்கள்? துணி என்ன விலை சொல்கிறார்கள்? அவைகளை எல்லாம் பணம் கொடுத்து வாங்குகிறோம். அதுபோல் இதற்கும் அந்த உரிமையை கொடுங்கள் என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி

(ஈ) பேரறிஞர் அண்ணாவின் பேச்சுக்கள், கருத்துக்கள் அடங்கிய நூல் உறுப்பினர்களுக்கு வழங்கப் பெறுதல்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்களின் அனுமதியோடு

மாண்புமிகு பேரவைத் தலைலர்: பேரவையின் அனுமதி யோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. இப்போது என்னுடைய அனுமதியோடு நீங்கள் பேசலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, உங்களின் இனிய அனுமதியோடு ஒரு இனிப் பான செய்தியை மன்றத்திற்கு அறிவித்து, செய்தித் துறை மூல மாக வெளியிடப்பட்ட ஒரு புத்தகத்தை அனைத்து உறுப்பினர் களுக்கும் வழங்கிட நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு,

1987-ம் ஆண்டு செய்தித் துறை ஆணை எண். 76, நாள் 10-3-87 அன்று காலமெல்லாம் சுடர் விட்டுக்கொண்டிருந்கின்ற பேரொளியாகத் திகழ்ந்து, இறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பேரறிஞர் அண்ணாவினுடைய எழுத்து ஓவியங்கள், பேசிய கருத்துகள் இவற்றையெல்லாம்இன்றைக்குத்தொகுத்து அண்ணாவினுடைய கருத்து மணிகளை இணைத்து ஒன்றாக்கி, நாட்டு மக்களுக்கு வழங்கிட வேண்டுமென்கின்ற பணியினை மறைமலையான், இளஞ்செழியன் ஆகியவர்களுக்கு வழங்கப்பட்டு அந்தப் புத்தகம் 1988, செப்டம்பர் திங்கள் அன்று முழுமை பெற்றிருந்தாலும் என்ன காரணத்தாலோ அது வெளியிடப்படாமல் இருந்தது. இப்போது எங்களின் அன்புத் தலைவரும், தமிழக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அனுமதியோடு இந்தப் புத்தகத்தை உங்கள் மூலமாக அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கு, படித்துப் பயன் பெறுவதற்கு அனுமதி வழங்கிட வேண்டுமெனக் கேட்டு இந்தப் புத்தகத்தை உங்களுக்கும் வழங்கி, இந்தத் துறை மூலமாக அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுடைய இந்த அன்பான நன்கொடையை ஏற்று அறிஞர் அண்ணா அவர்கள் எந்தெந்தப் பெருமக்களை எல்லாம் தன்னுடைய வாழ்நாளில் போற்றி இருக்கிறார்கள் என்பதைத் தொகுத்துத் தந்திருக்கிற அந்தப் பெரு முயற்சியைப் பாராட்டி அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப் : கொஞ்ச நேரம் பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பேச வேண்டாம். ஏற்கெனவே நேரம் ஆகிவிட்டது. பேச வேண்டாம் ; உட்காருங்கள், அப்புறம் ,வழங்குவது தப்பு என்று ஆகிவிடும் (குறுக்கீடு) அதுபற்றி இன்னொரு நாளைக்கு வாய்ப்பு இருக்கும்போது பேசலாம். அடுத்து, திரு. பூவராகன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, அது அவர்களுக்கு மட்டும் கொடுத்ததால் அவர்கள் ஏதாவது அந்தப் புத்தகம் பற்றிசொல்ல வேண்டுமென்று கருதுகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு போவைத் தலைவர் : இப்படி 234 உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கொடுத்தால் 234 பேரும் எழுந்து பேசினால் பெரிய குழப்பம் ஆகிவிடும்.

மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய சட்ட மன்றத்தில் வைக்கப்பட்டு இருக்கின்ற மானியக் கோரிக்கைகளிலே இரண்டு முக்கியமான

கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டு இருக்கின்றது. அந்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

உணவு வழங்கு துறையிலே அமைச்சரவர்கள் மிகச் சிரத்தையோடு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு அதிலே இருக்கின்ற சங்கடங்கள், கஷ்டங்களை நிவர்த்தி செய்ய முயற்சி எடுத்து இருக்கிறார்கள். குறிப்பாக, இந்த உணவுத் துறையிலே நம்முடைய அரசாங்கத்திற்கு நிறைய வருமானம் வரவேண்டும். உணவுத் துறை, விற்பனை வரித் துறை, போக்குவரத்து துறை மூலம் ஒழுங்கான முறையில் செம்மையாக, சீராக நல்லவிதமாக நாம் பொறுப்பு ஏற்று நடத்தினால் அடுத்து வருகிற 10 ஆண்டுகளுக்கு வரியே போடாமல் ஆட்சி நடத்தமுடியும். அதிலே அவ்வளவு ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன. அதனால் வருகிற வருமானம் வேறுவிதமாக போய்விடுகிறது.

நாம் உணவு உற்பத்தியை ஒரு பக்கம் பெருக்குகின்றோம். அதை விலைக்கு வாங்கி பாதுகாத்து உரிய மக்களுக்கு விலை ஏற்றம் செய்யாமல் பார்த்து விநியோகம் செய்கின்றோம். கொள்முதல் செய்வதிலே இருந்து, இருப்புவைப்பதிலே இருந்து விற்பனை செய்வதிலே இருந்து நாம் எடுக்கின்ற முயற்சிகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும். கொள்முதல் செய்யும்போது நல்ல உணவு தானியங்களை நாம் கொள்முதல் செய்ய வேண்டும். வெளி மாநிலங்களில் போய் நாம் வாங்கும்போதுகூட அதிலே சுத்தமாக இருக்கின்ற, தரமாக இருக்கின்ற, கலப்படம் இல்லாத உணவு தானியங்களை வாங்குவதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு பயிற்சி பெற்றவர்களை நாம் அங்கு அனுப்பவேண்டும். வெளி மாநிலங்களுக்குப் போய் நாம் வாங்குகின்றபொழுது, அங்கே எந்தத் துறையின் மூலமாக நாம் வாங்குகின்றோம், பயிற்சி பெற்றவர்கள் அங்கே அனுப்பப்படுகின்றார்களா, எப்படி வாங்குகின்றார்கள் என்று நாம் பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்க்கின்றபொழுது கடந்த 1986—87-ம் ஆண்டு ஆடிட்டர் அறிக்கையிலே, குறிப்பிட்ட அத்தனை குறைபாடுகளையும் அமைச்சரவர்கள் கண்ணுற்றுப் பார்க்க வேண்டுமென்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். அதிலே நான் இப்பொழுது போவதற்கு நேரமில்லாத காரணத்தினாலே அவர்களுக்கே அதை விட்டு விடுகின்றேன்.

ஆனால் இந்த ஆண்டு கொள்முதல் செய்கின்றபொழுது தஞ்சை மாவட்டத்திலேயும், தென்னார்க்காடு மாவட்டத்தில் இரண்டு பகுதிகளிலேயும் குறித்த அளவிலே அவர்கள் இன்றைய தினம் கொள்முதல் செய்திருக்கின்றார்களா என்றால், சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாக இருக்கிறது என்று நான் பார்க்கின்றேன். அதற்குக் காரணம், அமைச்சர் பொறுப்பேற்

1989 ஏப்ரல் 25] [திரு. கோ. பூவராகன்]

றுக்கொண்ட பிறகு, அதற்கிடையிலே, இடைப்பட்ட காலங்களிலே அந்தத் துறையிலேயிருந்த அதிகாரிகள் கவனக் குறைவாக இருந்த காரணத்தினாலே நமக்கு வர வேண்டிய அத்தனை கொள் முதல் நெல்லும், அரிசி போன்றவைகளும் வெளி மாநிலங்களுக்குப் போய்விட்டன. அதனாலே, இன்றையதினம் கிடுகிடு என்று விலை ஏறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை அமைச்சரவர்கள் நன்கறிவார்கள். அவர்கள் அதற்குப் பிறகு அறிந்து, விரைவிலே அதற்கு நடவடிக்கையெடுத்து தடுத்து, ஓரளவுக்குக் கொள்முதல் செய்வதற்கும், நம் மாநிலத்திற்கு வேண்டிய அரிசியையும், நெல்லையும் பெறுவதற்கான முயற்சியை எடுத்திருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட தவறுகளிலே ஈடுபட்டவர்களுக்கு, ஏதாவது பொறுப்பு கொடுத்தவர்களுக்கு, என்ன காரணத்தினால் எதற்காக அவர்கள் அவ்வாறு செய்தார்கள் என்ற விஷயத்தை அமைச்சரவர்கள் கவனத்திற்கு விட்டுவிடுகிறேன். மேற்கொண்டு, இம் மாதிரி கொள்முதல் செய்கின்றபொழுது, தரமுள்ள சாக்குகளை வாங்குவதில்லை. ஏதோ ஒப்புக்காக ஒரு சாக்கை வாங்குகின்றார்கள். அதற்கு ஒரு கணக்கை எழுதி விடுகிறார்கள். அப்படி வாங்குகின்ற அந்தக் கொள்முதல் தானியங்களை அங்கிருந்து சென்னைக்குக் கொண்டுவருவது, பிறகு சென்னையிலேயிருந்து திரும்ப தஞ்சாவூருக்குப் போவது, திருச்சிக்குப் போவது, கன்னியாகுமரிக்குப் போவது ; ஒருமுறை இரயிலிலே கொண்டுவருவது; மறுமுறை லாரியிலே கொண்டு போவது என்ற முறையிலே போக்குவரத்துச் செலவுக்காக அதிக நேரத்தையும் ,செலவினத்தையும் செய்கின்றார்கள் என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று அறவைக்குச் செல்லுகின்றபொழுது அந்த அறவையிலே கொடுத்த அளவிற்கு எந்த அளவிற்குத் திரும்பப் பெறுகின்றார்கள்; அதாவது ஊறல் போட்டு அது அறவை ஆகின்றபொழுது, கண்டு கொள்முதல் கொஞ்சம் அதிகமாகும் என்று சொல்கிறார்கள். அது நமக்குக் கொடுக்கப்படுவதில்லை. அதற்கு அறவைக் கூலியாக அந்தத் தவிட்டைப் பெற்று வருகிறார்கள். அந்தத் தவிட்டோடு அரிசியும் போய் விடுகிறது. அந்த அரிசியை திரும்பப் பெறுகின்றபொழுது, எடை குறையாமல் வருகிறதா என்றால், அதிலேகூட தவறு இருக்கிறது. கொண்டு வந்து நம்முடைய கோடவுன்களிலே வைககின்றபொழுது எந்த அளவிற்கு மொத்தமாக வருகின்றது, எவ்வளவு வருகிறது என்பதற்குக் கணக்கு இல்லை. திரும்பப் பெறுகின்றபொழுதுகூடக் கணக்கு இல்லை. ஒவ்வொரு மூட்டையிலேயும் பார்த்தால் ஐந்து கிலோ, ஆறு கிலோ, ஏழு கிலோ என்று குறைவு ஏற்படுவதை நாம் பார்க்கின்றோம். அதை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குப் பலபேர் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

சமீபத்திலே நாம் வழங்கிய இந்த ஐந்து கிலோ அரிசியிலேகூட ஒவ்வொரு மூட்டையிலேயும் கூட ஐந்து கிலோவிலேயிருந்து ஆறு கிலோவரை குறைந்திருக்கிறது என்பதை, விநியோகம்

செய்து அந்த அங்காடியிலே இருக்கின்றவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதற்குக் காரணம், சிவில் சப்ளைஸ் இலாக்காவிலே, கோடவுன்களிலே அந்தத் தவறு நடக்கிறது. அங்கிருந்து விநியோகிக்கப்படுகின்றபொழுது, லாரியிலே வருகின்றபொழுது அங்கே பெருச்சாளிகள் உள்ளே போய், நான்கு கால் பெருச்சாளிகள் அல்ல, இரண்டு கால் பெருச்சாளிகள் பல பெருச்சாளிகள் உள்ளே போய அதற்குஎன்று தனிசாக்குகளை வைத்து, ஒவ்வொரு மூட்டையிலேயும் கொஞ்சம் கொஞ்சம் உருவி விடுகின்றன உருவி விட்டு, அவர்கள் தனியாக ஒரு இடத்தை வைத்து, அதற்கென்று தனி வண்டி, வாகனங்கள் எல்லாம் வைத்திருக்கின்றார்கள். இந்தத் துறையிலே இந்த லாரி இங்கிங்கே போகிறது என்று சொன்னால் அந்தந்த இடத்திலே அதற்கு அவர்களுக்கு ஜாயின்டிங் பாயின்ட் இருக்கிறது. அதை இறக்குவதற்கு—அங்கே இறக்கிப் போட்டு விடுகிறார்கள். இதுபோன்ற பல தவறுகள் அந்த உணவுத் துறையிலே இன்றையதினம் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு இதுபற்றியெல்லாம் ஏராளமாக வந்திருக்கின்றன என்பது எனக்கு நன்றாகத் தெரியும் அதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும். இப்பொழுது அதிகாரிகள் ஒத்துழைப்பதாக இல்லை. ஏனென்றால், ஏற்கனவே ஒரு முறையிலே அவர்கள் வளர்ந்து விட்டார்கள். அந்த வளர்ச்சியிலே இருந்தவர்களுக்கு, திருந்தி திரும்ப வர வேண்டுமென்று சொன்னால் அது மிகக் கஷ்டமாக இருக்கிறது. செக்கிலே பூட்டிய மாட்டை, வண்டியிலே பூட்டினால் வண்டியிலே போகாது; திரும்பத் திரும்ப சுற்றித் சுற்றித்தான் வரும் என்று சொல்லுவார்கள். செக்கு மாட்டை வண்டி பூட்டினால், வண்டியிலே போகாது; அது ஒரு சுற்றுச் சுற்றி அந்த இடத்திற்குத்தான் வந்து சேரும்.

அதனாலேயே, இதிலே பழக்கப்பட்டவர்களையெல்லாம் தயவு செய்து அழைத்து, அந்தப் பழக்கத்தை நிறுத்தி விடுங்கள்; இது பொதுத் துறையிலே மக்களுக்கு வழங்குகின்ற உணவு பொருள்கள்; இதிலே சுத்தமாகவும், எடை குறையாமலும், அரசாங்கத்திற்கு நஷ்டம் வராமலும் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களிடத்திலே விடப்பட்டிருக்கிறது என்று அவர்களிடத்திலே கேட்டுக் கொள்ள வேண்டும். அப்படிக் கேட்கின்றபொழுது, இதிலே நாம் வாங்குகின்ற அந்த அரிசியிலே—எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் சொன்னார்கள், கொள்முதல் விலையைப் பார்க்கின்றபொழுது, அதாவது கோதுமைக்கு இருக்கின்ற அளவிற்கு இந்த நெல்லுக்குக் கொடுப்பதில்லை என்று அது உண்மைதான். ஆனால் இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் கூட விவசாயிகளின் கூலிகளையெல்லாம் ஏற்றிவிட்டார்கள். வண்டி, அதாவது ஏர் ஓட்டுவதிலேயிருந்து, களை பிடுங்குவதிலேயிருந்து, அறுப்பு அறுப்பதிலேயிருந்து, விலையையெல்லாம் நிர்ணயம் செய்துவிட்டார்கள்.

1989 ஏப்ரல், 25] [திரு. கோ. பூவராகன்]

(பிற்பகல் 1-10)

அதே சமயத்தில் அவர்கள் ஒன்றைச் சொல்ல மறந்து விட்டார்கள். நெல்லுக்கு இந்த விலை கொடுப்பதாக இருக்கிறோம் என்று. உணவுத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வேன். அவர்கள் கூலியை நிர்ணயித்து விட்டார்கள். நீங்கள் கொள்முதல் விலையை இன்றைய தினம் நிர்ணயிக்க வேண்டும். கட்டுப்படியான விலையை அறிவிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்வேன். அதிலே ஒன்றும் உங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு விடாது. உங்கள் இலாக்காவில் இருக்கிற ஓட்டை உடைசல்களையெல்லாம் நீங்கள் பார்க்க வேண்டும். நான் சொல்வது வைக்கிற இடங்களில் களவு போகிறது, எடை போடுகிற இடத்தில் களவுபோகிறது, கொள்முதல் சரியான முறையில் செய்வதில்லை, சுத்தமாக செய்வதில்லை என்பதாகும். அதிலே 'வேஸ்டேஜ்' என்று வைத்திருக்கிறார்கள். 2 சதவிகிதம், 1 சதவிகிதம் என்று சொல்கிறார்கள். இந்த வேஸ்டேஜ் என்பது வெள்ளைக்காரன் காலத்தில் வைத்ததாகும். அப்போது இவ்வளவு போக்குவரத்து வசதி இல்லை. இப்போது ஒரு பாயிண்ட்லே ஏற்றினால் ஒரு பாயிண்ட்லே போய் இறங்குகிறது. முன்பு அப்படியில்லை. கட்டை வண்டியில் ஏற்றி, லாரியில் ஏற்றி, ரெயிலில் போக வேண்டும் அதனால், 'வேஸ்டேஜ்' என்று அவர்கள் வைத்தார்கள். இப்போது அந்த வேஸ்டேஜ்க்கு இடமே இல்லை. இடமே கொடுக்கக் கூடாது. வேஸ்டேஜிற்கு 2 சதவிகிதம்,3 சதவிகிதம் என்று இருப்பதை கட்டாயம் நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல நெல்லை ஊறப்போட்டு அதிலிருந்து அதிகமாக கண்டுமுதல் வருகிறதே அது நம்முடைய கணக்கில் வரவேண்டும். அவர்கள் கணக்கிற்குப் போய் விடகூடாது. அதாவது அது அரசாங்கத்திற்கு வரவேண்டுமே தவிர அந்த அதிகாரிகளுக்குப் போய்ச் சேரக்கூடாது என்று இந்த சமயத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து தரமுள்ள நல்ல சாக்குகளை வாங்க வேண்டும். சாக்கு ஓட்டையாகிப் போய்விட்டது என்று சொல்கிறார்கள். சாக்கு யார் வாங்குகிறார்கள்? அரசாங்கத்திலிருந்து நாம் அனுப்புவதில்லை. பணத்திற்கு தான் நாம் பொறுப்பு. தரமுள்ள சாக்குகளை அவர்கள் வாங்க வேண்டும். கொள்முதல் செய்கிறபோது ஏதோ ஈரப்பதம் என்று சொல்கிறார்கள். விவசாயிகளிடத்தில் ஈரப்பதத்திற்கு இவ்வளவு என்று எடைபோட்டு எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களிடம் வாங்குகிறபோது ஒரு தராசு, கொடவுனில் வைக்கிறபோது ஒரு தராசு, திரும்பி நம்மிடம் வரும்போது ஒரு தராசு என்று மூன்று தராசுகளை வைத்ருக்கிறார்கள். கொள்முதல் செய்கிறபோது ஈரப்பதம் என்று சொல்லி அவர்களிடம் ஒரு தராசை வைத்து வாங்குகிறார்கள். அப்படி வாங்கிவிட்டு அதற்கு பிறகு கொடவுனில் வைக்கிற போது ஒரு தராசில் வைக்கிறார்கள். விற்பனை

செய்கிற போது, நம்மிடம் வருகிறபோது ஒரு தராசை மாற்று கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். அந்த தராசுகள் அத்தனையையும் மாற்றி, பொய் தராசுகளை சரியான முறையில் அளவு காட்டுகிற அளவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருள்கள் வழங்குகிற முறையில் பெருவாரி யான பெயர்களை இன்றைய தினம் நாம் வைத்திருக்கிறோம். கூட்டுறவு அங்காடிகள் என்று எத்தனையோ பெயரில் இருக் கிறது. அந்தப் பெயரைப் பற்றியெல்லாம் நான் போக விரும்பவில்லை. அவர்களுக்கு இப்போது ஐந்து கிலோ அரிசி கொடுத்தோம். அடுத்தத்தடவை பொங்கல், தீபாவளி வருகிறபோது அந்த ஐந்து கிலோவை பாக்கெட் போட்டு கொடுக் கும்படியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இடையில் இருப் பவர்கள் அந்த எடையில் திருடக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாட்டை செய்ய வேண்டும். அதைப் போல உணவுப் பொருள்கள் வழங்குகிறபோது பருப்பு, எண்ணெய் இதெல்லாம் கூட அளவு குறையாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பாக எண்ணெய் என்றால் ஒரு லிட்டர், இரண்டு லிட்டர் என்ற அளவிற்கு, பருப்பு என்றால் ஒரு கிலோ, இரண்டு கிலோ என்ற அளவிற்கும் கொடுக்கவேண்டும். அதிலே 10 பைசா, 5 பைசா இந்த உணவுப் பொருள்களை வாங்குகிற போது அந்த கவருக்காக எடுத்துக்கொண்டாலும் பரவா யில்லை. தயவு செய்து அவ்வாறு செய்ய வேண்டும். எடை சரியாக இருக்கும்படியாக பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கார்டை பொறுத்தவரையில் விரைவில் எல்லா இடங்களிலும் மறுபடியும் புதிய ஏற்பாட்டை செய்ய வேண்டும். தனியாக நீங்கள் வோட்டர் லிஸ்ட் எப்படி தயாரிக்கிறீர்களோ அதைப் போல இந்த கார்டை தயாரிப்பதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். மாண்புமிகு லத்தீப் அவர்கள் சொன்னதை போல சர்க்கரைக்கு ஒரு கார்டு, இப்போது 5 கிலோ கொடுப்ப தால் இதற்கு ஒரு கார்டு என்று வந்துவிடும். அந்த நிலை இருக்கக்கூடாது. எல்லாவற்றிற்கும் ஒரேவிதமான கார்டு இருந்தால் அது எல்லாவற்றிற்கும் பயன்படும். சமீபத்தில் அரிசி வழங்கும் விழாவில் நான்கூட பார்க்கிறபோது ஒருவர் வீட்டில் 4, 5 கார்டுகள் இருக்கும். குப்புசாமி என்று ஒருவர் கார்டு கொண்டு வந்தார்கள். அவரை சும்மா பரிட்சார்த்தமாக கேட்கிறபோது உங்கள் வீட்டில் யார் யாரெல்லாம் என்று கேட்கிற போது அவருக்கு வீட்டில் இருப்பவர்களையே தெரியவில்லை. ஏனென்றால் கார்டு மாறிவிட்டது. அவர் 4, 5 கார்டுகள் வைத்திருப்பார் போல இருக்கிறது. ஒருவருக்கு ஒரு கார்டுதான் இருக்க வேண்டும். எப்படி இந்த தவறு ஏற்படுகிறது என்றால் அந்த அங்காடிகளில் இருப்பவர்களே அந்தத் தவறைச் செய்கிறார்

1989 ஏப்ரல், 25] [திரு. கோ. பூவராகன்]

கள். அந்த ஊரில் 300 பேர்கள் இருந்தால் 450 கார்டு இருக்கிறது. அந்த 150 கார்டுகள் இவர்களே வைத்திருக்கிறார்கள், சிலபேர் பெயர்களில். அதிலே குப்புசாமி என்று 4 குப்புசாமி இருக்கும். அப்படி வைத்துக் கொண்டு சர்க்கரை வருகிறபோதெல்லாம் அந்த கிராமத்திற்கு சர்க்கரை போவதில்லை. சர்க்கரை இங்கேயே நகரத்தில் விற்றுவிடுகிறார்கள். அதைப் போல நல்ல பருப்பு வருகிறபோது அங்கேயே விற்றுவிடுகிறார்கள். பாம் ஆயில் வருகிறபோது டின் டின்னாக போய்விடுகிறது. இதற்கென்று தனியாக ஒரு கும்பல் இயங்குகிறது. இதை வாங்கி அவர்கள் விற்பது என்ற முறையில் இருக்கிறது. அந்த கும்பலை கண்டுபிடிக்கவேண்டிய பொறுப்பு அமைச்சரிடத்தில் இருக்கிறது. அதிகாரிகளிடம் விட்டு இதையெல்லாம் கண்டுபிடித்து உண்மையாக நாம் வழங்குகிற உணவுப் பொருள்கள் நம்முடைய மக்களுக்குப் போய் சேர வேண்டும். வியாபாரிகளுக்குப் போய்ச் சேரக் கூடாது என்பதில் கண்டிப்பாக அவர்கள் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் நிறைய அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் நான் திரும்ப எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. ஸ்பெஷல் ஆபிசர்—எதில் எல்லாம் ஸ்பெஷல் என்றால் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். எதில் ஸ்பெஷல் என்று நீங்கள் கேட்க வேண்டும். தப்பு கணக்கு கொடுப்பதில், தவறான முறையில் பணம் கணக்கு எழுதுவதில் ரொம்பவும் கெட்டிக்காரர்களாய் இருக்கிறார்கள். ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்கத்தில் நிறைய முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அந்த முறைகேடுகளை தவிர்ப்பதற்கு விரைவில் தேர்தல் நடத்த வேண்டும். அதிலே காலதாமதம் ஆகுமென்றால், யார்என்ன குறை கண்டாலும் பரவாயில்லை. யாராவது உங்களுக்கு தெரிந்தவர்கள் இருந்தால், ஸ்பெஷல் ஆபிசராக வேண்டாம், ஒரு சேர்மெனைப் போடுங்கள், தவறில்லை.

யார் நல்லவர்களோ அவர்களைப் போடுங்கள். சில பேர்கள் சொல்வார்கள், கட்சிக்காரர்களைப் போட்டுவிட்டார்கள் என்று. கட்சிக்காரர்கள் என்றால், அவர்கள் என்ன பாவம் பண்ணின ஆட்களா? கட்சிக்காரர்கள் ஒன்றும் பாவம் பண்ணின ஆட்கள் இல்லை. எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.) சீக்கிரத்தில் முடித்துவிடுகிறேன். அமைச்சர் அவர்களுக்கு கூட்டுறவுத் துறைக்கும், உணவுத் துறைக்கும் நிறைய பணம் கொடுக்கிறோம். ஒரு பக்கத்திலே அவர்கள் உதவியாக இருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே நம்முடைய அரசாங்கத்திற்குப் பணத்தைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பதற்காக என்னுடைய யோசனையை நான் எடுத்து வைக்கிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கம் மக்கள் மத்தியிலே பரவலாக இன்றையதினம்

எல்லாக் கிராமங்களிலும் ஊடுருவி இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், அந்த மக்களுககு இன்றைய தினம் அதனுடைய பலன் கிடைத்திருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். கடன் அவர்களுக்குக் கொடுத்தோம், இவர்களுக்குக் கொடுத்தோம் என்று சொல்லி, இந்தப் பணத்தை எடுத்து, பெரிய பெரிய நிறுவனங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று கணக்கு வருகிறது. இதைத்தவிர்க்க வேண்டும். ஏன் என்றால், இன்றையதினம் எலலாக் கிராமங்களிலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஏராளமான அளவில் வந்துவிட்டன. அதிலேயும் கடன் பெறுகிறார்கள், நம்முடைய கூட்டுறவுச் சங்கத்திலேயும் கடன் பெறுகிறார்கள். இது முழுக்க முழுக்க விவசாயிகளுக்கே பயன்படக்கூடிய வகையிலே இருக்கவேண்டும்.

அதே சமயத்தில் விவசாயிகளிடத்திலே அதிகமாக டெப்பாசிட் செய்வதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது அதிகமாக நாம் 1/2 சதவீதம் வட்டி கொடுக்கிறோம். இன்னும் அதிகமாக கொடுப்பதிலே 1/2 சதவீதம் கூட்டிக் கொடுப்பதிலே தவறு இல்லை. பொதுவாக விவசாயிகளுக்கு சேவிங்சே வரப்போவதிலலை. இருந்தாலும் முயற்சி எடுப்பது நல்லது. அவர்களுக்கு வேறு விதமாக ஊக்குவித்து அவர்களுடைய பணத்தை முதலீடு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

குறிப்பாக டெபாசிட் செய்து இருப்பவர்களுக்கு குறைந்த பட்சம் 10 ஆயிரம் ரூபாய் டெபாசிட் செய்தால், அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் கடன் கொடுப்தற்கு, முன்னுரிமை கொடுக்க வேண்டும். வீடுகள் கட்டுவதற்கு அல்லது வேறு காரியங்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு ஒரு குழாய் கிணறு போட வேண்டும் என்று சொன்னாலும் ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறைந்து போட முடியாது. ஆனால் இன்றைய தினம் அதற்குக் கொடுக்கிற பணம் போதாது. இன்றைக்கு 25 ஆயிரம் 30 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒருகட்டுப்பாடு விதிக்கக்கூடாது. குழாய் கிணறு போடுவதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்.

அதே போல் அவர்களுக்கு மின் வினியோகம் கொடுப்பதற்குக்கூட நீங்கள் முன்னுரிமை தர வேண்டும். அவர்களை அலையவிடக்கூடாது. மோட்டார் வாங்க அவர்களை போய் பாருங்கள், இவர்களைப் போய் பாருங்கள் என்று சொல்லக்கூடாது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு காலாகாலத்திலே இந்தக் கடன்கள் கிடைக்கவேண்டும் அவர்களுக்குக் கொடுத்த கடன்கள் திரும்பி வரவில்லை என்று சொல்கிறார்கள். ஏகப்பட்ட பேர்களுக்குக் கடன் கொடுத்

1989 ஏப்ரல் 25] [திரு. கோ. பூவராகன்]

தோம். திரும்ப வரவில்லை. இந்தக் கடனை சில பேர்கள் வாங்கி சாப்பிட்டுவிட்டார்கள். நேற்றையதினம் முதல்வர் அவர்கள் கூட சொன்னார்கள். ஏதோ பெருந்தன்மையோடு அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்று தான் நான் கருதுகிறேன். வெளியிலே இருப்பவர்கள் எல்லோருக்கும் சந்தோஷம். இது முன்னாலேயே தெரியாமல் போய்விட்டதே, தெரிந்திருந்தால் இன்னும் கூட நாம் அதிகமாக எடுத்திருக்கலாமே. இப்போது இவ்வளவு தூரம் தாராளமாக அவர்கள் சொல்லிவிட்டார்களே என்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் பல பேர்கள். ஆனால் அவர்கள் என்ன எண்ணத்தோடு சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் கூட இதை அந்த அள விற்கு வளரவிடக்கூடாது என்பதை இந்தச் சமயத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வேர் ஹவுசிங் கார்ப்பரேஷன். இந்த வேர் ஹவுசிங் கார்ப்பரேஷனைப் பற்றி ஆடிட் ரிப்போர்ட்டைப் பார்த்தால், ஏற்கெனவே அங்கே நிலம் பெற்றதற்குக்கூட இன்னும் பத்திரங்கள் வாங்கப்படாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நம் ஊரிலே உள்ள வங்கிகளை விட்டுவிட்டு ஆந்திரா வங்கி, பாரத் ஸ்டேட் வங்கி, இவர்களோடு ஏதோ தொடர்பு, இவர்கள் ஏதோ விற்றார்கள், வைத்தார்கள் என்ற் அந்த வழக்கு இந்த மன்றம், அந்த மன்றம் என்று போய்க் கொண்டிருக்கிறது. இது எதனாலே ஏற்பட்டது, யார் காலத் திலே அப்படி ஏற்பட்டது, அதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்க வேண்டும்.

அடுத்து இந்த வேர் ஹவுசிங் கார்ப்பரேஷனில் தானியங் கள் வைப்பதற்கு மிகவும் பயப்படுகிறார்கள். அதற்குக் காரணங்கள் இருக்கின்றன. எனக்கே இதில் அனுபவம் உண்டு. முந்திரிக்கொட்டைகளை யாராவது எடுப்பார்களா, முந்திரி கொட்டைகளை வைத்திருந்தேன். ஒரு மூட்டையி லிருந்து 4 கிலோ 5 கிலோ எடுத்துவிட்டார்கள். விருத்தா சலத்தில். அதை எடுத்து பருப்பாகத்தான் சாப்பிட்டு இருப்பார்கள். அப்படியே முழுசாக சாப்பிட்டிருக்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமை எல்லாம் இருக்கிறது. முந்திரிக் கொட்டைகளை பெருச்சாளி தின்னாது. எலி தின்னாது, முந்திரிக் கொட்டையைத் திருடுகிற பெருச்சாளி இருக்கிறது என்று சொன்னால், எந்த அளவிற்கு இந்த வேர் ஹவுசிங் கார்ப்பரேஷன் இருக்கிறது என்பதை நீங்கள் பார்க்கவேண்டும்.

அதே போல் அங்கேபோய் நீங்கள் திடீரென்று பார்க்கலாம். அங்கே வைக்கின்ற எடையிலே 3 விதமாக வைத்திருக்கிறார் கள். நாம் கொண்டு போய் பொருட்களை அந்த கோடவு னில் வைக்கிறபோது, ஒரு எடையைக் காண்பிக்கிறார்கள். மறுபடியும் திரும்பப் பெறுகிறபோது, தனியாக வேறு ஒரு எடையைக் காண்பிக்கிறார்கள். பிறகு நாம் பொருட்களை

எடுத்துக்கொண்டு போனால், இந்த மூன்றுக்கும் மூன்று விதமாக வித்தியாசம் இருக்கிறது. எனவே இதையும் கவனிக்க வேண்டும்.

அடுத்து மார்க்கெட்டிங் கமிட்டி. இதைப் பொறுத்தவரையில் நாம் அதற்கு அதிக அளவில் சலுகைகளைக் காட்ட வேண்டும் என்று இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்கிறேன். அதை நம்பியே விவசாயிகள் இருக்கிறார்கள். இந்த விற்பனைக் கூடங்கள் எல்லாம் தரமாக இல்லை. ஏன் என்றால், ரொம்ப நாட்களுக்கு முன்னாலே அதற்கு இடங்கள் ஒதுக்கி, கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள். அங்கேகூட தராசு எல்லாம் இப்படித்தான் இருக்கிறது. அதுவும் விருத்தாசலத்தில் உள்ள மணிலா மார்க்கெட்டிங் கமிட்டியிலே சாக்கு வாங்குவதற்குக்கூட அனுமதியில்லை என்று சொல்கிறார்கள். அதனால் பழைய சாக்குகளை உபயோகப்படுத்துகிறார்கள். இதிலே பல தவறுகள் நடக்கின்றன. அங்கே கூட கோடவுன் கட்டுவதற்கு ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். 10 ஆண்டுக்காலம் ஆகிறது. இந்த இடம் காலியாக வைக்கப்பட்டு இருக்கிறது. அங்கே அதிகமான பொருட்கள் விற்பனைக்கு வருகிறது. எனவே வசதியான அளவில் இருக்க, பெரிய அளவில் விற்பனைக் கூடத்தை அமைக்க வேண்டும். காரணம் அப்படி வருகின்ற போது அவைகளைத் திறந்த வெளியிலே வைக்கின்றபோது, மழைக் காலங்களில் மிகக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு ஒரு கோடவுன் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தற்போது ஒரு திடலிலே ஒப்பனாக இருப்பதை மாற்றி, மழைக்காலங்களிலே கூட வியாபாரம் நல்ல முறையில் நடப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் விருத்தாசலத்தில் குடிக்கிற தண்ணீர்கூட மார்க்கெட்டிங் சொசைட்டியில் இல்லை. அதே மாதிரிதான் அங்கே வருபவர்கள் போவதற்கு வசதியில்லை. ஒன்றுக்கு வேண்டுமானால் எங்கேயாவது போய்விடலாம். இந்த இரண்டு ிவகாரத்திற்கு பெரிய கஷ்டமாக இருக்கிறது.

(பிற்பகல் 1-20)

அதனால் இதற்கெல்லாம் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நிறைய வருமானம் வருகின்றது. அந்த வருமானத்தை எந்த அளவிற்கு பயன்படுத்துகிறீர்கள்? விவசாயிகளுக்கு உதவிகரமாக அந்த விற்பனைக் கூடங்கள் செயல்படவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வேன். உணவுத்துறை இலாக்காவிலே அடுத்த ஆண்டு மானியக் கோரிக்கை வருகின்றபோது நீங்கள் ஏராளமான பணத்தைப் பெற்று, இதை லாபகரமாக நடத்தியிருக்கிறோம், அதே சமயத்தில் உணவுப் பொருட்களை நல்லவிதமாக வழங்கியிருக்கிறோம். எடை குறையவில்லை. சுத்தமாக கொடுத்திருக்கிறோம் என்ற அளவில்

ஒரு நல்ல பெயரை நீங்கள் ஈட்ட வேண்டுமென்று சொல்லி, என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களிலே இந்த மானியத்தின் மூலமாக விவசாயிகள், பெண்கள், உடல் ஊனமுற்றோர் இப்படி பல்வேறு தரப்பினருக்கும் இடம் அளித்து, சில சலுகைகளும் அளிக்கப்பட்டதற்காக நான் பாராட்டுகிறேன். பெண்களுக்கு அங்கே சலுகை கொடுத்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகின்ற வேளையிலே ஒரு சில கருத்துக்களை நான் கூற வேண்டியிருக்கிறது. அந்த ரேசன் கார்டுகளைப் பொறுத்த வரையிலும் நிறைய கொடுத்திருக்கிறீர்கள். ஏராளமான உறுப்பினர்கள் கார்டுகளிலே இருக்கிறார்கள். ஜனத்தொகைக்கும் அதற்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அந்த ரேஷன் கார்டுகளுக்கு சென்சஸ் எடுத்து, அந்த ரேஷன் அட்டைகளை வழங்குகின்றவர்கள் அந்த வருவாய்த் துறையைச் சார்ந்த அதிகாரிகளாக இருக்கின்ற காரணத்தினால் மக்கட்தொகை கணக்கு எடுப்பதை அந்தத் துறையைச் சார்ந்தவர்களே எடுக்கின்றார்கள் என்கின்ற நிலையிலே, அந்தத் தவறுகள் ஏன் ஏற்படுகின்றது? அதை வழங்குகின்ற வேளையில் அந்தந்த வீட்டு எண்ணில் அத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்களா, இல்லையா, இறந்தவர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளதா, வெளியூரிலே உள்ளவர்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறதா, என்பதையெல்லாம் ஆய்வு செய்து அதை எடுத்துக்கொள்ளாமல் இருந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் அஜாக்கிரதையாக பொறுப்பற்ற நிலையிலே செயல்பட்டமைக்கு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருகின்ற வேளையிலே அப்படிப்பட்ட தவறுகள் நிச்சயமாக தவிர்க்கப்படும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிறகு விநியோகம் என்று சொல்லி, இப்போது நுகர்வோர் பாதுகாப்பு என்று சொல்லப்படுகின்ற வேளையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல். நானும் அந்த உற்பத்தியாளர்களுடைய நிலையை கருத்தில் கொள்ள வேண்டுமென்று வெகு வலுவாக வலியுறுத்த விரும்புகிறேன். இந்தத் திட்டத்திலே கூட குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையிலே தமிழகத்திலே அரிசி உற்பத்தியை பெருக்குகின்ற ஒரு வாய்ப்பினை தந்திருக்கிறார்கள் என்று இதிலே போடப்பட்டுள்ளது. தமிழகத்தில் அரிசி உற்பத்தியை செய்ய வேண்டுமென்று சொன்னால், அதை ஆலைகளிலே நாம் உற்பத்தி செய்ய முடியாது. விவசாயிகள்

தங்கள் வயல்களில்தான் அதனை உற்பத்தி செய்ய முடியும். அந்த உற்பத்தியாளர்களுக்கு அடிப்படையான நிலைகள் எப்படி இருக்கின்றன என்று பரிசீலிக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஏனென்றால உற்பத்தி செய்கின்ற அவர்களுக்கு உற்பத்தி செய்ய முடியாது இயற்கையே அவர்களுக்கு வஞ்சகம் விளைவிக்கின்றது. பிறகு அரசும் மற்ற வியாபாரிகளும் அது போன்று அனைத்துத் துறைகளும் விவசாயிகளை ஒடுககுகின்றார்கள். நசுக்குகின்றார்கள் என்றே நான் கருதுகிறேன். ஒரு விவசாயியை எடுத்துக்கொண்டால், எப்பொழுதும் கால்வாயை நம்பி அந்தத் தண்ணீரிலேயே பாசனம் பண்ணி விவசாயம் செய்ய முடியாது. மழையை நம்பியே விவசாயம் செய்ய முடியாது. கிணற்றை நம்பி நாங்கள் பயிர் செய்கிறோம். அது எங்கள் மாவட்டத்தில் அதிகம், ஆக மின்சார இலாக்காவினர் அந்த விவசாயிகளுக்குச் செய்கின்ற கொடுமை பயங்கரமான கொடுமை. எந்த நிமிடத்தில் அவர்கள் அந்த மின்சாரத்தைத் துண்டிக்கிறார்கள் என்று சொல்ல முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. இதிலிருந்து அவர்களுக்கு ஒரு நிரந்தர விடுதலை கொடுக்கப்பட்டால் தான் தீவிர அரிசி உற்பத்தி திட்டம் பயனுறும். இல்லையென்றால், அது 'மீனிங்லெஸ்' பொருளற்றது. ஏனென்று சொன்னால், தாரங்கதாரா கெமிக்கல்ஸ் மாதிரி பெரிய பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் எல்லாம் மின்பாய்ச்சி வைத்திருக்கிறார்கள். அங்கே போய் மின்சாரத்தை துண்டிக்கவே போக மாட்டேன் என்கிறார்கள் அந்த மின்வாரியத்தைச் சேர்ந்த ஊழியர்கள். ஏழை விவசாயிகள், வேட்டியைத் தவிர எதுவுமே பார்த்தறியாத, அந்த சேற்றிலேயே உழலுகின்ற அந்த விவசாயிகளைத்தான் தொந்தரவு பண்ணி அந்த ஃபீசைப் பிடுங்கிக் கொண்டு வந்து விடுகிறார்கள். அந்த மாதிரிச் செய்கின்ற வேளையில் அவனுக்கு என்ன ஏற்படுகின்றது என்று சொன்னால், முந்தைய மூலதனமும் போய் விடுகின்றது. அதுகாறும் உழைத்த உழைப்பும் போய்விடுகின்றது. இது கொடுமையல்லவா? இது சமுதாயம் அவனுக்கு இழைக்கின்ற அநியாயம் இல்லையா? எனவே இதை சிந்தித்துப் பார்த்து, அதற்கு ஒரு முடிவை ஏற்படுத்த இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மார்க்கெட்டிங் ரேட் என்று வைத்து, அதற்கு விலையை நிர்ணயம் செய்து விடுகிறார்கள். கூலியை உயர்த்தவேண்டும், உச்ச வரம்பு அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பள விகிதம் என்று எல்லாம் உயர்த்திவிடுகிறார்கள். ஆக ஏழை விவசாயிகள், என்னைப் போன்றவர்கள் சம்பளம் கொடுக்கும்போது, அது பெரிய கஷ்டமாகத் தெரிகிறது. 20 ரூபாய் சம்பளம் என்று சொல்லும்போது அந்த லாபத்தைப் பார்க்கும்போது அவனுக்குக் கொடுத்த சம்பளத்திற்குக் கூட அவனுக்கு ஒன்றும் கிடைக்காத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலை. அப்புறம் இந்தப் பாசன வசதிகளையெல்லாம் பெருக்குவதிலே தீவிரம் காட்டவேண்டும்.

இப்போது ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் வறட்சி நிவாரணத் திட்டம் என்று சொல்லி சில திட்டங்களைப்போட்டு அரசு என்ன பண்ணியிருக்கிறார்கள் என்று சொன்னால், இருந்த குளங்களையெல்லாம் சேர, சோழ, பாண்டிய ராஜாக்கள் எல்லாம் என்ன பண்ணினார்கள் என்று சொன்னால், ஆழப் படுத்தி, குளங்களை வெட்டி வைத்து, நீர் பிடிப்புக்கு ஏற்ற வாறு உண்டு பண்ணி வைத்திருந்தார்கள். நாம் என்ன செய்கிறோம் என்று சொன்னால், அந்தக் கரைகளில் மண்ணை அள்ளி அள்ளி குமிச்சி— வேலை கொடுக்கிறோமாம்— பிறகு ஒரு மழை அடித்து அந்த மண் எல்லாம் உள்ளே போய் மேலும் தூர்ந்து தட்டையாக ஆகி விடுகிறது. உடனே ஹவுசிங் போர்டு ஓடி வருகிறது. அதை நான் வாங்கிக் கொள்கிறேன். வீடு கட்டிக் கொடுக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு அப்படி நீர் பிடிப்பு ஏரியாக்களையெல்லாம் இப்படி செய்வோம் என்று சொன்னால் நிலத்தடி நீர் கீழே தான் போகும். 500 அடிக்குக் கீழே நிலத்தடி நீர் போன பிறகு அவன் கிணறு தோண்டி ஆழப்படுத்தி அந்த விவசாயி ஈடேறவா போகிறான் என்று சிந்தித்துப் பாருங்கள்.

அடுத்து இந்த தீவிர அரிசித் திட்டம் எந்த வகையிலும் சிறப் பாக செயல்படுத்த முடியாது. உரத்திற்கு எல்லாம் நீங்கள் மானியம் கொடுக்கிறீர்கள். அந்த ஊழல் பிரச்சினைகளை யெல்லாம் மற்றவர்கள் பேசி விட்டார்கள். அந்த விவசாயி களுக்கு முழுவதுமாக சுதந்திரம் கிடைக்க வேண்டும், எப் போது மின்சாரம் கேட்டாலும் கிடைக்க வேண்டும். அப்புறம் மின் அழுத்தத்திலே வித்தியாசம் ஏற்பட்டு பியூஸ் எல்லாம் போய் விடுகிறது என்றால் அவர்களுக்கு அந்த மின்சார இலாகா, அந்த பாதிப்புக்கு உண்டான நஷ்ட ஈட்டை கொடுக்க முன் வரவேண்டும். அந்த பியூசை பிடுங்கிக் கொண்டு போய் விடுகிறார்களே பாக்கிக்காக, அதை எப்படி நீங்கள் வட்டி யோடு வசூலிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறீர்களோ, அது போல ஏற்பட்ட நஷ்டத்தை அவர்களுக்கு ஈடுகட்ட வேண்டும். பச்சை பயிர் இருக்கும்போது மின் இணைப்புத் துண்டிப்பு செய் வார்களேயானால், அந்த மின் இலாகா அந்த விவசாயி களுக்கு ஏற்படுகிற நஷ்டத்தை பொறுப்பு ஏற்றுக் கொள்ள முன் வரவேண்டுமென்று விவசாயிகளின் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அப்புறம் எல்லோருக்கும் வொர்க்கிங் கண்டிஷன். ஆலை களிலே வேலை செய்கிறவர்களுக்கெல்லாம் அடிப்படை நார்ம்ஸ் எல்லாம் வைத்திருக்கிறோம். விவசாயிகள் வேலை செய்கிற சூழ்நிலைகளை பார்த்தீர்கள் என்றால் தெரியும். அதை எல்லாம் ஒன்றும் நீங்கள் நிவர்த்தி செய்ய முடியாது. ஆனால் ஒன்று பகலிலேயே வேலை செய்து விட்டு வீட்டுக்கு போக வைக்கலாம். இரவில் வைக்கிறீர்கள். தென்னந்தோப் புக்கு தண்ணீர் பாய்ச்ச நானே போயிருக்கிறேன். ஸ்விட்ச் போர்டிலே போய் கையை வைத்தால் அங்கே பாம்பு இருக் கிறது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு 'Shock' அடிக்க வில்லையோ : (சிரிப்பு)

திருமதி ரமணி நல்லதம்பி : கையிலே கொண்டு போயிருக்கிற டார்ச்சை அதன் மீது அடித்துக் கொண்டு, கம்பு வைத்து தட்டினால்தான் போகும். அதற்கு பிறகுதான் ஸ்விட்சை போட முடியும். இப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது. பேய் அடித்தாலும் ஆபத்து உண்டு. பாம்பு கடித்தாலும் உண்டு. திருடன் வந்தாலும் உண்டு. திடுக்கென்று பயந்தாலும் உண்டு. விவசாயி இப்படி பரிதவிப்பான ஒரு சூழ்நிலையிலே சிக்கலான சூழ்நிலையிலே இருந்து வேலை செய்து அந்த விவசாயம் பண்ணி உணவு தானியத்தை நமக்கு தந்து நம்முடைய வயிற்றை நிறைய வைக்கிறான். ஆகவே இது விவசாயிகளின் நாடு என்று சொல்கிற நேரத்தில் விவசாயிகளுக்கு ஒரு மாற்று வாழ்வை ஏற்படுத்தித் தர வேண்டும்.

கடன் மானியம் எல்லாம் கொடுக்கிறீர்கள். அந்த மானியம் ஏதாவது அவர்களுக்குப் போய் சேருகிறதா என்று கேட்டால் ஒன்றுமே போய்ச் சேரவில்லை. மேலும் மேலும் வட்டிக்கு மேல் வட்டியாக ஏறி— யாரோ கொண்டு போய் விடுகிறார்கள். மானியத்தையும் கடனிலே ஒரு பகுதியையும் மேல் வழிச் செலவு இதெல்லாம் போய், அந்த அப்ளிகேஷனை மூவ் பண்ண செலவெல்லாம் போய் அவன் கடனாளியாகி, அந்தக் கடனுக்கு வட்டிக்கு வட்டி என்று கட்டி அவன் முதுகு அப்படியே முறிக்கப்பட்டு கூனி குறுகி வாழ்கின்றான். அவன் நிமிர்ந்து வாழ்ந்தால்தான் தமிழகம், இந்தியா நிமிர்ந்து வாழ முடியும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்புறம் இன்னொன்று, இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே ஊனம் உற்றவர்கள், நாவிதர், சலவை தொழிலாளி இப்படியெல்லாம் சேர்த்திருக்கிறீர்கள். என் இனத்தைச் சேர்ந்த பனையேறிகளுக்கும் அந்தச் சங்கம் இருக்கிறது, அந்தப் பனையேறிகளுக்கு என்ன வருகிறது, என்று சொன்னால் அடிப்படை ஜீவாதார உரிமையே மறுக்கப்பட்டுள்ளது. நெல் உற்பத்தி செய்தாயிற்று என்று சொன்னால் அந்த நெல்லை அவன் சாப்பிடலாம். வீட்டுக்கு வருஷத்திற்கு ஸ்டாக் வைத்துக் கொள்ளலாம். கீரையை உற்பத்தி செய்தால் சாப்பிடலாம். கூட்டு பொறியல் வைக்கிறான் என்னவோ செய்கிறான் சாப்பிடுகிறான். தக்காளி ஜூஸ் போடுகிறான் ஜாம் செய்கிறான். என்னென்னமோ செய்கிறான் பார்க்கிறோம். ஆனால் இந்த பனை ஏறி தன்னுடைய உயிரை பணயம் வைத்து பனை ஏறி செல்கிறானே அவன் இறக்குகிற பதநீருக்கு மட்டும் ஏன் வரம்பு வைத்திருக்கிறீர்கள். அவன் உரிமையில் ஏன் விளையாடுகிறீர்கள் என்று புரியவில்லை. அவன் உயிரை பணயம் வைத்து ஏறி திரும்பி வருகிறான். அவன் விரும்புகிற வகையிலே தன்உடல் வலி போகும் வகையில் ஒரு பானத்தை உண்டு பண்ணி

குடிப்பதற்கு நீங்கள் விதி முறை வைத்து, அரசு அங்கே புகுந்து விளையாடுகின்றதே ஏன், அதை நான் வன்மையாக அவர்கள் சார்பிலே கண்டனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அவர்களுக்காகவாவது குடிக்க அவர்கள் உற்பத்தி செய்துக் கொள்ள நீங்கள் அனுமதி வழங்க வேண்டும். அவர்களையும் மேனாட்டுச் சாராயம் தான் குடிக்க. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பதநீரைத் தானே குறிப்பிடுகிறீர்கள் ? (சிரிப்பு).

திருமதி ரமணி நல்லதம்பி: அப்புறம் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசும்போது பெண்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். எனக்கு ஒரு சிறு பயம் வந்து விட்டது. எதற்கெடுத்தாலும் பெண்களையே எடுத்துக் காட்டுகிற ஒரு பழக்கம் இருக்கிறது. நானும் ஒரு பெண் என்ற வகையில் பெண்களின் பிரதிநிதியாக இங்கே நிற்கின்ற வகையிலே கேட்கிறேன். இந்தப் பேனும் ஈறும்—நம்முடைய குடும்பங்களில் இருக்காது. பாமர மக்கள் குடும்பங்களில் அது நிறைய இருக்கிறது. சத்துணவு கிடைக்கவில்லை என்று சத்துணவு திட்டம் வைத்தார்களே அது மாதிரி அரசு பேன் ஒழிப்பு வாரியம் என்று ஒன்றை வைத்து அதற்கு அமைப்பாளர் போட்டு, எண்ணெய் கொடுத்து, சோப்பு கொடுத்து, சீப்பு கொடுத்து சீயக்காய் கொடுத்து ஏதாவது பராமரிப்பு செய்து சீவி முடிந்து சிங்காரித்துப் பெண்கள் வீதியிலே வருகிற வகையில் செய்யும் எண்ணம் உள்ளதோ என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு) அப்புறம் விநியோகத் துறையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் காலத்துப் பழமொழியே அப்படித்தான் வந்திருக்கிறது. எங்களைப் பற்றியா சொல்லியிருக்கிறது. அந்தப் பழமொழியைச் சொன்னால் நன்றாக இருக்காது என்று பார்க்கிறேன். (சிரிப்பு).

(பிற்பகல் 1-30)

திருமதி ரமணி நல்லதம்பி ; விநியோக முறையிலே கூட்டுறவு அடிப்படையிலே சங்கங்களின் மூலமாக அந்தக் கடைகளிலே விநியோகம் செய்கின்ற வேளைகளிலே பனை வெல்ல உற்பத்தியாளர் சங்கம் என்ற இந்த சங்கத்தின் போர்வையிலே பினாமியாக நெல்லை சிதம்பரனார் மாவட்டத்திலே ஒரு தனி நபர் சுப்பையா என்பவர் 46 கடைகளை வைத்து இருக்கிறார் என்று சொன்னேன். அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. ஆனால் அந்த தனி நபரால் பாதிக்கப்பட்டவர்கள் பிப்ரவரி 9-ம் தேதி முதல் திசையன்விளை பஸ் ஸ்டாண்டிலே ஒன்பது குடும்பத்தினர் கைக்குழந்தைகளோடு—45 உறுப்பினர்கள்— வீடிழந்து வீதியிலே வாழ்ந்துகொண்டிருக்கிற கோரம் இருக்கிறது. அதற்கு ஆவன செய்ய முன்வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து தென்னை மரம். நீண்ட கால, குறுகிய கால பயிர்களுக்கு கடன் கொடுக்கிறீர்கள் பாராட்டுகிறேன். இந்த தென்னை மரம் லைஃப் லாங் டெர்ம் பயிர். அதாவது 25 வருடம் 30 வருடத்து பயிர். தென்னைக்கு நிறைய கன்று களை கொடுக்கிறீர்கள். தெருவிலே எல்லாம் எழுதி போட்டு விடுகிறீர்கள் தென்னை பயிரிடுவீர், தென்னை பயிரிடுவீர் என்று. ஆக அந்த விவசாயிக்கும் விதிவிலக்கை இல்லாமல் இந்த மின்சாரத்தை திடீரென்று துண்டித்து அல்லது கட்-பண்ணினால் ஒரு விவசாயினுடைய ஆயுட்கால உழைப்பு முழுவதுமே விருதாவாகப் போய்விடுமே என்பதனால் அப்படிப்பட்ட விவசாயிகளுக்காவது சில விதிவிலக்கை அளிக்க முன்வர வேண்டும் என்று பரிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

பெண்களுக்கு ஒரு வாரியத்தை உண்டுபண்ணி அவர்கள் மூலமாக பொருட்களை சிவில் சப்ளைஸ் விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் இந்த தராசு எடைகளை எல்லாம் போடும் போது பெண்கள் போய் நிறை சரியில்லை என்று சொல் கின்ற பொழுது ஆண்கள் அங்கிருந்து என்ன செய்கிறார்கள் என்றால் தாறுமாறாகப் பேசுகிறார்கள். பொதுவாக தாய்மார்கள் தான் வரிசையில் போய் நிற்கிறார்கள். அதை கேட்பதற்கு நன்றாக இல்லை என்பதனால் இந்த சிவில் சப் ளைஸ் வாரியத்திலே பெண்களாக நியமனம் செய்தால் நன் றாக இருக்கும், என்ற கருத்தை உங்களுக்கு . . .

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் ரமணி நல்லதம்பி அவர்கள் கள் குடிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சி யில் இருக்கிறார்களா அல்லது வேறு கட்சியின் சார்பில் பேசுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : தலைவர் அவர்களே, நான் நன்றாகவே சொல்கிறேன். தமிழ் என் மூச்சு, தமிழ் என் ஆட்சி, தமிழர் மானம் காக்கின்ற தன்மானத் தலைவன் என்று சொல்லிக்கொண்டிருக்கிற, தானைத் தலைவர், தமிழக முதல்வர், கலைஞர் கருணாநிதி அவர்கள், தமிழகத்திலே தமிழ் தான் இருக்க வேண்டும். ஆட்சி மொழி தமிழாகத் தான் இருக்க வேண்டும். கற்பவர்கள் தமிழைத் தவிர எதையுமே படிக்கக் கூடாது என்று சொல்லிக் கொண்டிருக் கிறவர்கள், தமிழகத்திலே உற்பத்தியாகின்ற குடி வகைகளை குடிக்கக் கூடாது, தமிழகத்து மக்கள் மேனாட்டு பாணியிலே புட்டிகளிலே அடைத்த அந்த மது பானத்தை தான் பருக வேண்டும் என்று சொல்வது சரியாக இல்லை. அவர்கள் $1\frac{1}{2}$ ரூபாய்க்கு ஒரு கலயத்திலே ஒரு மரத்து மேட்டிலே இருந்து குடிச்சுட்டு போய்விடுவார்கள், விட்டுவிடுங்கள் என்று பரிந்து பேசுகிறேன்.

1989 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது சுதேசிக் கொள்கையே கிடையாது என்கிறீர்கள். நான் வேண்டுமானால் முயற்சி செய்து பார்க்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : அவைத் தலைவர் அவர்களே, இந்த எடை முறையிலே ஒரே ஒரு பாயிண்டைச் சொல்ல விரும்புகிறேன். ரொம்ப நேரத்தை எடுக்க விரும்பவில்லை. சில நேரம், இந்த தமிழ் வருஷ பிறப்பன்று ஆளுக்கு 5 கிலோ அரிசி எல்லோருக்கும் இலவசமாக வழங்குவதாக செய்தித் துறை ஒரு ஃபுல் பேஜ் விளம்பரம் கொடுத்திருக்கிறது, தினத் தந்தியிலே. அதிலே நம்முடைய முதல்வர் அவர்கள் நாழியை வைத்து அளந்து போட்டுக்கொண்டிருக்கிற மாதிரி ஒரு படம். ஆக நிறுத்து போடுகின்ற இந்த நல்ல நேரத்திலே நாழியை வைத்து ஒரு முதல்வர் அளந்து போடுகின்ற மாதிரி ஒரு படத்தை கவனக் குறைவாக போட்டுவிட்டீர்களா, அல்லது நாழி முறை அமலுக்கு வரப்போகிறதா என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே இந்த நிர்வாகங்களிலே உற்பத்தியாளர்களுக்கு பாதுகாப்பைத் தந்து, விவசாயிகள் கௌரவிக்கப்பட்டு, விவசாயிகளின் அடிப்படை குறைபாடுகள் எல்லாம் அகற்றப்பட்டு உற்பத்தியை பெருக்கினால் ஒழிய வேறு வழியில்லை—அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலே அரிசி தரவில்லை என்று சொல்லி அரிசி தருகிறார்கள் தருகிறார்கள் என்று ஆங்காங்கே எட்டிப் பார்த்துவிட்டு ஓடி வருவதை விட இருக்கின்ற வயல்கள் அனைத்தையும் விளைகின்ற பூமிகளாக மாற்றப்படுவது தான் நல்லது என்று கூறி வாய்ப்பு அளித்தமைக்கு நன்கூறிறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் உட்காருங்கள். ஏற்கெனவே நேரம் ஆகிவிட்டது.

***திரு. பி. மாரப்பன்** : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மானியத்தின் மீது எனக்கு பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி நான் இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவுத் துறையிலே விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும்போது பாதி ரூபாயாகவும், பாதி உரமாகவும் கொடுக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால், என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால், இப்போது குடிப்பதற்கு, ஆடு மாடுகளுக்குக் கூட தண்ணீர் கிடையாது. அப்படிப் பட்ட ஏரியாவிலே அந்த ஆடுமாடுகளுடைய, உரங்கள், குப்பை கூளங்கள் விவசாய நிலத்திற்குப் போதுமானது. அப்படிப்பட்ட இடங்களில் பாதி உரத்தை எடுத்தே ஆக வேண்டும் என்று அரசினுடைய கொள்கை இருக்கிறது. அந்த

உரத்தை வாங்கினால் அவர்கள் உடனடியாக விற்கவும் முடியாது. நிலத்திற்கும் போடமுடியாது. ஆகவே, அரசினுடைய கொள்கையை மாற்றி நஞ்சை ஏரியாவிலே நூற்றுக்கு 50 பர்சென்ட் உரத்தை வாங்க வேண்டும் என்று உத்தரவு போட்டால் அது நியாயமாக இருக்கும். மானாவாரி பூமிகளாக இருக்கும் இடத்திலே விவசாயிகளை, பாதியை உரமாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால், அந்த உரத்தை உடனடியாக விற்கவும் முடிவதில்லை. அதை உரக் கடைகளிலே போட்டு, 3 மாதம், 6 மாதம் கழித்து பாதி விலைக்குத் தான் விற்க முடிகிறது. ஆகவே, இந்த கருத்தை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையிலே இருக்கக் கூடிய, நெசவாளர் சங்கங்களுக்கு எல்லாம், சில சங்கங்களுக்குத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. அந்தச் சங்கங்களுக்கு 'ஆபீஸ்-பேரர்ஸ்' தேர்தல் இன்னும் நடைபெறாமல் இருக்கிறது. கவர்னர் ஆட்சிக் காலத்தில் தேர்தல்கள் நடைபெற்று முடிந்து, இன்னும் அவைகளுக்கு 'ஆபீஸ்-பேரர்ஸ்' தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கிறது. அந்த ஆபீஸ்-பேரர்ஸ் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கூட்டுறவு மத்திய வங்கிகள், விவசாயிகளுக்கும் சரி, நெசவாளர்களுக்கும் சரி, அந்தக் கடன் கொடுக்கும் பாலிசியிலே நெகட்டிவ் அப்ரோச்-பாசிட்டிவ் அப்ரோச் என்பதை விட, நெகட்டிவ் அப்ரோச் இதைச் செய்யலாமா என்று எடுத்துக் கொண்டால், செய்வோம் என்ற எண்ணத்துடன் பணியாற்றாமல், செய்யக்கூடாது என்ற எண்ணத்திலே பல கன்டிஷன்கள் போடுகிறார்கள். எதற்குப் பார்த்தாலும் ' நாபார்டு ' கன்டிஷன்கள் என்று பல கன்டிஷன்கள் போட்டு, அந்தக் கூட்டுறவு அமைப்பு எந்த நோக்கத்திலே இந்த நாட்டிலே ஏற்படுத்தப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் Consumers-க்கு (உபயோகிப்பாளர்களுக்கு) அதனுடைய பலாபலன் போய்க் கிடைப்பதற்கு இல்லாமல், பல தவறுகளை, தவறான காரியங்களை அந்தக் கூட்டுறவுத் துறை செய்து வருகின்றது.

குறிப்பாகச் சொல்லப்போனால், நாபார்டு வங்கி, இந்தக் கன்டிஷன்களைப் போட்டிருக்கிறது என்று பல கன்டிஷன்களை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நாபார்டு வங்கியுடன் இந்த அரசும், கூட்டுறவுத் துறை அதிகாரிகளும் பேசி, இந்தக் கன்டிஷன்களை ரிலாக்ஸ் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாகச் சொல்லப் போனால், என்னுடைய தொகுதியிலே நெசவாளர் சங்கங்கள் ஏராளமாக உள்ளன. அந்தக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு அந்த வங்கிகள் கடன் கொடுக்கும்

போது அவர்கள் போடும் கன்டிஷன்கள் நடைமுறைக்கு ஒத்துவராத கன்டிஷன்கள், ஏகப்பட்ட தொந்தரவுகளாக இருக்கிறது. அந்த வங்கி தான் கொடுத்த கடனுக்கு அந்தச் சங்கங்களிலே பொருள் இருக்கிறதா, அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று பார்ப்பதுதான் அவர்களுடைய வேலையே ஒழிய, அந்தச் சங்கங்களினுடைய நிர்வாகத்திலே தலையிடுவதற்கு அந்த வங்கிகளுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று கூறிக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன். அப்படி வங்கிகள் தவறாகத் தலையிட்டால் அந்த வங்கி அதிகாரிகள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் கூடச் சொல்லப் போனால், நெசவாளர்களுக்கு உற்பத்தியிலே இந்த ஆண்டு உற்பத்தியான தொகையிலே 40 சதவீதம்தான் கடன் கொடுப்போம் என்று ஒரு பாலிசி வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்தச் சங்கங்கள் கடனை வாங்கி நடைபெறமுடியாத நிலையிலே இருக்கின்றன. ஆகவே, நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கக்கூடிய கடன்களை உற்பத்தியின் அடிப்படையிலே 75 சதவீதம் ஆகக் கொடுப்பதற்கு இந்த அரசு உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நெசவாளர் சங்கங்களுக்கு உதாரணமாக, 5 இலட்சம் ரூபாய் ஒரு சங்கம் கடன் வாங்கியிருந்தால் அந்தச் சங்கத்திற்கு இந்த அரசு கொடுக்க வேண்டிய தள்ளுபடி மானியத் தொகை 4 இலட்சம் இருக்கிறது. அந்தச் சங்கங்கள் கோ-ஆப்டெக்ஸ்க்கு கடனாகக் கொடுத்த தொகை இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என்று இருக்கிறது. அதுபோல் ஸ்டாக் வேறு. ஆகவே, அந்த சங்கங்கள் நடைபெறமுடியாத சூழ்நிலையிலே இருக்கின்றன. அப்படிப்பட்ட நேரத்தில் அந்த மத்திய வங்கிகள், சர்டிபிகேட் லோனோ, ரிபேட் லோனோ கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. அந்தச் சங்கங்களுக்கு மூன்று மாதத்திற்கு மேலே தள்ளுபடி மானியமோ, கோ-ஆப்டெக்ஸ் நிலுவையோ (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடம் தான் பேசி இருக்கிறேன் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடத்தில் சொன்னபடி பேசினால், தொடர்ந்து வாய்ப்பு அளிப்பேன்.

திரு. பி. மாரப்பன் : ஐந்து நிமிடம் கொடுத்தீர்கள். நான இரண்டு நிமிடம் தான் பேசியிருக்கிறேன். ஆகவே, இந்தச் சங்கங்களுக்கு மூன்று மாதத்திற்கு மேல் இந்த அரசுப் பணம் நின்றாலும்கூட, இந்தச் சங்கங்கள் எப்படி மத்திய வங்கிகளுக்கு வட்டி கட்டுகிறதோ அதேபோல், இந்த அரசு நிலுவைப் பணங்களுக்கு, அரசுத் தரப்பிலிருந்து அந்தச்

சங்கங்களுக்கு வட்டியாகப் பணம் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, இப்போது இருக்கக்கூடிய தள்ளுபடி மானியத் தொகையும், கோ-ஆப்டெக்ஸில் உள்ள பாக்கித் தொகையையும் உடனடியாக வழங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

அடுத்து, இந்த உணவுப் பொருட்கள் வழங்கும் இடத்தில் எடை குறைவாக இருக்கிறது என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். அந்தக் குறை எல்லா இடத்திலும் இருக்கிறது. அதைப் பற்றி நான் இன்னும் ஒரு கோணத்தில் சிந்தித்துப் பார்த்தேன். நகை செய்பவன் கூட நாம் தாலி செய்யும்படி 2 பவுன் வாங்கி கொடுத்தால் கழிவு என்று ஒரு குண்டுமணியை தள்ளி விடுவான். அந்த மாதிரி அரசு அந்த எடை குறைவதற்கு, தூக்கும் போதும், இறக்கும் போதும் குறைவதற்கு தள்ளுபடி என்று ஒரு சத வீதத்தை எக்சஸ் ஆக எடைப் போட்டுக் கொடுத்தால் அவர்கள் சரியாக கொடுப்பார்கள் என்று நான் நினைக் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நகை செய்பவர் நமக்கு கழிவு கொடுக்கிறாரா? (குறுக்கீடு) நாம் கொடுக்க வேண்டும். சேதாரம் தானே;

திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாதிரி அரிசியைக் கொடுத்தால் சரியான எடையில் அவர்கள் கொடுப்பார்கள். எடை சரியாக இல்லை என்றால் அந்த அதிகாரி மீது இன்னும் சொல்லப்போனால் பீல்டில் இருக்கும் அதிகாரிகள் மீது மட்டும் ஆக்ஷன் எடுக்கக் கூடாது, ஹையர் ஆபீசர்கள் மீதும் ஆக்ஷன் எடுத்து 2, 3 பேர்கள் மீது நாம் நடவடிக்கை எடுத்தால் அந்த நிர்வாகம் சரியாக நடைபெறும் என்று நான் உங்களுக்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம் அங்கே இருக்கிற கிளார்க்குகள் செய்வது ஒன்றும் பெரிய தப்பு இல்லை. தப்பு நடந்தால் அதனுடைய இன்ட்யூஸ்மென்ட்டு வேறு இடத்திலிருந்து வருகிறது. ஆகவே அந்த மேல் மட்ட அதிகாரிகள் மீது சிலயிடங்களில் நடவடிக்கை எடுத்தால் இந்த துறை மிக திருப்திகரமாக நடக்கும் என்று நான் கருதுகிறேன். அதை நான் அரசுக்கு ஆலோசனையாக வழங்குகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இந்த குடும்ப அட்டையில் வறுமைக் கோட்டுக்கு கீழ் இருப்பவர்கள் வருமானம் 300 ரூபாய் என்று வைத்து இருப்பதை இப்போது விற்கிற விலைவாசியில் 300 ரூபாய்

1989 ஏப்ரல் 25] [திரு. பி. மாரப்பன்]

என்பது அவ்வளவு சரியாக எனக்குத் தெரியவில்லை. வறுமைக்கோட்டினுடைய அடிப்படை ரூபாய் 500 என்று வைத்து இருந்தால் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மேலும் குடும்ப அட்டைகளை திரும்ப ஒரு முறை வாங்கி சென்சஸ் அடிப்படையில் புதிய அட்டைகளை வழங்கி எல்லோருக்கும் விரைவில் அடுத்த தீபாளிக்குள் புதிய அட்டைகளை வழங்கி எல்லா ஏழை மக்களுக்கும் இந்த உணவு தானியம் இலவசமாக கிடைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறக்கூடிய கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் முன் வருகிறேன்.

இந்த அரசு விவசாயிகளுடைய நன் நோக்கத்தைக் கருதி ஏற்கெனவே இருந்த அரசினுடைய விவசாயிகளுடைய கடன் தள்ளுபடியில் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெறக்கூடாது என்பதற்காக 67 கோடி ரூபாயும், விவசாயிகளுக்கு இந்த ஆண்டு 39 கோடி ரூபாயும் ஆக 106 கோடி ரூபாயை இந்த அரசு நல்ல நோக்கத்தோடு தள்ளுபடி செய்து இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் தமிழகத்தினுடையை உணவு நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு திறமையான அனுபவம் மிக்க அமைச்சராக பொறுப்பு ஏற்று இருக்கிறார்கள். இருந்தபோதிலும் கூட கூட்டுறவினுடைய நடைமுறையில் இருக்கக்கூடிய தவறுகளை களைவதற்கு கவனம் செலுத்தி எதிர்காலத்தில் விவசாயிகளுடைய ஒரு அவல நிலையைப் போக்க வேண்டும், அதற்கு இந்த அரசு முன் வரவேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இங்கே விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களை பற்றி இங்கே சொல்வதற்கு முன்பாக ஒன்றை மட்டும் நான் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

1983 ஆம் ஆண்டு விவசாயிகளுடைய குறுகிய கால கடன் என்பது 41 கோடி ரூபாயாக இருந்தது. 1984ஆம் ஆண்டு அது 134 கோடி ரூபாயாக இருந்தது. அதேபோல் வரிசையாக அது தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு 264 கோடி ரூபாயாக இன்றையதினம் பாக்கி வளர்ந்து கொண்டு இருக்கிறது என்று சொன்னால் இதிலே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகள் வாங்கியிருக்கக்கூடிய கடன்கள் பொதுவாக கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்ச்சியாக

1983 லிருந்து தொடர்ந்து புதிய கடன்களை போட்டு பழைய கடனில் வரவு வைத்ததன் காரணமாக தொடர்ச்சியாகவே கடன் விவசாயிகளுடைய தலையில் சுமந்து கொண்டு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறதே தவிர நேரடியாக விவசாயிகளுக்கு, விவசாயிகளின் உற்பத்திக்கு இந்தக் கடன் போய் நேரடியாகச் சேரவில்லை என்பது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதேபோன்று தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு இன்றையதினத்தில் மேற்கொண்டும் 60 சதவீதம் அளவிற்கு கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று அரசு குறிப்பு இருந்தாலும் கூட பொதுவாக ஒன்றை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, நலிவுற்ற விவசாயிகள் என்று சொல்கிறபோது இன்றைய தினத்திலே பாக்கி இருக்கக்கூடிய அந்த 260 கோடி ரூபாயில் 150 கோடி ரூபாய் இப்போது இருக்கக்கூடிய அந்த நலிவுற்ற விவசாயிகளுடைய தலையில்தான் இந்த பாக்கி இருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய நூற்றிச் சொச்சம் கோடி ரூபாய்கள் மற்ற விவசாயிகளுடைய தலையிலே இருக்கிறது. ஆகையால் இதை ஒரு பட்டியலாகக்கொண்டு இந்த அரசு படிப்பதைவிட ஒரு நிரந்தரமான தீர்வை, விவசாயிகளுக்கு நிரந்தரமான தீர்வை காண்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன்.

1989ஆம் ஆண்டு புதிய கடன்கள் கொடுப்பதற்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நலிவுற்ற விவசாயிகளுடைய 5 ஏக்கருக்கு உட்பட்ட அனைத்து விவசாயிகளுடைய கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்து மற்றும் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய வட்டிகளை முழுமையாக தள்ளுபடி செய்து மற்றவைகளை அவர்கள் ஒரு தவணை முறையிலே கட்டுவதற்கும் மீண்டும் அவர்கள் விவசாயக் கடன் பெற்று விவசாய உற்பத்தியிலே முன்னுக்கு வருவதற்கும் தேவையான எல்லாவித உதவிகளையும் அரசு செய்தால் தமிழகம் உணவு தானியத்திலே அதாவது விவசாய உற்பத்தியிலே தன்னிறைவு பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதற்கு நல்லதொரு சூழ்நிலை உருவாகும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நகை ஈட்டின் பேரில் கொடுக்கக்கூடிய கடன் பற்றி கூற விரும்புகிறேன். 1986 ஆம் ஆண்டு 289 கோடி ரூபாய்க்குப் நகை ஈட்டின் பேரில் கடன் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. 1989-90 ஆம் ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் நகை ஈட்டின் பேரில் கொடுக்கப்படவிருப்பதாக இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. விவசாயிகள் விவசாயத்தில் பணம்போட முடியாமல் கஷ்டப்படுகிறபோது நகைகளை கூட்டுறவு வங்கியின்

மூலமாக வைத்து பணம் பெறுகிறார்கள் என்பதனை அரசு நினைவில் கொள்ள வேண்டும். என்னுடைய திருத்துறைப் பூண்டி தொகுதியிலே இருக்கக்கூடிய கூட்டுறவு பேங்குகளில் நகைஈட்டின் பேரில் பணம் பெறமுடியாமல், விவசாயிகள் அலை கின்ற சூழ்நிலைதான் இருக்கிறது, நகைக்கு பணம் கிடைக்காத சூழ்நிலைதான் இன்றைகக்கு இருக்கிறது. ஆகவே அந்த விவசாயி கள் கூட்டுறவு பேங்குகளில் பணம் பெறமுடியாமல், தனியாரி டத்திலே அதிக வட்டிக்கு அந்த நகைகளை வைத்து சாகுபடி செய்யக்கூடிய ஒரு நிலைமைதான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இதிலே ஒரு வர்த்தக மோசடியே நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய இடைத் தரகர்கள் பலபேர் நகைகளை எடுத்துக்கொண்டு, விவசாயிகள் என்கிற பெயரால் அந்த கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கக் கூடிய அந்த மேலாளருடைய அனுமதியோடு அந்தக் கடன் களைப் பெற்று, இடைத் தரகர்கள்தான் பயன்படக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆகையால் இந்த அரசு நிச்சயமாக இவைகளைக் களைந்து நேரடியாக நகைகள் மூலம் கொடுக்கக் கூடிய அந்தக் கடன்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்ட தவறு களை களைவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று, இவ்வாண்டு விவசாயிகளுக்கு வங்கிகளிலே கொடுக்கக்கூடிய புதிய கடன்களை காலத்தோடு கொடுப்பதற் கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பாக பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கடன்களைப் பற்றி குறிப்பிட்டுப் பேசினார்கள். இரண்டு பேர் ஒருவருக்கொருவர் ஜாமீன்தாரர் என்று சொன்னால் கூட்டுறவுச் சங்கங்களிலே, ஒருவர் வாங்கிய கடனை கட்டி விட்டு, இன்னொருவர் கட்டவில்லை என்று சொன்னால் அவர்களுக்குக் கடன் கொடுக்க முடியாது என்று சொல்லி மறுத்து விடுகிறார்கள். ஆகையால் கடனை முறையாகக் கட்டியவர்களுக்கு மீண்டும் கடன் கொடுப்பதற்கு சட்ட விதிகளை மாற்றி நியாயமான முறையில், நாணயமான முறையில் கடனைக் கட்டக்கூடிய உறுப்பினர்களுக்கு மீண்டும் கடன் பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்கும்பொருட்டு விதிகளை மாற்றுவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவிக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று மிகச் சிறிய விவசாயிகள், இந்த மிகச் சிறிய விவசாயிகளுக்கு லோன் கொடுப்பதாக சமீபத் திலே அறிவித்தார்கள். 115 கோடி ரூபாய்க்கு மேல் அவர்கள் சிறு தொழில் செய்வதற்காக கடன் வழங்கப்

படுவதாகச் சொல்கிறார்கள். அநேகமாக அந்த மாதிரி எந்த கூட்டுறவு சொசைட்டிகளிலும், சாதாரண நலிவுற்ற ஏழையெளிய மக்கள் அந்தக் கடனைப்பெறுவதற்கான வாய்ப்பு இது வரையில் இருந்ததில்லை. சாதாரண கிராமப் புறத்திலே இருக்கக்கூடிய மக்கள் அந்தக் கடனை வாங்கி அவர்கள் தொழில் செய்வதற்கான வாய்ப்பே கிடைப்பதில்லே. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கக் கூடிய செக்கரட்டரிகள், மற்றும் ஊழியர்கள் இந்த விவரங்களைத் தெரிந்துகொண்டு, தனக்குச் சாதகமாக இருக்கக்கூடிய நபர்களைப் போட்டு அந்தக்கடனை எடுத்து, அவர்களுடைய சவுகரியங்களுக்குத்தான் காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்களே தவிர, ஏழையெளிய மக்கள் அந்தக் கடன்களைப் பெற்று சிறு தொழில் செய்வதற்கான வாய்ப்பே அந்த ஏழையெளிய மக்களுக்கு கிடைப்பதில்லை. சிறிய கடை வைத்து வியாபாரம் செய்யக் கூடியவர்கள், காய் கறி வியாபாரம் செய்பவர்கள், இப்படிப் பட்டவர்களுக்கு அந்தக் கடன் போய் சேருவது மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஏதோ ஒருவர் இருவருக்குமட்டும்தான் அந்த கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் கொடுக்கக்கூடிய வழக்கம் இருக்கிறது. ஆகவே, சாதாரண நிலையிலே உள்ள ஏழையெளியவர்களுக்கு அந்தக் கடன்களைக் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டு மென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1—50)

அதைப்போன்று இந்த உணவு தானியங்களைப் பொறுத்த வரையில் பல கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. குறிப்பாக மண்ணெண்ணெய் பற்றிச் சொல்லப்படுகிறது. மண்ணெண்ணெய் சென்னை போன்ற மாநகரங்களுக்கு 10 லிட்டர் கொடுக்கி றார்கள். பேரூராட்சி, நகராட்சிகளுக்கு 5 லிட்டர் கொடுக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்கு 3 லிட்டர்தான் கொடுக்கிறார்கள். 3 லிட்டர் என்பதை 5 லிட்டராக உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக்கூடிய விநியோக முறை களைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கி றார்கள். இனிமேல் உணவுப் பொருள்கள் அனைத்தும், அதாவது ஒரு கார்டுக்கு வழங்கப்பட வேண்டிய பொருள்கள் அனைத்தும் ஒரே நாளில் வழங்கப்படும், ஒரே நாளில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதைப்போன்று கிராமக் கூட்டுறவு அங்காடி களிலும் பொருள்களை இப்படி வழங்க வேண்டுமென்று சொல்லி எனக்கு பேசுவதற்குப் வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

1989 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் கூட்டுறவுத் துறைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 16 பேர்கள் நல்ல கருத்துக்களை வழங்கியதற்காகவும், ஆலோசனைகளை எடுத்து வைத்ததற்காகவும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்ற தத்துவத்தின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டுறவு இயக்கம், இந்தியத் துணைக் கண்டம் மன்னர் ஆட்சியின் கீழ் இருந்த போது மக்கள் ஆட்சித் தத்துவங்களைப் போதிக்கத் தோன்றிய ஒரு பேரியக்கமாகும். ஒருவருக்காக அனைவரும், அனைவருக் காக ஒருவரும் —Each for all, All for each— என்பது இதனுடைய பொதுத் தத்துவம். மக்கள் தாங்களே ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதோடு அதனுடைய நிர்வாகத்தையும் ஏற்று நடத்திட வேண்டுமென்று எண்ணிய ஆங்கிலேயர் ஆட்சி 1904 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் டி.யூ.சி.எஸ். என்ற நிறுவனத்தை, கூட்டுறவுச் சங்கத்தை முதன் முதலாக உருவாக்கியவர் யார் என்று பார்த்தால், தமிழறிஞர் சாமிநாத ஐயர், சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர், ரைட் ஆனரபிள் வி. எஸ். சீனிவாச சாஸ்திரி போன்றவர்கள் 1904 ஆம் ஆண்டு சென்னையிலே இந்த நிறு வனத்தைத் தொடங்கினார்கள். தேசியக்கவி பாரதியார் போன்ற தேசபற்றுடைய கவிஞர் பெருமக்கள் இந்த நிறுவனத்தினுடைய உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். முதலாவது உலகப் போர், இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற அந்த நாளில் அரிசி விநியோகிப்பது, அதைப்போலவே அடுப்பு எரிக்கின்ற கட்டைகள் விநியோகிப்பது போன்ற இவை களிலே ஈடுபட்ட இந்தக் கூட்டுறவு நிறுவனம் இன்று பல்வேறு வகைகளிலே வளர்ந்து ஏறத்தாழ 25,000 சங்கங்கள் என்ற அளவுக்கு உயர்ந்து, உணவைப் பெருக்குதல், வேலை வாய்ப்பை அதிகரித்தல், உற்பத்தித் திறனை உயர்த்துதல், பொதுவான விநியோகம் போன்றவற்றிலே கூட்டுறவுச் சங்கங்கள் கடமையாற்றி வருகின்றன.

இந்த ஆண்டு மட்டும் தமிழகத்திலே கூட்டுறவுத் துறை, உணவுத் துறை ஆகிய இந்த இரண்டு துறைகளும் சுமார் 5,000 கோடி ரூபாய் அளவுக்கு வரவு செலவு செய்துகொண்டிருக் கின்றன. இந்தத் துறைகளிலே கூட்டுறவுத் துறையிலே, குறிப்பாக கோவாப்பரேட்டிவ் கன்சுமர்ஸ் பெடரேஷன் என்றும், கோவாப்பரேட்டிவ் யூனியன் என்றும், 'டான்ஃபெட்' என்றும், பிறகு மத்திய வங்கி, தமிழ்நாடு கோவாப்பரேட்டிவ் வங்கி போன்ற வங்கிகள் என்றும் இன்றைய தினம் செயலாற்றி வருகின்றன.

1989-90 ஆம் ஆண்டில் விவசாயிகளிலே 90 சதவீதத்தினரை கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக ஆக்க வேண்டுமென்று ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 94 இலட்சம் பேர்களில் 8.41 இலட்சம் நபர்கள் இன்று வரையிலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உறுப்பினர்களாகச் சேருவதற்கு அரசாங்கம் 100 ரூபாய் மானியமாகத் தருகிறது. ஏராளமான ஆதிதிராவிட மக்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு இந்த அரசு இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே இன்றைய தினம் மாநகரங்களிலும், நகரங்களிலும் வாழக்கூடிய நலிந்த பிரிவினருக்கு 100 மக்கள் அங்காடிகளும், அரிசனங்கள் வாழக்கூடிய பகுதியிலே 25 சில்லரை அங்காடிகளும் வைக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நகைக்கடனைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பழனிச்சாமி போன்றவர்கள் எல்லாம் இங்கே பேசி இருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். விவசாயிகள் தங்களுடைய இக்கட்டான சூழ்நிலையில் நகைகளைக் கொடுத்தால் சரியாகக் கடன் கிடைக்கவில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு இந்த சிரமத்தைப் போக்குவதற்காக 520 கோடி ரூபாய் நகைக் கடன் கொடுக்க பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் எங்கேயாவது ஒரு இடத்தில் நகைக் கடன் சரியாக வழங்கப்படவில்லை என்ற குறை வருமேயானால் நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாயிகளுக்காக அவசர காலத்திற்காக அந்தக் கடன் வசதியைச் செய்து தரவேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது.

நேற்று வரையில் ஒரு சவரனுக்கு 1,500 ரூபாய் கடன் கொடுக்கலாம் என்றிருந்த நிலையை மாற்றி இன்று தங்கத்தின் விலை கூடி இருக்கின்ற காரணத்தால் 1,800 ரூபாய் வரையில் ஒரு சவரனுக்குக் கடன் கொடுக்கலாம் என்ற உத்தரவு இப்போது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பயிர் ஈட்டுறுதித் திட்டம். அதாவது, இன்சூரன்ஸ் ஸ்கீம் பற்றிச் சொன்னார்கள். இது மத்திய அரசு கொண்டு

1989 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

வந்திருக்கிற திட்டம். எதற்காக இன்சூரன்ஸ் செய்யப்படுகிறதோ அதன் பலன் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை. விவசாயிகள் கடன் வாங்குகிற நேரத்தில் நெல் போன்ற பயிர்களுக்கு 2 சதவீதம் நாம் பிடித்துக்கொண்டு அவர்களுக்கு இன்சூரன்ஸ் செய்து கொடுக்கிறோம். ஆனால் விவசாயம் பாதிக்கப்படுகிற நேரத்தில், அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சொல்கிற நேரத்தில், ஒரு குறிப்பிட்ட தாலுக்கா முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தால்தான் நஷ்ட ஈடு கொடுப்போமே தவிர தனிப்பட்ட ஒருவருக்குக் கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். உங்களுக்குத் தெரியும்— இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மதுராந்தகத்தில் ஏரி உடைந்து அந்தப் பகுதியிலே சுமார் 6000 ஏக்கர் நிலம் விவசாயம் பாதிக்கப்பட்டது. ஆனால் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் அந்தத் தாலுக்காவின் மற்ற பகுதிகள் பாதிக்கப்படவில்லை, எனவே இன்சூரன்ஸ் பணம் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இந்தத் திட்டத்தை நாம் புறக்கணித்து விடக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் மத்திய அரசுக்கு இதை எழுதி சரியான முறையில் இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள இருக்கிறோம்.

அதேபோல மகளிர் நலனுக்காக, விதவைகள் உட்பட நலிந்த பிரிவைச் சேர்ந்த பெண்கள் குடிசைத் தொழிலை மேற்கொண்டு தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் மகிழ்வார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த ஆண்டு முதல் மகளிருக்காக பல்வேறு தொழில்களை ஒதுக்கித் தந்து சங்கங்களை அதிகமாக்குவது மட்டுமல்ல; கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகத்திலேயே தனியாக மகளிர் கூட்டுறவுப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே 'டான்ஃபெட்'— அதாவது தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாக உரம் விற்பனை செய்வதைப் பற்றி மாணபுமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். பொதுவாக தனியார் கடைகளில் இருக்கக்கூடிய விலையைவிட அதிகமான விலையில் இங்கே இந்த டான்ஃபெட் மூலம் உரம் விற்கப்படவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. அப்படி ஏதாவது குறை இருந்தாலும் அதை எல்லாம் நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, இருக்கிற வேலைகள் போதாது என்று மின்சார வினியோகத்தையும் மத்திய அரசு ஒரு திட்டத்தின் கீழ் கொண்டு வந்து ஒப்படைத்திருக்கிறது. அதிலே வேடிக்கை என்னவென்றால் மின்சார இலாக்காவிலே இருக்கக்கூடிய அதிகாரிகளே கூட்டுறவுத் துறைக்கு வந்து ஒரே ஒரு டெபுடி ரிஜிஸ்ட்ராரை மட்டும் இந்த இலாக்கவிலே வைத்துக்கொண்டு அதே வேலையைச் செய்கிறார்கள். கம்பி இழுப்பது, கம்பம் நடுவது, சர்வீஸ் கொடுப்பது, பில் அனுப்புவது என்று அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 350 கோடி ரூபாய் மின்சார வாரியம் நஷ்டத்திலே இருக்கிறது. கூட்டுறவுத் துறைக்கு வந்து, இந்தத் துறையே ஆண்டு ஒன்றுக்கு மூன்று பகுதிகளில் அந்தத் திட்டத்தை அமல்படுத்தி, கும்பகோணம், திருமயம், வந்தவாசி ஆகிய பகுதிகளில் அதை அமல்படுத்தி ஆண்டு ஒன்றுக்கு 40 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடிய அளவுக்கு இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்ததற்குக் காரணம் மற்ற மாநிலங்களில் சரியாக மின்சார வினியோகம் இல்லை. எனவே கூட்டுறவுத் துறையின் மூலம் கொண்டு வந்தால் கொஞ்சம், கொஞ்சமாக இந்தியா முழுவதும் சிறப்பாக இந்தத் திட்டத்தை அமல்படுத்தலாம் என்ற நல்ல எண்ணத்திலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்திற்கு அது தேவையில்லை. ஏனென்றால் ஏறக்குறைய எல்லாக் கிராமங்களும் மின்சார வசதி பெற்றிருக்கின்றன. அதுமட்டுமல்ல, போதிய மின்சார உற்பத்தி இல்லையே தவிர, மின்சாரத்தை வினியோகிப்பதில் எந்தக் குறையும் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் எங்களுடைய டெபுடி ரிஜிஸ்ட்ராரை உங்களுக்குத் தருகிறோம், நீங்களே—கூட்டுறவு முறையில்—மின்சார வாரியமே நடத்திக்கொள்ளுங்கள் என்ற ஒரு ஆலோசனையை வழங்கலாமா என்று இந்த அரசாங்கம் கருதிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-00)

இன்றைய தினம் வேலையில்லாத பட்டதாரிகள் நாட்டிலே ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் இரண்டு இடங்களிலே சொஸைட்டிகள் அமைத்து கட்டுமான கூட்டுறவுச் சங்கம் வேண்டுமென்று கேட்ட போது, அரசு ஒப்புதல் தந்தது. அதற்காக இன்றையதினம் பண உதவி செய்தது மட்டுமல்ல, அவர்களுக்கு ரூ. 2,85,69,000 மதிப்புள்ள ஒப்பந்தப் பணிகளையும் அவர்கள் ஏற்று நடத்தக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் அந்தப் பொறியாளர்கள், படித்தவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள் என்பது மட்டுமல்ல. லாபமும் பெறுகிறார்கள். எனவே இந்தத் திட்டத்தை இன்னமும் உற்சாகப்படுத்த வேண்டுமென்ற

முறையிலே, மேலும் எங்காவது பொறியியல் வல்லுநர்கள் படித்து வேலையில்லாமல் இருப்பார்களேயானால், அவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இன்னும் இரண்டு இடங்களிலே தொடங்குவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடனுக்கு 8 சதவிகிதம் வட்டி மட்டும் வாங்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

உடல் ஊனமுற்றவர்கள் தமிழகத்திலே 2.35 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். உடல் ஊனமுற்றவர்கள் நலன் கருதி உடல் ஊனமுற்றோர் நல கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 50,000 வீதம் பங்கு மூலதனத்தை அரசாங்கம் இலவசமாகக் கொடுத்திருக்கிறது. உடல் ஊனமுற்றவர்களுக்காக என்று பல்வேறு திட்டங்களை உருவாக்கி இருக்கிறது.

அதுபோலவே, பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம். 5.2 லட்சம் மலை ஜாதி மக்கள் வாழ்கின்றனர். இந்த குறிப்பிட்ட பிரிவினருக்காக, இன்று இருக்கின்ற 1.9 லட்சம் மலைவாழ் மக்களுக்கன மேம்பாடு திட்டம் என்று 16.16 கோடி ரூபாய் அளவிலே திட்டங்கள் வகுக்கப்பட்டு, 46,979 பழங்குடியினர் பயன் அடையக்கூடிய வகையில் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டிருக்கின்றன. 1985 ஆம் ஆண்டு வரையில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கடனுக்கு 4 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்பட்டு வந்தது. இனிமேல் அந்தப் பழங்குடியினரிடமிருந்து, வட்டியே வசூலிப்பதில்லை என்று இந்த அரசு எடுத்த முடிவினைத் தொடர்ந்து அவர்களுக்கு வட்டியில்லாமலேயே கடன்களைக் கொடுப்பது என்றும், அந்த வட்டியை அரசாங்கமே மானியமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட பகுதியினர் பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, தேனி வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல் போன்ற தொழில்களிலே ஈடுபட இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது போலவே, விவசாயிகளுடைய கடனைப் பற்றி இங்கே சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்திலே, குறிப்பாக, சிறு விவசாயிகளுடைய கடன்களைப் பொறுத்தவரையில் வாக்குறுதி தந்திருந்தோம். நம்முடைய திரு. சிங்காரம் அவர்களே கூட அவர்களுக்கே உரிய நடையிலே சிங்காரமாக சில வார்த்தைகளைச் சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது ஏதோ அரசாங்கத்திற்கு விவசாயிகள் மீது அக்கறை இல்லையோ என்ற எண்ணம் வந்துவிடக் கூடாது என்பதற்காக சிலவற்றைச் சொன்னார்கள். இன்றைய தினம் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் போது மத்திய கால மாற்றுக் கடன் மீதான அசல் தள்ளுபடி மட்டும், அசல்

மட்டும் ரூ. 7,77,35,000 தள்ளுபடி செய்திருக்கின்றார்கள். தவணை நீடித்த மத்திய கால மாற்றுக் கடன் மீதான அசல் தள்ளுபடி 416.22 கோடி. ஆக 11,93,51,000 ரூபாய் அசல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. மத்திய கால மாற்றுக் கடன் மீதான வட்டி தள்ளுபடி ரூ. 200.28 லட்சம். தவணை நீடித்த மத்திய கால மாற்றுக் கடன் மீதான வட்டித் தள்ளுபடி ரூ. 1,00,67,000. இதுபோல மத்திய கால மாற்றுக் கடன் மீதான அபராத வட்டி ரூ. 80,50,000. தவணை நீடித்த மத்திய கால மாற்றுக் கடன் மீதான அபராத வட்டி ரூ. 25.60 லட்சம் குறுகிய கால வேளாண்மைக் கடன் மீதான அபராத வட்டித் தள்ளுபடி ரூ. 7,53,33,000. மத்திய கால மாற்றுக் கடன் மீதான அபராத வட்டித் தள்ளுபடி 2,39,89,000. நீண்டகால கடன் மீதான, ஒதுக்கப்பட்ட வட்டி தள்ளுபடி 1292 லட்சம். ஆக இதுவரையில் 30 கோடி ரூபாய் அளவுக்கு அரசாங்கம் இந்த ஆண்டு விவசாயிகளுக்கு கடனையும் வட்டியையும் தள்ளுபடி செய்வது என்று அறிவித்திருக்கிறது.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் இருந்தபோது, அந்த அரசு அறிவித்த சில சலுகைகளுக்கு, கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணம் வராமல் இருந்தது. அறிவித்துவிட்டார்கள். விவசாயிகள் பயன் அடைந்து விட்டார்கள். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு கொடுக்கவேண்டிய அந்தப் பணம் வந்து சேரவில்லை. அது 61 கோடியே 51 லட்சம். ஆகமொத்தமாகப் பார்த்தால் 100 கோடியே 51 லட்சம் ரூபாய் அளவிற்கு இந்த அரசு, கலைஞர் தலைமையில் இருக்கக்கூடிய இந்த அரசு விவசாயிகளுக்காக இன்று சலுகைகளைத் தந்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சேமிப்புக் கிடங்குகளைப் பற்றி மாண்புமிகு திரு. பூவராகன் அவர்கள் கொஞ்சம் வருத்தத்தோடு சொன்னார்கள். நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொன்ன கருத்துக் களிலே எனக்கு எந்தவிதமான மாறுபாடும் கிடையாது.

கூட்டுறவுத் துறையிலே தவறே நடக்கவில்லை, நூற்றுக்கு நூறு கூட்டுறவுச் சங்கங்கள் உண்மையாக வேலை செய்கின்றன என்று நான் ஏற்றுக்கொள்ளவில்லை. தவறுகள் நடப்பது மனித சமுதாயத்தில் எங்கும் நிகழக்கூடியதுதான். ஆனால் கூட்டுறவுத் துறையிலே அது கொஞ்சம் அதிகமாக இருக்கும். ஒன்றை வேதனையோடு நான் சொல்கிறேன். கடந்த காப ஆட்சியைச் சொல்லி இங்கே நேரத்தை நான் வீணாக்க விரும் வில்லை. ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். ஓர் அதிகாரி கூட்டுறவுத் துறையிலே, ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் மட்டும் 1 கோடி ரூபாய் தனியாக சம்பாதித்

திருக்கிறார். பல இடங்களிலே அவருக்கு சொத்துக்கள் சேர்த்திருக்கிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடுகள் வாங்கியிருக்கிறார். இப்படி ஓர் அதிகாரியே வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் மற்றவைகளை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கே விட்டுவிடுகிறேன். விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று எல்லோருக்கும் கேட்கத்தோன்றும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றைக்கு இங்கே சொன்னது போல நான் சொல்ல விரும்பவில்லை— இது மக்களுடைய பணம்— ஒரு நல்ல நோக்கத்திற்காக கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்திருக்கும் நிலையில்— இவ்வாறு தவறு செய்தவர்கள் எவ்வளவு பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி அவர்கள் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் குறிப்பிட்ட அந்த அதிகாரி மீது ஆளுநர் ஆட்சியிலே புகார் பெறப் பெற்று அந்தப் புகார் மீது ஆளுநர் அவர்கள் இதை விஜிலென்ஸ் கமிஷன் விசாரிக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனால் விஜிலென்ஸ் கமிஷனின் அறிக்கையை இந்த அரசு எதிர்ப்பார்க்கிறது. அந்த அறிக்கை வந்த உடனே நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அதைப் போலவே சேமிப்புக் கிடங்குகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். சேமிப்புக் கிடங்குகளில் சில தவறுகள் நடைபெறலாம். மூட்டை தூக்கி வைக்கக்கூடியவர்கள் ஊசிபோட்டு எடுக்கும்போது கொஞ்சம் அரிசி வரும். இப்படிப்பட்ட தவறுகள் சில இடங்களில் நடைபெறுகிறது. ஆனால் இனிமேல் அப்படி நடைபெறாமல் பார்ப்பது இந்த அரசின் கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுகுறித்து இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். ஆனால் வேடிக்கை என்னவென்றால் இந்தியாவிலேயே, ஏன் ஆசியாவிலேயே என்று சொல்கிறேன். இதை நான் பெருமையோடு சொல்கிறேன். காரணம் இது தமிழ்நாட்டில் இருக்கிற காரணத்தால். தமிழ்நாட்டிலுள்ள சேமிப்புக் கிடங்குகள் தான் மிகச் சிறப்பாக செயல்படுகின்றன என்று சொல்லி 1988 ஆம் ஆண்டுக்கான அவார்ட் என்று சொல்லி 'ஈஸ்ட் டிரேட்' என்கிற நிறுவனம் ஏசியா அவார்ட் என்கிற அவார்டைக் பாராட்டிக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள். நமக்கே அவார்ட் கொடுத்திருக்கிறார்கள் என்றால் மற்ற சேமிப்புக் கிடங்குகள் நிலை எப்படி இருக்கும் என்பதை அவர்களின் யூகத்திற்கே விட்டுவிடுகிறேன். இருந்தாலும் சேமிப்புக் கிடங்குகளைப் பொறுத்தவரையில் பல இடங்களில் அவை வேண்டுமென்று நாம் உணர்ந்திருப்பதால் அதற்காக நிறைய முதலீடு செய்திருக்கிறோம். வட ஆற்காடு மாவட்டத்தில் காட்பாடி, சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், தர்மபுரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி மற்றும் சென்னையில் கோயம்பேடு ஆகிய இடங்களில் குளிர் சாதன சேமிப்புக் கிடங்குகளைக் கட்டவும் முடிவு செய்திருக்கிறோம். இவைகளை 130 லட்சம் ரூபாய் செலவில் அமைக்க இருக்கிறோம்.

அடுத்து, அறுவடைக்குப் பிறகு தொழில் பயிற்சி அளிக்கவும், உலோக குதிர் ஒவ்வொன்றும் 375 ரூபாய் மதிப்புள்ளதை 500 விவசாயிகளுக்குக் கொடுக்கவும் முடிவு செய்திருக்கிறோம். அதற்கு 4 லட்சம் ரூபாய் செலவாகும். இதற்கு என்ன அடிப்படை என்றால் விஞ்ஞான ரீதியாக உணவைச்சேமித்து வைத்து, பூச்சிக்கொல்லி மருந்தின் மூலம் உணவு இருப்பை பாதுகாத்து வைக்க வேண்டும் என்பதாகும். இப்படி உணவுப் பொருட்கள் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக இதுபோன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இம்மாதிரி இருப்பு செய்யப்படுகின்ற உணவுப் பொருள்களை கெட்டுப்போகாமல் நாம் பாதுகாக்க வேண்டும். இதற்காகதான் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அடுத்து, ஒருங்கிணைந்த கூட்டுறவுப் பயிற்சித் திட்டத்தின் மூலமாக பல மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். முதல் கட்டமாக காமராஜர் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அதனை 8.6 லட்சம் ரூபாய் செலவிலே 5 ஆண்டுகளில் செயல்படுத்த இருக்கிறோம். அடுத்து, தென்னாற்காடு மாவட்டத்தில் அதனை செயல்படுத்த இருக்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலம் ஒரே நேரத்தில் வேளாண்மைத் தொழில் பொருள்களை விற்பனை செய்தல், பதப்படுத்தல், சேமித்து வைத்தல், வினியோகித்தல், கைத்தறி மற்றும் கிராமத் தொழில் பொருள்கள், பால் பண்ணைகளின் பொருள்கள், பட்டுப்பூச்சி போன்ற எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறோம்.

அடுத்து, கடைமடை விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் பண்ணைக்குளங்களை அமைக்கும் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மழைக் காலத்தில் அல்லது தண்ணீர் வருகின்ற நேரத்தில் விவசாயிகள் தண்ணீரைச் சேமித்து வைக்க முடியவில்லை. எனவே, இப்படி ஒரு திட்டம் விவசாயிகளுக்காக, பண்ணைக் குளங்கள் என்கிற பெயரில் அமைத்து, மழைக் காலங்களில் தண்ணீரைச் சேமித்து வைத்து, தண்ணீர்ப்பற்றாக் குறை காலத்தில் விவசாயிகள் அதனைப் பயன்படுத்தும் வகையில் நடைமுறைப் படுத்தப்படும். அதனால் கடைமடை விவசாயிகள் பயனடைவார்கள். ''நாபார்ட்'' உதவியோடு நில வள வங்கிகள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை நான் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் குறிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-10)

வீடு கட்டுவதற்கான கடன்கள் இதுவரையிலே நம்முடைய வீட்டு வசதி வாரிய அமைச்சரிடத்தில் தனியாக

1989 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இருந்தது. இருந்தாலும் நாட்டிலே நலிவுற்ற பிரிவின ருக்கு இன்னும் வீடுகள் கட்டித்தர வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே வீடுகள் கட்டித்தரப்படும். இந்தக் கடன்கள் பெரும்பாலும் நகரில் உயர் வருவாய் பெறுபவர்களுக்கு மட்டுமே கிடைத்து வருகிற காரணத்தால், கிராம மக்களுக்கு வீடு கட்டும் திட்டம் இதுவரை இல்லாத காரணத்தால், இன்றைய தினம் வீடுகள் கட்ட கடன் வழங்கும் திட்டம் மூலமாக ஒரு இலட்சம் புதிய வீடுகளை 5 ஆண்டுக்காலத்திலே கட்டுவதற்கு கடன் வசதி கொடுக்க இப்போது அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு உடனடியாக 10,000 வீடுகள் கட்டுவதற்கு நலிந்த பிரிவினருக்கு கடனாகப் பணம் கொடுக்க இந்தத் துறை முன் வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிலவள வங்கிகளில் கடன் பெறும் முறையை இப்போது எளிதாக்கியிருக்கிறோம். முன்பு பத்திரங்கள் பதிவு செய்யப் பட்ட பிறகுதான் பணம் வாங்க முடியும். அதை மாற்றி பத்திரங்களை வங்கியில் ஒப்புவித்தவுடன் கடன் கொடுக்கும் ஏற்பாட்டை இன்றையதினம் செய்திருக்கிறோம். அதைப் போல இன்றையதினம் நில வள வங்கிகள் கிராமப் புறங்களிலே உள்ள விவசாயிகளுக்கு மட்டுமல்லாது எல்லாப் பிரிவினருக்கும் கடன் வழங்கியிருப்பதால், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி என்று பெயர் மாற்றப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குளிர்பதனக் கிடங்கு ஒன்று 2000 டன் வரையிலே கொள்ள ளவு கொண்ட கிடங்கு ஒன்று, சென்னையிலே பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கோயம்பேட்டில் உருவாக்கப்பட இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போல மன்னார்குடியில் இயங்கி வரும் குருணை வடிவ பாமணி உரத்தயாரிப்பு ஆலை இன்றையதினம் நல்ல முறையிலே பணி யாற்றி, 3000 மெட்ரிக் டன் மாதமொன்றுக்கு உரம் உற்பத்தியாகிகிறது. விளைச்சல் காலத்திலே, தொழிலாளர்கள் கிடைக்காத காரணத்தாலே, அதை இயந்திர மயமாக்க வேண்டுமென்று முடிவு செய்து, அதற்காக 7.9 இலட்சம் ரூபாய் செலவிலே அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிற தென்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூன்றாவது திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியால் ஒரு கூட்டுறவுப் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. கிடங்குப் பொறுப்பிலுள்ள 4000 கூட்டுறவுப் பணியாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு 3200 என்ற வீதத்தில் 128 இலட்சம் ரூபாய் அளவுக்கு பண்டகசாலைப் பயிற்சி அளிக்க இருக்கிறோம். பயிற்சிப் பொருள்களை அவர்கள் பணியாற்றும் இடத்திலேயே தயார்

செய்து வழங்க மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 20 பயிற்சியாளர்களை நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே இந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நடைமுறையிலே உள்ள குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு நிறுவனங்களிலே பணியாற்றும் பணியாளர்கள் பணிக் காலத்திலே இயற்கை எய்திவிட்டால் அவர்கள் வாரிசுதாரர்களுக்கு 12,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இதனை இன்று முதற்கொண்டு 20,000 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்திருக்கிற தென்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களைப் பற்றி எல்லாம் மாண்புமிகு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். இனிமேல் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தம் போடப்பட்டு, அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதிலே ஏதாவது இடையூறுகள் இருக்குமானால், அமைச்சர் என்ற முறையிலே நானே தலையிட்டு, அலுவலக அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், இடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயற்சிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் கடந்த வாரம் கடலூர் அச்சகத்திலே உள்ள பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்களை வரவழைத்து, உட்கார்ந்து பேசி, ஒரு மணி நேரத்திலே, அவர் மகிழத்தக்க அளவுக்கு ஒப்பந்தம் நிறைவேறியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு கூட்டுறவுப் பணியாளர்களுக்கு சில பயிற்சிகளை அளிக்கிறோம். அந்தப் பயிற்சிகள் மாநிலத்திலே 9 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் வாயிலாக நடத்தப்பட்டு வருகின்றன. இருந்தாலும் பல ஊழியர்கள் அந்தப்பயிற்சி பெறாமலேயே வேலையிலே இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வேலையில் இருக்கக் கூடாது என்று சிலர் தடுக்கிறார்கள். ஏனெனில் ஏற்கெனவே வேலையில் நியமிக்கப்பட்டவர்களை, 4 ஆண்டுக்காலம், 5 ஆண்டுக்காலம் வேலை செய்தவர்களை வீட்டுக்குப் போங்கள் என்று சொல்வது ஒரு அரசாங்கத்திற்கு நல்லதல்ல என்று முடிவு செய்துள்ளதால், தபால் மூலம் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, சர்ட்டிபிகேட் கோர்ஸ் என்ற அளவில் சர்ட்டிபிகேட் கொடுத்து. அவர்களை நிரந்தரப்படுத்தும் திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறதென்பதைத் தெரிவித்து, அது இந்த ஆண்டு அமுல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே, பி.ஏ. (கோவாப்பரேஷன்) என்று ஒரு புதிய டிகிரி கோர்சைத் தொடங்கலாமா என்று அரசு யோசித்து வருகிறது. நம்முடைய கல்வி அமைச்சரவர்களையும் கலந்து, இந்த ஆண்டு இல்லா

விட்டாலும் அடுத்த ஆண்டிற்குள்ளாக அப்படிப்பட்ட கோர்வை தொடங்க அரசு முயற்சிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களில் பேசாதவர்களே கிடையாது. எல்லோருமே பேசியிருக்கிறார்கள். அதிலிருந்து அவர்கள் ஆர்வம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. அதிகாரிகளுடைய ஆட்சி வேண்டாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆட்சி வேண்டும் என்ற அவர்களின் ஆவலை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அந்தக் காரணத்தாலே சட்டதிட்டங்களிலே இருக்கிற சில திருத்தங்களைக்கூட இந்தக் கூட்டத்தொடரிலேயே கொண்டு வந்து, விரைவில் தேர்தல்களை நடத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்வோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, நுகர்வோர் பாதுகாப்புக் குழுபற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் போன்றவர்கள் குறிப்பிட்டு அது என்னவாயிற்று என்று கேட்டார்கள். மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படுத்த விரும்பி முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைக் கேட்டேன். அவர் இல்லை இல்லை, உணவு அமைச்சர் என்ற முறையில் நீங்களே தலைவராக இருங்கள் என்று சொல்லி விட்டார்கள். அதன் அடிப்படையில் அரசினர் 13 பேர்களும், அரசினர் அல்லாதோர் 24 பேரும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட இருக்கிறது. மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் குழு ஒன்றும் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. அப்துல் காதர் அவர்களின் தலைமையில் நிறுவப்பட்டிருக்கிறது. மாவட்ட நுகர்வோர் குறைகளைத் தீர்க்கும் குழு என்ற முறையில் 6 மண்டலக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அது மத்திய அரசின் ஒப்புதலுக்குப் போயிருக்கிறது. அது வந்தவுடனே அதன் பெயர் விவரங்கள் அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து உணவு பற்றியும் இங்கே பேசினார்கள். உணவுத் துறையில் இருக்கிற சில பிரச்சினைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுக்கு உரிய கோணத்தில் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு நாம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறோம். மழையில்லை. பருவமழை பொய்த்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் யாரும் தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது. மத்திய அரசாங்கத்தோடு ஏதோ மோதிக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு எந்த நேரத்திலும் இல்லை. ஆனால் நான் நிலைமையை எடுத்துச்

சொல்வதில் தவறு ஒன்றும் இருப்பதாக யாரும் நினைக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இங்கே திரு. லத்தீப் அவர்கள் கொஞ்சம் வேகமாகவே பேசினார். அது அவருக்கே உரிய பாணி, நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புவது 'ஜனவரி வரை நமக்கு மாதம் ஒன்றுக்கு 80,000 டன் மத்திய அரசு கொடுத்தது. அதைப்போலவே டிசம்பர் மாதத்திலும் கொடுத்தது. அதற்குப் பிறகு....... (மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி எழுந்தார்) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதற்காக எழுந்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். நான் முதலில் சொல்லிவிடுகிறேன். அப்புறம் எழுந்திருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் எழுந்திருக்கவில்லை. சும்மா நிமிர்ந்து உட்கார்ந்தார். அவ்வளவுதான். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: அவருக்கு மத்திய சர்க்கார் என்று சொன்னாலே உடனே எழுந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு இருக்கிறது. அது தானாகவே அவருக்கு வந்துவிடுகிறது. கட்சிக்கு அந்த அளவுக்கு உண்மையாக அவர் இருப்பதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் கூட எழுந்து கொள்கிறார்.

நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் நமக்கு அதிலே கருத்து வேறுபாடு இல்லை. தமிழ்நாட்டிற்கு உணவு வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு யாருக்கும் இருக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியமானாலும் சரி, மாண்புமிகு திருமதி ரமணி நல்லதம்பியானாலும் சரி, மாண்புமிகு திரு. சிங்காரமானாலும் சரி, இங்கே நமக்கு உணவு வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க நியாயமில்லை. 80,000 டன் மத்திய அரசால் இரண்டு மாதங்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் பிப்ரவரி-மார்ச்சில் ஏன் குறைத்துவிட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கேட்கிறார். எங்களுக்கும் காரணம் தெரியவில்லை. அதைப்போலவே டிசம்பர்-ஜனவரியில் ஏன் கொடுத்தார்கள் என்பதற்கான காரணமும் தெரியாது. ஆனால் ஒன்றைச் சொல்ல முடியும். 2 மாதங்களுக்குத்தானே கொடுத்தார்கள் என்று சொல்ல முடியும். அதற்கு முன்பு 50,000 டன் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த 50,000 டன்களையாவது கொடுப்பார்களா என்று கேட்டால், இல்லை, 40,000 டன்தான் என்று குறைத்து விட்டார்கள். இந்த நிலைமைதான் இப்போது இருக்கிறது. இதைப் பிரச்சினையாக ஆக்க விரும்பவில்லை. காரணம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதமரிடம் 2 முறை சந்தித்தபோது இதை வற்புறுத்தி இருக்கிறார்கள். நானும் மத்திய அமைச்சர் அவர்களைச் சந்தித்து வேண்டுகோள்

1989 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

விடுத்திருக்கிறேன். கடிதங்கள் கூட எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் இதுவரை பதில் இல்லை. ஆனால் நாடாளுமன்றத்திலே 4 நாட்களுக்கு முன்னாலே மாநில அரசுகளுக்கு அளிக்கப்படும் அரிசியின் அளவை உயர்த்தப் போவதில்லை என்ற அபாயகரமான அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள்.

எனக்கிருக்கிற வேதனை எல்லாம் மத்திய அரசிடத்தில் வேண்டுமானால் அரிசி இல்லாமல் இருக்கலாம். நான் அதைக் குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால் வெளி நாட்டிலிருந்து இங்கே அரிசியை இறக்குமதி செய்ய அனுமதிப்பார்களா என்றால்—உங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன்.—நாம் அரிசியை இங்கே ரூ. 3.25 ரூ. 3.40 ஒரு கிலோவுக்குக் கொடுத்து வாங்கித்தான் கிலோ ரூ. 1.75, ரூ. 2, ரூ. 2.50-க்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் கிலோ ஒன்று ரூ. 2.50-க்கு மெக்சிகோ நாட்டிலிருந்து எவ்வளவு அரிசி வேண்டுமானாலும் நாங்கள் தமிழகத்திற்குத் தருகிறோம் என்கிறார்கள். அதுமட்டுமல்ல, உடனடியாகப் பணம் தர வேண்டாம்—10 ஆண்டுக் காலம் கழித்துக் கொடுங்கள் என்று அந்த நாட்டில் இருப்பவர்கள் சொல்கிறார்கள். இதற்காவது அனுமதி கொடுப்பார்களா என்று கேட்டால் மத்திய அரசின் அனுமதி—அந்நியச் செலாவணிக் கொள்கையின் அடிப்படையில் உணவுப் பொருளை நாம் இறக்குமதி செய்ய முடியாது என்பதால்—மறுக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இருக்கிற அரிசியை வைத்து மக்களைக் காப்பாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்கே பேசிய திரு. சிங்காரம் அவர்கள் தாராளமாகக் கேட்டார்கள். மற்ற உறுப்பினர்களும்கூடக் கேட்டார்கள். 5 கிலோ அரிசி கொடுத்தீர்களே அது 12 பிளஸ் 5 கிலோவா அல்லது 12 கிலோவில் 5 கிலோவா என்று கேட்டார்கள்.

[பிற்பகல் 2-20]

மத்திய அரசு மட்டும் 80 ஆயிரம் டன் கொடுக்குமேயானால் 12 பிளஸ் 5 கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. அரிசிப் பற்றாக்குறை இருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலே அந்த 12 கிலோவுக்குள்ளே தான் 5 கிலோ அரிசியை இலவசமாகத் தந்து இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டிலே இன்றையதினம் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும் என்ற ஒரு அபாயகரமான அறிவிப்பு வியாபாரிகளால் அறிவுறுத்தப்பட்டபோது உடனடியாக முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்து கூட்டுறவு கன்சூமர் பெடரேஷன் மூலமாக வெளி மாநிலங்களிலிருந்து அரிசி வாங்கி, கூட்டுறவுக் கடைகள் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் 4 ரூபாய் 50 காசிலிருந்து 4 ரூபாய் 60 காசுக்கும் அதிகமாக

விற்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு இன்றையதினம் நடைபெற்று பல இடங்களில் விநியோகிக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்று நம்முடைய மக்கள் தொகை 5 கோடி. ஆனால் ரேஷன் கார்டில இருப்பவர்கள் தொகையைப் பார்த்தால 6¼ கோடி. நீங்கள் கேட்கலாம், இது எப்படி நடந்தது என்று. எப்படியோ கடந்த ஆட்சியிலே நடந்து விட்டது. அந்த முறைப்படுத்துவதற்கு மே மாதம் 1-ஆம் தேதியிலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசகர் திரு. குகன் தலைமையில உணவுத் துறை ஆணையர், சிவில் சப்ளைஸ் கமிஷனர், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தலைவர், பதிவாளர் ஆகியவர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்து, இந்த வேறுபாடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளவும், போட்டிருக்கிறார்கள்—அதைப்போலவே 300 ரூபாய் என்று கார்டிலே போட்டு, பிறகு ஏழை என்று சொல்லி 500 ரூபாய் என்று சொல்லி, போட்டிருக்கிறார்கள்—இதுபோன்ற குறைபாடுகளைப் போக்கவும், உண்மையிலேயே 2,000 ரூபாய் சம்பாதிப்பவர்கள 300 ரூபாய் என்று போட்டும், 200 ரூபாய் சம்பாதிப்பவர்கள் 2,000 ரூபாய் என்று போட்டும் இருக்கக்கூடிய அந்த நிலையை மாற்றவும், இதையெல்லாம் சீர் செய்வதற்காக மே மாதம் 1-ஆம் தேதியிலிருந்து அந்தக் குழு செயல்பட இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு விரைவிலே அந்தக் குழு பணியாற்றி 1990 ஜனவரி 1-ஆம் தேதி அன்று யார் யார் 300 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு இந்த 5 கிலோ அரிசித் திட்டத்தை முறையாக அமல்படுத்தவும், இலவச-வேஷ்டி சேலைத் திட்டத்தை அமல்படுத்தவும், தனி கலர் கொண்ட ஒரு குடும்பக் கார்டு வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தக் கார்டுகளைத் தனியான கலரில் கொடுத்துவிட்டால் அவர்கள் வங்கிகளிலே கூடப் போய் சிறு விவசாயிகள் அல்லது குறைந்த வருமானமுள்ளவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்று கடன் வாங்குவதற்கும் அந்தக் கார்டு போதுமென்ற அடிப்படையிலே இந்த ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சமையல் எண்ணெயைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். நான் வேதனையோடு சொல்கிறேன். நமக்கு ஒரு கார்டுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு கிலோ கொடுப்பது என்று சொன்னால் கூட 13 ஆயிரம் டன் பாமாயில் நமக்கு வேண்டும். முதலிலேயே கடந்த ஆண்டு 10 ஆயிரம் டன் வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வந்தார்கள். இன்றைக்கு

1989 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, ஒரு மாதத்திற்கு 3,600 டன் என்று குறைத்துவிட்டார்கள். இப்போது இந்த மாதம் ஆயிரம் டன்தான் கொடுக்கப்படும் என்று உத்திரவு வந்து இருக்கிறது. ஆக இப்படிப்பட்ட சூழ்நிலையில் எல்லாம் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் நம்முடைய நாட்டின் நன்மைக்காக, மக்களுடைய நன்மைக்காக அவர்களுடைய அமைச்சர்களைச் சந்திக்கும்போது, தலைவர்களைச் சந்திக்கும் நேரத்தில், மற்ற மாநிலங்களில் கொடுப்பது போல் இங்கேயும் கொடுங்கள் என்று வற்புறுத்த வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இங்கே சர்க்கரை வழங்கும்போது ஒரு கார்டுக்கு 425 கிராம்தான் வழங்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொல்கிறது. 425 கிராம் என்று கணக்குப் போட்டு விநியோகிப்பதிலே காலதாமதம் ஏற்படும். கணக்குகளிலே குழப்பம் ஏற்படும் என்று நம்முடைய அரசு 500 கிராம் சர்க்கரை இன்றையதினம் வழங்கிக் கொண்டு வருகிறது. ஆனால் மத்திய அரசு உங்களை யார் 500 கிராம் வழங்கச் சொன்னது நாங்கள்தான் 425 கிராம் வழங்கச் சொன்னோமே என்று கேட்டார்கள். நான் இந்தியா ஒரே நாடுதான். டில்லியிலே இருக்கிறவர்களுக்கு 800 கிராம் தருகிறார்கள்; தமிழ்நாட்டிலே இருக்கக் கூடியவர்களுக்கு 500 கிராம் கொடுக்கக்கூடாதா என்று கேட்டேன். அப்படியா என்று கேட்டுவிட்டு, கவனிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதுவும் கிடைத்தால் நாம் மகிழ்ச்சி அடைவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் மண்ணெண்ணெய் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொல்லி இருக்கிறார்கள். நகர்ப்புறத்திலே உள்ளவர்களுக்கு 10 லிட்டர் என்றால், கிராமப்புறத்திலே இருப்பவர்களுக்கு 3 லிட்டரா என்று கேட்டு இருக்கிறார்கள். அது ஒரு நியாயமான கேள்வி. நகர்ப் புறத்திலே மின்சாரமும் இருக்கிறது, கேஸ் அடுப்பும் இருக்கிறது. ஆனால் கிராமப் புறத்திலே குடிசைப் பகுதியிலே எந்த வசதியும் இல்லை. அந்த நியாயமான கோரிக்கையை இந்த அரசாங்கம் உரிய நேரத்தில் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது நம்முடைய மாநிலத்தில் கொள்முதலைப் பொறுத்தவரையில், எதிர்பார்த்த கொள்முதல் நடைபெறவில்லை. குறைந்தது 15 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லாவது கொள்முதல் நடக்கும் என்று நினைத்தோம். ஆனால் 8.75 இலட்சம் மெட்ரிக் டன் நெல்தான் நேற்று வரையிலே கொள்முதலாகி இருக்கிறது. இன்று நம்முடைய அரிசியினுடைய கையிருப்பு 4.8 இலட்சம் மெட்ரிக் டன்கள். இவற்றை வைத்துக்

கொண்டு எப்படி மாநிலத்திலே அரிசித் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி. எச். பாண்டியன், திரு. ரமணி போன்றவர்களெல்லாம், விவசாயிகளுக்காக பெரிய குரல் கொடுத்தார்கள். அதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. விவசாயிகளுக்கு இன்றையதினம் கொடுத்துக் கொண்டிருக்கிற விலை நியாயமான விலை என்று இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், எதற்கெடுத்தாலும் நாம் மத்திய அரசாங்கத்தைத்தான் எதிர்பார்க்க வேண்டும். இந்த விலை நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரம், மத்திய அரசாங்கத்திலே இருக்கிறது. அவர்கள் சொன்னதைப்போல, கோதுமை லாபி அதிகமாக வேலை செய்கிறதோ என்னவோ அது தெரியாது. ஆனால், நெல்லைப் பொறுத்தவரையிலே நாம் எவ்வளவுதான் காரணங்களை எடுத்துச் சொன்னாலும் மத்திய அரசாங்கம் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. இன்று Common Paddy என்ற வகைக்கு 160 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 170 ரூபாயும் fine varietyக்கு 180 ரூபாயும் ஒரு குவிண்டாலுக்கு என்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

இந்த விலை கட்டுப்படி ஆகாது என்று தமிழக அரசு கருதிய காரணத்தாலே, அவர்களை ஊக்குவிப்பதற்காக குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் நம்முடைய அரசாங்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இதனாலே இந்த அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 38 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இதையும் அதிகரிக்கக் கூடாதா என்று கேட்டார்கள். நம்முடைய திரு. சிங்காரம் கேட்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் வெட்டுத் தீர்மானத்திலே குவிண்டாலுக்கு 225 ரூபாயாவது நியாயமான விலை பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு 226 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர்களைவிட ஒரு ரூபாய் அதிகமாகத்தான் இந்த அரசாங்கம் கேட்டிருக்கிறது என்பதிலேயிருந்து இந்த அரசாங்கத்தினுடைய உணர்வுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்றையதினம் உணவுப் பொருளைப் பொறுத்தவரையிலே, என்னதான் ஒரு அரசாங்கம் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் மாண்புமிகு உறுப்பினர்

1989 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, கடத்தல் என்பது சமுதாயத்திலே ஊறி விட்ட ஒன்றாக இருக்கிறது. உற்பத்தி செய்கின்ற விவசாயிக்கு இலாபம் கிடைக்கவில்லை. ஆனால் கடத்தக் கூடியவர்கள் பக்கத்திலே கேரளாவுக்குக் கொண்டு போய் ஒரு லோடுக்கு கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபாயிலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய் வரையில் சம்பாதிக்கிறார்கள். இதைத் தடுப்பதற்காக இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடனே, எல்லா செக் போஸ்டுகளையும் சரியான முறையிலே கண்காணிக்கச் சொல்லி, நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

இருந்தாலும், காவல்துறையிலே ஃபுட் செல்-இலே இருக்கக்கூடிய சில அதிகாரிகளுடைய—நான் விவரமாகச் சொல்ல விரும்பவில்லை—துணையோடு கடத்தப்பட்ட காரணத்தினாலே, அந்த ஃபுட் செல்லிலே இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்று ஒரு முடிவெடுத்து தற்போது ஏறக்குறைய 265 பேர்களில் 165-க்கும் மேற்பட்ட அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல; மீதியிருக்கின்ற 100 பேரையும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக மாற்றிவிட்டு, புதிதாக எல்லோரையும் போடுகிறோம் என்பது மட்டுமல்ல; மூன்றாண்டுக் காலம், நான்காண்டுக் காலம் ஒரேயிடத்தில் இருந்தால், இந்தத் தவறுகள் நடக்கும் என்பதை இந்த அரசு உணர்கின்ற காரணத்தினாலே ஃபுட் செல்லிலே பணியாற்றக்கூடிய எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர்கள் ஓராண்டுக்கு மேலே அந்த இலாக்காவிலே பணியாற்றக்கூடாது என்ற முடிவையும் இந்த அரசாங்கம் எடுத்து இருக்கிறது.

இருந்தாலும்கூட அவர்கள் தவறுதான் செய்தார்களா, கடமையாற்றவில்லையா என்றால், கடமையையும் ஆற்றியிருக்கிறார்கள். சிலயிடங்களிலே சோதனைகளை நடத்தி, கடத்தலைப் பிடித்திருக்கிறார்கள்; தடுத்திருக்கின்றார்கள். இந்தக் கடத்தல் செய்கின்றவர்களைச் சட்டம் தடுத்துவிட முடியாது. நம்முடைய சமுதாயம் விழிப்போடு இருக்க வேண்டும். இருந்தாலும்கூட, இந்தக் கடத்தல் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் இனிமேல் தொடர்ந்து அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களைக் கடத்துவார்களேயானால் கடுமையான சட்டத்தின் கீழ் ஆறு மாதங்கள் வரையிலே அவர்களைச் சிறையில் வைக்கலாமா என்பது போன்ற ஒரு சட்டத்தை, ஏற்கெனவே மத்திய அரசிலுள்ள சட்டத்தை அமல்படுத்தலாமா என்று இந்த அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே வேதனையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே இன்றையதினம் நம்முடைய ரேஷன் கடைகளைப் பற்றியெல்லாம் பேசுகின்ற நேரத்திலே, தவறு

நடக்கின்றது என்றெல்லாம் சொன்னார்கள். தவறே நடக்க வில்லை என்று நான் வாதாட விருமபவில்லை. 21,134 ரேஷன் கடைகள் இருக்கின்ற நேரத்தில், சில தவறுகள் நடக்கலாம். அங்கே பணியாற்றக் கூடியவர்கள் இதற்கு முன் பிருந்த ஆட்சியாலே நியமிக்கப்பட்டவர்கள்.

(பிற்பகல் 2-30)

2½ கிலோ சர்க்கரை என்று எடை போட்டுக் கொடுப் பார்கள். நான் போய் சோதனை போட்ட இடத்தில் 2 கிலோ தான் இருந்தது. அதற்காக அவர்கள் மீது நட வடிக்கைதான் எடுக்கலாமே தவிர வீட்டிற்கு அனுப்பிவிட முடியாது. கொஞ்சம், கொஞ்சமாகத்தான் திருத்த வேண்டி யிருக்கிறது. இன்னமும் சொலகிறேன், அப்படி அங்கே பணி யாற்றக்கூடிய ஊழியர்களில் சில பேர் முன்பிருந்த ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களாகக் கூட இருக்கிறார்கள். கையில் பச்சை குத்திக்கொண்டிருக்கிறார்கள். பிறகு முன்னாள் முதல் வருடைய படத்தைக் கூட மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக இவர்களையெல்லாம் நாங்கள்.......

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆட்சிக் காலத் தில் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் தவறு செய்கிற நேரத்தில் நாங்கள் பொறுப்பாளி என்று சொல கிறார்கள். அவர்கள் ஆளுகிற காலத்தில் அதிகாரிகளை உண்டாக்கி எங்கள் காலத்தில் அவர்கள் இருந்து தவறு செய்தார்களே, அதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்தக் குற்றமும் சொல்லவில்லை. இருக்கிறார்கள். அப்படித் தான் நடந்து கொண்டு வருகிறார்கள். இருந்தாலும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தான் சொல்ல வந்தேன். ஆனால் அந்தத் தவறுகளைத தொடர்ந்து அனுமதிக்க முடியாது. முதல் தடவை என்ற காரணத்தால ஒரு 'வார்னிங்', அடுத்து தொடர்ந்து தவறு செய்தார்களானால் கடுமையான நடவடிக்கை என்ற முறையில்தான் இந்த அரசாங்கம் இன்றையதினம் நடவடிக்கையில் ஈடுபட்டிருக் கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர், அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க மாட்டோம், 'வார்னிங்,' எச்சரிக்கை என்றெல்லாம்

1989 ஏப்ரல் 25] [திரு. பெ. சீனிவாசன்]

சொல்கிறார்கள். இது உணவுத்துறை. இதிலே எச்சரிக்கை, 'வார்னிங்' என்று போனால் நாள் நீடித்துக் கொண்டு போகும். தவறுகளை இன்னும் கொஞ்சம் சட்டப்படி செய்வதற்கு அவர்கள் கற்றுக் கொள்வார்கள். எனவே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்த எடுப்பிலேயே கடுமையான நடவடிக்கை தேவையில்லை என்று தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கருதிய காரணத்தால், மனிதாபிமானத்தோடு, ஆனால் அதே நேரத்தில் கடுமையாகவும் இருக்க வேண்டும். முதல் தடவை 'வார்னிங்' அடுத்து அந்தத் தவறைச் செய்வார்களானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை. வேலையிலிருந்து கூட நீக்குவதைப் போல நடவடிக்கை எடுக்கும்படி முடிவு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

கடந்த ஆட்சிக்காலத்தில் 'சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்' நடத்தி வந்த ரேஷன் கடைகளை, அங்கே பணியாற்றிய ஊழியர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்தால் திடீரென்று ஒருநாள் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அவர்களையெல்லாம் வீட்டிற்கு அனுப்பிவிட்டு எல்லாக் கடைகளும் கூட்டுறவுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. உடனே அந்தத் தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குப் போனார்கள். நீதிமன்றத்தினுடைய படிக்கட்டுகளில் ஏறி ஏறி உச்ச நீதிமன்றம் வரையில் போனார்கள். கடைசியாக உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பைத் தந்தது. அந்தத் தொழிலாளர்களை வீட்டிற்கு அனுப்பக்கூடாது என்ற ஒரு தீர்ப்பைத் தந்தது. முன்பிருந்த அரசாங்கம் அவர்களை நாங்கள் வீட்டிற்கு அனுப்பமாட்டோம் என்று சொல்லிக் கொண்டே 3,600 பேர்களுக்கு வேலையில்லாமல் நேற்று வரையில் சம்பளம் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். அரசாங்கப் பணம் இப்படி 3600 பேர்களுக்கு வேலைசெய்யாமல் கொடுத்துக் கொண்டிருப்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவேதான் இந்த அரசாங்கம் அந்த 936 ரேஷன் கடைகளில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டில்,—இருந்த 3,600 ஊழியர்கள்—யார் வேலை இழந்து இன்றைய தினம் வரையில் வேலை செய்யாமல் சம்பளம் வாங்கிக் கொண்டு வருகிறார்களோ அவர்களிடம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த செப்டம்பர் 15-ம் நாள் முதற்கொண்டு அந்த 936 கடைகளும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு அவர்கள் அந்தப் பணிகளில் நியமிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஒரு பிரச்சினையைக் கேட்கலாம். அப்படியானால் இப்

போது கூட்டுறவுத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு வேலை போய் விடாதா என்று. இந்த அரசாங்கம் அவர்கள் மீதும் அனுதாபம் கொண்டு, விரைவில் கூட்டுறவுத் துறை மூலம் நடத்தவிருக்கிற மதுக் கடைகளில் அந்த ஊழியர்களை நியமிக்கும்படி கூட்டுறவுப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்,

மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் பற்றி இங்கே சொன் னார்கள். நான் பல கொடவுன்களில் போய்ப் பார்த்தேன், உண்மையில் அவர்கள் லாரிகளில் மூட்டைகளைத் தூக்கிப் போட்டுப் போட்டு அவர்களுடைய முதுகே ஒரு கேள்விக்குறி யாகி இருக்கிறது. அவர்களுக்கு நிரந்தரமாக வேலை இல்லை. காண்ட்ராக்ட் என்ற முறையில் இருக்கிறார்கள். இது சம் பந்தமாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்து பேசினேன். அவர்கள் ஒப்புதலோடு சொல்கிறேன், யார் யார் அப்படி அந்த கொடவுன்களில் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்களோ அந்தத் தொழி லாளர்களை எல்லாம் நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் இந்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே ஐந்து கிலோ இலவச அரிசி போட்டதைப் பற்றி யெல்லாம் சொன்னார்கள். நான் இந்த மன்றத்திலே சொன் னேன். இதிலே அரசியல் இல்லை, அரிசி தான் இருக்கிறது. இந்த அரிசியை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து வழங்குங்கள் என்று வேண்டுகோள் விடுத்தேன். திரு. சிங்காரம் அவர்கள் கூடச் சொன்னார்கள். கொடி கட்டலாமா என்று கேட்டார். எந்த அரசாங்க ஊழியரும் கொடி கட்டவில்லை, திராவிட முன்னேற்றக் கழகக் கொடியைக்கட்டி அரிசி வழங்க வேண்டுமென்று யாருக்கும் எந்தவிதமான உத்தரவும் பிறப் பிக்கப்படவில்லை. உங்களுக்கு எல்லாம் தெரியும். ஒரு கட்சி என்றால் வெளியிலே சில நடவடிக்கைகளில் ஈடுபடுவது உண்டு. அப்படி திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை முதன் முதலாக தமிழ் நாட்டில் நிறைவேற்றுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை மக்களுக்குத் தெரிவிக்கக் கூடிய வகையில், கட்சி அந்த நட வடிக்கைகளில் ஈடுபடுகிறது. உடனே ரேஷன் கடைகளிலே கொடியைக் கட்டலாமா என்று கேட்பது நியாயம்தானா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரத்திற்குச் சொல் கிறேன். நாம் சுதந்திரம் பெற்று 42 ஆண்டுக்காலம் ஆகிறது. சுதந்திர நாள் கொண்டாடுகிறோம், நாம் தேசியக்கொடி யைத்தான் ஏற்றப்போகிறோம். அங்கே காங்கிரஸ்காரர்கள்

கொடியை கட்டுவதே யில்லையா? .எப்படி அந்தப் பொது நிகழ்ச்சிகளிலே அந்தக் கட்சி, அந்த விழாக்களிலே ஈடுபடுகிறதோ, அப்படித்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள், இந்த விழாக்களிலே ஈடுபட்டு இருப்பார்களே தவிர அரசாங்கம் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனாலும்கூட இதிலே கட்சி வேறுபாடின்றி எல்லாக் கட்சிகளும் பங்கேற்று இருக்கின்றன. அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், ஒன்றியப் பெருந்தலைவர்களும், கிட்டத்தட்ட 16, 17 பேர்கள் அரிசி வழங்கியிருக்கிறார்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 15 பேர்கள் அரிசி வழங்கியிருக்கிறார்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் பலர் அரிசி வழங்கியிருக்கிறார்கள் கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியா, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரிசி வழங்கியிருக்கிறார்கள். பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அரிசி வழங்கியிருக்கிறார்கள், இப்படி கட்சி வேறுபாடு இல்லாமல், (குறுக்கீடு). காங்கிரஸ்காரர்களுடைய பெயர் இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் போகாமல் இருக்கலாம். அது மனவளத்தைப் பொறுத்தது. யாராவது மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை என்றால் அது மனவளமே தவிர அரசாங்கம் தடையாக இல்லை, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயரையும் போட்டு விழா நடத்த வேண்டும் என்று இலாக்காவினரிடம் நாங்கள் சொல்லியிருந்தோம். அதற்கு நேரம் இல்லாமல் எங்கே போய்விடுமோ என்றுதான் அவசரமாக, சட்டமன்றத்திலே கூட நான் அழைப்பு விடுத்தேன். எனவே இதுவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பால சுப்பிரமணியம் போன்றவர்கள் கலந்துகொள்ளாமல் இருந்தாலும், அடுத்து வருகின்ற விழாக்களிலே அவர்கள் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருந்தார்கள். அதுவும் தொழிலாளர் பிரச்சினையிலே பேசும்போது, திடீரென்று சம்பந்தம் இல்லாமலே பேசினார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதா அவர்களை மதிக்கக்கூடியவன், ஏன் என்றால், நீண்டகாலமாக திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவர். அவர் குறிப்பிட்டதைப் போல, கலைஞருக்காக உழைத்தவர், நான் இல்லை என்று மறுக்கவில்லை. பல பொறுப்புக்களை ஏற்றவர், ஆனால், அப்படிப்பட்டவர் எல்லாம் இந்த அவையிலே பேசுகின்ற நேரத்திலே ஒரு பொறுப்புணர்ச்சியோடு, இது நடந்திருக்குமா, நடந்திருக்காதா, என்ன, ஏது என்ற விவரங்களைச் சேகரித்துப் பேசி இருந்தால் நான் மகிழ்ந்து இருப்பேன், அவர்கள் சொல்கிறார்கள்,

''சமீபகாலத்திலே நீங்கள் கொடுத்திருக்கிற இலவச அரிசி இருக்கிறதே, பல்வேறு இடங்களில் தவறாகக் கொடுக்கப்பட்டு, $3\frac{1}{2}$ கிலோ, 4 கிலோ, $4\frac{1}{2}$ கிலோ என்ற அளவிற்கு அரிசி கொடுத்ததிலே என்ன தவறு நடந்துவிட்டது. ஆனால் அந்தத் தவறு யார் தலையிலே விடிகிறது என்று சொன்னால், அரசினுடைய தலையிலேதான் விடியும், பல்வேறு அதிகாரிகளுக்குச் சொன்னோம், தொழிற்சங்கத்திலேயிருந்து எழுதிக் கொடுத்தோம், இன்றைக்கு அரிசி கொடுத்திருக்கிறார்கள். 5 கிலோ அரிசி இருக்கிறதா என்று பாருங்கள் என்று சொன்னோம், எங்களுடைய தொழிற்சங்கத்திலேயிருந்து 640 பேர்களை அரிசியை வாங்கி அளந்து பார்க்கும்போது, எவ்வளவு குறைந்தது என்றால், 2 கிலோவிலிருந்து, அரைக் கிலோ வரையிலே குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப் பார்த்தால், ஏறத்தாழ 30 லட்சம் பேர்களுக்குக் கொடுத்திருக்கிற அரிசியிலே மட்டும் 9 கோடி ரூபாய் யாரோ சாப்பிட்டு விட்டார்கள், என்று நான் இந்த இடத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்,'' இப்படி ஒரு தவறு நடந்திருக்குமானால், யார் மீதோ பழியைப் போட்டுவிட்டு நான் ஒதுங்கிக் கொள்ளத் தயாராக இல்லை. என்னுடைய இலாக்காவில் ஏதோ ஒரு இடத்திலே ஒரு அரை கிலோ குறைந்தது: 2 கிலோ குறைந்தது, இரண்டு இடத்திலே என்று சொல்லுங்கள். நான் மறுக்கவில்லை. ஆனால் 9 கோடி ரூபாய் அளவிற்கு யாரோ சாப்பிட்டு விட்டார்கள் என்றால், நான் சொல்கிறேன், அதை நிரூபித்தால் நான் அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நான் ஏன் இதை வேதனையோடு சொல்கிறேன் என்றால் இந்தத் திட்டமே 7 கோடி ரூபாய்த் திட்டம், (சிரிப்பு) இதிலே போய் எப்படி 9 கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கும் எனக்குத் தெரியவில்லை, ஆகவே பேசுகின்ற உறுப்பினர்கள் தயவு செய்து ஆதாரங்களோடு பேசுவது நல்லது என்பது மட்டுமல்ல. இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன், ஏதோ இந்த அமைச்சர்

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எல்லா எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களையும் அழைத்து அரிசி வழங்கும் விழாவை நாங்கள் பெருந்தன்மையோடு நடத்தினோம் என்று சொன்னார்கள். அதிலே, எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. எங்களை எல்லாம் அழைத்தார்கள். நாங்கள் போகாததற்குக் காரணம், அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள், நாங்கள் அங்கே போய்ச் சேருகிற நேரத்திலே, ஏதாவது பிரச்சினைகள் வந்து விடக்கூடாது என்ற எண்ணத்தோடுதான் நாங்கள் ஒதுங்கி

யிருந்தோம். இங்கே அமைச்சர் அவர்கள், நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைக் கொடியை மட்டும் கட்டச் சொல்லியிருந்தோம் என்று சொன்னார்கள். என்னிடம் ஒரு நோட்டீசே இருக்கிறது. ஒவ்வொரு ஊரிலேயும் எந்தெந்த ரேஷன் கடை என்று போட்டு, அந்த ஊரினுடைய கிளைச் செயலாளர், ஊரினுடைய ஒன்றியச் செயலாளர், அந்தப் பகுதியிலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எங்கெங்கே அரிசி கொடுப்பார்கள் என்று சொல்லி, நோட்டீசே அடித்திருக்கிறார்கள். அங்கேயிருக் கிற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களோ, சேர்மனோ அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களோ வழங்கி யிருந்தால் எனக்கு அதிலே மாறுபட்ட கருத்தில்லை,

(பிற்பகல் 2-40)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் சொல்வதிலிருந்து நான் மாறுபடவில்லை. அவர் ஒன்றை நன்றாகக் கவனிக்க வேண்டும். 21,134 கடைகள் இருக்கின்றன. 21,134 சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ் நாட்டில் இருப்பார்களேயானால் அவர்களை வைத்துத்தான் போட்டிருப்போம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந் தால் அவர்களை வைத்துத்தான் போட்டிருப்போம். அரசு ஆணை வெளியிடுகின்ற நேரத்திலே நாடாளுமன்ற உறுப்பினர் கள், மாநிலங்கள் அவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப் பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், ஊராட்சிமன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் இவர்கள் எல்லாம் எங்கேயாவது இல்லாமல் இருந்தால், பொது நல ஊழியர்கள் யாராக இருந்தாலும் அவர்களை வைத்து அரிசி வழங்கலாம் என்று சொல்லியிருந்தோம். அந்தப் பகுதி யில் இருக்கக்கூடியவர்கள் ஒரு வேளை திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர்களைப் பொது நல ஊழியர்களாகக் கருதி இருக்கக்கூடும். (சிரிப்பு) எனவே இதிலே எந்தவிதமான தவறும் நடந்ததாக நான் நினைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குறைபாடுகள் இருக்குமானால், அதைக் கூட அடுத்த முறை வழங்குகின்றபோது, வேறுபாடுகள் இருக்குமேயானால், அதைப் போக்கிக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். நான் ஒன்றை மட்டும் இங்கே சொல்கிறேன். ஏதோ இந்த அமைச்சரவையிலே உட்கார்ந்து கொண்டு, ஏதோ நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம். ஏதோ ரூ. 9 கோடி எல்லாம் யாரோ சாப்பிட்டார்கள் என்று சொல்லக் கூடியவர்களுக் குச் சொல்கிறேன். இந்த அமைச்சரவையில் இருக்கின்றவர் கள் இந்த ஐந்து ஆண்டுக் காலத்திலே எந்தக் காரணத்தைக் கொண்டும் நீங்கள் ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்ற

அளவிற்கு நிச்சயமாக நாங்கள் நடந்துகொள்ள மாட்டோம் என்பதை நான் உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். இந்த அமைச்சர் பதவியிலே இருப்பதைவிட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக டாக்டர் கலைஞர் அவர்கள 10 ஆண்டுக்காலம் இந்த நாட்டிலே பணியாற்றியபோது அவர் பக்கத்திலே இருந்ததைத்தான் நான் இன்னமும் பெருமையாகக் கருது கிறேன். ஏனென்று சொன்னால், அவரைப் போல் இன்னல் களை ஏற்றுக்கொண்டவர்கள் இந்த நாட்டில் இல்லை. இன்றைய தினம் நான் அமைச்சராக இங்கே இருப்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் 1976 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் எங்களை ''மிசாவில்'' சிறைச்சாலை யிலே அடைத்து எங்களைக் கொடுமைப்படுத்தித் தாக்கிய நேரத்தில் நான் இறந்து போயிருந்தால், இன்று 13 ஆண்டுகளாகி இருக்கும். இங்கே தம்பி திரு. மு.க. ஸ்டாலின் அடிபட்டாா களே, அவர் இறந்து போயிருந்தால் 13 ஆண்டுகள் ஆகி யிருக்கும். எங்கள் வாழ்க்கையிலே நாங்கள் வாழ்ந்துகொண்டு இருப்பதையே ஒரு போனசாகக் கருதுகிறோமே தவிர, அமைச்சர் பதவியை நாங்கள் போனசாகக் கருதவில்லை.

அதுமட்டுமல்ல, நான் இன்னமும் சொல்லிக்கொள்கிறேன். தமிழ் வாழ்க என்று சொன்ன ஒரு குற்றத்திற்காக எங்களுடைய தலைவர் கலைஞரும், பேராசிரியரும், மற்றவர்கள் எல்லாம் தண்டிக்கப்பட்டு, அவர்கள் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டு 25000 பேர்கள் தமிழ்நாட்டிலே ஒரே நாளில் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் இன்று முதல்வராக இருக் கின்ற கலைஞரும், நானும், கென்னடி போன்ற ஒரு மாணவர் அணியைச் சார்ந்த தம்பியும், இவர்கள் எல்லாம் அவருக்குப் பக்கத்திலே 5 பேர் இருந்தோம். எங்களை மட்டும் தனியாகப் பிரித்து மீண்டும் ஒரு முறை 15 நாட்கள் சிறைச்சாலையில் இருக்கவேண்டுமென்று தீர்ப்பு வந்தது. நான் தீர்ப்பைச் சொல்லவில்லை. அப்படி அந்தத் தீர்ப்பு வந்த 1987 ஜனவரி மாதம் 30 ஆம் நாள் சிறைக்குள்ளே போகிறோம். போன வுடனேயே அதிகாரியினுடைய பார்வை வேறு விதமாக மாறிற்று. அன்று வரையில் அரசியல் கைதிகளான எங் களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்ட காரணத்தால் நாங்கள் கிரிமினல் குற்றவாளிகள். எனவே உள்ளே நுழைந்தவுடன் எங்களுக்கு விதிமுறைகளைச் சொன்னார்கள்; இப்படி இப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று, நாங்கள் கவலைப் படவில்லை. அதற்கு மறுநாள் 7 ஆண்டுக்காலம் முதலமைச்ச ராக இருந்த கலைஞருக்கு, இந்த நாட்டிலே தமிழுக்குத் தொண்டாற்றிய ஒரு தலைவருக்கு, 50 ஆண்டுக்காலம் பொது வாழ்க்கையிலே தன்னுடைய வாழ்நாளைக் கழித்த ஒருவருக்கு சிறை அதிகாரிகள் சாதாரண கிரிமினல் குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற கைதி உடைகளைக் கொண்டு வந்து கையிலே

கொடுத்து, அதை அவர் போட்டுக்கொள்ள வேண்டுமென்று சொன்னபோது அந்த ஒருநாள் தான் என்னுடைய வாழ்க்கையிலேயே நான் வேதனைப்பட்டிருக்கிறேனே தவிர, மீதி நாட்களில் நாங்கள் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. இருந்தாலும் நான் வேதனைப்பட்ட நேரத்தில் அவர் சொன்னார், ஏன் கலங்குகிறீர்கள் என்று கேட்டார். உங்களுக்காக என்கின்றேன். ஆம், தமிழுக்காக வருத்தப்படக் கூடாது. அதற்காக அணிந்துகொள்வோம் என்ற அவர், அந்த உடையை அணிந்தபோது, இன்று சொல்கின்றேன். அன்றைக்கு இருந்த ஆட்சி, நிச்சயமாக வேறு எதற்காக மாறாவிட்டாலும், முதலமைச்சராக இருந்த ஒருவருக்கு ஒரு கைதி உடை கொடுத்து, வேடிக்கை பார்த்ததே, அதற்காகவாவது இந்த நாட்டிலே ஆட்சி மாறாதா என்று நினைத்தவர்களிலே நானும் ஒருவன். அப்படியெல்லாம் நடந்தது. எனக்கு இருந்த பெருமை எல்லாம், அப்படி அவர் கஷ்டப்படும்போது அவர் பக்கத்திலே இருந்தேனே என்ற அந்த நிலையை எண்ணித்தான் நான் பெருமைப்படுவேனே தவிர, அமைச்சர் பதவியிலே ஏதோ நான் பெருமைப்படுவதாக தயவு செய்து யாரும் நினைக்கக்கூடாது என்று தெரிவிக்கின்ற அதே நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் ஆண்டிற்கு மூன்று முறை இலவச அரிசி கொடுப்போம் என்றார்கள். கொடுத்திருக்கிறோம். குறைபாடுகள் இருக்குமேயானால், அதை நாங்கள் களைவதற்கான முயற்சிகள் எடுக்கின்றோம். அந்த 5 கிலோ அரிசி கொடுத்த நேரத்திலே ஏழைகள் எந்த அளவிற்கு வரவேற்றார்கள் என்பதை எண்ணிப் பார்த்த நான், இந்த ஆட்சியிலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களிலிருந்து, நமது கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களிலிருந்து எங்களை எல்லாம் ஆளாக்கிய அண்ணா அவர்களிலிருந்து நான் எண்ணிப் பார்த்தேன்.

இந்த நாட்டிலே வறுமை இருக்கிறது. மக்கள் பட்டினியாலே வாடுகிறார்கள். அதிலேயும் வறட்சி இருக்கிற நேரத்திலே ஏதாவது அரிசி இன்னும் கிடைக்காதா என்று எதிர்பார்க்கிறார்கள். நம்முடைய சி.பி.ஐ. யினுடைய நிர்வாகக் குழுவிலே கூட ஒரு தீர்மானம் போட்டிருந்தது. மாதத்திற்குப் பத்து கிலோ அரிசி இலவசமாக வழங்க வேண்டும் வறட்சி காரணமாக என்று நம்முடைய திரு. மாணிக்கம் தலைமையிலே இருக்கக்கூடிய அந்தக் குழு தீர்மானம் போட்டதைப் பத்திரிகையிலே பார்த்தேன். ஆக இந்த நிலைமைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கிற இந்த அரசாங்கம் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி, எங்களையெல்லாம் உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் அன்று 5 கிலோ இலவச அரிசி வழங்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே இன்றையதினம் எத்தனையோ இன்னல்களுக்கு இடையிலே தமிழுக்காக, தமிழனுக்காக, தமிழ் இனத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிற இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 50 ஆண்டுக் காலம் பொது வாழ்க்கையிலே கழித்து பொன் விழாக் கண்டிருக்கக்கூடிய இந்த ஆண்டில், 1989-ஜூன் 3ஆம் தேதி அவர்களுடைய பொது வாழ்க்கைக்கு வயது-50 நிறைவு பெற இருக்கிறது. எனவே அவருடைய பெயராலேயும் ஜூன் மாதம் 3ஆம் தேதி 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னும் எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றி தெரிவிக்க வேண்டுமென்று கருதினாலும் கூட—காலத்தினுடைய அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வளவோ கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் மனத்திலே வைத்துக்கொண்டு—நம்முடைய மாண்புமிகு திருமதி ரமணி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அது முதலமைச்சர் கவனிக்க வேண்டிய விவகாரம். பனை மரத்தில் ஏறுகின்றவர்கள் பற்றியும் அவர்களுடைய உரிமை பற்றியும் சொன்னார்கள். அது போல எந்தெந்தப் பிரச்சினைகள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டதோ அவைகளையெல்லாம் குறித்து வைத்திருக்கிறேன்— அடுத்த ஆண்டு உணவு— கூட்டுறவு பற்றிய மானியம் வரும்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்துக்களின் பேரில் இலாக்கா எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும் அச்சிட்டு உறுப்பினர்களுக்குக் கொடுக்க இருக்கிறேன் என்பதையும் மகிழ்ச்சியோடு இந்த அவையில் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஏற்கும்படி அவை உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர்களுக்கு கவனம் வேண்டும். மணி 2-47 ஆகிறது என்பதை நினைவில் வைத்துக் கொண்டு தொடரலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொடுக்கிற அரிசியைப் பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசாங்கத்திற்கு என்று கொள்முதல் செய்வதற்குத் தனியாக நிலம் கிடையாது. மாநிலங்களிலே இருந்துதான் அவர்கள் கொள்முதல் செய்கிறார்கள். எந்த மாநிலத்திலேயிருந்து அரிசி கொள்முதல் செய்யப்படுகிறதோ அந்த மாநிலத்தில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுகிற நேரங்களில்தான் அரிசி அந்த மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது என்றாலும் முன்பு முதல்வராக இருந்த

1989 ஏப்ரல் 25] (திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்)

மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 40 ஆயிரம் டன் ஒரு மாதத்திற்கு இங்கே வறட்சியின் காரணமாகத் தரப்பட்டது. அதே அளவுதான் ஆளுநர் ஆட்சியிலும் தரப்பட்டது. பிறகு டிசம்பர் மாதம், ஜனவரி மாதத்திலே அரிசி வரத்து, நெல் வரத்து மார்க்கெட்டிலே முழுமையாகக் குறைந்து போய், கொள்முதல் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்ட காரணத்தாலே இங்கே அரிசித் தட்டுப்பாடு ஏற்படக் கூடாது என்று ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 80 ஆயிரம் டன் வழங்கப்பட்டது. அதுதான் உண்மையான நிலைமை.

பிறகு ஜனவரியிலே மார்க்கெட்டுக்கு நெல் வர ஆரம்பித்து, அரிசி கொள்முதல் ஆரம்பமாகிவிட்டது என்பதை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். அதனாலேதான் பிப்ரவரியிலே குறைக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அது மட்டும் அல்ல, இங்கே அமைச்சர் அவர்கள் ஆணித்தரமாக இரு விஷயங்களைச் சொல்லி இருக்கிறார்கள். 12 கிலோ அரிசியை எந்த வகையிலேயும் குறைக்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் சென்ற மாதம் தாக்கீது பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பல கடைகளிலேயிருந்து நான் அறிகிறேன். ரேஷன் கார்டுகளுக்கு அரிசி 40 சதவீதம் குறைக்க வேண்டும். அதேபோல சர்க்கரை 20 சதவீதம் குறைக்க வேண்டுமென்று தாக்கீது பிறப்பிக்கப்பட்டு சென்ற மாதத்திலேயிருந்து அரிசி 40 சதவீதக் குறைப்பும் சர்க்கரைக் குறைப்பும் இருக்கிற காரணத்தாலே வெளி மார்க் கெட்டிலே விலை ஏறிக்கொண்டிருக்கிறது.

அதைப்போல இன்னொரு விஷயம், மத்திய சர்க்காரை நாங்கள் குற்றம் சுமத்துவதில்லை என்று சொல்லுகிறார்கள், ஒவ்வொரு ரேஷன் கடையிலேயும் மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையைக் குறிப்பிட்டு அதில் நாங்கள் 20 பைசா குறைத்திருக்கிறோம் என்று நோட்டீஸ் ஒட்டியிருக்கிறார்கள். இங்கே கேள்வி கேட்டபோது நிச்சயமாக அரசாங்கம் அதைச் செய்யவில்லை என்று சொன்னார்கள். ஆனால் வினியோகத்துறை அதிகாரி கையெழுத்திட்டு அனுப்பப்பட்டதை அங்கே ஒட்டியிருக்கிறார்கள் என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இந்த முறைகளை மாற்றுவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-50)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கம் அப்படிப்பட்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கவில்லை. எங்கேயாவது புகார் வருமேயானால் நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திருமதி ரமணி நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகின்ற வேளையிலே அந்தத்தனி நபர் பல கடைகளை வைத்திருக்கிறார் என்று கூறினேனே, அதை ஆய்வு செய்து என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள்? நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இவை கூட்டுறவுச் சங்கம் நடத்துகின்ற கடைகள். எந்த காரணத்தைக் கொண்டும் ஒரு நபர் பல கடைகளை நடத்த முடியாது. ஒரு சமயம் அம்மையார் அவர்கள் சொல்வதைப் போல பினாமி பேரிலே நடத்துவார்களானால் அதுபற்றி இந்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, வழக்கமாக ரம்ஸான் மாதத்தில் கண்ட்ரோல் விலையில் பள்ளி வாசல்களில் கஞ்சி காய்ச்சுவதற்காகக் கொடுக்கப்படுகின்ற அரிசியும், குருணையும் இந்த ஆண்டு கொடுக்கப்படவில்லை. அது ஏன் என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. திருநாளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சர்க்கரை குறித்துக் கேட்டேன். அந்த இனிப்பான செய்தியும் வரவில்லை. அதே நேரத்தில் 15 கிலோ வழங்கப்படுவது தீபாவளிக்கு மட்டும் என்று சொல்லி இருக்கிறீர்கள். எனவே, பொங்கல், புத்தாண்டு என்பது பொதுவானது. தீபாவளிக்கு என்று தனிமைப்படுத்திக் காட்டி இருக்கிறீர்கள். தீபாவளி நேரத்திலே இஸ்லாமியர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. கிருஸ்துவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு அவரவர்களுடைய பண்டிகை நேரத்தில் கொடுப்பது தான் முறையாக இருக்கும். அதைக் குறித்தும் நான் கேட்டிருந்தேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. விளக்கம் வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்தப்பண்டிகையையொட்டி, மசூதிகளிலே குருணை, நொய், அரிசி கொடுப்பதைப் பற்றிக் கேட்டார்கள். இதற்கு முந்தைய அரசு எப்படிப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றியதோ அதே நடைமுறைகளைப் பின்பற்றி நிச்சயமாக ரம்ஸான் பண்டிகைக்குத் தேவையான உத்தரவை இந்த அரசு பிறப்பிக்கும். தீபாவளிக்கு 5 கிலோ கொடுக்கிறார்களே, ரம்ஸானுக்குக் கொடுக்கக் கூடாதா என்கிறார்கள். நிதிநிலைமை ஓரளவிற்கு பெருகி . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : ஒரே கார்டிலே பண்டிகைக்குப் பண்டிகை வாங்கலாம். எந்தப் பண்டிகையிலே வேண்டுமானாலும் வாங்கலாம் என்ற விவரம் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அதிலே நிர்வாகச் சிக்கல்கள் இருக்கின்றன. யாருக்கு என்று

1989 ஏப்ரல் 25] (திரு. ஆற்காடு நா. வீராசாமி)

அந்தக் கார்டுகளைப் பார்த்து இஸ்லாமியர்களை பிரிக்கலாம். கிருஸ்துவர்களைப் பிரிப்பது என்பது கடினம். யார் கிருஸ்துவர், யார் இந்து என்று பெயர்களைப் பார்த்து மட்டும் பிரித்துவிட முடியாது. எனவே நிர்வாகத்திலே சில சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினாலும், இதை வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லாத நிலையிலும் இதைப்பற்றி அரசாங்கம் இப்போது எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது பண்ணைக் குளங்கள் என்று ஒரு புதிய திட்டத்தை அறிவித்தார்கள். மழைக் காலத்திலே தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு என்று. நீண்ட நெடுங்காலமாக இருந்த குளங்கள் எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கே வீடுகளும், கடைகளும் வந்திருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பல பள்ளங்களிலே பலர் விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே அதிகாரிகளைப் பார்த்து வெள்ளம் வராமலேயே வேறு இடத்திலே தடுத்துத் திருப்பி விடுகிறார்கள். ஆக ஏற்கெனவே இருந்த குளங்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அரசு முனையுமா ன்று அறிய விரும்புகிறேன்.
எ

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 23—கூட்டுறவு.

திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. கோ. வீரையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 78,24,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல்.

திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. என். பழனிவேல் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி : ''மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,17,86,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை (26-4-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேண்டும். அவனுக்குப் பாதுகாப்பு கிடையாது. கன்ஸ்யூமர் புரொடக்ஷ்ன் இருக்கிறது. ஆனால் பாதுகாப்பு புரொடியூசருக்குக் கிடையாது. அப்படியானால் யார் விவசாயத்திற்கு வருவார்கள். யார் விவசாயத்தை நம்பி மேற்கொள்வார்கள். எனவே அந்தத் தொழிலில் பாதுகாப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

உணவுத் துறையில் விகிதாசாரப்படி விலையேற்றம் இருக்க வேண்டும். உணவு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு விலையேற்றம் அளிக்கவில்லையென்றால் அவனுக்கு லாபம் இருக்காது. எல்லா மட்டங்களிலும் இன்றைக்கு விலை உயர்ந்து கொண்டிருக்கிறது. அதைக் கொடுத்துத்தான் மக்கள் வாங்குகிறார்கள். இதற்கு மட்டும் ஏன் எசன்ஷியல் கமோடிடீஸ் ஆக்ட்? அது மற்றதற்கு ஏன் இல்லை? 3 கோடி பேர் சினிமாவை நாள்தோறும் பார்க்கிறார்கள். அது எசன்ஷியல் காமோடிடீஸ் இல்லையா? எனவே உற்பத்தியைப் பார்த்து விகிதாச்சார விலை உயர்வைப் பார்த்து, விவசாயப் பெருமக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க வேண்டும். தொழில் அதிபர்களைப் பாதுகாக்கின்றோம். அவர்கள் தங்களுடைய உற்பத்தி விலையை உயர்த்தும்போது பாதுகாக்கின்றோம். அவர்கள் போட்டதுதான் விலையாக இருக்கின்றது. அம்பாசிடர் கார் என்ன விலை? சைக்கிள் என்ன விலை சொல்கிறார்கள்? துணி என்ன விலை சொல்கிறார்கள்? அவைகளை எல்லாம் பணம் கொடுத்து வாங்குகிறோம். அதுபோல் இதற்கும் அந்த உரிமையை கொடுங்கள் என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி

(ஈ) பேரறிஞர் அண்ணாவின் பேச்சுக்கள், கருத்துக்கள் அடங்கிய நூல் உறுப்பினர்களுக்கு வழங்கப் பெறுதல்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்களின் அனுமதியோடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. இப்போது என்னுடைய அனுமதியோடு நீங்கள் பேசலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, உங்களின் இனிய அனுமதியோடு ஒரு இனிப்பான செய்தியை மன்றத்திற்கு அறிவித்து, செய்தித் துறை மூலமாக வெளியிடப்பட்ட ஒரு புத்தகத்தை அனைத்து உறுப்பினர் களுக்கும் வழங்கிட நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு,

1987-ம் ஆண்டு செய்தித் துறை ஆணை எண். 76, நாள் 10-3-87 அன்று காலமெல்லாம் சுடர் விட்டுக்கொண்டிருந்கின்ற பேரொளியாகத் திகழ்ந்து, இறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பேரறிஞர் அண்ணாவினுடைய எழுத்து ஓவியங்கள், பேசிய கருத்துகள் இவற்றையெல்லாம்இன்றைக்குத்தொகுத்து அண்ணாவினுடைய கருத்து மணிகளை இணைத்து ஒன்றாக்கி, நாட்டு மக்களுக்கு வழங்கிட வேண்டுமென்கின்ற பணியினை மறைமலையான், இளஞ்செழியன் ஆகியவர்களுக்கு வழங்கப்பட்டு அந்தப் புத்தகம் 1988, செப்டம்பர் திங்கள் அன்று முழுமை பெற்றிருந்தாலும் என்ன காரணத்தாலோ அது வெளியிடப்படாமல் இருந்தது. இப்போது எங்களின் அன்புத் தலைவரும், தமிழக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அனுமதியோடு இந்தப் புத்தகத்தை உங்கள் மூலமாக அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கு, படித்துப் பயன் பெறுவதற்கு அனுமதி வழங்கிட வேண்டுமெனக் கேட்டு இந்தப் புத்தகத்தை உங்களுக்கும் வழங்கி, இந்தத் துறை மூலமாக அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களுடைய இந்த அன்பான நன்கொடையை ஏற்று அறிஞர் அண்ணா அவர்கள் எந்தெந்தப் பெருமக்களை எல்லாம் தன்னுடைய வாழ்நாளில் போற்றி இருக்கிறார்கள் என்பதைத் தொகுத்துத் தந்திருக்கிற அந்தப் பெரு முயற்சியைப் பாராட்டி அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்திப் : கொஞ்ச நேரம் பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பேச வேண்டாம். ஏற்கெனவே நேரம் ஆகிவிட்டது. பேச வேண்டாம்; உட்காருங்கள், அப்புறம் ,வழங்குவது தப்பு என்று ஆகிவிடும் (குறுக்கீடு) அதுபற்றி இன்னொரு நாளைக்கு வாய்ப்பு இருக்கும்போது பேசலாம். அடுத்து, திரு. பூவராகன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, அது அவர்களுக்கு மட்டும் கொடுத்ததால் அவர்கள் ஏதாவது அந்தப் புத்தகம் பற்றிசொல்ல வேண்டுமென்று கருதுகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு போவைத் தலைவர் : இப்படி 234 உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கொடுத்தால் 234 பேரும் எழுந்து பேசினால் பெரிய குழப்பம் ஆகிவிடும்.

மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும்,
வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய சட்ட மன்றத்தில் வைக்கப்பட்டு இருக்கின்ற மானியக் கோரிக்கைகளிலே இரண்டு முக்கியமான

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

121. கோரிக்கை எண் 23—கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 1989—90 (தமிழ், ஆங்கிலம்).

122. கோரிக்கை எண் 35 — தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

123. தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 1988-89 என்கிற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

124. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி என்கிற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

125. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் என்கிற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

126. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

127. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகள், 1987—88 (தமிழ், ஆங்கிலம்),

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-1.

(417ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைகக் காண்க.)

கூட்டுறவுத் துறையின் 1989-90 ஆம் ஆண்டிற்கான
கொள்கை விளக்கம்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப, விவசாயிகள், கிராமியக் கைவினைஞர்கள், மற்ற நலிந்த பிரிவினர் ஆகியோரின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதில் தமிழகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து முக்கிய பங்கினை ஆற்றி வருகின்றன. தம் செயல்களை பன்முகப்படுத்தியதின் மூலம் தற்போது அவை மக்களின் அனைத்து பிரிவினருக்கும் பணியாற்றி வருகின்றன.

2. பொதுவான முன்னேற்றம்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒட்டு மொத்த நோக்கங்களாகிய, உணவு உற்பத்திப் பெருக்கத்தை விரைவு படுத்துதல், வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துதல் போன்றவற்றில் தமிழகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து தனது முக்கியமான பணியினை ஆற்றி வருகின்றன. விவசாயிகளுக்குத் தேவையான கடன்களை வழங்குதல், மற்றும் பொது விநியோகத் திட்டத்தில், கூட்டுறவுகள் ஆற்றும் பணி குறிப்பிடத்தக்கதாகும். கூட்டுறவுத் துறையில் பத்து முக்கிய திட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்களால் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் எய்திய முன்னேற்றம், 1988—89 ஆம் ஆண்டிற்கான திட்டம், 28-2-89 வரை எய்திய முன்னேற்றம், மற்றும் 1989—90 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியவைகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வரிசை எண்ணும், விவரம் மற்றும் அலகு.	அடைந்த முன்னேற்றம்.			1988-89-க்கான திட்டம்.	1988-89-ல் முன்னேற்றம் (28 பிப்ரவரி 1989 வரை).	1989-90-க்கான திட்டம்.
	1985-86.	1986-87.	1987-88.			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. குறுகிய கால வேளாண்மை கடன்களை வழங்குதல் (ரூபாய் கோடியில்).	130.88	162.45	186.82	215.00	181.95	250.00
2. மத்திய கால வேளாண்மை கடன்களை வழங்குதல் (ரூபாய் கோடியில்).	20.14	25.32	34.03	30.00	31.99	30.00
3. குறுகிய கால மற்றும் மத்திய கால வேளாண்மை கடன்கள் வழங்கியதில் மொத்தத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டவை. (சதவிதம்)	54.00	62.00	64.00	65.00	64.20	66.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
4. நீண்ட கால வேளாண்மை கடன்கள் வழங்குதல் (ரூபாய் கோடியில்).	24.19	20.52	30.60	27.00	21.65	30.00
5. நகையீட்டுக் கடன்களை வழங்குதல். (ரூபாய் கோடியில்).	289.82	331.60	490.04	482.00	475.58	520.00
6. சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை பிரிவு அல்லாத கடன வழங்குதல். (ரூபாய் கோடியில்)	—	—	11.38	12.00	16.10	15.00
7. இரசாயன உரங்களை வழங்குதல் (ரூபாய் கோடியில்)	73.38	93.14	99.45	120.00	74.59	120.00
8. வேளாண்மை விளை பொருட்களை விற்பனை செய்தல் (ரூபாய் கோடியில்)	149.29	158.37	200.03	180.00	168.80	210.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
9. திரண்ட கொள் திறன் அளவு (ஆயிரம் டன்களில்).	633	641	652	664	662	680
10. கட்டுப்பாடு மற்றும் கட்டுப் பாடற்ற நுகர் பொருட்களை சில்லறை விற்பனை செய்தல் (ரூபாய் கோடியில்).	605.39	684.90	873.43	730.00	939.77	900.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு :

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளின் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான மொத்த செலவு, 1988—89 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு மற்றும் 1989—90 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திட்டங்களின் விவரம்.	ஏற்பட்ட செலவு. 1985-86.	1986-87.	1987-88.	வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1988-89.	திருத்திய மதிப்பீடு 1988-89.	வரவு-செலவு திட்ட மதிப்பீடு 1989-90.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(ரூபாய் கோடியில்.)			
அ. மாநிலத் திட்டப் பணிகள் :						
1. கடன் கூட்டுறவுச் சங்கங்கள்.	3.96	1.77	12.18	19.19	5.45	2.05
2. விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள்.	0.17	0.11	0.16	0.15	0.01	0.01
3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.	0.28	0.20	2.28	0.76	4.84	2.24
4. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள்.	0.09	0.06	0.03	0.05	0.01	0.01
5. கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி.	0.01	0.06	0.04	0.02	0.02	0.02
6. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்.	0.42	1.17	1.20	1.08	1.08	1.10

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
7. கிராம அங்காடி திட்டம்.	3.71	3.37	3.89	4.02	..	..
மாநில திட்டப் பணிகளின் மொத்தம்.	8.64	6.74	19.78	25.27	11.41	5.43
ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் கிராமிய மின் வசதிக் கழகம் போன்ற தன்னாட்சி நிறுவனங்கள் நிதி உதவி செய்யும் திட்டங்கள்.	5.58	2.46	3.12	0.39	2.42	0.34
திட்டப் பணிகளின் மொத்தம்.	14.22	9.20	22.90	25.66	13.83	5.77
இ. திட்டத்தில் சேராத பணிகள்.	23.76	29.74	43.17	38.37	50.04	79.41
பெரு மொத்தம்.	37.98	38.94	66.07	64.03	63.87	85.18

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 25]

4. தன்னிறைவான கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல்.

பிரதம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் (தொடக்க கூட்டுறவு வங்கிகள்) கூட்டுறவு கடன் அமைப்பின் அடித்தளமாக விளங்குகின்றன. இவ்வகையான 4,655 சங்கங்கள் பயிர் செலவுக்காக குறுகிய கால கடன்களையும், விவசாயத்தைச் சார்ந்த துணைத் தொழில்களுக்காக மத்திய கால கடன்களையும் வழங்கி வருகின்றன. இவ்வகைச் சங்கங்கள் ,சிறு பாசன வசதிக்காக பெருத்த நிதி உதவி திட்டத்தின் கீழும் கடன்கள் வழங்கி வருகின்றன. விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களைத் தன்னிறைவுள்ள சங்கங்களாக மாற்றி அமைப்பதற்கான திட்டத்தின் கீழ், தன்னிறைவு அடையாத நிலையில் உள்ள 142 சங்கங்களையும் ஒருங்கிணைப்பதின் மூலம் 104 புதிய தன்னிறைவு அடைந்த சங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன.

விவசாயம் அல்லாத பிரிவுக்கு கடன் வழங்குதல், உபயோகப்படும் நுகர் பொருட்கள் வாங்குதல், நகைக் கடன்கள் அளித்தல் போன்ற காரியங்களுக்கு கடன் வழங்குவதை விரிவு படுத்தத் தேவையான நிதி திரட்ட, விவசாய கூட்டுறவு சேவை சங்கங்கள் வைப்பு நிதி திரட்டுதலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. விவசாய அபிவிருத்தி மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட இதர காரியங்களுக்காக தமிழகத்தில் உள்ள 181 பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளும் நீண்டகால கடன்களை அளித்து வருகின்றன.

5. விவசாயக் குடும்பங்களை கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக்குதல்.

1979—80 ஆம் ஆண்டில் வேளாண்மை கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் உள்ள மொத்த விவசாயக் குடும்பங்கள் 71.51 இலட்சம் ஆகும். இதில் 61.48 இலட்சம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் குடும்பங்களைச் சார்ந்ததாகும். 1988—89 ஆம் ஆண்டு இறுதிக்குள் மொத்த விவசாயக் குடும்பங்களில் 85 சதவீதத்தினரையும், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களில் 80 சதவீதத்தினரையும், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை மொத்த விவசாயக் குடும்பங்களில் 74.2 சதவீதத்தினரையும் மொத்த சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களில் 71.2 சதவீதத்தினரையும் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள் (1989—90) மொத்த விவசாயக் குடும்பங்களில் 90 சதவீதத்தினரையும், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களில் 85 சதவீதத்தினரையும் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

6. ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல் :

ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கத்துடன் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொருவரை தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக சேர்ப்பதற்காக ஒரு திட்டத்தை அரசு 1981—82 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் அவர்கள் பயிர்ச் செலவிற்காக குறுகிய காலக் கடன் களையும், விவசாயம் சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக மத்திய காலக் கடன்களையும் பெற்று தமது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள ஏதுவாகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப் பினராகச் சேர்க்கப்படும் ஒவ்வொருவருக்கும் அவர் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக அரசு மான்யம் நூறு ரூபாய் வழங்கப்படுகிறது. இதுவரை ஆதி திராவிடர் வகுப்பைச் சார்நத 1,10,000 நபர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 110 இலட்சம் ரூபாய் அரசு மானிய உதவியுடன் உறுப்பினர்களாக சேர்க்கப் பட்டுள்ளனர். இந்த திட்டம் தற்போது மத்திய அரசால் ஏற்கப் பட்டு, 1988—89 ஆம் ஆண்டில் மத்திய அரசு, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்நத 5,092 நபர்களை உறுப்பினர்களாகச் சேர்க்க 5,09,200 ரூபாய் மானியமாக அளித்துள்ளது.

7. கடன் வழங்குதல் :

தம் உறுப்பினர்களுக்குத் தேவையான விவசாயக் கடன்களை வழங்குவது கடன் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய பணி ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் கடைசி ஆண்டிலும் (1984—85) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1987—88 ஆம் ஆண்டு வரையிலும் ,குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்டகால கடன் வழங்கியதில் எய்திய முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு.	வழங்கப்பட்ட கடன்கள்.			மொத்தம்.
	குறுகிய காலப் பயிர்க் கடன்கள்.	விவசாயம் மற்றும் துணைத் தொழில் களுக்காக மத்தியகாலக் கடன்கள்.	விவசாய காரியங் களுக்காக நீண்ட காலக் கடன்கள்.	
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் கோடியில்.)			
1984—85	110.80	17.35	20.37	148.52
1985—86	130.88	20.14	24.19	175.21
1986—87	162.45	25.32	20.52	208.39
1987—88	186.82	34.03	30.60	251.45

1988-89ஆம் ஆண்டில் குறுகிய, மத்திய கால மற்றும் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டமும், அவற்றில் 28-2-1989 வரை எய்திய முன்னேற்றமும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

விவரம்.	1988-89-ம் ஆண்டுக் கான திட்டம்.	28-2-1989 வரை முன் னேற்றம்.
	(ரூ. கோடியில்).	
குறுகிய காலக் கடன்கள்	215.00	181.95
மத்திய காலக் கடன்கள்	30.00	31.99
நீண்ட காலக் கடன்கள்	27.00	21.65
	272.00	235.59

1989-90 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களை 250 கோடி ரூபாய் அளவிற்கும் மத்தியக் காலக் கடன்களை 30 கோடி ரூபாய் அளவிற்கும் நீண்ட காலக் கடன்களை 30 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

8. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு கடன்கள் வழங்குதல்

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நாபார்ட்) வகுத்துள்ள வழிமுறைகளின்படி வழங்கப்படும் மொத்த கடன்களில் 20 சதவீதம் நலிந்த பிரிவினருக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கு குறைவான நிலங்களைச் சொந்த மாக வைத்திருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்கு பயிரிடுபவர் களுக்கு கொடுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தொடக்க கூட்டுறவு வங்கிகளும் பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளும் நலிந்த பிரிவினரின் தேவைகளைக் கவனிப்பதில் தேவையான கவனம் செலுத்தி வருகின்றன. 1987-88 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட குறுகிய கால,

1989 ஏப்ரல் 25]

மத்திய கால மற்றும் நீண்ட கால கடன் அளவும் மற்றும் இவ்வகையில் 1988—89ஆம் ஆண்டுக்கான திட்டமும், 28-2-1989 வரை அடைந்த முன்னேற்றமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

1987—88.

வரிசை எண்.	விவரம்.	கடன் வழங்கப் பட்ட அளவு (ரூபாய் கோடியில்).	வழங்கப்பட்ட மொத்த கடன் களின் சத வீதம்.
1	குறுகிய காலக் கடன்கள் ..	122.00	60.3
2	மத்திய காலக் கடன்கள் ..	31.68	93.1
3	நீண்ட காலக் கடன்கள் ..	14.18	46.3

1988-89;

வரிசை எண்.	விவரம்.	இலக்கு (சதவீதம்).	முன்னேற்றம். 28-2-89 வரை வழங்கிய கடன்கள். (ரூபாய் கோடியில்)	முன்னேற்றம். வழங்கப் பட்ட மொத்த கடன் களின் சதவீதம்.
1	குறுகிய காலக் கடன்கள்.	72	107.60	59.1
2	மத்திய காலக் கடன்கள்.	93	29.81	93.2
3	நீண்ட காலக் கடன்கள்.	53	8.80	40.6

1989—90 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினர்களுக்கான பங்கினை குறுகிய காலக் கடன்களில் 75 சதவீதமும், மத்திய காலக் கடன்களில் 95 சதவீதமும் நீண்ட காலக் கடன்களில் 54 சதவீதமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன்களில் நலிந்த பிரிவினர்களுக்கான பங்கினை மேலும் அதிகரித்து, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

9. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு கடன் வழங்குதல்.

கடன் கூட்டுறவுச் சங்கங்கள், அனைத்து நலிந்த பிரிவினருக்கும் கடன் வழங்குவதில் அக்கறை கொண்டிருந்தாலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு கடன் வழங்குவதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றன. 1987—88 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களில் 6,7 சதவீதமும் மத்திய காலக் கடன்களில் 15.4 சதவீதமும் நீண்ட காலக் கடன்களில் 5,7 சதவீதமும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1988-89 ஆம் ஆண்டிற்கு குறுகிய கால கடன்களில் 9.6 சதவீதமும் மத்தியக் காலக் கடன்களில் 19.4 சதவீதமும், நீண்ட காலக் கடன்களில் 9.6 சதவீதமும் அளிக்கத் திட்டமிடப்பட்டதில், பிப்ரவரி 1989 வரை குறுகிய கால கடன்களில் 7 சதவீதமும், மத்திய காலக் கடன்களில் 19.3 சதவீதமும், நீண்ட காலக் கடன்களில் 5 சதவீதமும் முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளது. 1989—90 ஆம் ஆண்டில் இவ்வகை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். கடன் அளவு குறுகிய காலக் கடன்களில் 10 சதவீதமாகவும் மத்தியக் கால கடன்களில் 20 சதவீதமாகவும், நீண்ட காலக் கடன்களில் 10 சதவீதமாகவும் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

10. புன்செய் நில விவசாயத்திற்குச் சலுகை வட்டியில் கடன் வழங்குதல்.

சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் பருத்தி முதலிய மானாவாரி பயிர்களைச் சாகுபடி செய்வதில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் எதிர் கொள்ளும் சிரமங்களைக் கருதியும் இவர்களின் பொருளாதார நிலையைக் கருதியும் இத்தகைய உறுப்பினர்களுக்கு 4 சதவீத வட்டி விகிதத்தில் குறுகிய காலக் கடன் வழங்கும் திட்டம் 1—4—1985 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இச்சலுகை வட்டி விகிதத்திற்கும் சிறு விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனுக்காக வழங்கும் சாதாரண வட்டி விகிதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு மானியமாக வழங்குகின்றது. 1986-87 ஆம் ஆண்டிலும் 1987-88 ஆம் ஆண்டிலும் சலுகை வட்டி விகிதத்திற்கும், சாதாரண வட்டி விகிதத்திற்கும் உள்ள வேறுபாட்டிற்காக அரசு மானியமாக முறையே ரூ. 0.26 இலட்சமும் ரூ. 0.27 இலட்சமும் அளித்துள்ளது. 1988—89ஆம் ஆண்டில் சலுகை வட்டி விகிதத்திற்கும்,

1989 ஏப்ரல் 25]

சாதாரண வட்டி விகிதத்திற்கும் உள்ள வேறுபாட்டிற்காக அரசு மானியமாக ரூ. 0.26 இலட்சம் அளித்துள்ளது. இதற்காக 1989-90ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு பாசன திட்டத்தை சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கான தேசிய பெருத்த நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிறைவேற்று வதில் கூட்டுறவுச் சங்கங்களின் ஈடுபாடு.

இந்த தேசிய திட்டம் 1983-84ஆம் ஆண்டிலிருந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அங்கம் சிறு பாசனத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப் படும் நிதியுதவி இரண்டு வகைப்படும். அதாவது இனங் கண்டு கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் அளிக்கப்படுகிறது. மானியத்துக்கான செலவினத்தை மாநில அரசும், மத்திய அரசும் 50 : 50 என்ற விகிதத்தில் எற்றுக் கொளகின்றன. வர்த்தக வங்கிகள் பிரதம நிலவள வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள தேவையான கடன் வசதியை அளித்து வருகின்றன. மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனங்களால் குறிப்பிடப்படும் பகுதிகளில் தேவையான நீண்ட காலக் கடன்களை கூட்டுறவு சங்கங்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய கடன்கள் இனங் கண்டு கொள்ளப்பட்ட விவசாயிகளுக்கு 10 சதவீதம் வட்டி விகிதத்தில் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1986-87 ஆம் ஆண்டில் 6.37 கோடி ரூபாய் அளவிற்கும், 1987-88 ஆம் ஆண்டில் 7.37 கோடி ரூபாய் அளவிற்கும், 1988-89 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாத இறுதி வரை 3.69 கோடி ரூபாய் அளவிற்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

12. சிறப்பு உணவு தானியங்கள் உற்பத்தித் திட்டம்.

நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் இந்திய அரசு சிறப்பு உணவு தானியங்கள் உற்பத்தித் திட்டம் என்ற ஒரு திட்டத்தைத் தயாரித்தது. இத்திட்டத்தின் கீழ் அரிசி உற்பத்தித் திட்டத்தை செயலாக்க, தமிழ்நாடு தேர்ந் தெடுக்கப்பட்டது. 1988-89 மற்றும் 1989-90 ஆம் ஆண்டு களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கீழ்க்கண்ட எட்டு மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

1. செங்கை-அண்ணா

2. வடாற்காடு

3. தென்னாற்காடு.

4. தஞ்சாவூர்.

5. திருச்சிராப்பள்ளி.

6. புதுக்கோட்டை.

7. மதுரை.

8. திருநெல்வேலி—கட்டபொம்மன்.

இத்திட்டத்தின் கீழ் நெல் பயிரிடுவதற்காக விவசாயிகளுக்கு குறிப்பிட்ட நேரத்தில் தேவையான பயிர்க் கடன் வழங்குவதே கூட்டுறவு சங்கங்களின் முக்கிய பணியாகும். 1988—89-ஆம் ஆண்டிற்கு, மேற்கண்ட எட்டு மாவட்டங்களில் உள்ள 9 மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 52.45 கோடி ரூபாய் அளவிற்கு நெல் பயிரிடுவதற்காக கடன் வழங்க திட்டமிடப்பட்டது. திட்டமிடப்பட்டதற்கு மேலாகவே 1989-ஆம் ஆண்டு சனவரி மாதம் முடிவில் 52.64 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தின் ஒரு பகுதியாக, உரம் மற்றும் இடு பொருட்களை விநியோகிப்பதற்காக துவக்கப்பட வேண்டிய சில்லறை விற்பனை நிலையங்களின் குறியீடான 800 விற்பனை நிலையங்களுக்கு மேலாக கூட்டுறவு சங்கங்கள் 812 சில்லறை விற்பனை நிலையங்களை துவக்கியுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் 21.29 லட்சம் ரூபாய் அளவிற்கு சலுகை விலையில் ஜிங்சல்பேட்டு போன்ற நுண்ணூட்டச் சத்து மற்றும் ஜிப்சம் மற்றும் களைக் கொல்லி போன்ற இதர இடு பொருட்களை விநியோகம் செய்துள்ளது.

13. தேசிய எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டம்.

எண்ணெய் வித்து உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் இந்திய அரசு ''தேசிய எண்ணெய் வித்து அபிவிருத்தி திட்டம்'' என்ற ஒரு திட்டத்தை 1984-85-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தியுள்ளது. தமிழ் நாட்டில் இத்திட்டம் கீழ்க்கண்ட எட்டு மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

(1) கோயம்புத்தூர்.

(2) பெரியார்.

(3) தருமபுரி.

(4) சேலம்.

(5) வடாற்காடு

1989 ஏப்ரல் 25]

(6) செங்கை-அண்ணா.

(7) தென்னாற்காடு.

(8) திருச்சிராப்பள்ளி.

இத்திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்துக்களைப் பயிரிடுவதற்காக, இனங்கண்டு கொள்ளப்பட்ட பயன் துய்ப்பவர்களுக்கு தேவையான கடன் வழங்குவதே கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய பணியாகும். இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளிலும் 1988-89-ஆம் ஆண்டில் பிப்ரவரி 1989 வரை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட கடன் அளவு கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

ஆண்டு.	வழங்கப் பட்ட கடன் அளவு.
(1)	(2)
	(ரூபாய் கோடியில்).
1985-86 ..	9.44
1986-87 ..	15.46
1987-88 ..	23.51
1988-89 (பிப்ரவரி 1989 வரை) ..	22.80

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ''எண்ணெய் வித்து உற்பத்தி முனைப்புத் திட்டம்'' என்ற திட்டத்தையும், 1989-90-ஆம் ஆண்டிலிருந்து இந்திய அரசு துவக்கியிருக்கிறது. இதன் வாயிலாக உள் நாட்டுக்கு தேவையான எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை விரைவில் பெருக்குவதுடன், இறக்குமதி செய்யப் படுகின்ற சமையல் எண்ணெய்களுக்காக ஏற்படும் அன்னியச் செலாவணியை குறைப்பதே நோக்கமாகும். இத்திட்டம் தேசிய எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப் படும் எட்டு மாவட்டங்களையும் சேர்த்து மேலும் மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் செயல் படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் வேர்க்கடலை, சூரியகாந்தி மற்றும் எள் போன்ற எண்ணெய் வித்துக்கள் பயிர் செய்வதை உள்ளடக்கியதாகும்.

14. நீண்ட காலக் கடன்களை பல் வகை காரணங்களுக்காக வழங்குதல்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உதவியுடன் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வேளாண்மை வளர்ச்சிக்கு நீண்ட காலக் கடன்களை வழங்குவதின் மூலம், மாநிலத்தை பகுதி வாரியாக மேம்படுத்துவதற்கு 1968-69 முதல் திட்டமிடப்பட்டு வருகிறது. தற்போது 10.70 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட 63 சிறு பாசன திட்டங்களும், 40.74 கோடி ரூபாய் மூலதனம் கொண்ட 260 சிறு பாசனமல்லாத இதர திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 1976-77-ஆம் ஆண்டிலிருந்து 2.49 கோடி ரூபாய் அளவிற்கு 5,212 மின்சார மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்க கடன் வழங்கியுள்ளது.

(i) சிறு பாசன வசதி காரியங்களுக்கு, கடன் வழங்குவதில் வாய்ப்பு குறைந்து கொண்டே வருவதால், நில்வள வங்கிகள் தேங்காய், முந்திரி, காப்பி போன்ற தோட்ட பயிர்களுக்கு கடன் வழங்குவதுடன், டிராக்டர் மற்றும் வண்டி வாங்கவும், பண்ணை வீடு மற்றும் கால்நடை கொட்டகை அமைக்கவும், பால்வளத் திட்டம், பன்றி வளர்ப்பு, ஆடு வளர்த்தல், போன்ற காரியங்களுக்காகவும் கடன் அளித்து வருகின்றன. பொதுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், ஆகியவைகள் ஏற்று நடத்தும் திட்டங்களுக்காகவும் நிதியுதவி அளிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) நில அடமானத்தை வற்புறுத்தாமல், நிலவள வங்கி நிலமற்றவர்களுக்கு திட்ட ரீதியாகப் பல்வகை காரணங்களுக்காக பெரும் அளவில் கடன்கள் வழங்கும் பொருட்டு, அரசு 6 கோடி ரூபாய் அளவிற்கு உத்திரவாதம் அளித்துள்ளதையொட்டி, நிலமற்றவர்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன.

(iii) அதே போன்று தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சியின் பண்ணை பிரிவு அல்லாத திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டப்படி, நிலவள வங்கிகளும், கிராமப்புற கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்க கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

(iv) மேலும், பிரதம நில்வள வங்கிகள், கிராம வீட்டு வசதிக்கு கடன் வழங்குவதை மேற்கொள்வதற்காக கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1989 ஏப்ரல் 25]

15. தவணை தவறிய கடன்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளின் இறுதியிலும் 1989-ஆம் ஆண்டு பிப்ரவரி 28-லும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிரதம நிலவள கூட்டுறவு வங்கிகள் அளவில் இருந்த தவணை தவறிய கடன்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் அளவில்.

(ரூபாய் கோடியில்).

நாள்.	கேட்பு.	வசூல்.	நிலுவை.	கேட்பில் நிலுவையின் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1986 ஜூன் 30-ல் ..	353.32	196.33	156.99	44.4
1987 ஜூன் 30-ல் ..	436.56	289.33	147.23	33.7
1988 ஜூன் 30-ல் ..	434.32	255.29	179.03	41.2
1989 பிப்ரவரி 28-ல்	410.39	145.51	264.88	64.5

பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் அளவில்.

(ரூபாய் கோடியில்)

நாள்.	கேட்பு.	வசூல்.	நிலுவை.	கேட்பில் நிலுவையின் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1986 ஜூன் 30-ல் ..	71.47	18.88	52.59	73.6
1987 ஜூன் 30-ல் ..	98.78	56.96	41.82	42.3
1988 ஜூனீ 30-ல் ..	67.85	15.47	52.38	77.2
1989 பிப்ரவரி 28-ல்	71.12	6.30	64.82	91.1

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1988-89-ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள 16 மத்திய கூட்டுறவு வங்கிகளும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியினால் வரையறுக்கப்பட்ட அளவிற்கு கடன் வசூலில் முன்னேற்றம் காண்பித்து, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் வசதி பெற்றுள்ளது. 1989-90 ஆம் ஆண்டிற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் வசதி அனுமதி பெறுவதற்கு மத்திய கூட்டுறவு வங்கிகள், 30 ஜூன் 1989-க்குள் கடன் வசூலில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றம் எய்த வேண்டும். 1988-89-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கிக்கு, இரண்டாவது முடக்கப்பட்ட கணக்கின் வசூலில் 1983-84, 1984-85 மற்றும் 1985-86-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட குறைவுக்கு, அரசு 14.09 கோடி ரூபாய் அனுமதி அளித்துள்ளது. சாகுபடி காரியங்களுக்காக போதிய அளவு கடன் தேவைகளை நிறைவு செய்ய ஏதுவாக மத்திய கூட்டுறவு வங்கிகள், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதி பெறும் பொருட்டும், தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் அளவிலும், பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் அளவிலும், வசூல் பணியில் முன்னேற்றம் காண்பிப்பது மிகவும் இன்றியமையாததாகும். தொடக்கக் கூட்டுறவு வங்கிகளிலும், பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளிலும் தவணைத் தவறிய கடன்களைப் பெருமளவிற்குக் குறைப்பதற்கு அணுகு முறையின் மூலம் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

16. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்.

நமது நாட்டில் சில மாவட்டங்களில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கென தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒரு திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்த காமராசர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் (மொத்த மதிப்பீடு ரூ. 862.51 இலட்சங்கள்) இம்மாவட்டத்தில் ஐந்து ஆண்டு கால கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், இந்த ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னாற்காடு மாவட்டத்திற்கும் ஒப்புதல் அளித்துள்ளது திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி சென்னை நடேசன் கூட்டுறவு பயிற்சி கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்ட உள்ளது.

17. நகைக் கடன்கள் :

கடன் நிவாரணச்சட்டம் இயற்றப்பட்டதால், நிறுவன அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப்பது

1989 ஏப்ரல் 25]

அரிதாகிய நிலையில், கடன் கூட்டுறவுச் சங்கங்கள் நகை யீட்டின் பேரில் மாநிலம் முழுவதும் கடன் வழங்கி, கடன் தேவையினை நிறைவு செய்வதில், குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றி வருகின்றன. 2,686 தொடக்கக் கூட்டுறவு வங்கிகளும், மத்திய கூட்டுறவு வங்கிகளில் 496 கிளைகளும், 129 நகர கூட்டுறவு வங்கிகளுமான 3,311 கூட்டுறவு அமைப்புகள் தற்போது நகை யீட்டுக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1987-88 ஆம் ஆண்டு இறுதியில் 3,091 கூட்டுறவு அமைப்புகள் மட்டும் இப் பணியில் ஈடுபட்டிருந்தன. 1987-88 ஆம் ஆண்டில் 17.32 லட்சம் நபர்கள் பயனுறும் வகையில் 490.04 கோடி ரூபாய் அள விற்கு மட்டுமே நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. 1988-89-ம் ஆண்டில் (1989 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை) 13.79 லட்சம் நபர்களுக்கு 475.58 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலம் முழு வதும் அநேகமாக ஊரகப்பகுதிகளில் அமைந்துள்ள கூட்டுறவு அமைப்புகள் நகையீட்டுக் கடன்கள் வழங்கி வருவதின் மூலம் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் அவசர நிதி தேவை களை பயன் விளையத்தக்க வகையில் பூர்த்தி செய்து வரு கின்றன. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்தில் மிகவும் பின் தங்கிய பிரிவினர்கள், குறிப்பாக கிராமப்புறங் களில் உள்ள வேளாண்மை சமுதாயத்தின் நலன்களைப் பாது காப்பதில் முக்கிய பங்காற்றி உள்ளன. இவ்வகையில் கூட் டுறவுச் சங்கங்கள் கடந்த மூன்றாண்டுகளில் எய்தியுள்ள முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். சவரன் ஒன்றுக்கு வழங் கப்படும் கடனின் உச்ச அளவு 1,500 ரூபாயாகும். 1989-90 ஆம் ஆண்டில் 520 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

நகை கடன்கள் வழங்குவதில் ஈடுபடும் கூட்டுறவு சங்கங்கள் ஊக்குவிக்கும் வகையில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரும்புப் பெட்டகம் வாங்க கடனாக தலா 20,000 ரூபாய் அரசு நிதி உதவி அளித்து வருகிறது. 1989-90 ஆம் ஆண்டில் 100 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

18. விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தல் :

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் கடன் பளுவை குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு கீழ்க்கண்ட சலுகைகளை அறிவித்துள்ளது :—

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மாற்றி யமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர் கடன்களில் தவணைத் தவறிய கடன் தொகைகள் அனைத்தும், அறவே ரத்து செய் யப்படும்.

(ஆ) குறுகிய கால மற்றும் மத்தியக் கால கடன்கள் மீதுள்ள அபராத வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப் படும்.

(இ) நீண்ட காலக் கடன்கள் மீது ஒத்தி வைக்கப்பட் டுள்ள வட்டியும், அறவே தள்ளுபடி செய்யப்படும்.

இந்த தள்ளுபடி சலுகைகளால் ஏற்பட்ட மொத்தத் தொகை யையும் விவசாயிகளின் சார்பாக, கூட்டுறவு சங்கங்களுக்கு அரசே செலுத்திவிடும். இப்போது அளிக்கும் சலுகைகளுக்காக அரசு 39 கோடி ரூபாய் செலவினை ஏற்கவேண்டிவரும். இந்தச் சலுகைகளால் 9.36 இலட்சம் விவசாயிகள் பயனடை வார்கள்.

இது போன்ற தள்ளுபடிச் சலுகைகள் விவசாயிகளுக்கு கடந்த காலங்களில் அளித்த வகையில், கூட்டுறவுச் சங்கங் களுக்கு கட்ட வேண்டிய ஈட்டுத் தொகை இன்னமும் 61.51 கோடி ரூபாய் பாக்கியிருக்கின்றது. இதனையும் சேர்த்து கணக் கில் எடுத்துக் கொண்டால், அரசு மொத்தமாக 100.51 கோடி ரூபாய் இத்தலைப்பின் கீழ் செலுத்த வேண்டியுள்ளது.

19. உள் நிதி ஆதாரங்களைப் பெருக்குதல் :

கடன் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மைக் கடன்களை வழங்குவதற்கான கடன் திட்டம் அதிகரித்து வருவதற்கேற்ப, தேவையான அளவிற்கு கடன்களை வழங்குவதற்கு வாய்ப்பாக அவற்றின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் காட்டி வருகின்றன. தொடக்கக் கூட்டுறவு வங்கி கள், மத்திய கூட்டுறவு வங்கிகள் (சென்னை மாநகரில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி தவிர) மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் மொத்த பங்கு மூல தனம் (அரசு முதலீடு நீங்கலாக) 1987-88-ஆம் ஆண்டு இறுதி யில் 97.45 கோடி ரூபாயிலிருந்து 1989-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதியில் 116.71 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந் துள்ளது. அவற்றின் மொத்த வைப்புத் தொகைகள் 1987-88 ஆம் ஆண்டு இறுதியில் 951.06 கோடி ரூபாயாக இருந்தது. 1989-ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் தேதியில், 1,177.64 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

20. பங்கு மூலதனத்திற்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் அரசு நிதி உதவி அளித்தல்.

கடன் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய அளவு கடன் வாங்கும் தகுதியைப் பெறும் பொருட்டு, அரசு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தேசிய ஊரகக் கடனுதவி (நீண்ட காலச் செயல்முறைகள்) நிதியிலிருந்தும் கடன் பெற்று அச்சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்து வருகிறது.

பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் உட்பட கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூல தனத்தில் அரசின் மொத்த முதலீடு 1988 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியில் 35.62 கோடி ரூபாயாக இருந்தது. மாநில நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களிலும் அரசு முதலீடு செய்கிறது. 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் அரசின் நிதி உதவி சேர்த்து முதலீடு செய்யப்பட்டு நிலுவையாக இருந்த தொகை 22.43 கோடி ரூபாயாகும். 1989-90 ஆம் ஆண்டில் கடனீட்டுப் பத்திரங்களின் அரசின் பங்காக முதலீடு செய்யத் திட்ட மதிப்பீட்டில் 125 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21 பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவி :

பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவி பெறுவதற்கான விதிகளை அரசு தளர்ச்சி உள்ளது. இதன்படி, திறந்தவெளிக் கிணறுகள், வடிமுனைக்குழாய், இதர குழாய்க் கிணறுகள் போன்றவற்றிற்கான நீர் சுரப்பு மற்றும் பயிரிடப்படக் கூடிய நிலப்பரப்பு ஆகியவை உயர்த்தப்பட்டுள்ளன. பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து அவர்கள் செலுத்த வேண்டிய வட்டியிலும், அசலிலும் சிறு விவசாயிகளுக்கு 90 சதவிகித அளவிற்கும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவிகித அளவிற்கும் உதவி தரப்படுகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சார்ந்த சிறு விவசாயிகளுக்கு அவர்களுடைய சொந்த முதலீடு போக கிணற்றிற்கான மொத்தச் செலவும் மானியமாகத் தரப்படுகிறது. 31-1-1989 முடிய 2,822 பொய்த்த கிணறுகளுக்கு 181.69 இலட்ச ரூபாய் அளவிற்கு இந்த நிதியிலிருந்து உதவி அளிக்கப்பட்டுள்ளது.

வங்கியின் கடனுதவி பெற்று வெட்டப்படும் கிணறுகள் பொய்த்துவிடும்போது, அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கு எல்லா மாநிலங்களிலும் பின்பற்றுவதற்காக பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு திட்ட மாதிரி ஒன்றைத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தெரிவித்துள்ளது, இத்திட்டத்தின்படி கிணறுகள் பொய்க்கும்பொழுது பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு அசல் மற்றும் வட்டித் தொகை மானியமாக அளிக்கப்படும். கடனுதவியில் அசல் பகுதியை மானியமாக அரசு அளிக்க வேண்டிவரும். திட்ட காரியங்களுக்கான கடன்கள் எனில் வட்டியைச் சம்பந்தப்பட்ட நிதி உதவி அளிக்கும் வங்கியும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும் சம அளவில் பங்கிட்டு ஏற்கும். திட்டம் சாராத காரியங்கள் எனில் அச்செலவை சம்பந்தப்பட்ட நிதி உதவி அளிக்கும் வங்கியே அதன் சொந்த நிதியிலிருந்து ஏற்க வேண்டும். இந்த திட்டம் பிரதம நிலவள வங்கிகளுக்கு மட்டும் அல்லாமல் கலந்து கொள்ளும் பிற வர்த்தக வங்கிகளுக்கும் பொருந்தும். மேற்கண்ட திட்டம் இந்த அரசாலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

22. விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்.

விவசாயிகளை இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் பாதிப்பிலிருந்து காப்பாற்ற உதவும் கருவியாகவும் விவசாயிகளுக்குச் சரியான வழியில் பயன் தரவும் விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் இம்மாநிலத்தில் 1-4-1985 முதல் 31-3-1988 வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. பிரிமியம் மற்றும் ஈட்டுறுதி தொகைக்கான செலவு பொது காப்பீட்டுக் கழகம் மற்றும் மாநில அரசினரால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு பயிர் காப்புறுதி நிதியிலிருந்து 2 : 1 என்ற விகிதத்தில் பங்கிட்டு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் வர்த்தக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் நெல், கோதுமை, எண்ணெய் வித்துக்கள், சிறு மானியங்கள் மற்றும் பயிறு வகைகளுக்கு வழங்கப்படும் கடன் தொகைகள் அவற்றின் 150சதவிகித அளவிற்கும் கட்டாயமாக ஈட்டுறுதி செய்யப்படும். ஈட்டுறுதி செய்யப்படும் தொகையில் நெல், கோதுமை மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கு 2 சதவிகிதமும், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகளுக்கு 1 சதவிகிதமும் பிரிமியமாகச் செலுத்தப்பட வேண்டும். இத் திட்டத்தில் சேரும் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் அவர்கள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவிகிதம் மானியமாகப் பெறுவார்கள். இம்மானியத்திற்கான செலவினத்தை மாநில அரசும் மத்திய அரசும் சமமாக ஏற்கின்றன. இத்திட்டம் நெல் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கு 1985 காரீப் பருவத்திலிருந்து நம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் கம்பு, சோளம், கேழ்வரகு, எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆற்றிய பணி விவரம் பின்வருமாறு :—

வரிசை எண்ணும், பயிர் பருவமும்.		திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை.	திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிலப் பரப்பு. (ஹெக்டேரில்)
(1)		(2)	(3)
1. 1985 காரீப்	..	54,829	1,23,141
2. 1985-86 ராபி	..	51,364	82,886
3. 1986 காரிப்	..	89:044	1,29,659
4. 1986-87 ராபி	..	74,830	99,045
5. 1987. காரிப்	..	67,436	93,994
6. 1987-88 ராபி	..	1,54,168	1,98,512

வரிசை எண்ணும், பயிர் பருவமும்.		ஈட்டுறுதி செய்யப் பட்ட தொகை.	வசூலிக்கப் பட்ட பிரிமியம்.	ஈட்டுத் தொகை அளிக்கப் பட்டது.
(1)		(4)	(5)	(6)
		(ரூபாய் இலட்சத்தில்).		
1. 1985 காரிப்	..	1,915.00	37.50	56. 40
2. 1985-86 ராபி	..	1,774.00	31.58	24,63
3. 1986 காரிப்	..	3,229.07	26.77	*43.26
4. 1986-87 ராபி	..	2,576.96	44.22	41.86
5. 1987 காரிப்	..	2,333.33	42.67	52.05
6. 1987-88 ராபி	..	5,566·98	97.09	** 70.62

1988ஆம் ஆண்டு காரிப் பருவம் முதல் இந்திய அரசு கீழ்க் கண்ட மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது:—

(1) ஈட்டுறுதி செய்யப்பட வேண்டிய தொகை, வழங்கப் பட்ட பயிர்க் கடனில் 100 சதவீதமாக குறைக்கப்படும்.

(2) விவசாயிகளினால் ஈட்டுறுதி செய்யப்படும் அதிகபட்ச தொகை 10,000 ரூபாய் அளவிற்கு குறைக்கப்படும்.

ஏற்கெனவே மாதத் தவணையை விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட நிலையில் மார்ச் 1989 இரண்டாவது பின்பாதியில் 1988-89-ல் ராபி பருவத்தில் அமுல்படுத்தும்படி மத்திய அரசு கருத்து தெரிவித்துள்ளது.

நகர்புற மக்களுக்கு கடனுதவி.

23. தமிழ்நாட்டில் 134 கூட்டுறவு நகர வங்கிகள் உள்ளன. இவ் வங்கிகள் நகரங்கள் மற்றும் ஓரளவு நகர்புறங்களில் உள்ள மக்களுக்கு வங்கி வசதிகளை அளிப்பதுடன் அவர்களுக்கு 1987-8 8ஆம் ஆண்டில் 290.58 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய

*43.26 இலட்ச ரூபாயில் 9.63 இலட்ச ரூபாய் இன்னமும் வழங்கப்பட வேண்டியுள்ளது.

** 70.62 இலட்ச ரூபாய் இன்னமும் வழங்கப்பட வேண்டியுள்ளது.

கால மற்றும் மத்தியக் கால கடன்களை வழங்கியுள்ளன. 1987-88ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வங்கிகளிடமிருந்த வைப்புத் தொகைகள் 252.79 கோடி ரூபாயாகும். குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டத்தின் கீழ் இவ்வங்கிகள் 1987-88ஆம் ஆண்டில் 11.38 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளன. கூட்டுறவு நகர வங்கிகள் வழங்கும் கடன்களில் 60 சதவீதம் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்கள் உட்பட முன்னுரிமைப் பிரிவிற்கு சேரவேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி வழி முறைகளை வகுத்துள்ளது. முன்னுரிமைப் பிரிவிற்குக் கொடுக்கப்படுகின்ற மொத்த கடன் தொகையில் குறைந்தது 25 சதவீதம் (அல்லது மொத்த கடன் தொகையில் 15 சதவீதம்) நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டும். குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக நகர கூட்டுறவு வங்கிகள் மூலம் 1989—90 ஆம் ஆண்டில் 15,00 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

24. சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்த கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்.

படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுயமாக தொழில் செய்வதற்காக நிதி உதவி அளிக்கும் பொருட்டு, சென்னை, கோயம்புத்தூர், நீலகிரி, தஞ்சாவூர், சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச் சங்கங்கள் நபர் ஜாமீன் பேரிலும், கடன்களைக் கொண்டு வாங்கப்படும் இடம் பெயராச் சொத்துகளின் இணை பிணையத்தின் பேரிலும் கடன்களை வழங்குகின்றன.

25. மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைத்தல்,

மகளிர் நலனுக்காகவும், இம்மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. விதவைகள் உட்பட நலிந்த பிரிவைச் சார்ந்த மகளிர் குடிசைத் தொழில்களை மேற்கொண்டு தம் வருவாயை அதிகரித்துக் கொள்ள உதவியாக மகளிர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சென்னை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் கடலூரில் செயல்பட்டு வருகின்றன.

இம் மாநிலத்தில் முற்றிலும் மகளிரைக் கொண்டு நிர்வகிக்கப்படும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் ஒன்பதும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றும் துவக்கப்பட்டுள்ளன.

மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியைக் கண்காணிக்க பதிவாளர் அலுவலகத்தில் ஒரு பெண் துணைப் பதிவாளரையும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மற்றும் பெண் பணியாளர்களுடன் கூடிய ஓர் குழு அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுகள் மூலம் பண்ணை இடுபொருட்களின் விநியோகம்:

26. இரசாயன உர விநியோகம் :

தஞ்சாவூர் மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கமும், இரசாயன உரம் வாங்கி 4000-க்கு மேற்பட்ட தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது அவைகள் இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்கு பயிர் கடன்களின் ஒரு பகுதியாகவும், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கு ரொக்கத்திற்கும் தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. 1988-89-ஆம் ஆண்டிற்கு 120 கோடி ரூபாய் மதிப்பிற்கு 3,50 இலட்சம் டன் (என்.பி.கே.) அளவுள்ள இரசாயன உரங்களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. 1988 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1989 பிப்ரவரி 28-ஆம் தேதி வரை கூட்டுறவுச் சங்கங்கள் 74,59 கோடி ரூபாய் மதிப்பிற்கு 1.73 இலட்சம் டன் (என்.பி.கே.) உரங்களை விநியோகித்துள்ளன.

விவசாயிகளுக்கு, அவர்கள் வாழுமிடங்களுக்கு அருகிலேயே தேவையான வேளாண்மை இடுபொருட்கள் கிடைக்க செய்வதை நோக்கமாகக் கொண்டு கூடுதல் உர விற்பனை நிலையங்கள் ஆண்டு தோறும் துவக்கப்பட்டு வருகின்றன. 1988-89-ஆம் ஆண்டில் இதுவரை (டிசம்பர் 89 வரை) 1,626 கூடுதல் சில்லரை உர விற்பனை நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. தற்போது மாநிலத்தில் 6,509 உர விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1989-90-ஆம் ஆண்டில் 120 கோடி ரூபாய் மதிப்பிற்கு 3.50 இலட்சம் டன் (என்.பி.கே.) அளவுள்ள இரசாயன உரங்களை சில்லரை முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.

27. விதைகள் பூச்சிக் கொல்லி மருந்துகள் விநியோகம் செய்தல் :

விதை பெருக்கத் திட்டத்தை செயற்படுத்தி வரும் துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிகள் சங்கமும், கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் மூன்று கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் 1987-88 ஆம் ஆண்டில் 65,19 இலட்சம் ரூபாய் மதிப்

[1989 ஏப்ரல் 25

புடைய சான்று செய்யப்பட்ட விதைகள் விநியோகித்துள்ளன. 1988-89 ஆம் ஆண்டில் (31—1—1989 வரை) 61.49 இலட்சம் ரூபாய் மதிப்புடைய சான்று செய்யப்பட்ட விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிகள் சங்கம் பூச்சி கொல்லி மருந்துகள் தயாரிக்கும் பிரிவு ஒன்றை நடத்தி வருகிறது. இச்சங்கத்தின் பூச்சி கொல்லி மருந்துகளை விநியோகம் செய்வதற்காக மாநிலத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு விற்பனை சங்கங்களும் மொத்த விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. 1987-88-ஆம் ஆண்டில் 291.83 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பூச்சிக் கொல்லி மருந்துகள் கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1988-89 ஆம் ஆண்டில் (சனவரி 31-ம் தேதி வரை) 353.01 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பூச்சிக் கொல்லி மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்களில் பண்ணை இடுபொருட்களின் விநியோகத்தை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வரும் 1989-90ஆம் ஆண்டு, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இறுதி ஆண்டாகும். 1989-90 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 200 இலட்சம் ரூபாய் அளவிற்கு விதைகளும், 350 இலட்சம் ரூபாய் அளவிற்கு பூச்சிக் கொல்லி மருந்துகளும் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு விற்பனை.

28. விவசாய விளைபொருட்களை விற்பனை செய்தல்:

மாநிலத்தில் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. அவை தம் உறுப்பினர்களின் வேளாண்மை பொருட்களை விற்பனை செய்வதின் வாயிலாக அவர்கள் நியாயமான வருமானம் பெற தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. 1987-88 ஆம் ஆண்டில் 175 கோடி ரூபாய் அளவிற்கு வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டு, 200.03 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1988-89 ஆம் ஆண்டிற்கு வேளாண் விளை பொருட்கள் விற்பனையை 180 கோடி ரூபாய் அளவிற்கு நடத்த திட்டமிடப்பட்டது. 1989 பிப்ரவரி மாத இறுதி வரை இதில் சாதனை 168.80 கோடி ரூபாயாகும். 1989-90 ஆம் ஆண்டிற்கு வேளாண் விளை பொருள் விற்பனையை 210 கோடி ரூபாய் அளவிற்கு மேலும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

29. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை தொடக்க கூட்டுறவு வங்கிகளோடும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களோடும் இணைத்தல்.

உற்பத்தியாளர்கள் தம் விளைபொருட்களை விற்பதில் ஆதாயமான வருமானம் பெறவும், நுகர்வோர் இன்றியமையாப்

பொருட்களை நியாயமான விலைகளில் பெறவும் ஏதுவாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒரு பக்கம் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுடனும், மறுபக்கம் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தொடக்க கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, விற்பனைச் சங்கங்களின் கொள்முதல் காரியங்கள் கடன்தாரர்களுடன் இணைக்கப்படுகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் அவற்றிற்கு தேவையானவற்றை வாங்குவதில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சேவையை பெரிதும் பயன்படுத்திக் கொள்கின்றன. 1986-87-ல் வேளாண் விளைபொருள் விற்பனை செய்ததின் மூலமாக 108.11 இலட்சம் ரூபாய் அளவிற்கு உற்பத்திக் கடன்கள் வசூலிக்கப்பட்டன. இது 1989-90-ல் 200 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தப்படும்.

30. விளை பொருளீட்டுக் கடன்கள் :

விவசாய உறுப்பினர்கள் தங்கள் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரையில் காத்திருக்கும் பொருட்டு அவர்களது விளைபொருட்களின் ஈட்டின் பேரில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கும் தொடர்ந்து கடன்களை வழங்கி வருகின்றன. இவ்வகைக் கடன்கள் 1986-87-ல் 341 இலட்சம் ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த பயனுள்ள செயல் வரும் ஆண்டுகளில் விரிவாக்கப்படும். 1989-90 ஆம் ஆண்டில் 450.00 இலட்சம் ரூபாய் அளவிற்கு விளைபொருளீட்டுக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும்.

கூட்டுறவுப் பதனிடுதல்.

31. பதனிடும் பிரிவுகளை அமைத்தல் ;

கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள உற்பத்தியாளர்களுக்கு விளைபொருள் பதனீட்டு வசதிகளை குறைந்த செலவில் அளிக்கும் பொருட்டுக் கூட்டுறவுச் சங்கள்கள் விற்பனைச் சங்கங்களுக்கு அருகிலேயே பதனிடும் பிரிவுகளை நிறுவியுள்ளன. இதற்காக அவை அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடனாகவும் நிதியுதவி பெறுகின்றன. அரிசி ஆலைகள் 38, பருத்தி விதை நீக்கும் ஆலைகள் 20 (16 கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமானவை) கடலை உடைக்கும் அலகுகள் 16, எண்ணெய் பிழியும் இயந்திரங்கள் 7, எண்ணெய் ஆலை 1, மரவள்ளிக் கிழங்கு பதனிடும் பிரிவு 1, குளிர்பதன அறை 1, பழம் பதனிடும் பிரிவுகள் 3, காப்பிக் கொட்டை பதனிடும் ஆலை 1, மஞ்சள் தூள் அரவை ஆலை 1

ஆக மொத்தம் 89 பதனிடும் பிரிவுகள் உள்ளன. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆதரவளிக்கும் திட்டத்தின்கீழ் 35 லட்சம் ரூபாய் மதிப்பில் விழுப்புரத்தில் பருத்தி விதை நீக்கும் இயந்திரம் நிறுவ, அரசு 1988-89 ஆம் ஆண்டில் 9.10 லட்சம் ரூபாய் பங்குத் தொகையாகவும், 5.69 லட்சம் ரூபாய் கடனாகவும் நிதியுதவி அளித்துள்ளது. 1988-89-ஆம் ஆண்டில் மீதமுள்ள கடன் தொகை 17.06 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இதே போன்று பட்டிவீரன்பட்டி காப்பி மற்றும் ஏலக்காய் பயிரிடுவோர் கூட்டுறவு வங்கியின் காப்பி பதனிடும் ஆலையை 13.80 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு நவீனப்படுத்த அரசு 1988-89-ஆம் ஆண்டில் பங்குத் தொகையாக 3.50 இலட்சம் ரூபாயும் கடன் தொகையாக 2.25 இலட்ச ரூபாயும் அளித்துள்ளது. மீதமுள்ள கடன் தொகை6.7 இலட்சம் ரூபாய் 1989-90 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

கிடங்கு வசதி.

32. ஊரக மற்றும் விற்பனைக் கிடங்குகள் :

கூட்டுறவுத் துறையில் உள்ள கிடங்கு வசதிகளை மேம்படுத்துவதின் .தேவையைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அரசிடமிருந்து 45 சதவீதம் பங்கு மூலதனமாகவும், 50 சத வீதம் கடனாகவும் பெற்று கிராம அளவில் ஊரக கிடங்குகளையும் மண்டி அளவில் விற்பனைக் கிடங்குகளையும் தொடர்ந்து கட்டி வருகின்றன. கிடங்குகள் கட்டுவதற்காக மாநில அரசுக்கு தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 75 சதவீதத் தொகையைக் கடனாக வழங்குகின்றது. இக்கிடங்குகளின் ஒரு பகுதியை அலுவலகத்திற்குப் பயன்படுத்துவதோடு, விவசாய இடுபொருட்கள், இன்றியமையாத நுகர்பொருட்கள் மற்றும் விவசாய விளைபொருட்களை சேமித்துவைத்து விற்பனை செய்வதற்கு பயன்படுத்துகின்றன. கிடங்கு கட்ட ஆகும் செலவு உயர்ந்துள்ளதைக் கருத்தில்கொண்டு 107 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட ஓர் ஊரகக் கிடங்கிற்கான நிதியுதவிகள் அளவை 1.28 இலட்சம் ரூபாயிலிருந்து 1.40 இலட்சம் ரூபாய்க்கும் 500 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட விற்பனை கிடங்கிற்கு 3.25 லட்சம் ரூபாயிலிருந்து 3.90 இலட்சம் ரூபாய்க்கும மற்றும் 1.000 மெட்ரிக் கொல் திறன் கொண்ட விற்பனைக் கிடங்கிற்கு 5.25 ரூபாயிலிருந்து 5.90 இலட்சம் ரூபாய் அளவிற்கு 1986-87 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. 1989ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதியில் 5.08 இலட்சம் மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 4,433 ஊரகக் கிடங்குகளும், 1.54 இலட்சம் மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 297 விற்பனை மற்றும் நுகர்வோர் கிடங்குகளும் உள்ளன. 31— 3— 1988-ல் 6.52 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு இருந்த மொத்த சேமிப்புக் கொள்திறன் 28— 2— 1989-ல் 6.62 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்ந்துள்ளது. தற்போது 0.09 இலட்சம் மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 75 ஊரகக் கிடங்குகளு

1989 ஏப்ரல் 25]

ஒரு விற்பனைக் கிடங்கும் கட்டுமானத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கிடங்குகள் கட்ட 75 சதவீதம் கடன் உதவி அளிக்கிறது. மொத்த 75 சதவீதம் கடன் தொகையில் 50 சதவீதம் கடனாகவும் மீதம் 25 சதவீதம் பங்குமூலதனமாகவும் மாற்றி மாநில அரசு அளிக்கிறது. மாநில அரசு தனது நிதி ஆதாயத்திலிருந்து மேலும் 20 சதவீதம் அளித்து 5 சதவீதம் பயன்பெறும் சங்கம் தனது சொந்த நிதியிலிருந்து செலவிடப்பட்டு மொத்தம் நூறு சதவீதம் உதவி அளிக்கப்படுகிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக உதவியுடன் 150 ஊரகக் கிடங்குகள் கட்டவும், இரண்டு வினியோகக் கிடங்குகளையும், இரண்டு நுகர்வோர் கிடங்குகளையும் 1989-90-ல் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மொத்த நிர்மாணப் பணியின் செலவு ரூ. 235.06 இலட்சங்களாகும். 1989-90-ல் மாநிலப் பங்காக ரூ. 43.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூன்றாவது உலக வங்கி கூட்டுறவு கிடங்கு வசதி திட்டத்தின்கீழ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு 109.82 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு 9,000 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 13 கிடங்குகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் கூட்டுறவு.

33. **நுகர்பொருட்கள் சில்லறை விற்பனை :**

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பின் கீழ் நிலையில் 3,930 பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளையும் மைய அளவில் 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும் மற்றும் மாநில அளவில் ஒரு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும் கொண்டு மூன்று நிலைகளாக உள்ளது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 1986-87 ஆம் ஆண்டில் இருந்த 684.90 கோடி ரூபாயிலிருந்து 1987-88 ஆம் ஆண்டில் 873.43 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. 1988-89 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 730 கோடி ரூபாய் ஆகும். 1—4—1988 முதல் 28—2—1989 வரை 938.77 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் 900 கோடி ரூபாய் அளவிற்கு நுகர்பொருள் சில்லறை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

34. **கிராம நியாயவிலைக் கடையில் இன்றியமையாப் பொருட்கள் விற்பனை செய்தல்:**

இன்றியமையாப் பொருட்களை விற்பனை செய்ய ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடை

துவக்கி நடத்தும் திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாநிலம் முழுவதும் 17,382 கிராமக் கடைகள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. விற்பனையாளர் சம்பளம், வாடகை மற்றும் இதர சில்லறை செலவுகளுக்காக கிராம கடைகளுக்கு 1-8-1988 முதல் அரசு மானியமாக ஒவ்வொரு முழுநேர கடைக்கு 4,200 ரூபாயாகவும் பகுதி நேர கடைக்கு 2,700 ரூபாயாகவும் மாற்றி யமைக்கப்பட்ட கடைக்கு 804 ரூபாயாகவும் வழங்கி வருகிறது, 1—8—1988 முதல் கிராமக் கடைகளின் விற்பனையாளர்களின் சம்பளத்தை மாதம் 200 ரூபாயிலிருந்து ரூ. 250 ரூபாயாக உயர்த்தியுள்ளது. கிராமக் கடைகள், 1986-87 ஆம் ஆண்டில் 225.37 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்திருக்க, 1987-88 ஆம் ஆண்டில் 312.82 கோடி ரூபாய் அளவிற்கு இன்றி யமையாப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. 1—4—1988 முதல் 28—2—1989 வரை கிராமக் கடைகள் மூலம் நடைபெற்ற விற்பனை 364.03 கோடி ரூபாயாகும். கிராமக் கடைகளில் கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனை 1986-87ஆம் ஆண் டில் 14.13 கோடி ரூபாய் அளவிற்கே விற்பனை செய்திருக்க 1987-88 ஆம் ஆண்டில் 20.73 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது, 1988-89 ஆம் ஆண்டில் 1—4—1988 முதல் 28—2—1989வரை கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனை மேலும் 23.13 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது.

35. பொது விநியோகத் திட்டம் :

மாநிலம் முழுவதும் கட்டுப்பாட்டு பொருட்களின் சில்லறை விற்பனை விநியோகம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடை பெறுகின்றது. மாநிலம் முழுவதுமுள்ள 21,134 நியாவிலைக் கடைகள் மூலமாக ஏறத்தாழ 128 லட்சம் குடும்ப அட்டை தாரர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கட்டுப்பாட்டுப் பொருட் களை விநியோகம் செய்து வருகிறது.

அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் அளவு மற்றும் சில்லறை விற்பனை விலை விவரப்படி, குடும்ப அட்டைதாரர் களுக்கு அரிசி, சர்க்கரை, கோதுமை, சமையல் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

குடும்ப அட்டைதாரர்களால் நியாயவிலைக் கடைகளின் செயல்முறை குறித்து அளிக்கப்படும் முறையீடுகளின் மீது நடவடிக்கை எடுக்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை செயல் பட்டு வருகிறது. இதேபோன்ற கட்டுப்பாட்டு அறை மண்டல இணைப் பதிவாளர் அலுவலகத்திலும் செயல் பட்டு வகின்றது.

1989 ஏப்ரல் 25]

பொதுமக்களின் ஆலோசனைகளையும் முறையீடுகளையும் அளிக்கும் பொருட்டு ஒவ்வொரு நியாய விலைக் கடைகளிலும் புகார் பெட்டி மற்றும் புகார் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நியாயவிலைக் கடைகளில் இன்றியமையாப் பொருட்கள் சீரான முறையில் விநியோகிக்கப்படுவதை கண்காணிக்க (குடிமைப் பொருள் வழங்கல் அதிகாரிகளால்) விழிப்புணர்வு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குடும்ப அட்டைதாரர்கள் பலமுறை நியாய விலைக் கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்குவதை தவிர்க்கும் பொருட்டு 1—3—1989 முதல் கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகளில் ஒரே நேரத்தில் அனைத்து இன்றியமையாப் பொருட்களையும் வழங்கி வருகின்றன. இவ்வாறாக இம்மாநிலத்தில் பொது விநியோக முறையை சீரமைக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றது. எந்த ஒரு தனியார் நிறுவனமும் இதில் ஈடுபடுத்தப்படவில்லையென்பதே தமிழ் நாட்டில் உள்ள பொது விநியோகத் திட்டத்தின் தனித் தன்மையாகும்.

36. சிறப்பு அங்காடிகளும் மற்றும் சிறப்புச் சிற்றங்காடிகளும் மேற்கொண்ட விற்பனை :

மாநிலத்தில் தற்பொழுது நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் பிரதம கூட்டுறவுச் பண்டகசாலைகள் ஆகியவற்றின் 30 பல்பொருள் அங்காடிகளும்(சிறப்பு அங்காடிகள்) 223 நவீன சில்லறை அங்காடிகளும் பெரிய அளவிலான சில்லறை அங்காடிகளும் (சிறப்பு சிற்றங்காடிகள்) நடத்தி வருகின்றன. 1987—88 ஆம் ஆண்டில் இந்த அங்காடிகள் 41.14 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்துள்ளன. 1987—88 ஆம் ஆண்டில் 10 நவீன சில்லரை விற்பனை நிலையங்களைத் துவக்க, அரசு நிதி உதவி வழங்கியுள்ளது. தற்சமயம் இந்த 10 நவீன சில்லறை விற்பனை நிலையங்களும் துவக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் எனும் இடத்தில வாழ்கின்ற ஆதி திராவிடர் பகுதியில் துவக்கப் பட்டுள்ளது.

37. சுயதேவைப் பிரிவுகளைத் திறத்தல் :

தேவைப்படும் நுகர்பொருட்களின் தரத்தை கண்டறிந்தும், அவற்றின் விலைகளை ஒப்பிட்டுப் பார்த்த பிறகு வாங்குவதையே பெரிதும் நுகர்வோர் விரும்புகிறார்கள். நுகர்வோரின் இந்த மனப்பாங்கினைப் பூர்த்தி செய்யத் தொடங்கப்பட்டவையே சுயசேவைப்பிரிவுகளாகும். இச்சுயசேவைப் பிரிவுகள்

விற்பனையை பெருக்குவதற்காகவும். நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்வதற்காகவும் ஏற்பட்ட முக்கிய நவீன உத்திகளில் ஒன்றாகும். இந்த முயற்சிக்குக் கிடைத்த நல்லதொருவரவேற்பின் விளைவாக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரத்தில் முன்னேற்றம் தெரிய வருகிறது. தற்சமயம் மாநிலத்தில் 52 சுயசேவைக் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் தேனாம்பேட்டையில் உள்ள புதியகாமதேனு சுய சேவைப்பிரிவு, தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய நவீன முறையில் 6,000 சதுர அடி பரப்பில் இயங்கும் சுய சேவைப் பிரிவாகும்.

38. தரச்சோதனை ஆய்வுக் கூடங்களை நிறுவுதல் :

நுகர்வோர்கள் தாங்கள் வாங்கும் பொருட்கள் தரமானதாக உள்ளதா என்பதை பரிசோதிக்கவும், கலப்படத்தை தவிர்க்கவும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் தரச்சோதனைஆய்வுக் கூடங்களை நிறுவியுள்ளன. தற்சமயம், மாநிலத்தில் 25 தரச் சோதனை ஆய்வுக் கூடங்கள் இயக்கி வருகின்றன. கோயம் புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை தனது சொந்த நிதியிலிருந்து ஒரு தரச்சோதனை ஆய்வுக் கூடம் நிறுவியுள்ளது. மற்ற 24 தரச் சோதனை ஆய்வுக் கூடங்கள் நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அரசு நிதி உதவி மானியமாக வழங்கப் பட்டுள்ளது. 1985—86 ஆம் ஆண்டு முதல் ஒரு தரச் சோதனை ஆய்வுக் கூடம் அமைக்க ஒரு இலட்சம் ரூபாயை அரசு மான்ய மாக நிதி உதவி வழங்கி வருகிறது.

39. நலிந்த பிரிவினருக்குச் சேவை :

மைய அரசுத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகளில் வாழும் நலிந்த பிரிவினர் மற்றும் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஆகியோர் தேவைக்கேற்ப நிறுவப்பட்ட 66 சிறு கிளைகளும், மாநகரங்களிலும் நகரங்களிலும் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் மிக மிக நலிந்தோருக்கென நிறுவப்பட்ட 100 மிகச் சிறு கிளைகளும் (மக்கள் அங்காடிகள்) செயல்பட்டு வருகின்றன. தொழிற்சாலைத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், கூலிகள், குறைந்த வருவாய் பிரிவினர், பின் தங்கிய வகுப்பினர், குடிசைப் பகுதியினர் மற்றும் ஆதிதிரா விடர் பழங்குடியினர் நிறைந்துள்ள இதர குடியிருப்புப் பகுதி களில் வாழ்வோர் ஆகியோர்களின் தேவைகளை நிறைவேற்ற 22 சிறிய அளவிலான சில்லறை அங்காடிகள் அமைக்கப்பட்டுள் ளன. 1988—89 ஆம் ஆண்டில் மத்திய அரசு, 5 சிறிய அளவி லான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க 4.35 இலட்சம் ரூபாய் நிதி உதவி அனுமதித்துள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 25]

40. மகளிர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைத்தல் :

கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்ந்து வரும் மகளிர்களின் வாழ்க்கை நிலையை மாற்றி மேம்படுத்தும் வகையிலும், அவர்களது துயரினை துடைக்கும் வகையிலும் நுகர்வோர்க் கூட்டுறவு இயக்கம், மகளிருக்கென கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்க முன்வந்துள்ளது. இச்சங்கங்கள் மூலமாக உறுப்பினர்களால் தயாரிக்கப்படும் ரொட்டி, ஜாம், அப்பளம், ஊறுகாய் போன்ற பொருட்களை அவர்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் விற்கப்படும். இதனால் அவர்கள் தமது வாழ்க்கைக்கு ஒரு நிலையான வருவாயைப் பெற இயலும். 1985—86 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்ட மகளிர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை ஒன்று அமைக்கப்பட்டது. மேலும் வருகின்ற ஆண்டுகளில் இது போன்ற மகளிர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மேலும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

41. மின்சக்தி விநியோகத்தை விரிவாக்குதல் :

கிராமப் புறங்களில் மின் சக்தியைப் பரவலாக வழங்குவதற்காகவும், பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்காகவும், ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கும்பகோணத்திலும் திருமயத்திலும், வந்தவாசியிலும் இயங்கி வரும் சங்கங்கள் 1968 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய நலிந்த பிரிவினருக்காக ''ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின்விளக்கு''த் திட்டத்தின் கீழ் 14,811 மின் இணைப்புகள், உட்பட 74,979 மின் இணைப்புகளை வழங்கியுள்ளன.

நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்கள்.

42. தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் :

தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், உப்பள தொழிலாளர்கள் மற்றும் மலைவாழ் மக்கள் போன்ற நலிந்த பிரிவினரின் நலன் கருதி தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்த வேலைகளைப் பெற்றுத் தருவதன் மூலம் அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கின்றன. பிறவகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு சேவைகளையோ, அல்லது கடன்உதவி யையோ அளிக்கின்றன. மானியம் பங்கு மூலதனம், கடன் மற்றும் துறை அலுவலர்களின் இலவசச் சேவை போன்ற உதவிகள் அரசால் இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன.

43. வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்களுக்கான கட்டுமானக் கூட்டுறவுச் சட்டங்கள் :

பொதுப்பணித் துறையில் கட்டுமானப் பணிகளைநிறைவேற்றுவதில் கூடிய வரையில் தனியார் ஒப்பந்த முறையைத் தவிர்ப்புதன் மூலமாக வேலையில்லா பொறியியல் பட்டதாரிகளுக்கும், பட்டயதாரர்களுக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் 1981-ல் சென்னையில் நவீன பொறியியல் பட்டதாரிகள் கட்டுமானக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டது. இது போன்ற இரண்டாவது சங்கம் ஒன்று 1984 ஆம் ஆண்டில் மதுரையில் அமைக்கப்பட்டு அரசு நிதியுதவியும் அளிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு சங்கங்களும் 285.69 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தப் பணிகளை ஏற்று அவற்றை நிறைவேற்ற உறுப்பினர்களிடம் ஒப்படைத்துள்ளது.

44. உடல் ஊனமுற்றேருக்கு உதவி :

இம்மாநிலத்தில் ஆறு உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. முதற்கட்டமாகச் சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் உள்ள இவ்வகைச் சங்கங்கள் இரண்டிற்கும் 1985—86 ஆம் ஆண்டில் நிதிஉதவி வழங்கப்பட்டது. மாவட்ட சமூகநல அலுவலர்களுடன் கலந்தாலோசித்து சங்கங்களில் உறுப்பினர்களுக்குப் பயனுள்ள வேலைகளைத் தரக் கூடியப் பணிகளை ஏற்று நடத்துவதற்கு ஏதுவாக இவை அமையும். தஞ்சாவூர் மற்றும் கடலூரில் மேலும் இரண்டு சங்கங்களுக்கு 1986—87ஆம் ஆண்டில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

45. பழங்குடியினர் மேம்பாடு:

மாநிலத்தில் 1989 ஜனவரி 31 ஆம் நாளில் 18 பெரும் பல நோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் 56,049 உறுப்பினர்களைகொண்டு இயங்கி வருகிறது. இதில் 51,265 உறுப்பினர்கள் பழங்குடியினர் ஆவர். இச்சங்கங்கள் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த கடன் வசதி, விற்பனை மற்றும் ஏனைய சேவைகளை வழங்கி வருகின்றன. பழங்குடியினரின் நலிந்த பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு அரசு இச்சங்கங்களுக்கு தாராளமாகத் தொடர்ந்து நிதியுதவிகளை அளித்து வருகிறது. பழங்குடி வகுப்பைச் சேர்ந்தஉறுப்பினர்களின் வேளாண்மைக் காரியத்திற்காக தேவைப்படும் நிதியுதவிகளை இந்த பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன. அவர்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு பால் பண்ணைத் தொழில் முதலியவற்றிற்கு மத்திய காலக் கடனும் வழங்கப்படுகின்றன. பருவ காலமில்லாத காலங்களில் பழங்குடியினரின் தேவைக்கேற்ப நுகர்வுக் கடன்களும் வழங்கப்படுகின்றன. இவ்வகைக்கடன்கள் 1984—85

1989 ஏப்ரல் 25]

ஆம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 4 சதவீதச் சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்பட்டு வந்தன. 1985 ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் பழங்குடி உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன்கள் வழங்கப் பட்டு வருகின்றன. இதனால் ஏற்படும் வட்டி இழப்பை அரசு மான்யமாக வழங்குகிறது. 1987—88 ஆம் ஆண்டில் பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடனுக்காக 12.95 இலட்ச ரூபாய் வட்டி இழப்புக்கு மானியமாக அரசு ஒப்பளித்தது. ஆகவே இவ்வகை பெரும் பலநோக்குக்கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பழங்குடி உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல்வகை நல திட்டங்களில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. இச்சங்கங்கள் செய்துள்ள பல்வேறு சேவைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்).

ஆண்டு.	வழங்கிய கடன்கள்.	கொள் முதல் செய்த வேளாண்மை பொருட் களின் மதிப்பு.
(1)	(2)	(3)
1980—81	23.85	1.41
1981—82	48.46	2.53
1982—83	54.23	2.48
1983—84	69.80	3.23
1984—85	76.17	5.28
1985—86	98.48	11.00
1986—87	120.26	14.27
1987—88	166.52	13.85
1988—89 (1989 ஜனவரி 31 ஆம் நாள் வரை).	143.35	11.49

ஆண்டு.	வழங்கிய வேளாண்மை இடுபொருட்களின் மதிப்பு.	கொள்முதல் செய்த சிறுவகைப் பொருட்களின் மதிப்பு.	விநியோகித்த பொருட்களின் மதிப்பு.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(1)	(4)	(5)	(6)
1980—81 ..	7.31	8.01	33.51
1981—82 ..	12.17	7.73	56.46
1982—83 ..	9.11	14.19	59.92
1983—84 ..	13.90	9.38	77.49
1984—85 ..	17.92	14.38	76.48
1985—86 ..	26.41	22.15	95.90
1986—87 ..	29.20	34.15	104.39
1987—88 ..	32.15	54.39	136.20
1988—89 (1989 ஜனவரி 31 ஆம் நாள் வரை).	24.27	27.71	135.42

கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

46. கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரங்களைத் தீவிரப்படுத்துதல்:

கொள்கை பரப்புதல், விளம்பரம் செய்தல் ஆகிய பணிகளை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தீவிரப்படுத்தியுள்ளது. மாநிலத்திலிருந்து வெளிவரும் முக்கியமான வெளியீடுகளில் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கியமான திட்டங்கள் குறித்து விளம்பரங்கள் வெளியிட்டு வருகிறது. தொலைக்காட்சி வானொலி ஆகியவற்றை பெரிதும் பயன்படுத்தி, ஒன்றியம், கூட்டுறவு இயக்கத்தின்

நன்மைகளைப் பரப்பி வருகிறது. கொள்கை பரப்பும் பணிக்காக நடமாடும் ஊர்திகளையும் பயன்படுத்தி வருகிறது. கூட்டுறவுக் கடன்களைத் திரும்பச் செலுத்துவதில் அவசியத்தையும் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் குறித்து எடுத்துரைக்கும் வகையில் சிறு சினிமாப் படங்கள் தயாரித்துள்ளது. அது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கொண்டாடியும் நூலகங்கள் நடத்தியும் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தியும் பொருட்காட்சிகள் மற்றும் சந்தைகளில் பங்கு கொண்டும் வருகின்றன. மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மாத இதழ்கள் வெளியிட்டும், மாவட்ட அளவில் நூலகங்கள் நடத்தியும் வருகின்றன. மிகச் சிறந்த முறையில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் கொண்டாடப்படும் அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவின் போது கேடயங்கள் வழங்கப்படுகின்றன.

47. கூட்டுறவுப் பயிற்சி :

சென்னை மத்தியக் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திலும், மாவட்டங்களிலும் உள்ள ஒன்பது கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும் இளநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுகின்றன. சென்னை நடேசன் கூட்டுறவுப் பயிற்சி கல்லூரியிலும், மதுரை கூட்டுறவுப் பயிற்சி கல்லூரியிலும் நடுநிலைப் பணியாளர்களுக்கான கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியால், உருவாக்கப்படவிருக்கும் ''விவசாய மற்றும் மாநிலப் பயிற்சி'' வளாகத்தில், பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் மேலாளர், கணக்காயர் மற்றும் கிடங்கு காப்பாளர் ஆகியோருக்கு ''பண்டக சாலை உட்சேவை பயிற்சி'' அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் 4 திட்டத்தின் கீழ் இந்த திட்டத்திற்காக தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு 1 கோடி ரூபாய் அளவிற்கு நிதியுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொது.

48. கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துதல் :

கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்கள் பல ஆண்டுகளாக நடத்தப்படவில்லை. 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் புதிய சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 13—4—1988 விருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன முன்னதாக, கூட்டுறவுச்

[1989 ஏப்ரல் 25

சங்கங்களுக்குத் தேர்தல்கள், கூட்டுறவுப் புதியசட்டம் மற்றும் விதிகள் அமுலுக்கு வந்து ஆறுமாத காலத்திற்குள் (அதாவது 13—4—1988)-லிருந்துநடத்த அரசு முடிவு.செய்திருந்தது இருப்பினும் பின்னர் புதிய அங்கத்தினர்களை கூட்டுறவுச் சங்கங்களில் மேலும் சேர்க்க அவகாசம் அளிக்கும் வகையில் அரசு தேர்தல் நடத்துவதை தள்ளி வைத்தது. வல்லுநர் குழுக்களின் பரிந்துரைகளையும் கூட்டுறவாளர்கள் மற்றும் பிறரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகளையும் கருத்திற்கொண்டு 1983ஆம் ஆண்டின் தமிழ்நாடுகூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் சில விதிகளுக்குத் திருத்தங்கள் கொண்டு வர அரசு தற்போது கருதி வருகிறது உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டவுடன் கூட்டுறவுகளில் ஜனநாயக அமைப்பை மீளக் கொண்டு வரப் பல்வேறு அடுக்குகளிலான கூட்டுறவுகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பெறும்.

49. சமூகப் பணி :

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மனிதாபிமான காரணங்களுக்காக கீழ்க்கண்டவாறு சமூகப் பணிகளை புரிந்து வருகின்றன :—

1. மாநில மற்றும் மாவட்ட அளவில் கூட்டுறவுத் தொண்டர் படை அமைத்து தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுகள் தாமாக முன்வந்து இரத்த வங்கிக்கு இரத்த தானம் செய்கின்றன.

2. உடல் ஊனமுற்றோருக்குச் சக்கர நாற்காலி போன்ற துணைக் கருவிகளை வழங்குகின்றன.

3. ஏழைகளுக்கும், தேவைப்பட்டோருக்கும் சில மாவட்டங்களில் கண் சிகிச்சை முகாம் நடத்துகின்றன.

4. ஏழை மகளிருக்குத் தையல் இயந்திரங்களை வழங்கி வருகின்றன.

5. தமிழ்நாடு அரசு குழந்தைகளின் சத்துள்ள மதிய உணவு திட்டத்திற்கு நன்கொடை வழங்கி வருகின்றன.

6. கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்தவும் நூலகங்கள் நடத்தவும் கூட்டுறவுச் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

1989 ஏப்ரல் 25]

முடிவுரை :

பொதுவாக மக்களுக்கும், குறிப்பாக நலிந்த பிரிவினருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளை விரிவுபடுத்த ஏதுவாக கூட்டுறவுகளின் நிர்வாகத்தை சீரமைக்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் கூட்டுறவு இயக்கத்தின் சீரான வளர்ச்சிக்காக அனைத்து முயற்சிகளும், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1989 ஏப்ரல் 25

இணைப்பு II.

417-ம் பக்கதிலுள்ள அடி குறிப்பைக் காண்க

I. உணவு தானியங்களில் உற்பத்தியும் கொள்முதல் கொள்கையும்

உற்பத்தியாளருக்கு ஆதாயமுள்ள விலையினையும், நுகர்வோருக்கு நியாயமான விலையினையும் உறுதிப்படுத்துவது உணவுத்துறையின் முக்கியக்கொள்கையாகும். 1988 ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவ மழை ஓரளவு சரியாகக் பெய்திருப்பினும் வடகிழக்குப் பருவ மழை முற்றிலும் பொய்த்து விட்டது. இதனால், நெல் உற்பத்தி செய்யப்படும் பரப்பளவும் குறைந்துள்ளது.

2. 1988 ஆம் ஆண்டு குறுவைப் பயிர் சாகுபடி செய்த பரப்பளவு குறைவாக இருப்பினும், வடிமுனை குழாய்க்கிணறு மூலம் பாசனம் செய்யக்கூடிய காவிரி டெல்டாவில் உள்ள விவசாயிகள் முன்னதாகவே நெல் பயிரிட்டனர். சாதாரணமாக, 1—10—1988 முதல் அறுவடை தொடங்க வேண்டிய குறுவைப் பயிர் 15—9—1988 முதற்கொண்டே அறுவடை செய்யப்பட்டது. 1988 ஆம் ஆண்டு குறுவையில் காவிரி டெல்டாப் பகுதிகளான தஞ்சாவூர் மாவட்டம் முழுமையும், தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோவில் தாலுக்காக்களிலும் திருச்சி மாவட்டத்தில் உள்ள முசிறி, லால்குடி, குளித்தலை, திருச்சிராப்பள்ளி, அரியலூர், உடையார்பாளையம் தாலுக்காக்களிலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆலங்குடி, அறந்தாங்கி, ஆவுடையார் கோவில் தாலூக்காவிலும் 15—9—1988 முதல் ஏகப்போகக் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டது. அரசு கொள்முதலை முன்கூட்டியே தொடங்கியமையால் சாதாரணமாக 1—10—1988 முதல் செயற்படுத்த வேண்டிய விலைகள், மத்திய அரசின் அனுமதியுடன் 16—9—1988 முதற்கொண்டே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதால் அரசின் முன்கூட்டிய கொள்முதலோடு ஒருமித்து விவசாயிகள் பயனடைய முடிந்தது. 1988 ஆம் ஆண்டு குறுவையில் நிர்ணயிக்கப்பட்ட நெல் கொள்முதல் இலக்கு 2.73 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். இதில் 1.91 இலட்சம் மெட்ரிக் டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

3. குறுவையில் அமல் செய்யப்பட்டஏகபோகக் கொள்முதல் 1989ஆம் ஆண்டு சம்பாவிலும் தொடர்ந்து அமலில் உள்ளது 30—6—1989 வரை ஏகபோகக் கொள்முதல் அமலில் இருக்கும். காவிரி டெல்டாப் பகுதியில் ஏகப்போக் கொள்முதல் அமலில் இல்லாத ஏனையப் பகுதிகளிலும், செங்கற்பட்டு மற்றும் சென்னை அடங்கிய உணவு மண்டலத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களிலும் வழக்கம்போல் 50 விழுக்காடு வர்த்தகர்லெவி

1989 ஏப்ரல் 25]

முறை தொடர்ந்து கடைபிடிக்கப்படுகிறது. 31—3—1989 அன்றுள்ள நிலையில் 8.36 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள் முதல் செய்யப்பட்டுள்ளது.

4. ஏகபோகக் கொள் முதல் அமலில் உள்ள இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள் முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் எடுத்து வந்து அளிக்கும் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 35 அரசு ஊக்கத் தொகையாக வழங்குகிறது. இந்த ஊக்கத் தொகை அரசால் நிர்ணயிக்கப்பட்ட கீழ்க்கண்ட கொள்முதல் விலைகளுக்கு கூடு தலாக வழங்கப்படுகிறது.

இரகம்.	நெல்விலை குவிண்டாலுக்கு.	
	1987-88	1988-89
(1)	(2)	(3)
	(ரூபாயில்.)	
சாதாரணம்	150	160
சன்னம்	154	170
மிகச்சன்னம்	158	180

5. 1988 ஆம் ஆண்டு குறுவையில் ரூபாய் 5,74,76,003 ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு இதன் மூலம் 1,19,481 விவசாயிகள் பயனடைந்தனர். நடப்புச் சம்பாவில் 31—3—1989 வரை ரூபாய் 28,31,00,000 ஊக்கத் தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

6. நெல் உற்பத்தி அளவு குறைந்ததன் விளைவாக நுகர் வோர் பொது விநியோகத்தை மேலும் அதிகமாக நாட வேண்டி யுள்ளது. பொதுப் பங்கீட்டுக்கும் மற்றும் சத்துணவு திட்டத் திற்கும் மாதமொன்றுக்கு சராசரியாக தேவைப்படும் அரிசி 1.40 இலட்சம் மெ. டன்களாகும். அரசின் அரிசி கையிருப்பும் முன் எப் பொழுதும் இல்லாத அளவு விரைவாக குறைந்து வந்ததால், கூடுதல் ஒதுக்கீடு வேண்டி மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப் பட்டது. 1988 ஆம் ஆண்டு, மத்திய அரசு முறைப்படியான மாதாந்திர ஒதுக்கீட்டினை 50,000 மெ. டன்களாக கொடுத்து வந்ததோடு பிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் முன் ஒதுக்கீடாக 30,000 மெ. டன் அரிசியையும், 15,000 மெ. டன் மற்றும் 30,000 மெ. டன் அரிசியை முறையே அக்டோபர் மற் றும் நவம்பர் மாதங்களுக்குக் கூடுதலாக வழங்கியது. மத்திய அரசு டிசம்பர் மாதத்தில் 80,000 மெ. டன் அரிசியை வழங்கி யுள்ளது. 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1.05 இலட்சம்

மெ.டன் அரிசியையும் வழங்கியது. ஆனால், பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு மாதமொன்றுக்கு 40,000 மெ. டன் அரிசியாகக் குறைத்து ஒதுக்கீடு செய்துள்ளது.

7. இந்த மாநிலத்திற்கு மாதமொன்றுக்கு 80,000 மெ.டன் அரிசியை வழங்கவேண்டிய அவசியம் குறித்து மத்திய அரசுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இது குறித்து முதலமைச்சர் மற்றும் உணவு அமைச்சரால் முறையே பாரதப் பிரதமரிடமும், மத்திய உணவு அமைச்சரிடமும் நேரிடையாகப் பேசப்பட்டது. மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்கி மத்திய அரசு பொது விநியோகத்திற்குத் தேவையான கூடுதல் அரிசியை ஒதுக்கீடு செய்யும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

8. உள்ளூரில் செய்யப்பட்ட கொள்முதல் மற்றும் மத்திய அரசின் ஒதுக்கீடாக இந்திய உணவுக் கழகத்திடமிருந்து எடுக்கப்பட்ட அரிசி இவற்றைக்கொண்டுபொதுவிநியோகம் மற்றும் சத்துணவு திட்டத்தின் தேவைக்கேற்ப இல்லாததால் 1988 ஆம் ஆண்டு அரசு 1.66 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வெளிச் சந்தையில் பஞ்சாப், அரியானா மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களிலிருந்து வாங்கித் தேவையைப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

9. அரசு தரப்பில் கொள்முதல், ஏகபோகக் கொள்முதல்பகுதிகளில் ஊக்கத் தொகை வழங்குதல், வெளிச் சந்தையில் அரிசி வாங்குதல், மத்திய அரசால் உயர்த்தப்பட்ட அரிசி விலை போன்றவற்றால் அரசின் நிதிச்சுமை அதிகமாகியுள்ளபோதிலும், அரசு பொது விநியோகத்தில் அரிசியின் விலையினை ஏற்றவில்லை

10. வெளிச்சந்தையில் அரிசி விலை உயரும்பொழுது அரசு வெளிச்சந்தையில் கூட்டுறவுச் சங்கங்களை ஈடுபடச் செய்கிறது. அதாவது, அரிசி எங்கு கிடைத்தாலும் அரிசியை வாங்கிக் கூட்டுறவு சில்லறைக்கடைகள் மூலம் நியாயமான விலைக்கு விற்கவும் அரசு ஆணையிடுகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் தக்க தருணத்தில் வெளிச்சந்தை விற்பனையில் ஈடுபடுவதன் மூலம் வெளிச்சந்தை அரிசியின் விலையினை கட்டுப்படுத்த ஏதுவாகிறது.

II, பொது விநியோகமுறை.

11. தமிழ்நாட்டில் நன்கு அமைக்கப்பட்ட மிகச் சிறந்தப் பொது விநியோகமுறை செயல்பட்டு வருகிறது. சுமார் 129 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு உதவும் வகையில் மாநிலத்தில் 21.134 நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன இவற்றில் 17,382 நியாயவிலைக் கடைகள் ஊரகப் பகுதிகளிலும், எஞ்சியுள்ள 3,752 நியாயவிலைக் கடைகள் நகரப் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன.

1989 ஏப்ரல் 25]

12. மத்திய அரசால் மாதந்தோறும் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் முதலிய அத்தியாவசியப் பண்டங்கள் நியாயவிலைக் கடைகள் மூலமாகக் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைகளிலும், அளவுகளிலும் விநியோகிக்கப்படுகின்றன.

13. பெரியவர்களுக்கு மாதமொன்றுக்கு 4 கிலோ மற்றும் சிறியவர்களுக்கு மாதமொன்றுக்கு 2 கிலோ என்ற விகிதத்தில் மாதமொன்றுக்கு 12 கிலோவிற்கு மேற்படாமல் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்கப்படுகிறது.

14. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்த வணிகராக செயல்பட்டு மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பண்டங்களை மத்திய அரசிடமிருந்து பெற்று நியாயவிலைக்கடைகள் மூலம் வழங்குவதற்காக உதவுகிறது. இதைத்தவிர மாநில அரசின் ஒரே முகவர் அமைப்பாக அனைத்து நெல்-அரிசி கொள்முதலையும் இக்கழகமே செய்து வருகிறது. தமிழ்நாடு நுகர் பொருள வாணிபக் கழகம் மொத்த வணிகத்தில் மட்டும் கவனம் செலுத்தும் வகையில் அது நடத்தி வந்த நியாய விலைக் கடைகளை அதனிடமிருந்து கூட்டுறவுத் துறைக்கு மாற்றி அரசுஆணைகள் வெளியிட்டது. எல்லா ஊழியர்களது பணியிடங்களை தக்கவைக்கவும் அரசு முன்வந்தது. அரசு இவ்வாறு வெளியிட்ட ஆணையை எதிர்த்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் வழக்குகள் பதிவு செய்தனர். இந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு 1987 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள், 1ஆம் தேதி முதல் அனைத்து நியாய விலைக் கடைகளும் கூட்டுறவுச்களின் வசம் ஒப்படைக்கப்பட்டன. தற்போது மாநிலத்திலுள்ள 21,134 நியாயவிலைக் கடைகளையும் கூட்டுறவுச் சங்கங்களே நடத்தி வருகின்றன. இக்கடைகளை நல்ல முறையில் நடத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவும் வகையிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து மாற்றப்பட்ட கடைகளை கண்காணிக்கும் பொருட்டும், அரசு 140 கூட்டுறவு சார் பதிவாளர் பணியிடங்களை தோற்றுவித்தது. இதைத்தவிர சென்னை நகரத்திலும், மாவட்டங்களிலும்,பொதுவிநியோக முறையினை சீராக நடத்துவதற்காக கூடுதல் பணியிடங்களை அரசு அனுமதித்துள்ளது. நியாயவிலைக் கடைகளை சீராக நடத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு 196 இலட்சம் ரூபாய் விளிம்புத் தொகையாக (Margin Money) வழங்கியுள்ளது.

15. 29 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும் மற்றும் 35 பிற சங்கங்களும் முதன்மைச் சங்கங்களாக செயல்

பட்டு அத்தியாவசியப் பண்டங்களை இந்திய உணவுக் கழகத்திட மிருந்தும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந் தும் பெற்று ஊரகப் பகுதிகள் மற்றும் நகரப் பகுதிகளில் விநியோகிக்கும் பொருட்டு 21,134 நியாயவிலைக் கடைகளுக்கு வழங்குகின்றன. இவற்றில் 21,008 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் ஆளுகையிலும், மீதமுள்ள 126 கடை ஏனைய இயக்கப் பதிவாளர்களின் ஆளுகையின் கீழும் இயங்கி வருகின்றன. அரசு நுகர்வோர் வசதிக்கு முக்கியத்துவம் அளித்து மிகக் குறைந்த அளவிலேயே குடும்ப அட்டைகள் இணைக்கப்படும் நியாயவிலைக் கடைகளுக்கு ஏற்படும் இழப் பினை ஏற்றுக்கொள்கிறது. ஒவ்வொரு வருவாய் கிராமத் திலும் குறைந்தது 100 குடும்ப அட்டைகள் இருந்தாலும் கூட ஒரு நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலும் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டை களின் அளவு பொதுவாக ஆயிரமாக கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப் பட்டுள்ள நியாயவிலைக்கடைகளில் நெரிசல் ஏற்படும்என்பதால், அதனை தவிர்க்கும் பொருட்டு 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தற்போது 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகள் 3,093 இயங்கி வருகின்றன. சென்னை நகரத்திலும் மற்றும் சில மாவட்டத் தலைநகரங்களிலும் சுழல் முறைத் திட்டம் அமுலில் உள்ளது. இதன்படி ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 15 நாட்களுக்கொருமுறை ஒரு தேதி குறிப்பிடப்பட்டு அந்த நாளில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன. நியாயவிலைக் கடைகளில் கூட்டம் சேர்வதைத் தவிர்ப்பதற்காக இம்முறை செயல்படுத்தப்படுகிறது.

16. 1982 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் 1988 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டன. 1988 ஆம் ஆண்டுக்கு முன் இம்மாநிலத்தில் 119 இலட்சம் குடும்ப அட்டைகள் இருந் தன. 1988 ஆம் ஆண்டு புதிய குடும்ப அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனைக்குப் பிறகு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை தற்போது 129 இலட்சமாக உயர்ந்துள்ளது, மாநிலத்திலுள்ள மக்கள் தொகையையும் குடும்ப அட்டைகளி லுள்ள மக்கள் தொகையையும் ஒப்பிடும்போது மக்கள் தொகை கணக்கெடுப்புத்துறை கூறும் மக்கள் தொகைக்கும் குடும்ப அட்டைகளிலுள்ள மக்கள் தொகைக்கும்அதிக வேறுபாடிருப்பதை காணலாம். இதற்கு போலி குடும்ப அட்டைகளும், குடும்ப அட்டைகளில் கூடுதல் நபர்களை சேர்த்துள்ளதும் காரணமாக் இருக்கலாம், எனவே அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் களும், சென்னையிலுள்ள உணவு வழங்கல் துணை ஆணையாளர் களும் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு அனைத்துநியாய

1989 ஏப்ரல் 25]

விலைக் கடைகளையும் தீவிரமாக கண்காணித்து போலி குடும்ப அட்டைகளை கண்டறிந்து அவைகளை நீக்குமாறு மிகக்கடுமை யாக அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்த தீவிர ஆய்வு காரணமாக சென்னை நகரத்தில் மட்டும் சுமார் 80,000 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறே மாவட்டங் களிலும் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகள் முடிவடைந்தபின் புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டை களின் எண்ணிக்கை சரியான அளவுக்கு வரும்.

17. அரசு ஒவ்வொரு நியாயவிலைக் கடைகளிலும், ஒவ் வொரு வட்டத்திலும் ஒரு விழிப்புப் பணிக்குழுவை ஏற்படுத்தி உள்ளது. நியாயவிலைக் கடை அமைந்துள்ள பகுதியிலுள்ள முக்கிய நபர்கள், பொதுநலத் தொண்டர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், நலிந்த பிரிவினரின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த விழிப்புப் பணிக்குழுக்களின் அங்கத்தினர்களாக நியமிக்கப் படுகின்றனர். இந்த விழிப்புப் பணிக்குழுக்களில் பெண்களுக்கு கும் உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

18. பொது விநியோக முறையின் முக்கியத்துவம் கருதியும், மாநிலம் முழுவதிலுள்ள நுகர்வோருக்கு சமமாக அத்தியாவசிய பண்டங்களை பங்கீடு செய்யவும் நியாயவிலைக் கடைகளை கடுமையான கண்காணிப்பின்கீழ் வைத்து சிறு திருட்டுகளும் மற்ற முறைகேடுகளும் நடைபெறாமல் கண்காணித்தல் அவசி யம். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து செயலாக்க அதிகாரிகளுக்கும் அரசு குறியீடுகளை நிர்ணயித்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு பதவியேற்றபின் உணவு அமைச்சர் அவர்கள் பல இடங்குகளையும், பல்வேறு நியாயவிலை கடை களையும் திடீர் சோதனை செய்து பொருட்குறைவு, எடை குறைவு, சில இடங்களில் கை இருப்பினையும், விலைப்பட்டிய லையும் அறிவிப்பு செய்யாமை போன்ற முறைகேடுகளை கண்டு பிடித்தார். இந்த சோதனைகள் நல்ல பலனை அளித்து தற் போது நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் ஒழுங்காக கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் பெருமளவில் குறைந்துள்ளன.

19. நுகர்வோர் குறைகளைக் களையும் வகையில் ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலும் ஒரு புகார் பெட்டியும், ஒரு புகார் புத்தகமும் நுகர்வோர் தங்களது புகார்களைக் கூறவும், தங்களது ஆலோசனைகளை தெரிவிக்கவும் வைக்கப்பட்டுள்ளன. மாநில மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் பொதுமக்களின் புகார் களைப் பெறுவதற்காக கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப் பட்டுள்ளன. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங் களின் பதிவாளர் அலுவலகங்களிலும் இத்தகைய கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வலுவலகங்களின் தொலை

பேசி எண்கள் பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்பட்டு மக்கள் அத் தொலைபேசி மூலம் குறைகள் ஏதாவது இருந்தால் அவற்றை பதிவு செய்ய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

20. புதிய அமைச்சரவை பதவி ஏற்றபின், உணவு அமைச்சர் அவர்கள் பல மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் கொள்முதலில் முன்னேற்றம், விலைக்கட்டுப்பாடு, கட்டுப்பாடு ஆணைகளை தீவிரமாக செயலாக்குதல் மற்றும் பொதுவிநியோகத்தை சீரான முறையில் நடத்துவது ஆகியவை குறித்து விவாதிக்க முடிவெடுத்தார். முதல் கூட்டம் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 5ஆம் நாளன்று திருச்சிராப்பள்ளியில் கூட்டப்பட்டு திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தென் ஆற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் மேற்கண்டவை குறித்து ஆராயப்பட்டது. இவ்வாறான ஆய்வுகள் பிற மாவட்டங்களிலும் விரைவில் நடத்தப்படும்.

21. எடைக் குறைவு, பொருட்குறைவு, அத்தியாவசியப் பொருட்கள் போதிய இருப்பு இன்மை போன்றவை நியாய விலைக் கடைகளின் மீது கூறப்படும் சில குற்றச்சாட்டுகளாகும், அரசு கண்காணிப்பு அலுவலர்களுக்கும், நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கும் கடைகளில் பண்டங்களின் இருப்பு மற்றும் அவற்றின் விலை ஆகியவற்றைக்கொண்ட அறிவிப்புப்பலகையை வைக்க வேண்டுமென்றும், கடைகள் உரிய நேரத்தில் திறக்கப்பட வேண்டுமென்றும். அத்தியாவசியப் பண்டங்கள் கடையிலிருந்து கடத்தப்படுவதை தடுக்க வேண்டுமென்றும், குடும்ப கார்டுதார்கள் வாங்காத அத்தியாவசியப் பண்டங்களை வாங்கியதாக குறியீடுகள் செய்யக்கூடாதென்றும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது. அவ்வாறே கடைகளில் அத்தியாவசியப் பண்டங்கள் தேவையான அளவு இருப்பு வைப்பதை உறுதி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். நுகர்வோர் கட்டுப்பாடு பொருள் வாங்குவதற்கு கடைகளில் விற்கப்படாமல் தேங்கிக் கிடக்கும் கட்டுப்பாடற்ற பொருட்களை வாங்குமாறு கட்டாயப்படுத்தக்கூடாது என்று நியாயவிலைக் கடைக்காரர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

22. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மற்றும் கூட்டுறவுத்துறை ஆகியவை தவிர குடிமைப்பொருள் காவல்துறை, தொழிலாளர்துறை, உணவுப் பிரிவு ஆய்வாளர்கள், கண்காணிப்பு மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் ஆகியோரும் நியாயவிலைக் கடைகளில் திடீர் சோதனை செய்து முறைகேடுகளை கண்டுபிடிக்கின்றனர். தொழிலாளர் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்து அங்குள்ள எடைகள் மற்றும் அளவைகளை சரிபார்க்கின்றனர்.

1989 ஏப்ரல் 25]

(i) அரிசி :

23. உள்ளூரிலேயே கொள்முதல் செய்யப்படும் நெல், அரிசியாக பதப்படுத்தப்பட்டபின் அதன் பொருளாதாரவிலை சாதாரணரகத்திற்கு கிலோ ஒன்றுக்கு 3.47 ரூபாயாகவும், சன்னரகத்திற்கு 3.60 ரூபாயாகவும். மிகச் சன்னரகத்திற்கு 3,73 ரூபாயாகவும் உள்ளது, இதன் மூலம் உள்ளூரிலேயே கொள்முதல் செய்யப்படும் நெல்-அரிசியில் வழங்கப்படும் மானியம் மிக அதிகமாக உள்ளது என அறியலாம்.

24. இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை மக்கள் அனைவரும் மிகச்சிறந்த விதத்தில் கொண்டாடும் வகையில் ஒவ்வொரு குடும்ப அட்டை தாரருக்கும் ஏற்கெனவே அவர் பெறும் அரிசியுடன் 3 கிலோ அரிசி விதிகமாக பொது விநியோக முறையில் விற்கப்படும் விலையிலேயே வழங்கப்பட்டது.

25. தமிழ்ப்புத்தாண்டு, பொங்கல் தீபாவளி ஆகிய நாட்களில் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக 5 கிலோ அரிசி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. புத்தாண்டு நாளான ஏப்ரல் 14—1989-ல் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தால் 76 இலட்சம் குடும்பங்கள் பயன் பெறும்.

(ii) கோதுமையும், கோதுமைப் பொருட்களும் :

26. இம்மாநிலத்தில் பொதுப் பங்கீட்டு முறையின் கீழ் வழங்குவதற்காக மாதம் தோறும் 31,500 மெட்ரிக்டன் லெவி கோதுமையை இந்திய அரசு ஒதுக்கி வருகிறது. அந்த கோதுமை ஒதுக்கீட்டில் இந்த மாநிலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க எடுக்கும் அளவு 1988 ஆம் ஆண்டு சனவரியில் 11,000 டன்னிலிருந்து 1989 ஆம் ஆண்டு பிப்ரவரியில் 22,000 மெட்ரிக்டன் அளவாக உயர்ந்துள்ளது. சாதாரணப் பகுதிகளில் மாதமொன்றுக்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 20 கிலோ கோதுமையும், மலைப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு 30 கிலோவும் வழங்கப்படுகிறது. ஒரு கிலோ கோதுமை ரூ. 2.20 என்ற விலையில் விற்கப்படுகிறது. மைய அரசு ஒதுக்கீட்டின் கீழ் இம்மாநில அரசு கோதுமையை எடுக்கும் அளவு குறைவாக உள்ளதால், கோதுமையை விநியோகிக்கும் அளவு உயரவேண்டி இந்த அரசு பொருட்காட்சிகள் மூலமாகவும், திரைப்படங்கள் வாயிலாகவும் கோதுமை உணவின் முக்கியத்துவம் பற்றி மக்களிடையே பரப்புவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்துள்ளது. குடும்ப அட்டைதாரர்களுக்கு கோதுமை தவிர, கோதுமைப் பொருட்களும் வழங்கப்படுகின்றன. இவற்றிற்கு கட்டுப்பாட்டு விலையோ, வழங்குவதற்கு வரையறையோ இல்லை. நுகர்வோர்கள் இவற்றை எவ்வளவு வேண்டுமானாலும். வாங்கிக்கொள்ளலாம் இன்றைய நிலையில் கோதுமைக்கும், கோதுமைப் பொருட்களுக்கும் விற்பனை உரிமம் தேவையில்லை.

27. தமிழ்நாட்டில் கோதுமை மாவு ஆலைகள் 44 உள்ளன. அனைத்து ஆலைகளின் கோதுமை அரவைத் திறன் மாதம் ஒன்றுக்கு 80,000 மெட்ரிக் டன் ஆகும். உபரி விளைச்சல் காரண

மாக கோதுமை ஏராளமாகக் கிடைப்பதால், இந்த அரவை ஆலைகளுக்கு இந்திய அரசு கோதுமை பெறும் உரிமத்திலிருந்து விலக்கு அளித்துள்ளது. இந்த கோதுமை மாவு ஆலைகள் தங்களுக்குத் தேவையான கோதுமையை வெளிச் சந்தையிலிருந்தோ அல்லது இந்திய உணவுக் கழகத்திடமிருந்தோ கொள்முதல் செய்து கொள்ளலாம்.

28. மத்திய அரசு கோதுமை கையிருப்பிற்கு உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டுமென யோசனை கூறியுள்ளது. இந்த யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(iii) சர்க்கரை :

29. மத்திய அரசு நபருக்கு 425 கிராம் வீதம் மாநிலத்திற்கு சர்க்கரை ஒதுக்கீடு செய்து வருகிறது. மத்திய அரசு ஒதுக்கும் மாதாந்திர சர்க்கரையின் அளவு 22,547 மெட்ரிக் டன் ஆகும். நபர் ஒன்றுக்கு 500 கிராம் வீதம் இந்த அரசு 1-3-1987 முதல் சர்க்கரை வழங்கி வருகிறது. 1-1-1989 முதல் சர்க்கரையின் விலை கிலோ ரூ. 5.25 ஆகும். இம்மாநிலத்திற்கு ஒதுக்கும் சர்க்கரையின் அளவு கீழ்க்கண்ட காரணங்களால் குறைவாக உள்ளது :—

(அ) மாதம் நபர் ஒன்றுக்கு மத்திய அரசு வழங்கும் 425 கிராமுக்குப் பதிலாக 500 கிராம் வழங்குதல்.

(ஆ) குடும்ப அட்டைதாரர்கள் தவிர கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த விடுதிகள், அநாதை இல்லங்கள், அரசு மருத்துவ மனைகள், தேசிய மாணவர் படை, தேசிய பணி முகாம்கள், போன்ற மொத்த நுகர்வோர்களுக்கு சர்க்கரை வழங்கப்படுகிறது.

(இ) இந்திய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி உள்ள மக்கட் தொகைக்குச் சரியாக சர்க்கரை ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆனால் குடும்ப அட்டைகளின்படி உள்ள மக்கள் தொகை மக்கள் கணக்கெடுப்பில் காணும் புள்ளி விவரங்களை காட்டிலும், மிகவும் அதிகமாக உள்ளது. குடும்ப அட்டைதாரர்கள், மொத்த நுகர்வோர்கள் ஆகியோர்களின்தேவைகளை நிறைவு செய்ய குறைந்தது 30,000 மெட்ரிக் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்வது அவசியமாகும். ஆனால் தற்போது இந்திய அரசு மாதம் தோறும் ஒதுக்கீடு செய்துவரும் சர்க்கரை தேவையான ஒதுக்கீட்டிலிருந்து 7,500 மெட்ரிக் டன் குறைவாக உள்ளது. 1989 ஆம் ஆண்டின் பொங்கல் சமயத்தில் $\frac{1}{2}$ கிலோ கூடுதல் சர்க்கரை வழங்கப்பட்டது.

(iv) மண்ணெண்ணை :

30. 1979-ல் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மண்ணெண்ணை அளவு குறைக்கப்பட்டதால், மண்ணெண்ணை

1989 ஏப்ரல் 25]

விநியோகத்தில் கண்டிப்பான வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. நான்கு முக்கியமான எண்ணெய் கம்பெனிகள் மூலமாக, கோடைக் காலம், மழைக் காலம் மற்றும் குளிர் காலத்திற்கு மென ஆண்டுக்கு மூன்று பிரிவுகளாக மத்திய அரசு இம்மாநிலத்திற்கு மண்ணெண் ணெய் ஒதுக்கீடு செய்கிறது. கடந்த 1988-89 ஆம் ஆண்டு ஒவ்வொரு பருவத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவுகள் பின்வருமாறு :—

காலம்.	மாத ஒதுக்கீடு.
கோடைக்காலம் ..	(மார்ச் முதல் ஜூன் வரை) 58,865 கிலோ லிட்டர்கள்.
மழைக்காலம் ..	(ஜூலை முதல் அக்டோபர் வரை) 61,738 கிலோ லிட்டர்கள்.
குளிர்காலம்	(நவம்பர் முதல் பிப்ரவரி வரை) 68,477 கிலோ லிட்டர்கள்.

1989 ஆம் ஆண்டு மார்ச் தொடங்கி ஜூன் மாதம் முடிவடையும் கோடைக்காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு மத்திய அரசு சுமார் 61,280 கி. லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட மண்ணெண்ணெய் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரால் சென்னை நகரத்துக்கும், மாவட்டங்களுக்கும் குடும்ப அட்டைகளுக்கு வழங்குவதற்காகவும், மொத்த விற்பனையாளர்களுக்கும் மிச்சம் ஏதுமின்றி மறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நான்கு கூட்டுறவுச் சங்கங்களையும் 11 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலகுகளையும் சேர்த்து இம்மாநிலத்தில் 500 மொத்த மண்ணெண்ணெய் விற்பனையாளர்கள் உள்ளனர். மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெயை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டத்தில் உள்ள மொத்த விற்பனையாளர்களுக்கு மறு ஒதுக்கீடு செய்கிறார்கள். அதன்பின் அம்மொத்த விற்பனையாளர்கள் ஒவ்வொரு நியாயவிலைக் கடைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் அடிப்படையில் மண்ணெண்ணெயை விநியோகிக்கின்றனர்.

31. குடும்ப அட்டைதாரர்களுக்கு சென்னை நகர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் மற்றும் மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெயும், நகராட்சிப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 6 லிட்டர் மண்ணெண்ணெயும், நகரப் பஞ்சாயத்துக்கும் மற்றும் நகரியங்களில் மாதம் ஒன்றுக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெயும் மற்றைய கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் மாவட்டத் தலைநகர் மற்றும் நகராட்சிகளில் ஒரு குடும்ப அட்டைக்கு

மாதம் ஒன்றுக்கு 15 லிட்டர் மண்ணெண்ணெயும், நகரப் பஞ்சாயத்து மற்றும் நகரியங்களில் மாதம் ஒன்றுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெயும், மற்றைய கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்படுகிறது.

32. சென்னை நகரில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 லிட்டர் மண்ணெண்ணெய் ரூ. 2.27-க்கு விற்கப்படுகிறது. மற்றைய இடங்களில் எண்ணெய் கம்பெனிகள் அமைந்துள்ள இடங்களின் தூரத்தைப் பொறுத்து ரூ. 2.27 முதல் 2.53 வரை லிட்டர் ஒன்றுக்கு விற்கப்படுகிறது. சென்னை நகரில் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் விலை ரூ. 3.41 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

33. சென்னை நகரில் ஒரு நாளைக்கு 100 லிட்டர் மண்ணெண்ணெய் வீதம் அதிகபட்சம் ஒரு மாதத்தில் 25 நாட்களுக்கும் மாவட்டங்களில் ஒரு நாளைக்கு 50 லிட்டர் வீதம் அதிகபட்சம் 25 நாட்களுக்கும், குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோக விலைகளில் விற்பனை செய்வதற்காக 2,833 கை வண்டிக்காரர்களுக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. பொதுவிநியோக முறையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயை விட அதிகம் தேவைப்படுபவர்கள் இக்கை வண்டிக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

34. கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர 1,872 தனியார் சில்லறை விற்பனையாளர்களும், இம்மண்ணெண்ணெய் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் அவர்களது பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்கின்றனர். இச்சில்லறை விற்பனையாளர்களுக்கு 500 குடும்ப அட்டைகளுக்கு மிகாமல் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன.

(v) சமையல் எண்ணெய் :

35. மத்திய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் சமையல் எண்ணெய் அளவு மாதாமாதம் வேறுபடுகிறது. எனவே, மத்திய அரசின் ஒதுக்கீட்டைப் பொறுத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சமையல் எண்ணெயின் அளவும் வேறுபடுகிறது. அரசு வர்த்தக கழகம் மூலம் சமையல் எண்ணெய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அரசு வர்த்தக கழகத்திடமிருந்து சமையல் எண்ணெயினை எடுத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாய விலைக்கடைகளின் மூலம் உதிரி பாமோலின் எண்ணெயா விற்பனை செய்வதற்காக வழங்குகிறது. நியாய விலைக் கடைகள் மூலமாக பையில் அடைக்கப்பட்ட எண்ணெயாகவும், டின்னிலடைக்கப்பட்ட எண்ணெயாகவும் வழங்குவதற்காக மைய அரசு இந்துஸ்தான் தாவர எண்ணெய் கழகம் மற்றும் தமிழ்நாடு

கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் ஆகியவைகளுக்கு தனித்தனியாக ஒதுக்கீடு செய்கிறது.

36. தற்போது மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு ஏறக்குறைய 2,000 மெ. டன்கள் எண்ணெய் உதிரிப் பாமோலினாக வழங்குவதற்காகவும் 1,600 மெ. டன்கள் எண்ணெயை பையில் மற்றும் டின்னிலடைக்கப்பட்ட எண்ணெயாக வழங்குவதற்காகவும் ஒதுக்கீடு செய்கிறது.

37. ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாதமொன்றுக்கு ஒரு கிலோ சமையல் எண்ணெய் வழங்க வேண்டுமானால் கூட ஏறக்குறைய 13,000 மெ. டன்கள் சமையல் எண்ணெய் இம்மாநிலத்திற்கு மாதமொன்றுக்கு தேவைப்படுகிறது. சமையல் எண்ணெய் ஒதுக்கீடு படிப்படியாக குறைக்கப்பட்டு வருவது மத்திய அரசுக்கு சுட்டிக் காட்டப்பட்டு அதிக அளவு எண்ணெயினை இம்மாநிலத்திற்கு ஒதுக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

38. ஒரு கிலோ உதிரிப் பாமோலின் எண்ணெயின் விலை ரூ. 16.25, ஒரு கிலோ பையில் அடைக்கப்பட்ட எண்ணெயின் விலை சென்னையில் ரூ. 17.20-ம் மற்றைய மாவட்டங்களில் ரூ. 17.50-ம் ஆகும். 2 கிலோ பாமோலின் டின்னின் விலை சென்னையில் ரூ. 37.90-ம் மற்றைய மாவட்டத் தலை நகரங்களில் ரூ. 38.50-ம் ஆகும்.

III. விலைவாசி நிலைமை :

39. தென்மேற்கு பருவ காலத்தில் போதுமான மழை பெய்ததன் காரணமாக சிறு தானியங்கள், துவரம் பருப்பு, நிலக்கடலை ஆகிய மானாவாரி பயிர்களின் விளைச்சல் இயல்பாக இருந்தது. அதன் பயனாக இந்தப் பயிர்களின் விலைகள் நிலையாகவோ, அல்லது விலை குறைந்தோ காணப்பட்டது. மாறாக, வடகிழக்கு பருவமழை பொய்த்ததன் காரணமாக நெல் மற்றும் சிறுதானியங்கள் போன்ற முக்கியப் பயிர்களின் விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. உணவு தானியங்களின் விலை உயர்வு வாயிலாகவே நன்கு புலனாகும்.

(i) அரிசி :

40. 29-3-1989 வார முடிவில், புழுங்கல் அரிசி, பச்சரிசி ஆகியவற்றின் மாநில சராசரி சில்லறை விலை 1 சதவீதம் முதல் 4 சதவீதம் வரை குறைந்து காணப்பட்டது. 1989 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் புழுங்கல் அரிசி சன்னரகத்தில் மாநில சராசரி சில்லறை விலை வெளிச் சந்தையில் 1 கிலோ ரூ. 4.81 இருந்தது. இது பிப்ரவரி 1989 விலையைக் காட்டிலும், 4.2 சதவீதம் குறைவாகும். இதே காலத்தில் விலைகளை ஒப்பிடும்போது புழுங்கல்

அரிசி சாதா ரகம் 1 கிலோ விலை ரூ. 4.49-ல் இருந்து 4.50-க்கு அதிகரித்து காணப்பட்டது. 1989 மார்ச்சு மாதம் கடைசி வார இறுதியில் பச்சரிசியின் சன்னரகம் மற்றும் சாதா ரகங்களின் விலைகள் 3.6 சதவீதம் முதல் 0.9 சதவீதம்வரை குறைந்துள்ளது.

41. வெளிச் சந்தையில் நிலவும் அரிசியின் விலையை விட குறைந்த விலையில் அரிசியைவிற்பதற்கு எங்கெங்கு தேவையுள்ளதோ அவ்விடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்து விலையை கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இயற்கையான இடர்ப்பாடுகளின் இடையிலும் வெளிச் சந்தையில் அரிசியின் விலை உயர்வு கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

(ii) சிறு தானியங்கள் :

42. வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதானியங்களின் விலைகள் சென்ற மாதத்தைவிட 1989 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில் 3 சதவீதம் முதல் 4 சதவீதம் வரையில் ஓரளவு உயர்ந்துள்ளது.

(iii) பருப்பு வகைகள் :

43. பொதுவாக பருப்பு உற்பத்தியில் தமிழகம் ஒரு பற்றாக் குறை மாநிலம் ஆகும். மாநிலத்தில் உள்ள அங்காடிகளுக்கு இடையே ஏற்படும் போட்டிச் சூழ்நிலையின் காரணமாகவும், குறிப்பாக உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம் போன்ற பருப்பு விளையும் இடங்களில் நிலவும் விலைகளை அடிப்படையாகக் கொண்டும், நம் மாநிலத்தில் பருப்பு வகைகளின் விலை குறைந்தோ அல்லது அதிகரித்தோ காணப்படுகிறது.

44. 1989 ஆம் ஆண்டு, மார்ச்சில், பாசிப்பருப்பைத் தவிர அனைத்து பருப்பு வகைகளின் விலைகள் 0.3 சதவீதம் முதல் 12 சதவீதம் வரை குறைந்து உள்ளது. சென்ற ஆண்டு மார்ச் 1988 உடன் இந்த ஆண்டு மார்ச் 1989 விலையோடு ஒப்பிடும் போது துவரம்பருப்பின் மாநில சராசரி விலை ரூ. 11.58லிருந்து ரூ. 9.52 ஆக குறைந்துள்ளது. இது 17 சதவீதம் குறைவாகும். உளுத்தம்பருப்பு ரூ. 10.38 (பிப்ரவரி 1989)லிருந்து ரூ. 9.62 (மார்ச் 1989) ஆகக் குறைந்துள்ளது. கடலைப் பருப்பு ரூ. 11.21 (பிப்ரவரி 1989) விருந்து ரூ. 9.91 (மார்ச் 1989) ஆக நிலவுகிறது. ஆனால் பாசிப்பருப்பின் விலை 1989 ஆம் ஆண்டு மார்ச்சில் 0.5 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. துவரம்பருப்பைத் தவிர அனைத்து ரக பருப்பு வகைகளின் விலைகள் 1988 மார்ச் திங்களுடன் ஒப்பிடும்போது ஏறுமுகமாகவே உள்ளது.

(iiv) சமையல் எண்ணெய் :

45. கடலை எண்ணெய் உற்பத்தியில் தமிழ்நாடு ஓரளவிற்கு உபரி மாநிலம் ஆகும். நமது மாநிலத்திலும் குஜராத், ஆந்திர

1989 ஏப்ரல், 25]

பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் தென் மேற்குப் பருவ மழை இயல்பாகப் பெய்ததன் காரணமாக 1988 ஆம் ஆண்டு, மார்ச்சில் ரூ. 22.64 ஆக நிலவிய கடலை எண்ணெய் விலை 1989 ஆம் ஆண்டு, மார்ச்சில் ரூ. 19.19 ஆகக் குறைந்துள்ளது. நல்லெண்ணெயின் விலை 1988 ஆம் ஆண்டு மார்ச்சில் ரூ. 25.50 ஆக இருந்து 1989 ஆம் ஆண்டு மார்ச்சில் ரூ. 22.29 ஆகக் குறைந்துள்ளது.

46. தமிழ்நாட்டில் தேங்காய் எண்ணெயின் தேவையைக் கேரளாவிலிருந்து வரும் வரத்தைப் பொறுத்தே நிர்ணயிக்க வேண்டியுள்ளது. தேங்காய் கொப்பரை குறைந்த விலையில் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருவதாலும், வரத்து அதிகரித்திருப்பதன் காரணமாகவும் தேங்காய் எண்ணெய் விலை குறைவதற்குக் காரணமாகியுள்ளது. 1988 ஆம் ஆண்டு மார்ச்சில் ரூ. 39.66 ஆகவும் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ரூ. 38.49 ஆகவும் நிலவிய தேங்காய் எண்ணெய் விலை 1989 ஆம் ஆண்டு மார்ச்சில் ரூ. 34.44 ஆகக் குறைந்துள்ளது.

(v) சர்க்கரை :

47. வெளிச் சந்தையில் விற்கப்படும் சர்க்கரையின் விலைவாசி நிலவரம் ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு வெளிச் சந்தையின் விற்பனைக்காக ஒதுக்கும் சர்க்கரையின் அளவைப் பொறுத்தே அமைகிறது. வெளிச் சந்தையின் சர்க்கரை போதுமான அளவு இருப்பதாலும், பொது விநியோக அமைப்பின் மூலம் அரசு நிர்ணயித்த விலையில் சர்க்கரையை விநியோகிப்பதாலும் சர்க்கரையின் விலை சீராகப் பராமரிப்பதற்கு வழி கோலப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு, மார்ச்சில் சர்க்கரையின் சராசரி விலை 8.5 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

(vi) விலைக் கட்டுப்பாடு :

48. மாநில உணவு வழங்கல் துறையும், தமிழக அரசும் தொடர்ந்து வெளிச் சந்தையில் மிகவும் இன்றியமையாப் பொருட்களின் விலைகளில் ஏற்படும் மாறுதல்களை உன்னிப்பாக கண்காணித்து வருகின்றன. அனைத்து இன்றியமையாப் பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்கு பல்வேறு சட்டங்கள் மற்றும் இதர கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

(IV) முக்கியமான நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை அமல்படுத்துதல்.

49. இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் அவற்றின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டுப்பாட்டு ஆணைகள் தமிழக அரசு கண்டிப்பாக அமல்படுத்தி வருகிறது. உணவுப் பொருள் வழங்கல், குற்றப் புலனாய்வுத் துறை, காவல்துறை துணைத்

தலைவரின் கீழ் இயங்கி வந்தது. 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் காவல் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இது தவிர இச்சட்டத்தை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையும் செயல்படுத்தி வருகிறது. 1988 ஆம் ஆண்டு, ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் 8,698 திடீர் சோதனைகள் நடத்தப்பட்டது. அவ்வமயம் ரூ. 487.89 இலட்சங்கள் மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் ரூ. 171.76 இலட்சங்கள் மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதே காலத்தில் இன்றியமையாப பொருட்கள் சட்டம் மற்றும் அதன் கீழ்வெளியிடப்பட்டுள்ள கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் 5,195 நேர்வுகள் Cases கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 849 நேர்வுகளில் குற்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது.

50. உணவு கலப்பட தடுப்பு சட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பை ஓமியோபதி ,சித்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் 7 உணவு பகுப்பாய்வு சோதனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன 1988 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் 16,057 சட்ட பூர்வ மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 1,331 மாதிரிகளில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதே காலத்தில் 397 இனங்களில் குற்ற வழக்குத் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதே காலத்தில் ரூ. 1.25இலட்சத்திற்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

51. தரங்கள், நிர்ணய எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் ஆகியவற்றை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமல்படுத்தும் பொறுப்பை மேற்கொண்டு வருகின்றது. எடைகள் மற்றும் அளவைகள் கட்டுப்பாட்டாளருக்கு 18தொழிலாளர் ஆய்வாளர்களும், இதர களப் பணியாளர்களும் உதவியாகச் செயல்பட்டு வருகின்றனர். 1988 ஆம் ஆண்டுஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் தரங்கள், நிர்ணய எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 1977-ன் கீழ் 1,461 இனங்களில் குற்ற வழக்குத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் (அமல்) 1958-ன் கீழ் 16,561 இனங்களில் குற்ற வழக்குத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில், மேற்கூறிய சட்டங்களின் கீழ் முறையே 12,460 மற்றும், 4,13,097 ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இதே காலத்தில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ் முறையே ரூ. 2.13 இலட்சங்கள் மற்றும் ரூ. 19.36 இலட்சங்கள் அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

52. இத்தகைய சட்டங்கள் அமல்படுத்துதல் தொடர்பாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

1989 ஏப்ரல், 25]

V. நுகர்வோர் பாதுகாப்பு :

53. நுகர்வோர்களது நலனை பேணிக் காக்கவும், அதன் பொருட்டு நுகர்வோர்கள் குழுக்கள் மற்றும் நுகர்வோர் குறை களையும், அமைப்புகளை அமைப்பதற்கு வழிவகை செய்யும் பொருட்டும் மைய அரசு 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியுள்ளது. இந்த 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முதல்படியாக தமிழ்நாடு அரசு இச்சட்டத்தின் விதி 7 (1) இன் கீழ் மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு (State Consumer-Protection Council) வினை அமைத்தது, இக்குழு இதுவரை இரண்டு கூட்டங்களை நடத்தியுள்ளது. நுகர்வோர்களது நலனைப் பாதுகாக்க இக்குழு சிறந்த ஆலோசனைகளைக் கூறியுள்ளது. இக்குழுவில் மாநில மற்றும் மைய அரசின் அதிகாரிகள், பொதுத் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள், வணிகம், பொது மக்கள், சட்டப் பேரவை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

54. இச்சட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் District Consumer Disputes Redressal Forums மற்றும் மாநில அளவில் ஒரு மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம் State Consumer Disp tes Redressal Commission ஆகிய அமைப்புக்களை அமைப்பதற்கு வழிவகை செய்கிறது. எனினும், இந்த அரசு சென்னை நகரில் ஒரு மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தையும், ஆறு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களை சென்னை, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் அமைத்து அருகில் உள்ள மாவட்டங்களை அதிகார வரம்பிற்கு உட்படுத்தியும் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

55. நுகர்வோர்களை பயிற்றுவிப்பதன் தேவையினை உணர்ந்த இந்த அரசு இதுவரை மாநில அளவிலான கருத்தரங்குகள் Seminars மற்றும் மாவட்ட அளவிலான கருத்தரங்குகளை நடத்தியுள்ளது, 1987 ஆம் ஆண்டு, மார்ச்சில். சென்னையிலும், 1988 ஆம் ஆண்டு மார்ச்சில் திருச்சியிலும், 1989 ஆம் ஆண்டு மார்ச்சில் மதுரையிலும் ஒன்றுமாக இதுவரை மூன்று மாநில அளவிலான கருத்தரங்குகளை இந்த அரசு நடத்தியுள்ளது. மேலும் 1987 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலும் இரண்டு மாவட்ட அளவிலான கருத்தரங்குகளையும் அரசு நடத்தியுள்ளது.

56. நுகர்வோர் பாதுகாப்பு குறித்த விவரங்களை பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறும் வண்ணம் ஐந்தாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் இது குறித்த பாடம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது, மேலும் 1989—90 கல்வி ஆண்டில் இதேபோன்ற ஒரு பாடம் ஒன்பதாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் சேர்க்கப்பட உள்ளது.

57. தன்னியலாய் செயல்படும் நுகர்வோர் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோர் நுகர்வோர் நலனை பாதுகாக்க பெரும் முயற்சி மேற்கொண்டு பணி ஆற்றி வருகின்றனர். அவர்களது முயற்சியைப் பாராட்டவும், அவர்களை ஊக்குவிக்கவும், மைய அரசு தேசிய விருதுகளை (National Awards) தனித்தனியே தன்னியலாய் செயல்படும் நுகர்வோர் அமைப்புகளுக்கும் (Voluntary Consumer Organis tions) நுகர்வோர் நலனில் பெரும் பங்கு ஆற்றி வரும் இளைஞர்களுக்கும் (Youth) ஒவ்வொரு ஆண்டும் வழங்குகிறது. இவ்வாறே மாநில இளைஞர் விருது (State Yo th award) ஒன்றை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. மேலும் தன்னியலாய் செயல்படும் நுகர்வோர் அமைப்புக்கள் பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்த அரசு நிதி உதவி அளிக்கின்றது. மேலே கூறப்பட்டுள்ள பல்வேறு வகையான நடவடிக்கைகள் தற்போது முக்கியத்துவம் பெற்று வரும் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை மேலும் மேம்படுத்தும் என்று கருதப்படுகிறது.

VI. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்:

58. தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நெல் கொள்முதல் செய்தல், கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக்குதல், அதை கிடங்குகளில் சேமித்து வைத்து மற்றும் இன்றியமையாப் பொருட்களை பொது விநியோகத்திற்கு வழங்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது, இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 30 கோடியாகவும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூபாய் 21.74 கோடியாகவும் உள்ளது.

59. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், குடும்ப அட்டைதாரர்களுக்கான அரிசியை விநியோகம் செய்வதற்காக நெல் மற்றும் அரிசியை தமிழக அரசின் தனி முகவராகயிருந்து நேரடிக் கொள்முதல் செய்கிறது. 1989 ஆம் ஆண்டு சம்பா பருவத்தில் 31-3-1989 வரை இக்கழகம், 8.36 இலட்சம் மெ. டன்கள் நெல் கொள்முதல் செய்துள்ளது. இதற்கென இக்கழகம் 600 நேரடிக்கொள்முதல் நிலையங்களை நிறுவியுள்ளது.

60. இக்கழகம் இதுவரையிலும் 109 இடங்களில் நவீன அரிசி ஆலை வளாகங்களையும் சேர்த்து 5.09 இலட்சம் மெ. டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகளை நிறுவியுள்ளது, மேலும் ரூபாய் 183.30 இலட்ச மதிப்பீட்டில் 9 இடங்களில் 34,200 மெ. டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் நிறுவ முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் 1989 ஆம் ஆண்டு மே-ஜூன் திங்களுக்குள் முடிக்கப்பட்டு விடும், நிதி பற்றாக் குறைவினால் 1988-89 ஆம் ஆண்டு புதிதாக சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படவில்லை. வரும் நடப்பு ஆண்டான 1989-90-ல் கழகம் மாநில ஒருங்கிணைப்பு குழுவின்

1989 ஏப்ரல், 25]

State Level Co-ordination Committee இசைவுடன் 30,000 மெ. டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

61. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஆண்டொன்றுக்கு 2.50 இலட்சம் டன்கள் நெல்லை அரவை செய்யும் திறன் கொண்ட 16 நவீன அரிசி ஆலைகள் சொந்தமாக உள்ளது. ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ரூபாய் 750 இலட்சம் மதிப்பீட்டில் மாநிலத்தில் 6 நவீன அரிசி ஆலைகள் அமைக்க திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவைகளில், போளூர்; நெய்வேலி மற்றும் மானாமதுரை முதலிய இடங்களில் ஏற்படுத்தியுள்ள மூன்று நவீன அரிசி ஆலைகள் முடியும் தருவாயில் உள்ளன. எருக்கூரில் தற்போதுள்ள நவீன அரிசி ஆலை வளாகத்தில் கூடுதல் பிரிவாக நான்காவது ஆலைக்கான வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள இரண்டு நவீன அரிசி ஆலைகள் அமைக்கும் பணி இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான கடச்சனேந்தல் மற்றும் தாழையூத்து முதலிய இடங்களில் அமைந்துள்ள நவீன அரிசி ஆலைகளில் அரவைத் திறனை மாதத்திற்கு 1,600 மெ. டன்களிலிருந்து 2,500 மெ. டன்களுக்கு உயர்த்தும் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. அந்த வேலையும் முடியும் தருவாயிலுள்ளது.

62. தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நலன் கருதி கொள்முதலுக்காக ஒவ்வொரு வருடமும் சுமார் 600-க்கும் மேற்பட்ட நேரடிக் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. நவீன வசதிகள் கொண்ட ரூபாய் 40 இலட்சம் செலவில் 20 நிரந்தர நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கடந்த 4 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 1989—90 ஆம் நிதியாண்டில் 30 நிரந்தர நேரடிக் கொள்முதல் நிலையங்கள் அரசு திட்டப் பணி திட்டங்களின் மூலம் 50 விழுக்காடு நிதியுதவியுடன் ரூபாய் 60 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன.

VII. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் :

63. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 1958—59 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் விவசாய விளை பொருட்கள், விதைகள், உரங்கள், விவசாய சாதனங்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களுக்கு அறிவியல் ரீதியான சேமிப்பு வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு வசதியை அளிக்கிறது.

64. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை தற்போதிருந்த ரூ. 600 இலட்சத்திலிருந்து ரூ. 800 இலட்சங்களாக மைய அரசால் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு

சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பங்கு மூலதனத்தொகை 50 : 50 என்ற விகிதத்தில் மாநில அரசாலும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தாலும் செலுத்தப்படுகிறது. 1988 ஆம் ஆண்டு மார்ச், திங்கள் 31 ஆம் நாள் முடிய இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 5.91 கோடியாகும்.

65. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1985—86 முதல் 1989—90 வரை) ரூ. 12.86 கோடி செலவில் இரண்டு இலட்சம் மெ. டன்கள் கொள்ளளவு கொண்ட கூடுதல் சேமிப்பு —வசதியை ஏற்படுத்த இந்நிறுவனம் திட்டமிட்டது. 1988—89 ஆம் ஆண்டு இந்நிறுவனம் 7 இடங்களில் 5 கிடங்குகள் மற்றும் 5 சிமெண்டு சேமிப்பிடமும் கொண்ட 13,800 மெ. டன். கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதிகளை ரூ. 54.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தியுள்ளது. இதனையும் சேர்த்து இந்நிறுவனத்தின் இலக்கான 2,00,000 மெ. டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

66. இந்நிறுவனம் ஏற்கெனவே சேமிப்புக் கிடங்குகளில் பயன்பாட்டு அளவினை உயர்த்தவும், நிறுவனத்தின் வணிகத்தைப் பெருக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகமாகக் கொள்முதல் செய்யப்பட்டு வரும் நெல்லினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அங்குள்ள சேமிப்பு கிடங்குகளில் பிப்ரவரி 1989 முதல் சேமித்து வருகின்றது.

1989 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31 ஆம் நாளில், 5,99,490 மெ. டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகளில் (50 சதவீதம் வாடகைக் கிடங்குகள் உட்பட) பயன்படுத்தப்படும் அளவு 2,98,914 மெ. டன்னாக இருந்தது.

67. இந்நிறுவனம் தொடர்ந்து நிலையான இலாபம் ஈட்டி வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டியுள்ள இலாபம் பின்வருமாறு :—

ஆண்டு		இலாபம், (ரூபாய் இலட்சத்தில்.)
1983—84	..	100.10
1984—85	..	125.23
1985—86	..	183.84
1986—87	..	224.52
1987—88	..	204.40

68. பணியாளர் நலன் பேணும் திட்டங்களின் கீழ் சேமிப்புக் கிடங்கு மேலாளர்கள், துணை மேலாளர்கள், அடிப்படை

ஊழியர்கள், காவலர்கள் போன்றோர்களுக்காக 34 மையங்களில் ரூ. 83.18 இலட்சம் மதிப்பீட்டில் இந்நிறுவனத்தால் குடியிருப்புத் தொகுதிகள் கட்டப்பட்டுள்ளன.

69. இந்நிறுவனம் 1989—90 ஆம் ஆண்டில் சென்னை கோயம்பேடு அங்காடிப் பகுதியிலும், திண்டுக்கல்லிலும் குளிர் பதன சேமிப்புக் கிடங்குகளையும் சென்னையில் பார ஊர்தி நிறுத்துமிடமும் கட்ட உத்தேசித்துள்ளது.

70. இந்நிறுவனம் பூச்சி ஒழிப்புப் பணியின் கீழ் சேமிப்பு கிடங்குகள் தவிர ஏனைய இடங்களில் பூச்சி ஒழிப்புத் திட்டங்களை செயல்படுத்தவும் தொடங்கியுள்ளது. இதனைத் தவிர, கிராம அளவில் விவசாயிகள் பயனடைய விரிவாக்கத் திட்டம் ஒன்றையும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயனடைய விவசாய விளை பொருட்களை அறிவியல் ரீதியாக சேமிக்கவும், உணவு தானியங்களை ஈரம், பறவைகள், வண்டுகள், பூச்சிகள் இவற்றால் ஏற்படும் சேமிப்பு இழப்பினை தடுக்கவும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதில் பங்கு பெறும் விவசாயிகளுக்கு உலோகக் கூடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்த உலோகக் கூடையின் செலவில் 25 விழுக்காட்டினை மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

71. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரைச் செயலாளராகக் கொண்ட மாநில சேமிப்புக் கிடங்கு கட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழு மாநிலத்தில் வெவ்வேறு நிறுவனங்களின் கீழ் இயங்கும் சேமிப்பு கிடங்குகளின் அமைப்பு ஆகியவற்றையும் மாநிலத்தின் கிடங்குத் தேவையையும் கருத்தில் கொண்டு இந்திய உணவுக் கழகம், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், கூட்டுறவுத் துறை, இயக்குநர் (சர்க்கரை) ஆகியவற்றின் புதிய சேமிப்புக் கிடங்குகள் கட்டுமானத் திட்டங்களை செயல்படுத்த ஒப்புதல் வழங்குகிறது. இந்த ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கு இணைப்பின்றியும், அவசரமான முறையில் கட்டப்படும் கிடங்குகளினால், ஏற்பட்டுள்ள உபரி கொள்திறன், கொள்திறன் முழு அளவுக்குப் பயன்படுத்தப்படாமை, இது போன்ற கிடங்குகளைக் கட்டுவதினால் அரசுக்கு ஏற்படும் வீண் செலவினத்தைத் தடுக்க செயல்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்.

தொகுதி 12—எண் 1, நாள் 22–4–1989.

பிழைத்திருத்தம்.

பக்கம். (1)	பத்தி. (2)	வரி. (3)	பிழை. (4)	திருத்தம். (5)
v		10	3	13
vi		கடைசி வரி	cinchoa	cinchona
xxiii	வரிசை எண் 193		மாரப்பன், திரு	மாரப்பன், திரு. பி.
17	கடைசி	5	பாய்கிறது	பாய்கிற
22	3	1	போவைத்தலைவர்	பேரவைத் தலைவர்
24	4	1	திருமதி	மாண்புமிகு திருமதி
26	கடைசி	2	ஐவர்களே	அவர்களே
33	9	2	நாம்	நான்
35	பெயர்த் தலைப்பு		திரு. கே. ரமணி	பேராசிரியர் க. அன்பழகன்
37	பெயர்த் தலைப்பு		பேராசிரியர் க. அன்பழகன்	திரு. பொன். விஜயராகவன்
39	பெயர்த் தலைப்பு		திரு. பொன். விஜயராகவன்	திரு. கே. ரமணி
44	2	1	அல்போன்ஸ்	ஆல்போன்ஸ்
45	2	1	Honorable	Honourable
		8	Honorable	Honourable
		19	Honorable	Honourable
46	1	3	definileley	definitely
	7	1	Honorable	Honourable
47	3	8	Honorable	Honourable
52	1	17	Legislative	Legislature

D-2 53-325—1